உ
சிவமயம்

# சிவமலர்



யாழ்ப்பாணம், ஆவரங்கால்

அமரர் இ.து.சிவராசா ஞாபகார்த்த மலர்

10.06.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவமலர்

- அமரர் இ.து. சிவராசா ஞாபகார்த்த மலர் -



வெளியீடு:

**அமரர் இ.து.சிவராசா குடும்பம்**

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

10.06.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே....

## தோத்திரவியல், வாழ்வியல், அஞ்சலியியல்


| | |
|---|---|
| தோத்திரப்பாக்கள் | 01 |
| அமரர் இ.து.சிவராசா அவர்களின் வாழ்க்கைப் பயணத்தில்.... | 04 |
| ஆன்ம சாந்திப் பிரார்த்தனையுரை | 07 |
| மீண்டும் ஜனிப்பாய் | 07 |
| செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனை | 08 |
| மனதை விட்டகலா மருகர் | 09 |
| கனப்பொழுதில் கனவாகியவர் | 11 |
| ஈடுசெய்ய முடியாத இழப்பு | 11 |
| செயல்வீரன் செயலாளர் சிவராசா | 12 |
| உறுதுணையாய் நின்றவரே | 13 |
| பருத்தித்துறை பிரதேச சபை | 14 |
| பிரதேச சபை கரைச்சி, கிளிநொச்சி | 15 |
| சிறந்த சேவையாளன் | 16 |
| மறைந்தும் மறையாது | 17 |
| நினைவுடன் | 18 |
| எனது இதயத்திலிருந்து | 18 |
| ஈடுசெய்யமுடியாத இழப்பு | 19 |
| கிராம அபிவிருத்தி நோக்கி | 20 |
| மறக்க முடியாத மனிதர் | 21 |
| மறைந்தும் நெஞ்சில் நிறைந்தவர் | 22 |
| சேவையால் உயர்ந்தோன் | 23 |
| மான்புயர் சேவையாளன் | 24 |
| அமரர் து.சிவராசா பற்றிய எனது மனதில் இருந்து | 25 |
| ஈரவிழிகளுடன் | 27 |
| தேறுதல் கூற ஒரு வார்த்தை | 28 |
| சிரித்தமுகம் தெரிகிறதடா | 29 |
| ஆளுமை மிக்க பெரியார் | 30 |
| நினைவு என்று நிலைத்திருக்கும் | 31 |
| உள்ளத்தில் நல்ல உள்ளம் | 32 |
| நெஞ்சில் நிறைந்த நினைவுகள் | 34 |
| அமரர் து.சிவராசாவின் நினைவலைகள் | 35 |
| பேரன்புக்குரிய திரு சிவராசா குடும்பத்தாருக்கு | 37 |
| அமரர் சிவராசா குடும்பத்தாருக்கு | 38 |
| திருமதி சிவராசா குடும்பத்தினருக்கு | 38 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலியாய் 39
நெஞ்சில் வாழும் நேசர் 39
நினைவு மாலை 40
தெய்வமென்ன வழிகாட்டுக 43
அருள் செய்யப்பா 43
கதியிழந்த பாவியராய் 45
எம் குடும்பத் தீபமாய் 45
அக்காவின் உள்ளத்திலிருந்து 46
உள்ளக் குமுறல் 47
என்னினிய அண்ணனே 48
மனிவாசாகர் குடும்பத்தின் ஏக்கங்கள் 49
என் அன்புள்ள அண்ணாவிற்கு உன் ஆருயிர் தங்கையின் கண்ணீர் மடல் 53
நினைவுடனே 55
மீளாத்துயருடன் 57
கனேசானந்தம் குடும்பத்தின் நினைவில் 58
நீங்கா நினைவுடன் 60
எங்கள் சித்தப்பாவே 61
பிரிவுத்துயரில் ஜெயபாலன் குடும்பத்தினர் 62

## ஆய்வியல்

சிவதோத்திரங்கள் – பேராசிரியர் வி. சிவசாமி 65
பெரியபுராணம் – கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி 71
இந்தியா சென்று இந்துமதச் சான்றோர் அவையில் புகழ்
நிறுவிய ஈழத்தமிழர் – செஞ்சொற்செல்வர் திரு.ஆறு. திருமுருகன் 77
வீர சைவம் – வித்துவான் வை. சுபாபதி, பி. ஒ. எல். எம். ஏ. 89
சைவத் திருமுறைகளும் நம்மவர் செல்நெறியும் – திரு. ச. லவீசன் 97
சாவகச்சேரி பிராந்தியம் கூறி நிற்கும் பண்டைய யாழ். அரசின்
மகிமை! – கலாநிதி. ப. புஸ்பரட்ணம் 101
இலாப நோக்கமற்ற முகாமைத்துவத்தில் ஒழுக்கவியல் வேறுபாடுகள்
– பேராசிரியர் மா. நடராஜ சுந்தரம் 109
தலைமைத்துவம் – என். மயில்வாகனம் 113
எங்கள் ஊர் – அ.க.த. கிருஸ்ணராசா 121

## பின்னிணைப்பு

கண்ணீரஞ்சலிப் பிரசுரங்கள்
உறவுகள் மேம்பட
கீதாசாரம்
நன்றி நவிலல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீய்மையைக் காய்க்கவும்
பருவமாய் எமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தே
னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

நின்னாவர் பிறரின்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்துமானாய்
மன்னனாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாய் ஆறங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேற் புகழ்தக்க பொருளே யுன்னை
என்னானாய் என்னானாய் எண்ணி னல்லால்
ஏழையேன் என் சொல்லி யேத்து கேனே.

## திருவாசகம்

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டு
தனைச்சிறிது மறியாதே தளர் வெய்திக் கிடப்பேனை
எனைப் பெரிதும் ஆட்கொண்டேன் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகும் தொழுதில்லை அம்பலத்தைக் கண்டேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையே
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டுகண்டு உள்ளம்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார்? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

கருவினுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்தும் அதனாலே
கரியகுழல் மாதர் தங்கள் அடிச்சுவடி மார்புதைந்து
கவலை பெரிதாகி நொந்து மிகவாடி
அரகர சிவாயவென்று தினமும் நினையாமல் நின்று
அறுசமய நீதியொன்று அறியாமல்
அசனமிடுவார்கள் தங்கள் மனைகள் தலைவாசல் நின்று
அனுதினமும் நாமின்றி அழிவேனோ
உரக பலமேல் வளர்ந்த பெரிய பெருமாளரங்கர்
உலகளவு மால் மகிழ்ந்த மருகோனே
உபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
உறைபுகலி ஊரிலன்று வருவோனே

## வாழ்த்துப்பா

வான்முகில் வழாது பெய்க! மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க! குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறையறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே

## பட்டினத்தார் பாடல்

மனையாளும் மக்களும் வாழ்வந்தனமுந்தன் வாயின்மட்டே
இனமான சுற்ற மயானமாட்டே வழிக்கே துணை
தினையாமள வெள்ளைவாகினு முன்புசெய்த்தவஞ்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்கும் சத்தியமே

## நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

பச்சைமா மலை போல் மேனிப்
பவளவாக் கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே!
ஆயர் தம் கொழுந்தே! யென்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோக மாளும்
அச்சுவை வெபறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் இளையதம்பி துரைசிங்கம் சிவராசா அவர்களின் வாழ்க்கைப் பயணத்தில் -----------------

பொன்சேரிலங்கையின் சிரமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் இயற்கை அன்னையின் இருப்பிடமெனவும், செல்வம் நிறைந்த பிரதேசம் எனவும் குறிப்பிடப்படும் வலி - கிழக்குப் பகுதியின் கோயில்கள், குளங்கள், வளங்கள் நிறைந்த எழில் கொஞ்சும் பதியாம் ஆவரங்காலில் உயர் சைவவேளான் குலத்தில் உதித்தவரும், ஆங்கில அறிவு நிரம்பிய அறிஞருமாகிய இளையதம்பியரும் அவர் துணைவியார் சின்னாச்சிப்பிள்ளையினதும் மணவாழ்வின் பயனாய் பெற்ற பிள்ளைகள் கனகம்மா (அமரர்) துரைசிங்கம், நல்லம்மா (அமரர்) என்னும் மூவர்கள். இவர்களில் ஏகபுத்திரன் துரைசிங்கம் என்பவர் அவ்வூரின் திருவாளர்கள் கந்தசாமி நல்லபிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி கனகம்மா என்பவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட இல்லறத்தின் பயனாய் பெற்றெடுத்த பிள்ளைகள் நவரட்ணராணி, மனோன்மணி, சிவராசா, விநாயகலிங்கம், வரதலட்சுமி, ரவீந்திரா, கருணாகரன், நிமலா ஆகிய என்மர்களில், சிரேஷ்ட புத்திரனான அமரர் சிவராசா 1957ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24ம் திகதி திருவாய் மலர்ந்தார்.

எல்லோராலும் சிவா என அன்பாக அமைக்கப்படும் அமரர் சிவராசா அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை மண்கட்டியார் பாடசாலை என எல்லோராலும் அழைக்கப்பட்ட யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலத்திலும் மேல் நிலைக்கல்வியை யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரியிலும் கற்றார். மாணவப் பருவத்திலேயே சிறந்த விவேகமும், நிர்வாக முகாமைத்துவமும் பெற்று விளங்கி அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் யாவரினதும் நன்மதிப்பினையும் பெற்றுத் திறமைசாலியாகத் திகழ்ந்தார். வளரும் பயிரை முளையில் தெரியும் என்று கூறுவது போல இவர் ஒரு நிர்வாக அதிகாரியாகத் திகழ்வார் என்பது இவரது பாடசாலைக்காலத்தில் இனங்காணக் கூடியதாக அமைந்தது.

இவரது தந்தையார் ஓர் புகழ்பூத்த விவசாயியாக விளங்கிய காரணத்தால் இளம் வயதில் தந்தையாருடன் விவசாயத் தொழிலில் உதவியும் ஈடுபாடும் கொண்டவராக இருந்தார். தான் கற்ற கல்வியின் பயனாக 1981ம் ஆண்டு இலங்கை பெருந்தோட்டத்துறை அமைச்சில் எழுதுவினையராக நியமனம் பெற்று பச்சிலைப்பள்ளி பளைப்பிரதேசத்தில் கடமையாற்றினார். அதன் பின்னர் இடமாற்றம் பெற்று குருநாகல் மாவட்டத்தில் கடமையாற்றினார் எனினும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அப்பணியை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டது.

இவ்வாறான நிலையில் 1988ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ம் திகதி இலங்கை உள்ளூராட்சி சேவையில் எழுதுவினைஞராக இணைந்து ஊர்காவற்துறைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசசபையில் கடமையாற்றினார். இவர் திருமணப் பருவம் அடைந்த நிலையில் கச்சாய் வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் கா. முருகப்பா ஆச்சிமுத்து தம்பதியினரின் மகளாகிய ஆசிரியை கேதீஸ்வரியை "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என்பதற்கமைய 1992ம் ஆண்டு பங்குனி மாதம் 25ம் திகதி வதுவை செய்து கொண்டார். இதன் பயனாக சிந்துஜன், விதுர்ஜா, விதுர்ஜன் ஆகியோரை மழலைச் செல்வங்களாகப் பெற்று

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல் லாற்றின் நின்ற துணை"

என்ற வாக்குக்கமய இல்லறத்தை நல்லறமாகப் பேணினார்.

நான்கு ஆண்டுகள் ஊர்காவற்துறைப் பிரதேசசபையில் பணியாற்றிய இவர் 14.10.1992ம் ஆண்டு முதல் தற்காலிக இடமாற்றம் பெற்று சாவகச்சேரிப் பிரதேசசபையில் இணைந்து கொண்டார். பின்னர் 01. 11. 1992ல் நிரந்தர இடமாற்றத்தினைப் பெற்று 04. 11. 1992 முதல் சாவகச்சேரி பிரதேசசபையின் கைதடி, நவற்குழி உப அலுவகங்களுக்கான பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

"உடைய ரெனப்படுவது ஊக்கம் அ.்.திலார்
உடையது உடையரோ மற்று"

என்ற வள்ளுவர் வாக்குக்கமைய தனது சுய முயற்சியாலும் ஊக்கத்தாலும் பதவி உயர்வுகள் பலவற்றைப் பெற்று விளங்கிய அமரர் அவர்கள் 02. 04. 2001ம் ஆண்டு முதல் சாவகச்சேரிப் பிரதேசசபையின் பதில் பிரதேசசபைச் செயலாளராக நியமனம் பெற்றார். அதனைத் தொடர்ந்து பிரதேசசபை சாவகச்சேரியின் நிரந்தர செயலாளர் பதவி உயர்வு பெற்றார். அதன் பின்னர் 15. 04. 2002 முதல் இடமாற்றம் பெற்று அமரத்துவம் அடையும் வரை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் செயலாளாராகவும், விஷேட ஆணையாளராகவும் பணியாற்றினார்.

"பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு"

என்ற வள்ளுவர் வாக்குக்கமய பல்வேறு பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொண்டபோதிலும் எந்த வித பெருமிதமும் இன்றி எல்லோருடனும் இயல்பாகப் பழகும் சுபாவம் கொண்ட அமரர் சிவராசா அவர்கள் கோபமே இல்லாத முகவசீகரத்துடன் எல்லோரையும் அரவணைத்துப் பணியாற்றும் தன்மை உள்ளவராக விளங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தன்னுடைய கிராமத்தை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கில் அயராது உழைத்த அமரர் அவர்கள் ஆவரங்காலில் 12. 07. 2003ல் சிவசக்தி மணிமண்டபம் நிறுவப்பட்டபோது அதன் ஆலோசனைச் சபைத்தலைவராக இருந்து பல அறக் கொடைகளை வழிநடத்தினார். அத்துடன் யா/நடராஜ இராமலிங்க வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவராகவும், இராமலிங்க சுவாமி கோவில், கிராம அபிவிருத்திச் சங்கம், சரஸ்வதி சனசமூக நிலையம், ஆவரங்கால் விளையாட்டு அபிவிருத்திக்குழு ஆகியவற்றில் பல்வேறு பதவிகளை வகித்து தனது கிராமத்து மக்களுக்குப் பல மகத்ததான சேவைகள் ஆற்றினார். இதனால் இவருக்கு இலங்கை நீதி அமைச்சு 2004ம் ஆண்டு ஜனவரி 23ம் திகதி இலங்கைத்தீவு முழுவதற்குமான சமாதான நீதவானாக நியமித்தது.

"தம்பாற்றும் மக்கள் அறிவுடமை" என்ற பொய்யா மொழியின் கூற்றக்கமைய தம்பிள்ளைகளை கல்வியில் உயரவைக்க அரும்பாடுபட்டார். தன் வாழ்க்கையில் எதனையும் நினைத்துக் கவலை கொள்ளாது வாழ்க்கைப்பயணத்தை தொடர்ந்த அமரர் அவர்கள் கடமை நிமித்தம் பயணித்த வேளையில 25. 04. 2006 செவ்வாய்க்கிழமை மாலை பளைப்பகுதியில் நடைபெற்ற வாகன விபத்தில் சிக்கி தேவர்கள் வாழும் உலகாம் தேவலோகம் சென்றார்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா. செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அடிக்கல்லை நாட்டுகிறார். (அமரர்) இ.து.சிவராசா தேங்காயை அர்ப்பணம் செய்கிறார்.



சிவசக்தி மணிமண்டப நிறுவுநர் திரு, திருமதி வே.சிவசுந்தரம் தம்பதியினருக்கான கௌரவிப்புக் கேடயத்தை (அமரர்) இ.து.சிவராசா வழங்கி மகிழ்வடைகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்ம சாந்திப் பிரார்த்தனை

வேத இதிகாச புராணங்களால் விதந்து போற்றப்பட்டதும், தேவாரப்பாடல் பெற்ற சிவஸ்தலங்களை கொண்ட ஈழமணி திருநாட்டின் சிரமென விளங்கும் யாழ் குடாநாட்டின் நடுவனாக விளங்கும் சகல செல்வங்களும் செழிப்புற்று வான் பயிர் செய்பயிர் சோலைகள் மலிந்து விளங்கும் ஆவரங்கால் பதியில் நடராச ராமலிங்க பெருமான் திருவருள் பெற்று வாழும் கிராமத்தில் ஆதி வேளான் குலத்தில் திருவாளர் துரைசிங்கம் கனகம்மா தம்பதியினருக்கு அருந்தவ புதல்வராக சிவராசா அவர்கள் பிறந்து உரிய காலங்களில் கல்விகற்று அரச சேவையில் கடமை ஆற்றி மக்களின் மதிப்பை பெற்று இல்லறத்தில் புகுந்து இன்புற்று மழலை செல்வங்களை பெற்று பிள்ளைகளை நற்பண்புகள் நிறைந்த சான்றோர்களாக்க நினைத்திருக்கும் வேளையில் திடீரென காலன் கவர்ந்து சென்று விட்டான். விதியை வெல்ல ஒருவராலும் முடியாது . ஆகவே அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல பர்பதவர்தனி சமேத நடராசாராமலிங்க சுவாமியை பிரார்த்தனை செய்கிறேன்.

பிரதிஷ்டாவித்தகர் பிரமஸ்ரீ. வே. நடராசக் குருக்கள்.

## மீண்டும் ஜனனிப்பாய்

முன்னரே முடிந்த காரியம், பொல்லாப்பு ஒன்றுமில்லை. இந்த பூமியிலே ஜனனமாகின்ற ஒவ்வொன்றினதும் முடிவும் அந்த நிமிடமே தீர்மானிக்கப்பட்டுவிடும். நாங்கள் ஒவ்வொருவரும் அந்த அந்த காலத்தில் ஒவ்வொரு கதாபாத்திரங்களை ஏற்று நடித்து முடிவில் முடிந்து போகின்றோம். இந்த உண்மையை உணர்ந்து நாங்கள் அழுது புலம்புகின்றோம். இந்த வகையிலே நண்பர் சிவராசா அவர்கள் எங்களுடன் நீண்டகாலம் ஒரு குடும்ப நண்பராக பழகியவர் அவர் பிரிவு உண்மையில் என் ஆத்மாவை ஒருகணம் உலுப்பியது. தத்துவம் பேசிய யான் அவரை இழந்தவுடன் மௌனமாகி கண்ணீர சிந்துகிறேன். என்னால் தாங்கமுடியவில்லை தான் எத்தனையோ குடும்பங்களை வாழவைத்துக் கொண்டிருக்கிறேன். அத்தனை குடும்பங்களது ஆசீர்வாதம் தன்னை காப்பாற்றும் என்று என்னிடம் கடைசியாக கூறினார். அப்படி என்றால் அந்த வார்த்தைகள் எங்களது ஆசீர்வாதங்கள் எல்லாம் கடவுளே! அத்தனையும் பொய்த்துப் போய்விட்டதா? கடவுளை கடிந்து கொள்ளாமல் என்னால் இருக்க முடியவில்லை. குடும்பத்தலைவனாய், உறவுகளுக்கு நல்ல வழிகாட்டியாய், ஊருக்கு ஒரு பெரும் தலைவனாய், அன்பாய், பண்பாய், எல்லோரையும் அரவணைத்த நீ மட்டும் நீண்டு படுத்து உறங்குகிறாய். எங்களால் அப்படி இருக்க முடியவில்லையே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலே புறப்படும் போது நீ போட்டுக் கொடுத்த தேநீர் உன்குழந்தையாரின் வயிற்றில் சமிக்குமுன்பே நீ சாவு தழுவியது ஏனய்யா உன் மனைவி, குழந்தைகள், உடன் பிறப்புக்கள் கதறி அழுவது உனக்கு கேட்க வில்லையா?

எங்களுக்கு ஒன்று மட்டும் நன்கு புரிகிறது. நீ சாகவில்லை. செத்துப் போனது உனது உடல் மட்டும் தான். என்றும் எங்களுக்குள் வாழ்ந்து கொண்டிருப்பாய். என்றோ ஒருநாள் நிச்சயம் மீண்டும் ஜனனிப்பாய்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நல்ல நண்பனாக, ஆசானாக என்றும் உங்களுடன்
**சிவப்பிரம்மஸ்ரீ. ச.தனேஸ்வரக் குருக்கள்**
**கோப்பாய்.**

# செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனையுரை

நிமிர்ந்த தோற்றம், நிதானமான பேச்சு, ஈரநெஞ்சுடைய இனிய சுபாவம் என்று அமரர் சிவராஜா பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். இனி பேசிப் பயன் என்ன? வாழும் வயதில் காலன் பறித்துவிட்டான். ஆவரங்கால் கிராமத்தில் பிறந்து இலண்டனில் வாழும் அறக்கொடையாளர் திரு. வே. சிவசுந்தரம் அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் சிவசக்தி மணிமண்டப நிர்மாணம் தொடர்பாக அமரர் சிவராசா அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அன்றுமுதல் மண்டபம் நிர்மாணப்பணியில் அயராது உழைத்து மிகநெருக்கமாக என் அன்புக்குப் பாத்திரமான சகோதரனாக விளங்கியவர் அமரர் அவர்கள். எத்தனையோ தடவை எங்கள் வீடுவந்து மகிழ்ந்து இனியன பேசி மிகவும் நெருக்கமான உறவு நிலையில் அவரது அன்பு தொடர்ந்தது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே எனது சகோதரன் பளையில் ஆசிரியராக இருந்தபோது அவருடன் நட்புறவு கொண்டாடிய அமரர். சிவசக்தி மண்டப உறவால் எமது குடும்ப உறுப்பினர் அனைவரோடும் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. பொதுப் பணிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு உழைத்த உத்தமர் சிவராசா அவர்கள் ஊர் அபிமானம் மிக்கவர். ஊருக்கு உகந்த பணிகளை நிறைவேற்றுவதில் பேரார்வம் கொண்டு உழைப்பவர். இத்தகைய ஆர்வலரின் இழப்பு ஆவரங்கால் பதிக்கு மிகுந்த பேரிழப்பு என்பதனை அமரரின் இறுதி வைபவம் நிரூபித்தது. ஆண்கள், பெண்கள் அனைவருமே அழுது புலம்பினர். உயர்ந்த பதவி வகித்த உத்தமர் சிவராசா பற்றிப் பளை பிரதேச மக்கள் கொண்டுள்ள அபிமானம் எல்லையற்றது. என் செய்வோம்? இவரது பிரிவால் துடிக்கும் அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் எத்தகைய ஆறுதல் வார்த்தையும் சொல்ல முடியவில்லை. இறைவன் தான் அவர்களை ஆறுதல் படுத்தவேண்டும். அன்பர் சிவராசா அவர்களின் ஆத்மா ஆறுதல் அடைய இறைவனை இறைஞ்சுவதோடு அவரது மனைவி பிள்ளைகள் ஆறுதல் பெற்று துயர் இன்றி வாழ ஆவரங்கால் சிவன் அனுதினமும் உதவ வேண்டும் எனப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**திரு ஆறு. திருமுருகன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவரங்கால் மணி மண்டபம்
## (வி. & ரி. அறக் கட்டளை நிதியம்)

## மனதை விட்டகலா மருகர்

"பருவத்திற்கு முன்னர் பரமனால் பறிக்கப்படும் ஜீவன்களால் மனிதகுலம் பலவீனமடைகிறது"

இக்கூற்றுக்கு சான்றுபகருமாப்போல் எமது மருகர் அமரர் சிவராசா அவர்கள் மின்னல் வேகத்தில் எம்மை விட்டுப் பிரிந்தமை எல்லோருக்கும் பெரும் அதிர்ச்சியையும் தாங்கவொண்ணாத் துயரத்தையும் தருகின்றது. இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து எம்முடன் இருக்கக்கூடியவர் விதியின் சதியினால் யாரும் எதிர்பாராத வண்ணம் திடீரென இவ்வுலகைவிட்டுப் பிரிந்தமை ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அமரர். சிவராசாவின் மறைவு எமது குடும்பங்களில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தி விட்டது. அவர் சிறு பராயத்திலிருந்தே எம்முடன் மிகவும் அன்னியோன்யமாகப் பழகி வந்தார். அவரின் தோற்றம் நிமிர்ந்த நடை. எல்லோருடனும் மிகவும் சாமர்த்தியமாக அளவளாவுதல், எல்லோரையும் ஒன்று கூட்டி நடக்கும் பக்குவம், செயற்றுடிப்புடன் சேவையாற்றுதல் இவையாவும் நாம் அவரில் கண்ட மிக நல்ல பண்புகளும் சிறப்பு அம்சங்களுமாகும்.

அமரர் அவர்கள் தனது பாடசாலையின்க கல்வியை முடித்ததும் அரச சேவையில் இணைந்து கொண்டார் பின் படிப்படியாகச் சேவையில் முன்னேறி பிரதேசசபை செயலர் மட்டத்திற்கு உயர்ந்து உயர் அதிகாரிகளின் நன்மதிப்பையும் பெற்று உற்றார் உறவினர்க்கும் தான் பிறந்த ஊருக்கும் பெருமை தேடித்தந்தார்.

"அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை" என்பதற்கமைய அவர் உரிய காலத்தில் பெற்றோர்களின் ஆசியுடன் ஆசிரியை கேதீஸ்வரியைக் கைப்பிடித்து. சிந்துஜன், விதுஜா, விதுஜன் ஆகிய மூன்று குழந்தைச் செல்வங்களுடன் இனிதே வாழ்ந்து வருகையில் இவ்விபரீதம் நடந்து முடிந்து விட்டது. மேலும், தனது பெற்றோருக்கும் தன் சகோதர சகோதரிகள் மற்றும் உறவினர்களுக்கும் தன்னால் இயன்ற உதவிகளையும் பராமரிப்புகளையும் மிகவும் பொறுப்புடன் செய்து வந்தார். இவற்றையெல்லாம் விட்டுவிட்டு இறைவன் அவரைத் தன்னோடு அழைத்துக் கொண்டமை எல்லோருக்குமே துயரம் நிறைந்த நிகழ்வாகும்.

மேலும் எமது பெற்றோர் நினைவாக ஆவரங்காலில் ஒரு மணிமண்டபத்தை அமைத்து அதனால் வரும் தேறிய வருவாயைப் பொதுச் சேவைகளுக்கு பயன்படுத்துவோம் என்று தீர்மானித்த போது, எமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவரங்காலில் மருகர் திரு.சிவராசா இருக்கிறார். அவர் எல்லாவற்றையும் மேற்பார்வை செய்து செவ்வனே நடத்துவார் என்ற நம்பிக்கை எமது திட்டத்தை ஆரம்பிக்க உந்துணையாய் இருந்தது.

அமரர்.சிவராசா அவர்கள் ஆவரங்கால் மணிமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டிய நாளிலிருந்து மிகவும் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் எதுவிதமான சன்மானமுமின்றி இந்த நல்ல பொதுப்பணியில் தம்மை முழுமையாக இணைத்துச் சேவையாற்றினார்.

ஆவரங்கால் மணிமண்டபத்தைத் திறந்து வைத்து ஆரம்பித்த நாளிலிருந்து அதன் ஆலோசனைச் சபைத் தலைவராக நியமித்திருந்தோம். இச்சபைக்கு நல்ல தலைமைத்துவத்தைக் கொடுத்து இச்சிறிய காலப்பகுதியில் ஆவரங்கால் மணிமண்டபம் மக்களிடையே நன்மதிப்பைப் பெறுவதற்கு அவர் செய்த சேவை அளப்பரியது என எல்லோரும் அறிவார். மண்டபத்தை நடாத்தவதில் வரும் சிக்கல்களுக்கு மிகவும் சாதுரியமாகவும், துணிச்சலுடனும், முகங் கொடுத்து எம்முடன் ஆலோசித்துப் பரிகாரம் கண்டார்.

அவர்பல சமூக சேவைத் திட்டங்களை அறக்கட்டளை நிதியத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்த திட்டமிட்டு எம்முடன் ஆலோசித்துவரும் வேளையில் இவரின் திடீர் மறைவு ஏற்பட்டு விட்டது.

அமரர் சிவராசாவின் மனைவி, பிள்ளைகள் ஒரு சிறந்த தலைவனை, தந்தையை உறுதுணையை இழந்து நிற்கின்றனர். பெற்றோர் கிடைத்ததற்கரிய மகனை இழந்து நிற்கின்றனர். சகோதர, சகோதரிகள் பாசமிக்க சகோதனை இழந்து நிற்கின்றனர். மைத்துனர்கள் உற்றார் உறவினர்கள் உற்றவனை இழந்து நிற்கின்றனர். சக ஊழியர்கள் நண்பர்கள் நல்ல ஒரு சகாவை இழந்து விட்டனர். ஆவரங்கால் ஒரு சிறந்த மனிதரையும் இழந்து நிற்கின்றது. குடும்பத்தினர், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அன்பர்கள் அமரரின் இன்முகத்தை இனிக்காண முடியாது என வருந்துகின்றனர்.

நல்லவனாகவும், வல்லவனாகவும் வாழ்ந்து "உவப்பத் தலைக் கூடி உள்ளப் பிரிந்த" எமது மருகர் சிவராசா அவர்களின் அத்ம சாந்தியடைய எல்லாம் வல்ல ஆவரங்கால் பர்வதபத்தினி சமேத நடராசா இராமலிங்கேஸ்வரரை இறைஞ்சுவோமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்,

*(Trustees)*

வே. சிவசுந்தரம்

வே. இளையதம்பி

வே. கந்தசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணப்பொழுதில் கனவாகியவர்

பேசியதும் பழகியதும் அனைவரையும்
அரவணைத்து பணியாற்றியதும் கணப்பொழுதில்
கனவாகிப் போனதுவே நம்பமுடியவில்லை.
நீ அகாலச் சாவடைந்ததினை
ஆறுதலைச் சொன்னாலும் உன் ஆருயிர்
அன்பிற்கு ஈடாகுமா! உன்பிரிவால்
பரிதவிக்கும் குடும்பத்தாருடன் நாமும் துயரினை
பகிர்ந்து கொள்வதுடன் அவர்களுக்கு எம்
ஆறுதலினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொறுப்பாளர்
பணியாளர்கள்
நிர்வாகசேவை
கிளிநொச்சி மாவட்டம்.

## ஈடு செய்ய முடியாத இழப்பு

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையில் செயலாளராகக் கடமையாற்றிய அமரர்.இ.து.சிவராசா அவர்கள் திடீர் விபத்தில் அகாலமரணடைந்த செய்தியை என் இரு செவிகளும் நம்பாவிடினும், கண்ணீரிடையே அவரின் கம்பீரமான உருவம் மௌனமாக நிழலாடி தோற்றமளித்தது.

அமரர்.துரைசிங்கம் சிவராசா அவர்கள் சக அலுவலர்களுடன் மிகவும் அந்நியோன்னியமாகவும், புரிந்துணர்வுடனும் பழகி சகலரதும் அன்பினைப் பெற்றவர். அது மட்டுமல்லாது உள்ளூராட்சி திணைக்களத்திலும், மாவட்டச் செயலகத்திலும், மற்றும் உயரதிகாரிகளினதும் நன்மதிப்பினைப் பெற்றவர். பச்சிளைப்பள்ளி பிரதேச மக்களது மதிப்பினையும் நம்பிக்கையினையும் பெற்ற சிறந்த செயல் வீரன்.

பச்சிலைப்பள்ளி பிரதேசம் போர் அனர்த்தத்தால் முற்றாகப் பாதிக்கப்பட்ட நிலையில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையைப் பொறுப்பேற்று ஆறு ஆண்டுகள் நற்பணியாற்றிய நல்லோன். மாடிக் கட்டடம் அமைத்து பச்சிலைப்பள்ளி பிரதேச தலைமை அலுவலகத்தை மிளிரவைத்து எல்லோரதும் பாராட்டையும், உயர் மதிப்பையும் பெற்று எம் மனதில் நீங்கா அன்பைப் பெற்ற பெருந்தகை.

காரியாலக் கடமைகளைக் காலதாமதமின்றி முடித்துக் கொண்டு கனவுகளையும், கடமைகளையும் சுமந்து கொண்டு பாதி வழியில் குடும்பத்தையும், உள்ளூராட்சி சபையையும் பரிதவிக்கவிட்டு கடுகதி பஸ்சில் காலன் வீடு போய்ச் சேர்ந்த எமது இனிய செயலாளர் அமரர் து.சிவராசா அவர்களை இழந்து கொழுகொம்பின்றிக் தவிக்கும் மனைவி, பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றத்தாருடன் நானும் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உத்தியோகத்தர்களும் சேர்ந்து தவிக்கின்றோம்.

அவரது இறுதி ஊர்வலத்தில் அவரது வாழ்வின் பெருமைகளை புரிந்து கொண்டேன். சிவராசா அவர்கள் ஒரு சிவதொண்டன். சிவத்தைப் பரமசிவன் அழைத்து விட்டான் என்பதை உணர்ந்தேன். சாந்திக்காக ஒரு கணம் பிரார்த்திக்கின்றேன்.

அன்னாரை இழந்து கண்ணீரில் மிதக்கும் குடும்பத்திற்கு மன அமைதியைத் தந்து அவரது கனவுகள் நனவாகி பிள்ளைகள் பார் போற்ற கல்வி மான்களாகத் திகழ அவர்தம் ஆத்ம சாந்தியடைய எல்லாம் வல்ல பரமசிவனை வேண்டி நிற்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சி. சிவப்பிரகாசம்,
பிரதமலிகிதர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

## செயல்வீரன் செயலாளர் சிவராஜா

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைச் செயலாளர் அமரர் இ. து. சிவராஜா அவர்கள் அகால மரணமடைந்து விட்டார் என்ற செய்தி எனக்குப் பேரதிர்ச்சியையும், சொல்லொணாத் துயரத்தையும் தந்தது. இப்பிரதேசத்தின் முன்னேற்றத்திலும், அபிவிருத்தியிலும் அவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். சேவை மனப்பான்மை கொண்டிருந்த அவர் என்னுடன் பல விடயங்களில் தோளோடு தோள் நின்று ஒத்துழைத்தார்.

இப்பிரதேசத்தின் வீதி அபிவிருத்தி, குடிநீர் விநியோகம், சுகாதாரம் பேணல், முன்பள்ளி அமைத்தலும் அச்சிறார்களின் நலன் பேணலும் போன்ற பல விடயங்களில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார். இப்பிரதேசத்தின் வளர்ச்சியிலும், திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் என்னுடன் கலந்தாலோசித்துச் செயற்படுவார். பச்சிலைப்பள்ளி பிரதேச சபையும், பிரதேசசெயலகமும் ஒரே நாளில் புதிய கட்டிடத் திறப்புவிழாவை நடாத்தியபோது அமரர் சிவராசா அவர்கள் என்னுடன் முன்னின்று திறம்படச் செயலாற்றினார். இப் பிரதேசத்தின் அபிவிருத்தியிலும், முன்னேற்றத்திலும் அதிக அக்கறை கொண்ட அவர் பல திடட்டங்களை என்னிடம் கூறி இருந்தார். எனது ஒத்துழைப்பையும் கோரி இருந்தார். அது இன்று கனவு போல் ஆயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடுக்கான தோற்றமும், துடிப்பான பேச்சும் கொண்ட இவர் பழகுவதற்கு இனியவர்; சிறந்த பண்பாளர் தன்னுடன் வேலை செய்யும் சக உத்தியோகத்தர்களைத் தன்பிள்ளைகள் போலவே நடாத்தியதுடன் அவர்களின் தேவை அறிந்து செயலாற்றி வந்தார். அவரின் சொந்த ஊரான ஆவரங்காலில் சிவசக்தி மண்டபத்தின் அறங்காவல் குழுத்தலைவராக இருந்து அரும்பணியாற்றியவர். சமாதான, பொதுப் பணிகளிலும் அவர் ஈடுபட்டு வந்தார். சமாதான நீதவான் பதவி இவரது சேவைக்குக் கிடைத்த வெகுமதியாகும்.

குன்றாப் புன்முறுவலுடன் என்றும் நடமாடும் ஒரு செயல்வீரனை நாம் இழந்து விட்டோம். இவரது இழப்பு அவரின் குடும்பத்தினர்க்கு மட்டுமல்ல இப்பிரதேசத்திற்கும் பேரிழப்பாகும். ஏதோ பிறந்தோம் எப்படியோ வாழ்ந்தோம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நற்கொள்கையில் வாழ்ந்த ஒரு செயலாளர் இன்று எம்மத்தியில் இல்லை. தலைவனை, தந்தையை, தனயனை இழந்து மீளாத்துயரில் மூழ்கி இருக்கும் அவரது குடும்பத்தவர்க்கு ஆண்டவன் மனஅமைதியையும், துணிவையும் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகின்றேன்.

இவரது பிரிவைத் தாங்க முடியாது ஏங்கி நிற்கும் குடும்பத்தினர்க்கும், இப்பிரதேச மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு ச. சிவஸ்ரீ**
உதவிப்பிரதேசசெயலாளர்.
பிரதேசசெயலகம்,
பச்சிலைப்பள்ளி

## உறு துணையாய் நின்றவரே

அமரர் திரு இ.து.சிவராசா அவர்கள் எமது வலி கிழக்கு பிரதேச செயலக வளர்ச்சிக்கு வலக்கரமாக துணை நின்றவர். ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப ஆலோசனை சபையின் தலைவராக விளங்கிய காலத்தில் எமது சகல வைபவங்களுக்கும் இன்முகத்துடன் மணி மண்டபத்தை தந்துதவியவர். தானும் எமது சகல நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்தவர். பளை பிரதேச சபையிலே செயலாற்றல் மிகுந்த செயலாளராக கடமையாற்றியவர். பன்முகப்பட்ட ஆளுமைப்பண்புகள் கொண்டமைந்தவர்.

கடமைக்கும், கண்ணியத்திற்கும், அன்பிற்கும், பண்பிற்கும், சேவைக்கும், வளர்ச்சிக்கும் இலக்கணம் சிவராசா அவர்கள். இவரது மகத்தான பணிகளால் தம் வாழ்வில் உச்சப்பயனைப் பெற்றவர் பலர். இன்று அவரது திடீர் மறைவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவருக்கும் ஓர் பேரிழப்பாகும். துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும், பளை பிரதேச செயலக அலுவலர்களுக்கும் ஆவரங்கால் பிரதேச மக்களுக்கும் எமது இரங்கலைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

வலிகிழக்கு கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர் சார்பில்
திருமதி அசாந்தசீலன்
உதவி பிரதேச செயலர்
கோப்பாய்.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை செயலாளரும் விசேட ஆணையாளருமாகிய

## திரு.சிவராசாவின் அகாலமரணத்தை அடுத்து பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர்

திரு...சிவராசா நல்ல உடல் வலிமையும் அவ் உடல் விமைக் கேற்ற செயல் வலிமையும் கொண்ட அரச உயர் உத்தியோகத்தர் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரிவு செயலாளர் என்ற முறையிலும் அவரது அலுவலகமும் எனது அலுவலகமும் ஒரே நிர்வாகப் பிரிவிற்குள் அமைந்திருந்தமையாலும் இருவரும் சேர்ந்து செயற்பட வேண்டியது அவசியமானதாக இருந்து வந்துள்ளது.

இந்நிலையில் பிரிந்து சென்ற அமரர் சிவராசா அவர்களது நிர்வாகத்திறன், செயற்பாடுகள் என்பன இன்றும் எனது மனக்கண்முன் நிழலாடுகின்றன. சுனாமி அனர்த்த செயற்பாடுகளில் இருவரும் இணைந்து எமது மக்களிற்காக எமது கடமைக்கு மீறி செயற்படவேண்டியேற்பட்டது. பாடுபட்ட போது பலராலும் பாராட்டுதல் பெற்றவர் திரு.சிவராசா. அவரது திறமை செயற்பாடுகளை நான் மட்டுமல்ல பச்சிலைப்பள்ளி பிரதேசசபை அனைத்து உத்தியோகத்தர்களும் அச்சபையின் முன்னாள் செயலாளரும் எனது அன்புக்குரிய நண்பருமான திரு. என். பாலச்சந்திரன் அவர்களும் நன்கு அறிவர் இன்னும் இவர்களால் பாராட்டுதல்களும் பெற்றவர் மறைந்த அமரர் சிவராசா அவர்கள்.

"எதனை எதனால் எவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்"

என்ற வள்ளுவர் வாக்குக்குஒப்ப தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாற்றியவர் திரு.சிவராசா ஆவார்.

ஏனைய திணைக்களங்கள் போல அல்லாது உள்ளூராட்சி சேவை என்பது மக்களுடன் நேரடி தொடர்புடைய சேவையாகும். இச்சேவைகளில் தனது பங்களிப்பை உள்ளூராட்சி திணைக்கள ஊழியராக நியமனம் பெற்று தொடர்ச்சியாக உள்ளூராட்சி திணைக்களத்தில் சேவையாற்றி சிறந்த நிர்வாகதிறன் மிக்கவரானார் அடுத்த கருமத்தை தொடர்ந்து செய்யவிடாது இடைநடுவில் அகாலமரணத்தை தழுவியது. பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எல்லைவாழ் மக்களுக்கு பெரிய இழப்பாகும்.

அரச நிர்வாக செயற்பாடுகள் தவிர சமூக வளர்ச்சி செயற்பாட்டிலும் இடைவிடாது உழைத்தவர் திரு. சிவராசா அவர்கள். ஆவரங்காலில் அழகுக் கோலம் கொண்டு விளங்கும் சிவசக்தி மணிமண்டபத்தின் ஆயுள்காலத்தவராக செயற்பட்டது மட்டுமன்றி அக்கட்டிடம் அமைவதற்கு இடையுறாது பாடுபட்டவர்களில் திரு. சிவராசா அவர்களும் ஒருவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யுடம்பு ஒரு நாள் போகத் தான் வேண்டும். ஆனால் புகழுடம்பு என்றும் நிலைத்து நிற்கும். அழியாத கோலங்களாக அவர் ஆற்றிய செயற்பபாட்டு மிகுதிகளை செவ்வனே செய்து முடிப்பது தான் நாம் அவருக்கு செய்யும் கைமாறு ஆகும்.

“உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு”

திரு. சிவராசா அவர்களின் மறைவினால் துயருறும் மனைவி பிள்ளைகள் குடும்பத்தினருக்கும் நண்பர்களிற்கும் இவர் பிரிவால் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த சோகத்தை தாங்குவதற்குரிய ஆன்ம பலத்தினை ஆவரங்கால் நடராஜப் பெருமான் அருளவேண்டுமென அன்புடன் அவர் பாதம் இணைந்து நிற்கின்றேன்.

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு பேரினைமாற்றி
பிணமென்று பேரிட்டு சூரிடைக் காட்டிடை கொண்டு
போய் சுட்டிட்டு நீரிடை மூழ்கி நினைப் பெழுந்தாரே

சி. பசுபதி
செயலாளர்
பருத்தித்துறை பிரதேச சபை
புலோலி.

Telephone 021 2285761

My No

Your No

பிரதேச சபை, கரைச்சி, கிளிநொச்சி
ප්‍රාදේශීය සභා කාර්යාලය, කරච්චි, කිලිනොච්චි
PRADESIYA SABHA, KARACHCHI, KILINOCHCHI

## பிரதேச சபை, கரைச்சி, கிளிநொச்சி.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையில் செயலாளராகக் கடமையாற்றிய அமரர் துரைசிங்கம் சிவராஜா அவர்களின் சாவுச்செய்தியறிந்து, தாங்கெணாக்கவலையும் அதிர்ச்சியும் அடைந்தோம். அச்செய்தியினை எமது மனம் ஏற்றுக்கொள்ள அடியோடு மறுத்தது. அன்னாரின் புன்முறுவலுடன் கூடிய அழகான முகமும் அவரது பண்பான கதைகளும் எம் இதயத்தினை விட்டு இன்னும் விலகவில்லை.

அன்னார் எனக்கொரு அறிவுரைகள் வழங்கும் ஆலோசகராகத் திகழ்ந்தவர். உள்ளூராட்சி நிறுவனத்தின் செயற்பாடுகள், அதிகாரங்கள் சம்பந்தமாக நல்யோசனை வழங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது இன்முகம், இனிய பேச்சுக்களாகியன எல்லோரையும் கவர்ந்திழுக்கும். அதனால் அனைவரின் பாராட்டுக்குரியவரானார். ஏழை, எளிய மக்களுக்குச் சேவையாற்றுவதில் இவருக்கு நிகர் வேறேவருமே இல்லை.

அன்னாரின் இழப்பு பேரிழப்பாகும். உள்ளூராட்சிக்கு கிடைக்கவியலாத சொத்தாகின்றது. அவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எனது சார்பிலும் கரைச்சிப் பிரதேசசபையில் கடமையாற்றும் அலுவலர்கள் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பிக்கின்றோம். அவரது ஆன்மா இறைவன் திருவடிகளைச் சேர்வதாகுக. இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சாந்தி **பொன். நித்தியானந்தம்,**

**சிறப்பு ஆணையாளர்,**

**கரைச்சி, கிளிநொச்சி.**

## சிறந்த சேவையாளன்

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையில் செயலாளராகக் கடமையாற்றி அகாலமரணமடைந்த அமரர். இளையதம்பி துரைசிங்கம் சிவராசா அவர்களது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாருடன் குறுகிய காலத்தில் பழகக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பழகுவதற்கு இனியவர், எவரோடும் அன்பாகப் பழகக்கூடியவர். பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் மத்தியில் பெருமதிப்பைப் பெற்ற பண்பாளன்

கிளிநொச்சி மாவட்டத்தின் சிறந்த பிரதேசசபை செயலாளரா திகழ்ந்தவர் செயற்றிறன் வாய்ந்த ஆளுமைபடைத்த உத்தமர். அன்னாரின் இழப்பு பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்கு மட்டுமல்ல, கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது சார்பாகவும், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உத்தியோகத்தர்கள் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**திரு. A. K. பாலசுந்தரம்**

**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,**

**உள்ளூராட்சி திணைக்களம்,**

**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி கோவிலுக்கான இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழாவின்போது சிவனடியார்கள் சேர்ந்து எடுத்துக்கொண்ட படம்.



ஆவரங்கால் பர்வதவர்த்தினி அம்பிகா சமேத நடராஜ இராமலிங்க சுவாமி கோவிலின் இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வின் போது அமரர் இ.து.சிவராஜா கோபுரத்திற்கான அடிக்கல்லை நாட்டும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்தும் மறையாது

மறைந்தும் மறையாது எமது மனங்களிலெல்லாம் நிறைந்திருக்கும் திரு.சிவராசா அவர்கள் எனது அன்புக்குரிய நண்பன் எனக்கு மட்டுமல்ல அவருடைய உறற்றார் உறவினர், ஊரவர் மற்றும் அவரோடு தொடர்படையவர்கள் தொடர்பில்லாதவர்கள் எவ்வெவர்க்கும் அன்பர், இனியவர்.

கருணை பொழியுங் கண்களும் மதிநுட்பம் வாய்ந்த அகன்ற நெற்றியும், பார்ப்பவர்களைப் பணிய வைக்கும் முகப்பொலிவும் முன் தலைமுடியை வாரிக்கொண்டு நடக்கும் துள்ளும் நடையும் எஃகை ஒத்த மன உறுதியும், தன்னம்பிக்கையும், துணிவும், அடலேறைத் தோற்கடிக்கும் கம்பீரமான உடலும், பூவிலும் மென்மையான இதயமும் கள்ளம் கபடம் கயமை அறியாத குழந்தை உள்ளமாய், அன்பின் வழி இயதாய் அவருடைய உயிர் நிலைபெற்றிருந்தது.

இத்தகைய சிறப்பார்ந்த இயல்புகள் காரணமாக அன்னார் ஓர் ஒப்புவமையற்ற கர்ம வீரனாக விளங்கினார். இல்லை இயலாது என்ற சொற்பதம் அவரது அகராதியில் இல்லை. தமர் பிறர் எனப்பாராது எவருக்கும், எந்த வேளையிலும், எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் கருமமானாலும் எதிலும் வெற்றி எனச் செயலாற்றி உதவுவதில் அவர் காட்டும் ஆர்வம், அர்ப்பணிப்பு, ஆற்றல். ஆளுமை, அளப்பரியது. "பலன் கருதாப் பணி" என்ற கீதை வாக்கியத்தினை மெய்ப்பித்தவர். செய்யும் சேவையால் வரும் மெய்ப் புகழையோ பெருமையையோ கூட எதிர்பார்க்காதவர் என்பதனை அவரை அறிந்தவர்கள் அறிவார்கள், அவர் இருக்குமிடத்தில் சோம்பல் கலையும், ஊக்கமும், உற்சாகமும், கரைபுரண்டோடும்.

பெற்றோல் தாங்கி ஊடாக நெருப்புடன் செல்ல முடியும் என்ற மன வலிமையும், காலனுக்கே காலனாக விளங்கக் கூடிய வல்லமையும் கொண்ட சிவராசா உயிர்க்கிறுதி வந்த வேளையிலும் உற்ற கடமையை முடித்துக்கொண்டு உயிரிலும் மேலாக நேசித்த தன் மனைவி குழந்தைகளை அரவணைத்து ஆதரிக்கும் துடிப்போடு ஓடோடி வந்தவேளையில் வலி விதியிடம் தோற்றுவிட்டார். அல்லற்பட்டு சுறுண்டு புரண்டு அழுதாலும் இவரது இழப்பு ஈடுபெற்ற முடியாததே.

சாந்தி அடைவதைத் தவிர வேறொன்றறியோம் பராபரமே

**வி. கிருஷ்ணசாமி**
ஓய்வுபெற்ற பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
(கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுடன்

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக அமரர் சி. து. சிவராசா அவர்களை நான் நன்கு அறிவேன். அவர் எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் நல்ல உள்ளம் படைத்தவர்.

சிலகாலம் என்னுடன் சேர்ந்து வேலை செய்யும் காலப்பகுதியில் மிகவும் நல்ல மனதுடன் கடமைகளைச் சரிவர நிறைவேற்றி எமது பிரதேசத்தின் முன்னேற்றத்துக்காக அயராது உழைத்தவர்.

அவரது பிரிவு அவரது குடும்பத்திற்கு ஈடு கொடுக்க முடியாத ஒன்றாகும். நாம் எதைச் சொல்லியும் அவர்கள் மனம் ஆறுமா? எனவே சிவராசா குடும்பத்தார்க்கு நல்ல மன அமைதியைக் கொடுக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்..

நன்றி.!

செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.

## எனது இதயத்திலிருந்து ......

தம்பி சிவா அவர்களின் அகால மறைவு எம்மையெல்லாம் அவலத்திற்கு ஆளாக்கியுள்ளது. சிவா - நல்லதொரு குடும்பத் தலைவர். மனைவி பிள்ளைகளோடு அதிக அன்பு கொண்டிருந்தார். உணர்ந்து சிந்தித்து தமது பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்தவர். உறவினர்களுக்கு ஒத்தாசை புரிந்தவர். எல்லோர் மீதும் அன்பும் பாசமும் உடையவர்.

தான்பிறந்த கிராமத்தின் அபிவிருத்தி மீது அதிக அக்கறை கொண்டவராக இருந்தார். குறிப்பாக எமது பாடசாலையின் வளர்ச்சியில் தன்னை உள்வாங்கியவர். பாடசாலையின் ஒவ்வோர் நிகழ்விலும் பங்கு கொண்டவர். விளையாட்டு மைதானம் ஒன்றைத் தேடிக் கொள்வதற்காக அயராது உழைத்தவர். பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராக இருந்து அரும்பணி புரிந்தவர்.இந்த வகையில் அவர் ஒரு சிறந்த கல்விச் சேவையாளன் என்பது உண்மை. இது வெறும்புகழ்ச்சி மொழியல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்காலத்தில் அதிவேகமாக உத்தியோக உயர்வடைந்து பிரதேச சபைச் செயலாளர் ஆனார்.சிறந்ததொரு மனித நேயமிக்க சேவையாளனாகத் தன்பணிகளை ஆற்றினார். தம்பி "சிவா" என்று நான் அழைக்க, என்னைச் "சேர்" என்று அழைக்கும் பண்பை, மரியாதையை எப்படி மறப்பேன்? சிரித்த முகத்துடன் யாவரையும் அணுகும் பாங்கு இவருக்கே தனித்துவமான செல்வம்.

தம்பி! உமது மறைவு எம்மையெல்லாம் வாட்டுகிறது. மரணம் மனிதனுக்கு இயற்கையானது என எம்மை நாமே ஆறுதல்படுத்துகிறோம். உமது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் ஆன்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சு. முத்துக்குமாரசுவாமி
முன்னாள் அதிபர்
யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

## ஈடு செய்ய முடியாத பேரிழப்பு

பளை பிரதேச சபையின் செயலாளராக பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை வகுத்து கடமை வீரனாகவும் செயவீரனாகவும் செயலாற்றிய அமரர் து. சிவராசா அவர்களது அகால மரணமானது ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். பிரதேச சபை செயலாளராக மட்டுமன்றி சமாதான நீதவானாகவும் சிவத்தி மணிமண்டப தலைவராகவும், எமது பாடசாலையான ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலத்தின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும் ஆவரங்கால் கிராமத்திற்கு பல பணிகள் ஆற்றியவர் இன்று எம் மத்தியில் இல்லை.

விசேடமாக எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க தலைவராக இருந்து பாடசாலைக்கு விளையாட்டு மைதானத்திற்கான காணியை பெற்றமை, பெற்ற காணியை மைதானத்திற்கு ஏற்ற முறையில் திருத்தி சீர் செய்தமை, பாடசாலைக்கான சுற்றுமதில் அமைத்தமை, இடநெருக்கடிகள் நிலவிய போது தற்காலிக கட்டிடம் அமைத்தமை, வெளிநாட்டிலுள்ள பழைய மாணவரின் உதவியை கோரி பாடசாலைக்கென கணனிகள் பெற்று வழங்கியமை, நிக்கொட் நிறுவனத்துடன் அடிக்கடி தொடர்பு கொண்டு தளபாடங்களையும் 2 மாடிக் கட்டிடத்தையும் பெற்றமை, அவ்வப்போது அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஆசிரியர்களை பெற்றமை என இவர் பாடசாலைக்கு ஆற்றிய சேவைகளை பட்டியல்படுத்திக் கொண்டே போகலாம். தனது தொழில் தனது குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சுமைகளுக்கு மத்தியில் தான் கற்ற பாடசாலை, தனது கிராமத்தின் பாடசாலை என்ற பற்றுணர்வுடன் இந்த பாடசாலையின் பெயரையும் புகழையும் மேலோங்க செய்தவர். மாணவர்களின் விளையாட்டுத்துறையை மேலோங்க செய்யவேண்டும். என்ற பேரவாவுடன் தனது தலைமையில் பழைய மாணவர்களை உற்சாப்படுத்தி அதற்கென கணிசமான நிதியையும் சேகரித்து விளையாட்டு பயிற்சியை மாணவர்களுக்க வழங்கி கோட்ட மட்ட, வலயமட்ட, மாவட்ட மட்ட, மகாண மட்ட போட்டிகளில் வெற்றிபெறச் செய்து பெருமை கண்டவர்.

பாடசாலையின் பல்வேறு செயற்பாடுகள் தொடர்பான கூட்டங்களுக்கு அவ்வப்போது சமுகந்தந்து அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடன் இணைந்து ஆரோக்கியமான ஆலோசனைகளை வழங்கி அபிவிருத்தி பணிகள் பல மேற் கொண்ட தன்னலமற்ற சேவையாளனை இழந்து நிற்கும் நாம் "எப்பவோ முடிந்த காரியம் ஒரு பொல்லாப்பும் இல்லை" என்ற யோகர் சுவாமிகளின் வார்த்தைகளை எண்ணி ஆறுதலடைவதை தவிர வெறொன்றும் செய்ய முடியாது ஏற்குகின்றோம்.

அமரரின் பிரிவால் துயருறும் மனைவி பிள்ளைகள் மற்றும் உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கிறோம்.

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் புத்தூர்.

அ.அருணந்திசிவம்
அதிபர்

## கிராம அபிவிருத்தி நோக்கி

அழகிய முகம், இளகிய மனம், கனிவான பேச்சு, கடமை உணர்வு, கிராம அபிவிருத்தி பற்றிய பரந்த பார்வை.

இவை அமரர் சிவராசாவின் பெருந்தோட்டத்துறையில் உத்தியோத்தராகச் சேர்ந்து, பின் சாவகச்சேரி பிரதேசசபை, பளை பிரதேசசபை செயலாளராக உயர்வு பெற்று பளை பிரதேசசபையிலேயே காலன் கையில் சிக்கினார். சாவகச்சேரி பிரதேசசபை சத்துணவு வழங்கும் திட்டசெயற்பாடை எமது கிராம முன்னேற்றச் சங்கத்துக்கு வழங்கியதன் மூலம் வசதி குறைந்த எமது பெண்கள் சிலர் பகுதிநேர வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள வழி வகுத்தார். கிராம வீதி அபிவிருத்திக்கு ஆவன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். சிரமதானப் பணிகளில் பங்கேற்றார். சிவன் ஆலயம், கூட்டுறவுத்துறை, சனசமூக நிலையம் ஆகியவற்றின் வளர்ச்சியிலும் பங்கேற்றவர். ந.இ.வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவராக இருந்து மைதானக் கொள்வனவு, பௌதீகவளங்கள், ஆசிரியவளங்கள் கிடைப்பதற்கு ஆவன செய்தார்.

சிவசக்தி மணிமண்டப உயர்வுக்காக பலர் சொல்லும் ஆலோசனைகளை பொறுமையுடன் கேட்டு அதனை மேலும் வளர்ச்சி அடையச்செய்தார்.

அவரது சிறந்த முகாமைத்துவம் பணியாளரிடம், மக்களிடம் கொண்ட தொடர்பாடல் அவரது பணியை உயர்வடையச் செய்தது. அவரது அரசியல் ஆர்வங்கள் நிறைவேற முன்பு அவர் அமராகிவிட்டார்.

ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்கம் சார்பில் எமது அனுதாபங்கள்.

கா. சிவசோதி J.P
செயலாளர்.
ஆவரங்கால் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கம்.

## மறக்கமுடியாத மனிதர்

எமது வாழ்க்கைப்பயணத்தில் நாம் சந்திக்கின்ற எல்லோரும் எம்மனதில் இடம்பிடிப்பதில்லை. ஆனால் வலி கிழக்கு பிரதேசசபை செயலாளராக 2005ல் கடமையேற்றதன் பின்னர் நான் கூடுதலாக அமரர் சிவராசா அவர்களுடன் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதற்கு முன்னர் பாடசாலைக்கு பிள்ளைகளைக் கொண்டு செல்வதில் ஏற்பட்ட அறிமுகமாக மட்டும் இருந்தது. மிகவும் குறுகிய காலத்தில் அமரர் எம்மனதில் இடம் பிடித்த ஒருவர். அதற்கு காரணம் அமரரது அரிய குணமும், மலர்ந்த முகமும், அன்பான அரவணைப்பும் ஆகும்.

ஆவரங்கால் சிவன்வீதியை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் சிவராசா அவர்கள் எமது நாட்டின் இக்கட்டான சூழ்நிலையிலும் தனது கடமையை தன்னலங் கருதாது ஆற்றி வந்தவர். சமூகசேவையில் மிகவும் ஈடுபாடு கொண்டு உழைத்த இவர் கிராமத்தில் மட்டுமல்லாது வலி கிழக்கு பிரதேசத்தை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்று உழைத்தவர். சிறந்த சமூகசேவையாளனாகவும், பண்பாளனாகவும், நிர்வாகியாகவும், சமூகப்பணிகளிலே அதிக ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கியவர். ஆவரங்கால் மணிமண்டபம் சிறந்த முறையில் எமது பிரதேசத்திற்கு பயனளிக்கத்தக்க செயலாற்றியவர்.நல்ல ஒரு குடும்பத்தலைவனாக, சமூகசேவையாளனாக, அரச


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியராக விளங்கியவர். தனது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் அதிக அக்கறையுடன் செயற்பட்டவர். அவரது மறைவு ஈடுசெய்ய முடியாதது மட்டுமல்ல, எதிர்பார்க்காததொன்றாகும்.

மனிதராய் பிறந்தோம், வாழ்ந்தோம் என்றில்லாமல், வாழும் காலத்தில் எவற்றையெல்லாம் செய்தோம், சாதித்தோம் என்று எண்ணிப்பார்க்கின்ற போதே நாம் இவ்வுலகில் பிறந்ததன் அர்த்தத்தை உணர்கின்றோம். அவ்வாறு அர்த்தமுடைய வாழ்க்கையை வாழ்ந்த அமரர் சிவராசாவின் ஆத்மா சாந்தியடைய அவரது குடும்பத்தினரது வாழ்க்கை நல்ல முறையில் அமைவதற்கு ஆவரங்கால் நடராசா இராமலிங்க சுவாமிகளின் பாதங்களை வேண்டி நிற்கின்றோம்.

த. நடராசா,
செயலாளர்,
பிரதேசசபை, நீர்வேலி.

## மறைந்தும் நெஞ்சில் நிறைந்தவர்

நெடிதுயர்ந்த தோற்றமும், ஆற்றலும் ஆளுமை மிக்க அதிகாரியாக இப்பிரதேசத்தில் உலாவந்த துரைசிங்கம் சிவராசா இவர்களின் திடீர் மறைவு எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டது. எங்கள் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய அன்னார் நேர்மை, எளிமை, கண்ணியம் என்பவற்றை அணிகலன்களாகக்கொண்டு வாழ்ந்தவர்.

இவர் எமது ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டபோதெல்லாம் அவ்வேலைகளுக்கு மிகவும் பாடுபட்டு செயலாற்றியவர். பின்னர் கும்பாபிசேக காலத்தில் இவரது சேவை மகத்தானது. அத்தோடு இவ்வாலயத்தின் திருப்பணிச் சபை உறுப்பினராகவும், சிவன் தேவஸ்தான இந்து இளைஞர் மன்ற ஆரம்பிப்பாளர்களில் ஒருவராகவும் இருந்து இவ்வாலயத்திற்கு பெருமை சேர்த்தவர். அத்தோடு இந்து இளைஞர் மன்றத்தின் பொருளாளராகவும் கடமையாற்றினார்.

மேலும் திருவிழாக்காலங்களில் இவரின் சேவைகள் மிகவும் உன்னதமானது. தேவஸ்தானத்தின் புனருத்தாரணத்தின் பின் திருவிழாக்காலங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கவேண்டுமென நினைத்து ஆலய அடியார்களின் உதவியோடு ஓர் அன்னதான சபையை அமைத்து மேற்படி வேலையைச் செய்துவந்தார். தற்போது தேவஸ்தானத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றுவரும் இராஜகோபுர அமைப்பிற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவரில் இவரும் ஒருவர் இவரது கனவு நனவாவதற்கு எல்லாம் வல்ல எம்பெருமான் அருள் புரிவாராக.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு"

என்ற வாக்குக்கமைய இவரது பண்பானது போற்றத்தக்கதாகும்.

அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத நடராச இராமலிங்க சுவாமிகளின் பாதாரவிந்தங்களை இறைஞ்சுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திரு அ. தில்லைநாதன்
தலைவர்
தர்மகத்தா சபை, திருப்பணிச் சபை
நடராச இராமலிங்க சுவாமிகள் கோயில்
ஆவரங்கால்.

## சேவையினால் உயர்ந்தோன்

அமரர் சிவராசாவின் அகால மரணச் செய்தி பழுக்கக் காய்ச்சிய கோலைச் செவியுட் செலுத்தியது போலிருந்தது. எல்லோர்க்கும் மரணம் இயற்கை தான் ஆனால் அமரர் சிவராசாவிற்கு இப்படி நிகழும் என்று எவரும் நினைத்திருக்கவில்லை. இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து மக்களுக்கு சேவை ஆற்ற வேண்டியவர் திடீரென எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தமை வேதனை அளிக்கின்றது. சிரித்தமுகம், கனிவான பேச்சு, சேர்ந்தோரை அரவணைத்துச் செல்லும் உத்தம குணம் இவை அனைத்தும் என் நெஞ்சில் அனல் போல வந்து மோதிச் செல்கின்றன.

சமூக சேவையில் அவர் கொண்ட ஈடுபாடு அளப்பரியது. பாடசாலை, கோயில், கிராம அபிவிருத்தி எனப் பல்வேறு பொதுநல அமைப்புக்களிலும் இணைந்து தனது பங்களிப்பை நல்கியிருக்கின்றார். பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்று இல்லாமல் சமூக முன்னேற்றத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பு பல்வேறு நிலைகளிலும் அவரை நினைவு கூர வைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பாடசாலைக்கு இவராற்றிய சேவையே இவரோடு எனக்கு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியது. நேர்நிலை மனப்பாங்கு கொண்ட அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின், மாணவர்களின் தேவைகளைச் சுட்டிக் காட்டியதும் அவற்றை நிறைவு செய்வதற்குச் சுறுசுறுப்பாக உழைத்தவர். பாடசாலைக்கு காணி கொள்வனவு செய்வதிலும் வெளிநாட்டிலுள்ள பழைய மாணவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பல்வேறு அபிவிருத்திகளை செய்வதிலும் அவர் காட்டிய ஆர்வம் இன்றும் எனது மனதில் நிழலாடுகின்றது.

தற்பெருமை கொள்ளாத ஒரு உத்தமன் அமரர் சிவராசா பெயரிற்காகவும், புகழுக்காகவும் அவர் சேவை ஆற்றியதை நான் ஒருபோதும் காணவே இல்லை. ஆனால் பேரும் புகழும் அவரை நாடி வந்தன. கடமையைச் செய் பலனை எதிர் பாராதே பலன் நிழல் போன்றது அது உன்னைத் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும்" என்ற கீதோபதேசத்தைப் போல தன்னலம் கருதாத சேவையாளர் அமரர் சிவராசாவிற்கு பெயரும் புகழும், ஏன் பொறுப்புக்களும் கூட தேடியே வந்தன. "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணமாக வாழ்ந்த அன்னார் சடுதியாக எம்மை விட்டுப் பிரிந்தமை எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தியது. துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆன்மா நித்திய ஆனந்தத்தில் அமைதி கொள்வதாக.

ஓம் சாந்தி!

**திரு. வே.பாலசுப்பிரமணியம்**

அதிபர், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
முன்னாள் ஆசிரியர்
யா/ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம்

## மாண்புயர் சேவையாளன்

அன்புத் தம்பி இ. து. சிவராசா அமரத்துவமடைந்தமை அவரை நேசிக்கும் யாவருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாக அமைந்துள்ளது.

அமரரவர்கள் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியையும் எங்கள் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் உயர் கல்வியையும் கற்றவர்

தனது திறமையினாலும் உழைப்பினாலும் மிகக் குறுகிய வயதுள் உள்ளூராட்சிச் சபையின் பிரதேச சபைச் செயலாளர் என்ற உயர் பதவியைப் பெற்றார். எங்கள் அயலவர், உறவினர், பழைய மாணவர் எனப் பல தளங்களில் வலுப் பெறும் உறவுகளைச் சுமந்த அன்பர் இ.து.சிவராசாவின் உயர்ச்சி கண்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தோருள் நானும் ஒருவன்.

இதற்குச் சான்று பகருமாற் போல் அமரர்பால் பளைப் பிரதேச மக்கள் கொண்டிருந்த மதிப்பு, மரியாதை என்பவற்றை பல தடவைகள் நேரில் காணும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. எங்கள் கல்லூரிக்குச் சொந்தமான ஒரு தொகுதி ஆதனம் பளையில் உள்ள நிலையில், அவற்றைப் பரிபாலனம் செய்யும் நோக்குடன் நான் பளைக்குச் செல்லும் போதெல்லாம் உரியவர்களோடு தொடர்பு கொண்டு வேண்டிய உதவிகளைச் செய்த உயர் சிந்தையையும் அவர்கள் அமரர் இ.து.சிவராசா மீது கொண்டிருந்த அபிமானத்தையும் நினைத்துப் பார்க்கிறேன்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எங்கள் கிராமத்தின் மேலான வளர்ச்சிக்கெனச் சிறப்பான விளையாட்டு மைதானம் ஒன்றை அமைக்கும் நோக்குடன் ஆவரங்கால் விளையாட்டு அபிவிருத்திக் கழகம் என்ற அமைப்பை நிறுவிச் செயற்பட்டு வருகிறோம். ஓப்புரவாளர் தம்பி வே.சிவசுந்தரம் தலைமையில் லண்டன்வாழ் ஆவரங்கால் ஒன்றியத்தினர் இம்மைதான அமைப்புப் பணிக்கான நிதியுதவியை மேற்கொள்கின்றனர். இச்செயற்பாடுகளின் பொருட்டு காணி கொள்வனவு முதல் ஒவ்வொரு அபிவிருத்திப் பணிகளிலும் அமரர் இ.து. சிவராசாவின் பங்கும் பணியும் வார்த்தைகளால் வடிக்க முடியாத அளவிற்குப் பெறுமதியானவையாக இருந்து வந்துள்ளன.

பிறந்தவர்கள் இறப்பர் என்பது உலக நடைமுறையாயினும் நெருங்கிய இதயங்களின் பிரிவுகள் தாங்கொணா வேதனையைத் தருகின்றன.

ஆமரரின் பிரிவால் துயருறும் உள்ளங்களுடன் நானும் இணைந்து கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய நடராச இராமலிங்க சுவாமியின் பாதங்களைப் பணிகிறேன்.

**வ. ஆறுமுகம்**
அதிபர், ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி
தலைவர், ஆவரங்கால் விளையாட்டு அபிவிருத்திக் கழகம்

## அமரர் துரைசிங்கம் சிவராஜா பற்றிய எமது மனதில் இருந்து

தோன்றில் புகழொடு தோன்றுக அஃ.திறேல் தோன்றலில் தோன்றாமை நன்று" என்ற முது மொழிக்கு இணங்க, அமரர் சிவராஜா அவர்கள் அகாலமரணச் செய்தி கேட்டதும் எனது இதயம் திடீரென நின்ற மாதிரி இருந்தது. இருந்தும் என்னை நானே தேற்றிக் கொண்டேன்.

அமரர் துரைசிங்கம் சிவராஜா கொடிகாமத்தில் திருமணமாகியும், அங்கு பெரும் சொத்துக்கள் இருந்தும், தான் பிறந்த பிரதேசத்தை எப்படியாவது நல்ல நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டவர். இவ்வாறு எல்லோரும் கொள்கை கொண்டவர்களாக இருக்கமாட்டார்கள். தாம் புகுந்த இடத்திலேயே தமது செல்வாக்கை காட்டுபவர்கள். எமது ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் கோப்பாய்க் கோட்டத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றது என்றால் அமரர் சிவராஜா அவர்களின் பங்களிப்பும் முக்கியமானது. விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாது தரவையில் தளபாடங்களைக் காவிச்சென்று விளையாடுவதைக் கோள்விப்பட்டு, பார்த்துக் கொண்டு இருந்து விட்டு கண்திறந்தார். பழைய மாணவர்களை ஒன்று திரட்டினார். புலம் பெயர்ந்து வாழுகின்ற ஆவரங்கால் மக்களுடன் இரவு பகல் பாராது கதைத்து, கெஞ்சி 18 லட்சம் ரூபாவை திரட்டி பெறுமதிமிக்க விளையாட்டு மைதானம் ஒன்றைப் பெற்றுத்தந்தார். பாடசாலையின் கட்டிட வேலைகளுக்கு, விளையாட்டுப் போட்டிக்கு. பரிசுத்தின விழாவுக்கு முன்னின்று பாடுபட்ட பெருந்தகையின் இழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாவட்டத்தில் எத்தனையோ திருக்கலியாண மண்டபம் காணப்பட்டாலும் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபம் போல ஒன்றைக்காண முடியாது. அதை முன்னின்று செயற்படுத்தியது மட்டுமன்றி அதை ஒழுங்காக நிர்வகித்து வந்த அமரர் சிவராஜாவின் இழப்பு தாங்கமுடியாததும் ஈடு செய்ய முடியாத ஒன்றாகும்.

இதே போன்று கோயில் இல்லா இடத்தில் குடியிருக்க வேண்டாம் என்பது ஒரு பொய்யா மொழி எனவே, ஆவரங்கால் நடராஜ இராமலிங்கப் பெருமானைநிர்வகிப்பதிலும் முன்னின்று உழைத்தவர் அமரர் சிவராஜா.

அதுமட்டுமன்றி அவர் ஒரு சிறந்த பிரசையாக திகழ்வார் என்பது எனக்கு சிறு வயதிலேயே தெரியும். ஏனெனில் தனது இளமைக்காலத்தில் அச்சுவேலி சபாநாதன் ரியூசனில் 73-76 ஆண்டு வரை என்னிடம் கல்வி கற்றவர்.

எமது ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் ஒரு பழைய மாணவர் சங்கத்தலைவரை இழந்து நிற்கும் வேளையில் அதை ஈடு செய்ய யார் வரப்போகின்றாரோ என்பது ஒரு ஏக்கம். எது எப்படி இருந்தாலும் அன்னாரது பிள்ளைகள் எல்லோரும் சிறந்த கல்வி கற்கும் மாணவர்கள் என்பது உண்மை. எனவே அமரர் து.சிவராஜாவின் துணைவியார் கவலை ஒருபுறம் இருக்க பிள்ளைகளுக்குத் தொடர்ந்து புத்திமதிகூறி அவர்களைக் கல்வியில் சிறந்தோங்கச் செய்து தங்கள் கணவரது இடத்திற்கு கொண்டு வர வேண்டியது தங்கள் தலையாய கடமை என்பதை மறக்கக் கூடாது எனவே அன்னாரின் இழப்பால் துயர் அடைந்து இருக்கும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து அவரது ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை இறைஞ்சி நிற்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சபா.குகதாசன்
தலைவர்
ஆசிரியர் கழகம்
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈர விழிகளுடன்...............

யா/ ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஆரம்பிப்பாளர்களில் ஒருவரான அமரர். திரு.இளையதம்பி துரைசிங்கம் சிவராசா (சமாதான நீதிவான், பெயலாளர் /பளை பிரதேச சபை, தலைவர்/ ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப ஆலோசனை சபை) அவர்கள் எமது பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என முன்னின்று உழைத்தவர்களில் ஒருவராவார்.

வள்ளுவப் பெருந்தகை கூறியது போல

"அமரர் அகத்து வன் கண்ணர்போலத் தமர் அகத்துவம் ஆற்றுவார் மேற்றே பொறை"

அமரர் அவர்கள் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர்களுக்கான வகுப்பறை வசதி மற்றும் பௌதீகச் செயற்பாடுகள் ஏதாவது குறைவற்ற காலத்தில் தனது தனிப்பட்ட செல்வாக்கின் காரணமாக கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இவற்றைச் சாதித்துள்ளார்.

இதற்குச் சான்றாகப் பல விடயங்கள் உண்டு. மேலும் எமது பாடசாலையில் விளையாட:டு மைதானம் ஒன்று இல்லாத பெரும் குறைபாட்டினை அப்போதைய அதிபராக இருந்த திரு.சு.முத்துக்குமார சுவாமி அவர்களுடன் இணைந்து எமது சங்கத்தின் ஊடாக வெளிநாடுகளிலும் இங்கும் வாழும் எமது பழைய மாணவர்களின் உதவியோடு இப்பாடசாலைக்கு சுமார் இரண்டு (2) ஏக்கர் காணியை கொள்வனவு செய்து பாடசாலையின் விளையாட்டினை அபிவிருத்தி செய்தார்.

மேலும் தற்போது இப்பாடசாலையில் இரண்டு மாடிக் கட்டிடம் அமைப்பதற்கும் இவரது பங்கு அளப்பரியது என்றே கூற வேண்டும். இவர் மூத்த பழைய மாணவனாகவும் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் எமது சங்கத்தின் தலைவனாகவும் இருந்து பழைய மாணவர்க சங்கத்திற்கு நல்ல ஆலோசனைகளை வழங்கிச் சிறப்பித்த பெருமைக்குரியவர்.

அண்மையில் (17.04.2006) எமது பாடசாலையில் விவசாயக் கண்காட்சி நடைபெற்ற போது பாடசாலையின் குறைபாடுகளை இனம் காட்டி ஓர் அறிக்கையினைச் உரியவர்களுக்கு சமர்ப்பித்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியவர்.

"தக்கார் தகவு இலர் என்பது அவர் அவர் எச்சத்தால் காணப்படும்"

என்பதற்கு இணங்க அவரது சேவைகள் பற்பல சான்று பகரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரது மறைவு எமது சங்கத்திற்குப் பேரிழப்பாகும். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் ஏனையோருக்கும் எமது சங்கத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அ.குமாரசிவம்  
செயலாளர்

நீ.மயில்வாகனம்  
பொருளாளர்

பழைய மாணவர் சங்கம்  
யா/ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயம்

## தேறுதல் கூற ஒரு வார்த்தை..................

"தோன்றிற் புகழோடு தோன்றுக அ∴திலார்  
தோன்றில் தோன்றாமை நன்று"

என்கிறது உலகப் பொதுமறையாம் திருக்குறள் இக்குறள் வாக்கிற்கு இலக்கணம் அமைத்துத் தந்துள்ளார். ஆமரர் து. சிவராஜா அவர்கள் அவரின் பூதஉடல் அழிந்து விட்டது. ஆனால் அவரின் புகழுடம்பு அழியவில்லை. ஆவரின் அதிகாரத்திற்குட்பட்ட பளைப்பிரதேச சபை வளம் கொழிக்கும் இடமாகக் காட்சி அளித்து அவரின் புகழ்பரப்பி நிற்கின்றது. தமது கடமைக்காக அதிகாலை தன் அன்பு மனைவி,பாசமிகு பிள்ளைகளைக் கடமை முடித்துவர வழி அனுப்பிச் சென்றவர் மீண்டு வரவில்லை. ஏன் இது சதியோ, விதியோ?

தமது இல்வாழ்வில் தன் துணையாளொடு நகமும் சதையும் போல வாழ்ந்து வந்தார். இன்று தன் துணையாளைத் தனிமரமாகத் தவிக்க விட்டுச் சென்றது ஏன்? தன் மழலைச் செல்வங்களின் அன்பை ஏன் ஆண்டவன் பிரித்தானோ? விதி சதி செய்து விட்டதோ? யாது செய்வது "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? மாநிலத்தீர் - வேண்டாம் நமக்கும் அது வழியே, நாம் போம் அளவும் எனக்கு என்று இட்டு உண்டு இரும்" எனும் அறிவுரையை தலைமேற் கொண்ட மனதைத் தேற்றிக் கொள்வதுடன் தமது துணைவரின் பிரிவால் துயருறும் எமது பாடசாலை ஆசிரியை திருமதி கேதீஸ்வரி சிவராஜா குடும்பத்தின் ஆறாத் துயரில் பங்கு பெறுவதோடு அவரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள்  
யா. கல்லியங்காடு இந்து தமிழ்கலவன் பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பளை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கான கட்டிடிடத்திறப்பு விழாவின்போது கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் மங்கல விளக்கேற்றுகிறாா.




பளை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கான கட்டிடத்திறப்பு விழாவின் போது (அமரர்) இ.து.சிவராசா தலைமையுரை ஆற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரித்த முகமே தெரிகிறதடா!

உன்னை நினைக்கும் போதெல்லாம் பள்ளிப்பருவத்திலிருந்து இன்றுவரை அத்தனை சிரித்த முகமும் விதவிதமாய் வரிசையாய் தோன்றுதடா. உன்னைப்பற்றி ஓரிரு வரிகள் எழுதும் போதுகூட கண்முன்னே, சிரித்தபடிதான் கடதாசிக்குள் தோன்றுகிறாய் நண்பா!

ஆவரங்கால் எனும் இனிய கிராமத்தின் இரு கண்கள் சிவன் கோயிலும் நடராஜ இராமலிங்க வித்தியாலயமுமே.! பல வருடங்கள் இப்பாடசாலையில் ஒன்றாக இளவயதில் கல்விப்பயின்ற காலங்களிலேயே இரக்ககுணம், ஊர்வளர்ச்சியில் ஆர்வம், சகலரையும் மதிக்கும் பாங்கு. நேயம், போன்ற சிறப்பியல்புகள் கொண்டவர் நண்பர் சிவராசா.!

இவர் தன் அன்பான மனைவி பிள்ளைகளுக்கு நல்லதொரு கணவனாகவும் தந்தையாகவும் திகழ்ந்தார். இவற்றுக்கு மேலாக சிவன் கோவிலின் வளர்ச்சியிலும் இங்கு நடைபெறும் சகல பூஜைகள், அபிஷேகங்கள், திருவிழாக்கள், சமய நிகழ்வுகள் யாவும் மற்றய ஆலயங்களுக்கு முன்னுதாரணமாக சிறப்பாக நடைபெற வேண்டுமென்று மிகவும் ஆவலுடனும் கண்ணும் கருத்துடனும் விளங்கினார்.!

பாடசாலை வளர்ச்சிக்காக அவர் தோளோடுதோள் நின்றுழைத்தார்.! தான் பிறந்து, தவழ்ந்து, உலாவித்திரிந்த ஊரின் வளர்ச்சிக்காக என்னென்னவோ எல்லாம் செய்திட வேண்டும் என்று வேட்கை கொண்டிருந்தார்.!

இவர் தம் ஆசைகள், வேட்கைகள் கண்டிப்பாக நிறைவேறும்! தன் குடும்பம், பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம் என்று தனக்குள்ளே சுமந்த இலட்சியங்களை இவரின் அன்புச் செல்வங்கள் நிறைவேற்றுவார்கள். இறைவன் என்றும் பக்கத்துணை நிற்பான்.!

ஜெயம்! ஜெயம்! ஜெயம்!

க. குகநேசன்
பிரதம பொறியியலாளர்,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)
யாழ்மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்க பெரியார்

சைவ சலாச்சாரமும், தமிழ்ப் பண்புகளில் மேம்பட்ட சகல வளங்களையுமுடைய ஆவரங்கால் எனும் புகழ் பூத்த கிராமத்தில் 1957ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24ம் நாள் உத்தம குலத்தில் இளையதம்பி துரைசிங்கம் கனகம்மா தம்பதியினருக்கு சிரேஸ்ட புத்திரராக உதித்த அமரர் து.சிவராசா அவர்களின் மறைவு எமக்கெல்லாம் பாரிய இழப்பாகும். எல்லாவற்றிற்கும் மேலாக ஆவரங்கால் கிராமம் ஆளுமை மிக்க ஒரு பண்பாளனை இழந்துவிட்டது.

இவர் உள்ளூராட்சி சேவையில் ஓர் எழுதுவினைஞராக ஆரம்பத்தில் இணைந்தவர் பின்பு இவரது முயற்சி ஆளுமைச் சிறப்பு காரணமாக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளராக பதவி உயர்வு பெற்றார்.

பின்னர் பளை பிரதேச செயலாளராக பதவி ஆற்றினார். அமரர் அவர்கள் எமது கிராமத்தில் ஆவரங்கால் கிராம அபிவிருத்திச் சங்க பொருளாளராகவும் சனசமூக நிலையத்தின் தலைவராகவும் இக்கட்டான கால கட்டத்தில் வலி கிழக்குப் (வ.ப) ப.நோ. கூ.சங்க ஆவரங்கால் A/21 கிளையிற் கிளைக்குழுத் தலைவராகவும் பொதுச் சபை உறுப்பினராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே ஆவரங்கால் சிவன் தேவஸ்தான திருப்பணி சபையின் உறுப்பினராகவும் தொண்டர் சபை உறுப்பினராகவும் இருந்து சேவையாற்றியவர். இக் கால கட்டத்தில் எமது கிராமத்தில் ஒரு கல்யாண மண்டபம் இல்லாதது ஓர் பெருங்குறையாக இருந்தது இதனை உணர்ந்த அமரர் அவர்கள் அதற்கு தகதியானவர்களுடன் தொடர்பு கொண்டு ஓர் மண்டபத்தினை நிறுவுவதற்க ஏற்பாடுகளைச் செய்தார்.

அமரரது விடா முயற்சிக்கு காரணமாக ஆவரங்காலில் ஓர் கல்யாண மண்டபம் நிறுவப்பட்டது. இம் மண்டபம் 2003ம் ஆண்டு சிவசக்தி மணிமண்டபம் எனும் பெயரில் ஆரம்பமாகியது.

இம் மண்டபத்தின் ஆலோசனை சபைத் தலைவராக ஆரம்பம் முதல் அமரத்துவம் அடையும் (இன்று) வரை செயற்பட்டு

"வினை வலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கமைய ஆலோசனை சபையை வழி நடத்தி வந்தவர். அமரர் அவர்கள் தனது முகவசீகரம் தோற்றம் காரணமாக எந்த விடத்திலும் அரச திணைக்கள பெரியவர்களுடன் எதுவித அச்சமும் இன்றி பழகி எக்காரியங்களையும் சாதிக்கும் திறன்மிக்கவர்.அமரர் அவர்கள் ஆலோசனை மூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கிராம மக்களுக்க பல சேவைகளைப் புரிந்துள்ளார். அண்மையில் யாழ் அரச அதிபருக்கு எமது கிராத்திற்கு தண்ணீர் விநியோகம், சிவன் வீதி, மயானவீதி, வன்னியசிங்கம் வீதி திருத்தம் தொடர்பாகவும் ஓர் அறிக்கை சமர்ப்பித்து கிராமத்திற்கு சேவை புரிந்துள்ளார். அத்தோடு பிரதேச செயலர் பிரிவு இரண்டாகப் பிரிப்பதிலும் பங்கு கொண்டுள்ளார்.

நல்லதோர் சமூக சேவைகளை இக்கிராமம் இழந்து நிற்கின்றது. நல்ல குடும்பத் தலைவரை இழந்து நிற்கும் குடும்பத் துணைவியாருக்கும், பிள்ளைகளுக்கும், தாய் தந்தையருக்கும் உற்றார், உறவினருக்கும் எமது உளம் நிறைந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி

ஆலோசனை சபை,
சிவ சக்தி மணிமண்டபம்,
ஆவரங்கால்

## நினைவு என்றும் நிலைத்திரும்

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமரிய திரு. துரைசிங்கம் சிவராசா அவர்கள் இயற்கை எய்திவிட்டார். பச்சிலைப்பள்ளி பிரதேசசபைச் செயலாளர், ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப தலைவர், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய பழையமாணவர் சங்க தலைவர் எனப் பல தளங்களில் இவரது சமயசமூகப் பணிகள் பரந்திருந்தன.

நான் சாவகச்சேரி மக்கள் வங்கியில் கடமையாற்றும் காலத்தில் சாவகச்சேரி பிரதேசசபைச்செயலாளராக இருந்த திரு. துரைசிங்கம் சிவராசா அவர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அன்று ஆரம்பித்த நட்பு அவர் அமரராகும் வரை தொடர்ந்தது.

அன்பு, பண்பு, அறிவாற்றல் என்பவற்றுடன் சிறந்த தலைமைத்துவப்பண்பும், ஆளுமையும் அவரிடம் குடிகொண்டிருந்தது. சாவகச்சேரி பிரதேசசபை, பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை, ஆகிய இருசபைகளிலும் செயலாளராக கடமையாற்றி ஊழியர்கள், உயர்அதிகாரிகள் எல்லோரினதும் நன்மதிப்பை பெற்றவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாள பதினைந்து வருடங்களிற்கு முன்பு ஆரம்பித்த நட்பு நான் அச்சுவேலி மக்கள் வங்கிக்கு மாற்றப்பட்டதன் பின்பு கடந்த நான்கு வருடங்களாக வேலைநாட்களில் நான் அச்சுவேலிக்கு கடமைக்குச் செல்லும் போது அவர் அச்சுவேலியில் இருந்து வருவார். நான் அச்சுவேலியில் இருந்து சாவகச்சேரிக்குத் திரும்பும் போது அவர் பளையில் இருந்து அச்சுவேலிக்கு வருவார். எங்கள் சந்திப்பு புத்தூர் வீதியில் தினமும் நடைபெறும். நாம் சந்திக்கும் போது காணும் இனிமையான புன்சிரிப்பும் தலையசைவும் இன்றும் எனது மனதில் நிழலாடுகின்றது.

அமரர் துரைசிங்கம் சிவராசா அவர்களது மைத்துனர் திரு. க. தங்கராசா அவர்கள் வர்த்தக சங்கத் தலைவராகஇருந்து எங்கள் மக்கள் வங்கியின் சகல நடவடிக்கைகளிற்கும் ஒத்துழைப்பு வழங்கிய போது திரு சிவராசா குடும்பத்தினருடன் நேரடியாகப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. பழகுவதற்கு மிகவும் இனிமையான பண்பாளர், ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப தலைவராக இருந்து பல நல்ல சமூக நடவடிக்கைகளில் ஈடுபட்டமையால் ஆவரங்கால் மக்களின் மனங்களில் ஆழப்பதிந்தவர். அவரது இழப்பு என்றும் ஈடுசெய்ய முடியாதது.

அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களின் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

"பழமுதிர் சோலை"
**திரு க. சண்முகலிங்கம்**
திருப்புகழ் மண்டப வீதி,
முகாமையாளர், மீசாலை.
மக்கள் வங்கி,
அச்சுவேலி

## உள்ளத்தில் நல்ல உள்ளம் ......

எங்கள் குடும்பத்தின் தலைமகனாக விளங்கிய அண்ணர் அவர்கள் எந்த விடயத்திலும் தலைமை தாங்கி நடாத்தும் வல்லமை படைத்தவர். ஒரு தீர்மானம் எடுத்து சொல்வதிலும் அதனைச் செய்வதிலும் அவருக்கு நிகர் அவரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகுவதற்கு மிகவும் இனியவர். இரக்கமுள்ளவர். யாராவது கஸ்டப்பட்டால் அவரின் பெயரைச்சொல்லி அழைத்து "என்னப்பா" "என்னசெய்கின்றாய்" என பரிவாகக்கேட்டு எந்த உதவி தேவைப்படுகின்றதோ அதை எல்லாம் செய்து கொடுப்பார். ஒருவர் செய்த உதவியை எத்தனை வருடங்கள் சென்றாலும் மறக்க மாட்டார்.

ஆவரங்கால் இராமலிங்கவித்தியாலயத்தின் வளர்ச்சியிலும், விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சிலும், சிவசக்தி மணிமண்டபத்தின் வளர்ச்சிக்கும் பராமரிப்பிலும் தன்னை இணைத்துக் கொண்டவர். கொடுக்கும் பணிகளை நிறைவு செய்வதில் உறங்க மாட்டார் நல்ல உள்ளம் படைத்த உத்தமர்.

பளை பிரதேச சபைக்கு புதிய தனியானகட்டடம் அமைக்கவும், அழகுறச் செய்வதிலும், பிரதேச அபிவிருத்தியிலும் முன்னணியாக உயர்த்த தனது இறுதிமூச்சுவரை பணியாற்றினார். ஆவரங்கால், மக்களை, மண்ணை, குடும்பத்தை பெற்றோரை, அயலவரை, உறவினரை நேசித்த பெருமனிதராவார்.

எத்தனையோ கஸ்டங்கள் போராட்டங்கள் ஏற்பட்டபோதும் அவரின் வாழ்க்கைக் கப்பல் வெற்றி வாகை சூடியே வந்தது. ஆனால் 25. 4. 2006 அன்று வீசிய சிறுகாற்றால் வாழ்க்கைப்படகு சரிந்து விட்டது. இச்செய்தியைக் கேட்டு ஏங்கி அழுவதைத்தவிர நாம் என்ன செய்ய முடியும். அவரின் ஆசைக்கனவுகள் எல்லாம் நினைவுகளாக, ஆவரங்கால் இராமலிங்கப் பெருமான் தான் அருள்புரிய வேண்டும். அவரின் குடும்பத்தினருக்கு அருளாசி வழங்குவாராக.

ஓம் சாந்தி!

சு. சண்முககுலகுமாரன் **M.Ed**
அதிபர்
யா| தூவடி இந்து மகாவித்தியாலயம்
கதுமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த நினைவுகள்

- எடுப்பான தோற்றம்
- மென்மையான கம்பீரம் காட்டும் அவரது முகத்தில் இளையோடும், மென்புன்முறுவலுடன் கூடிய புன்னகை சிந்தும் முகம்.
- அவரது ஆழுமையின் விலாசத்தன்மைக்கு கட்டியம் கூறி நிற்கும் பரந்து, அகன்று, விரிந்த ஏறு நெற்றி.
- பதட்டமற்ற தெளிவான கனிவுமிக்க பேச்சு.
- எதிரே இருப்போரை எடைபோட்டு மதித்து அன்போடும், பண்போடும் பேசும் வார்த்தைகள்.

இவைகள் இறைபதம் அடைந்த திரு.துரைசிங்கம் சிவராசா அவர்கள் என் உள்ளத்தில் ஆளப்பதித்து விட்டுச் சென்றுள்ள என் நெஞ்சில் நிறைந்த நினைவுகள் ஆகும்.

கடந்த இரண்டு தசாப்த காலமாக நாம் இருவரும் மிக நெருக்கமாகப் பழகவும், சிலபொது அமைப்புக்களில் இணைந்து செயலாற்றவும் சந்தர்ப்பம் கிடைத்தது அப்போது அவரின் ஆளுமை, சமநோக்கோடு சிந்தித்துப் பார்த்து நடுநிலமை வகிக்கும் பெரும்போக்கு, இன, மத, மொழிப்பற்று, தமிழர் தாயகம், தேசியம் குறித்த வலுவான பற்றுறுதி எந்தப் பிரச்சனையும் கால, நேர வர்த்தனமான சூழ்நிலையில் யதார்த்தத்தை வைத்து மதிப்பிடும் திறன் ஆகியவற்றை என்னால் உணரமுடிந்தது.

கிராமங்களின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு செயல்படும் உள்ளூராச்சி சபைகள் நிர்வாகத்தில் நீண்டகால சேவை அனுபவத்துடன் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பல அபிவிருத்திக் திட்டங்களை முன்னிலைப் படுத்தி, செயலுருலாக்கி, அப்பிரதேச மக்களின் ஏகோபித்த பாராட்டுதலையும், நன்மதிப்பையும் பெற்ற அமரர் திரு. சிவராசா அவர்கள், இங்கு எமது கிராமம் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் எதுவுமின்றி முடங்கிக் கிடப்பதையும், பொது அமைப்புக்கள் வலுவிழந்து, செயலிழந்து கிடப்பில் கிடப்பதையும் கண்டு, தனது மன உழைச்சலை எங்கள் சிலருடன் பகிர்ந்து வருத்தப்பட்டார்.

எமது கிராமத்தில் சில அபிவிருத்தி வேலைகளையும், பொது அமைப்புக்கள் சிலவற்றில் நிலவும் நிர்வாக சீர்கேடுகளையும், மற்றும் பாரபட்சமான செயல்பாடுகளையும் சம்மந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களிடம் முன்னிலைப்படுத்தி, தனிப்பட்ட முறையில் என்னால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் நல்ல முறையில் நிறைவு பெற எனக்கு அவர் உந்து சக்தியாக விளங்கினார்.

வலி - கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு நிர்வாக ரீதியாக இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படல்வேண்டும் என்னும் முயற்சியில் அமரர் திரு.சிவராசா அவர்கள் எங்களுடன் இணைந்து செயல்பட்டார். நீண்டகால முயற்சியின் பயனாக கடந்த பெப்மாதம் 02ந் திகதி இவ்விடயம் சம்மந்தமாக வலி - கிழக்கு பிரதேச செயலர் அலுவலகத்தில் யாழ்மாவட்ட அரசாங்க அதிபரினால் கூட்டப்பெற்ற ஆலோசனைக்கூட்டத்தில், அமரர் சிவராசா அவர்களுடன் கலந்தாலோசித்து என்னால் சமர்பிக்கப்பட்ட முன்மொழிவின் பிரகாரம் அச்சுவேலி, புத்தூர் ஆகிய இரு உப அலுவலகப் பிரதேசங்களை உள்ளடக்கி வலி - கிழக்கு வடபகுதி ஒரு பிரிவாகவும், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய உப அலுவலகப் பிரதேசங்களை உள்ளடக்கி வலி - கிழக்கு தென்பகுதி ஒரு பிரிவாகவும் பிரிக்கப்படல் வேண்டும் என அரச அதிபரினால் உள்நாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவல்கள் அமைச்சுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகவும், இது விரைவில் வர்த்தமானி மூலம் பிரகடனப் படுத்தப்பட்டு செயல்படுத்தப்படும் எனவும் அறிய முடிகின்றது.

இதன் பிரகாரம் மிகவிரைவில் வலி - கிழக்கு வடபகுதிக்கான பிரதேச செயலகம் அச்சுவேலியில் ஒரு தனியார் கட்டடத் தொகுதியிலும், பிரதேச சபைக்கான புத்தூரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதேச சபைக்கான இருமாடிக்கட்டடத்திலும் செயல்படும். இந்த நற்செய்தியை அமரர் திரு. சிவராசா அவர்களுக்கு கடந்த 2006.04.23ந் தேதி அவரை நான் இறுதியாகச் சந்தித்து தெரிவித்த போது அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். சமீபத்தில் ஒரு அரச அதிகாரி என்னுடன் உரையாடியபோது "சிவராசாவின் மரணச் செய்தி கேள்விப்பட்டேன் உங்கள் ஆசை நிராசையாகிவிட்டது" என்றார். ஆம் நிராசை தான்.

புத்தூரில் புதிதாக அமைய இருந்த வலி - கிழக்கு வடபகுதிக்கான பிரதேச சபைச் செயலகத்துக்கு திரு.சிவராசா அவர்களே செயலாளராக நியமிக்கப்படல் வேண்டும் என்ற ஒழுங்குகளும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இன்று அவர் இல்லை. அவர் இருந்து, வாழ்ந்து, நடமாடிய இடங்கள் அவரில்லாது வெறுமை பூத்துக் கிடக்கிறது. அவர் தன்னை, தனது ஆளுமையை தனது பண்பை, அவருக்குள்ளேயான மனித நேயத்தை எங்கள் இதயத்தில் ஆழமாகப் பதித்துவிட்டுச் சென்றுள்ளார். அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சாந்தி சாந்தி சாந்தி

**சி.கிருஸ்ணபிள்ளை**
சமாதான நீதவான்
ஓய்வு பெற்ற அரச நிர்வாக அலுவலர்.
ஆவரங்கால்.

## அமரர் துரைசிங்கம் சிவராஜாவின் நினைவலைகள்.

மறைந்தும் மறையாது பளை வாழ்மக்களின் மனங்களில் நீங்கா இடம் பெற்ற அமரர் து. சிவராசாவின் மறைவையொட்டி இச் செய்தியை வெளியிட கிடைத்த வாய்ப்பு அன்னாரின் பிரிவால் துயருற்று வாழும் அவரது மனைவி, குழந்தைகள், உறவினருக்கு எனது நன்றியை தெரிவிப்பதற்கு உதவக் கூடும் என நிம்மதி அடைகிறேன்.

பளைப்பிரதேச சபையின் செயலாளராகவும் விசேட ஆணையாளராகவும் தனது பணியை அவர் ஆற்றினார் என்பதிலும் பார்க்க தனது கடமையை இதயபுத்தியோடும், பொறுப்புனர்வோடும் மக்கள் பணியை இறை பணியாக செயற்படுத்திய ஒருவர் அமரர் சிவராஜா எனக் கூறுவதே சாலப் பொருந்தும். வன் செயல்களால் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட பளை நகரத்தை மிக மிக விரைவாகப் புனரமைத்து மக்களுக்கு தேவையான அவசர தேவைகளை நேரம் காலம் பாராது செய்து கொடுத்த உத்தமர். தனது பணிமனையில் எல்லோரும் புன்னகையுடனும் சாந்தத்துடனும் தலைமைத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளுடன் நடந்து கொள்ளும். உத்தம நிர்வாகி. பொது மக்களது குறைகளை இன்முகத்துடன் ஏற்று எவரும் அதிருப்தி அடையாவண்ணம் நிறைவேற்றி வந்த கர்மவீரன்.

நான் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எனும் வகையில் அரச அதிபரால் நடாத்தப்படும் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்கள், கல்விக்கூட்டங்களுக்கு சமூகம் கொடுக்கும் சந்தர்ப்பங்களில் அமரர் சிவராஜாவின் செயற்பாடுகளை பல முறை அவதானிக்கும் வாய்ப்பு கிடைத்தது. எத்தகைய பிரச்சினையான விடயங்கள் கூட்டத்தில் அலசப்படும் போதும் மிக அமைதியாக தனக்கே உரிய புன்சிரிப்பு, தலைமைத்துவப் பண்புகளோடு அவர் கூறும் ஆலோசனைகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவனவாக அமைந்திருந்தன. அவரிடம் கற்றுக் கொள்ளப்பட வேண்டிய பல விடயங்கள் இருந்தன. எவ்விடயத்தையும் நிதானத்துடன் அணுகுவார். செயற்படுத்தக் கூடிய விடயங்களையே பேசுவார். பேசுவதை செயற்படுத்தியே தீருவார். ஒரு பணியை முடிப்பதற்கு அவர் கூறும் கால எல்லைக்குள் முடித்து அரச அதிபருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார். சில அதிகாரிகள் போல நடைமுறைப்படுத்த முடியாத திட்டங்களை அவர் என்றுமே முன்வைப்பதும் இல்லை. திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை எனக் காரணம் கூறுவதும் இல்லை. இன்றைய இளைய தலைமுறையில் உள்ள நிர்வாகிகள் அவரிடம் கற்க வேண்டியவை ஆயிரம் ஆயிரம்.

பளை நகரத்தில் இன்று காணப்படும் கட்டடங்கள் அவர் பெயரை என்றும் கூறும். அவர் செய்த பணிகள் மக்கள் மனங்களில் என்றுமே மறையாது. இத்தகைய தலை சிறந்த அருங்குணங்கள் அனைத்தும் ஒன்றே அமைந்த தலைவனை நாம் இழந்ததுடன் அவரது அன்புக்குரிய மனைவி பிள்ளைகளும் கலங்கி நிற்கின்றனர்.

2004 - 12 - 24ம் திகதி உலகையே அதிர்ச்சிக்கும் அனர்த்தங்களுக்கும் உள்ளாக்கிய சுனாமி பேரழிவால் பாதிப்படைந்து பளைப்பிரதேசத்தில் தங்கிய வடமராட்சி கிழக்குமக்களுக்கு அமரர் ஆற்றியபணி அவரது பணி உலகில் என்றுமே மறக்க முடியாதது. தனது வீடு மனைவி பிள்ளைகளை மறந்து இரவும் பகலும் அம்மக்களுக்காக பணி செய்தார்.அவர்களுக்கான நிவாரணப் பணிகளைப் பெற்றுக் கொடுக்க, குடியமர்த்த பளைப் பிரதேச செயலருடன் இணைந்து நாளாந்தம் கிளிநொச்சி அரச அதிபர் பணிமனைக்கு வருவார். அவரை நேற்றும் கிளிநொச்சி பணிமனையில் சந்தித்தது போன்று நினைவுகள் உள்ளன.

இத்தகைய பணிகளை ஆற்றிய அமரரை எம்மால் மறக்க முடியாது இருக்கும் போது அவரது ஆதரவு அன்பு அனைத்தையும் இழந்து நிற்கும் மனைவி பிள்ளைகள் எத்தகைய துன்பத்தை அனுபவிப்பார்கள் என நினைத்துப் பார்க்க முடியாது உள்ளது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும்

"பிறப்புண்டேல் இறப்புண்டு" என்பதும்
"நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

எனும் வள்ளுவன் வாக்கிற்கும் நாம் உட்பட்டவர்கள் என சாந்தி அடைகிறோம். அவர் அத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம். அவர் மனைவி, பிள்ளைகள் துயரில் நாமும் கலந்து கொள்வோம்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!**

**திரு ப. அரியரத்தினம்**
**வலய கல்விப் பணிப்பாளர்**
**முல்லைத்தீவு.**

## பேரன்புக்குரிய திரு சிவராசா குடும்பத்தாருக்கு.........

இன்றைய "தினக்குரல்" நாளேட்டில் எனது மதிப்புக்கும், அனிபிற்கும் பாத்திரமான தம்பி சிவராசா அவர்களின் அகாலமரணச் செய்தி கண்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த மனவருத்தமும் அடைந்தேன். என்ன இந்தக் கொடுமை இவர் எங்கள் மத்தியில் இன்னும் எத்தனையோ ஆண்டுகள் வாழவேண்டியவர். விதி தலையைச் சுற்றிவிட்டது. சகிக்க முடியாத இழப்பு, ஏற்க முடியாத செய்தி. எவ்விதம் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் ஆறுதல் கூறுவதென்று தடுமாறுகிறேன்.

மன்னிக்கவும், பிந்திய அனுதாபச் செய்தி தான், இருந்தாலும், எனது அன்பான ஆறுதல் கூற்றை ஏற்றுக்கொள்ளுங்கள்.

**அன்புடன்**
**சதா. லோகேஸ்வரன்.**
**உயர் நீதிமன்றச் சட்டத்தரணி**
**உத்தியோகன் பற்றற்ற நீதிபதி**
**கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சிவராசா அவர்களின் குடும்பத்தவர்களுக்கு:

பச்சிலைபள்ளி, பளை பிரதேசசபை அலுவலக செயலாளரின் அகாலமரணச்செய்தி மிக காலதாமதமாக அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். அவரின் மரணச் சடங்குகளில் பங்குபற்ற முடியாமையால் ஆள்ந்த கவலையடைகிறேன்.

மேலும், அவரின் செயல்திறனும், ஆளுமையும், பொறுப்பையும், பாராட்டாமல் இருக்க முடியவில்லை. அவரின் தோற்றமும் சந்தணப் பொட்டும் என்கண்முன் காட்சி அளிக்கின்றது. எனவே அவரின் குடும்பத்தாருக்கும் பிள்ளைகள் மூவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்!

நன்றி!

**ஐ.சித்திரவேலாயுதம்**
ஒப்பந்தகாரர்
பளை பிரதேச சபை.

## திருமதி. சிவராசா குடும்பத்தினர்க்கு,

தம்பி சிவராசா அவர்கள் 25.04.2006ஆம் திகதி முகமாலை பளையில் அகாலமான முறையில் எமையெல்லாம் விட்டுப்பிரிந்து இறைபதம் அடைந்த செய்திதனை பத்திரிகை மூலமாக அறிந்த எமது குடும்பத்தினர் அனைவரும் தாங்கொணா ஆழ்ந்த துயரத்திற்குள்ளானோம். நேரில் வருகைதந்து சிவராசாவின் சிரித்த முகத்தினை பார்த்து அவரின் இறுதி பயண நிகழ்வினில் கலந்துகொள்ள முடியாத நிலமையினை எண்ணி கண்ணீர் வடிக்கின்றோம்.

தம்பி சிவராசா சிவன் தேவஸ்தான புனர்நிர்மான சிரமதான நிகழ்வு வேலைகளிலும், ஆவரங்கால் கிராம பொது வேலை செயற்பாடுகளிலும் மற்றும் இந்துமயான அபிவிருத்தி வேலைகளிலும் எம்முடன் தோளோடு தோள் நின்று சகல பொது வேலைகளிலும் தமது சொந்த வேலை போல் எண்ணி திறம்பட செயலாற்றிய ஓர் மகத்தான உன்னதம்மிக்க நாட்டுப்பற்றுடைய சேவையாளனை இழந்து நிற்பனையிட்டு ஆற்றெணாத் துயரினில் ஆழ்ந்து நிற்கின்றோம்.

சிவராசாவே உன் சிரித்த முகத்தினையும், நேரிய பார்வைதனையும், சளைக்காமல் பொது வேலைகளில் ஈடுபடும் பக்குவப் பாங்கதனையும், பெரியோர்க்கு தலைவணங்கி மதிப்பழிக்கும் தன்மைதனையும் எங்கே காண்போம். ஆற்றெணாத் துயரினில் மூழ்கியிருக்கும் திருமதி சிவராசா பிள்ளைகள் மற்றும் அவரின் உடன் பிறப்புக்கள், உறவுகள் நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியினை தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**4.ம் வட்டாரம்** — **திரு. திருமதி. ப.தியாகராசா,**

**பிரதான வீதி, முள்ளியவளை.** — **குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பளை பிரதேச சபை அலுவலக உத்தியோகத்தர்களுடன் அமரரவர்கள்



பளை பிரதேசச் செயலக உத்தியோகத்தர் ஒருவரின் பிரிவுபசார விழாவின்போது நினைவுப்பரிசளித்து மகிழ்வடைகின்றனர். மத்தியில் அமரர் இ.து.சிவராசா அவர்கள் நிற்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைத்திரள்

கே.எஸ்.தர்மகுலசிங்கம் (திக்கவயல்),
சுவைத்திரள்,
16/2,பாடசாலை வீதி,
மாமாங்கம்,
மட்டக்களப்பு.
தொ.பே : 077 9004811

200.6/.05/.05

## அஞ்சலியாய்........

சமீபத்தில் நடைபெற்ற விபத்து ஒன்றில் சிக்கி பளைப் பிரதேச செயலாளர் மரணமடைந்ததாகப் பத்திரிகை வாயிலாக அறிந்தேன்.

செயலாளர் அவர்களை நேரில் நான் அறிந்திராவிட்டாலும், அவரின் செயற்பாடுகள் மனிதாபிமான நோக்கங்களும் கொண்டிருந்தன. அன்னாருக்கு எமது அஞ்சலியை மட்டக்களப்பில் இருந்து தெரியப்படுத்துகிறேன். என்ன கொடுமையான உலகம்? விதி வலிது. அவர் ஆத்மா சாந்தியடைக.

இக்கடிதத்தை அவரின் குடும்பத்தினர்க்குக் கையளிக்குக.

நன்றி.

அன்னாருக்காக அஞ்சலிக்கும்

**திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்.**

சுவைத்திரன் ஆசிரியர்.

## நெஞ்சில் எழும் நேசர்

சிறந்ததோர் காலைப் போழ்தில்
சீரிய பணிக்காய் ஏகப்
பெருந்துயில் நீக்கி நானும்
பாயிருந்து எழுந்த வேளை
பறந்து வந்தொருவன் சொன்னான்
பாரடா சிவராசா அண்ணன்
இறந்தனன் ஐயோ! அன்னோன்
இனிநமக் கிலையே! இல்லை!
சாவதாம் முடிவாம் சோற்றுத்
தடியர்தாம் சாவார் செத்துப்
போவதால் மறைவார் இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியுளார் துயரும் கொள்ளார்
ஆவதே நினைந்த அன்பன்
அறம் வளர் பதவி கொண்டோன்
சாவனோ? இல்லை ஆங்கே
சாவிலும் வாழும் நாமம்

நாற்பதோ டொன்பான் வயதில்
நானிலம் விட்ட கன்றான்
நேர்ப்பதி ஆவரங் காலின்
நெஞ்சிலே என்றும் வாழ்வான்
ஊர்ப்பெயர் ஓங்க நாளும்
இடர்துடைசிவராச வள்ளல்
ஏர்பெறு நடராஜன் பாதம்
ஏகியே அமைதி காண்க

திரு ச. லலீசன்
சைவப்பிரசாரகர், ஆசிரியர்.

## நினைவுமாலை.

எமது திணைக்களத்தின் கீழ் இயங்கும் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை செயலாளராக இருந்தவர் எங்கள் உள்ளத்தில் கலந்துவிட்ட அன்பு நண்பருமாகிய அமரர் துரைசிங்கம் சிவாராஜா அவர்களின் 31ம் நாள் நினைவையிட்டு கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி திணைக்களத்தால் காணிக்கையாக்கிய நினைவுமாலை!

இறந்தனை நண்பா! எங்கோ
ஏகினை எம்மை விட்டு
மறைந்தனை! நாங்களெல்லாம்
மாசறு நின்பால் கண்ட
திறந்தனை! அன்பை! நெஞ்சத்
திண்மையை! எண்ணியெண்ணி
கலங்கிடச் சென்றாய்! ஐயோ!
காண்போமோ நின்னை மீண்டும்!

கண்ணியம் கடமையாவும்
கருத்தினில் நிறைந்த எங்கள்!
திண்ணிய நெஞ்சம் கொண்ட
சிவராஜா! எம்மை விட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணுறும் உடலந் தாங்கி
போயினன்! என்ற சேதி
எங்களின் காதில் வீழ
அன்றெல்லாம் கலங்கி நொந்தோம்

பச்சிலைப் பள்ளி யென்னும்
பண்புயர் பிரதேசத்தின்
அச் சபைச் செயலாளராய்
அரும்பணி யாற்றி வந்தாய்!
இச்சுமை போது மென்று
எண்ணியோ! நீயும் இன்று
கையறு நிலையில் எம்மைக்
கதறிட வைத்துச் சென்றாய்

வேண்டிய பலபேர்! எம்மை
மிகச் சிறு வயதில் விட்டு
மாண்டனர் அப்போதெல்லாம்
மனத்துயர் அதிகமில்லை!
ஈண்டு நின் மரணத்தாலே
இடிந்த உன் மனைவி! மக்கள்!
ஏங்கிடும் துயரில் இன்று
நாங்களும் பங்கு கொண்டோம்.

இன்று நாம் அழுதோம்! ஊமை
ஏக்கத்தால் அழுதோம்! ஏழைக்
கன்று போல் அழுதோம்! ஆனால்
கவிதையில் அழுதோம்! உந்தன்
மரணத்தால் அழுத எம்மை
மறுபடி அழ வைக்காமல்
சென்றுவா! சிவராசா! நாம்
சொர்க்கத்தில் ஒன்று சேர்வோம்!
மரணத்தின் காலம்! நேரம்!
மறுபடி பிறத்தல்! சாதல்!
காரணத்தின் சுத்தி! புத்தி!
கனிவுறும் பக்தி! சித்தி!
நிலையிலா வாழ்க்கை என்று
நீங்கினாய் உடலை விட்டு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகொண்ட கடலினுள்ளே
அடங்கினாய் சாம்பலாக!

ஆகுவதாகுங் காலத் தழிவது அழிந்து சிந்திப்
போகுவதயலே நின்று போற்றினும் போதல் திண்ணம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சமர்ப்பணம்

**ஏ. கே. பாலசுந்தரம்**

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
கிளிநொச்சி.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு
பிடிசாம்பலாய் வெந்துமண் ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லால் பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம் உய்ய வேண்டுமென் றேயறிவாரில்லையே

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை மாற்றிப் பிணமென்று பெயரிட்டு
சூரயங் காட்டிடை கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினை மூழ்கி நினைப்பிழந்தாரே.

திருமந்திரம்

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியிலோரே

ஆண்டு ஆண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
எமக்கு என் என்று இன்று உண்டு இரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வமென்ன வழிகாட்டுக

வையம் புகழும் பெருமகனின்
 வாழ்க்கைத் துணையாய் வாழ்ந்துநிதம்
செய்யும் தொழில்கள் ஒவ்வொன்றும்
 திருந்தச் செய்து மகிழ்ந்திருந்தேன்
தெய்வம் கணவன் என்றுள்ளம்
 தெளிந்து நாளும் வாழ்ந்திருந்தேன்
வெய்யதுயரில் வீழ்த்தி எம்மை
 விண்ணுலகு ஆளச் சென்றனையோ?

போரின் வெறியால் உலகமெல்லாம்
 புரண்டு மறியும் இந்நாளில்
நேரும் சீரும் தரும்நீதி
 நெறியிஃது என்று காட்டிப் பளை
ஊரின் பிரதேசசபை காக்க
 ஊக்கத்துடனே சென்று வந்தீர்
ஈரம் இல்லா இயமராஜன்
 ஊர்தி உருவாய் வந்தனனோ?

மண்ணில் இனிய வாழ்வினுக்கு
 வாய்ந்த நல்ல துணையென்ன
எண்ணியிருந்த என்றனக்கு
 ஏக்கந் தந்து ஏகினையே
பொன்னை நிகர்த்த மும்மணிகள்
 போற்றி வளர்ப்பேன் இஃதுறுதி
கண்ணிற் காணாத் தெய்வமென்ன
 கவின் வழிகாட்டி நின்றிடையா!

*ஆருயிர் மனைவி*
*திருமதி கேதீஸ்வரி சிவராசா*

## அருள் செய்யப்பா

என்னிவன் தந்தை? இங்கே
 எத்தனை மனிதர் எம்மை
முன்னுதாரண மென்றே நாளும்
 முழுமையாய் எண்ணி நின்றார்
மன்னவன் இவனே எங்கள்
 மண்டலத் தரசே என்று
பன்னரும் மொழிகொண்டேத்தி
 பல மொழி புகலக் கேட்டோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும் பெறல் மக்கள் வாழக்கை
அழிவதைக் கண்ணால் கண்டே
உருகிடும் உள்ளத் தோடு
உலகிலே வாழ்ந் திருந்தோம்
கருக்கிடும் அந்தச் சேதி
காற்றிலே வந்த நேரம்
நெருப்பிலே வெந்து போனோம்
நேசரே இனி யென்செய்வோம்

வேண்டிய பலபேர் எம்மை
மிகச்சிறு வயதில் விட்டு
மாண்டனர் அப்போதெல்லாம்
மனத்துயர் அதிகமில்லை
ஈண்டுநின் மரணச் செய்தி
அறிந்ததும் எழு துயரம்
யாண்டெலாம் இணைந் திருக்கும்
இயமனிது அறிவானோ அப்பா

எங்களின் கல்வித் தேட்டம்
ஏற்றமாய் அமைதல் வேண்டி
உங்களின் சுகங்கள் யாவும்
உதறியே தள்ளி வைத்தீர்
திங்களைத் தலையிற் சூடும்
தில்லையன் பாதம் என்றும்
நாங்களும் தொழுது ஏற்ற
நல்வழி காட்டி நின்றீர்

அருகிலே இருந்த நாள்கள்
அலையென மோதி மோதி
உருகியெம் மனதை வாட்டி
உருக்குலைக் கின்ற தையா
இருந்தவத் தலைவா எங்கள்
இன்னுயிர் அப்பா இனிமேல்
வரும் வழிகாட்டி நின்று
வானிலே அருள் செய்யப்பா

*உம் பிரிவையெண்ணி கலங்கும்*
*பிள்ளைகள்*
*சி. சிந்துஜன்*
*சி. விதுர்ஜா*
*சி. விதுர்ஜன்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதியிழந்த பாவியராய்

அன்பைப் பொழிந்து வளர்த்தே
ஆளாக்கி மகிழ்ந்தோமே.
இன்று இல்லாமல் தவிக்கின்றோம்
உன்னை இழந்த துயரினால்

ஆலமரமாய் நிழல் தந்தாய்
இன்று குடைசாய்ந்து விட்டாயோ
கடமை செய்வாய் என நாமிருக்க
கடைமை செய்ய வைத்தாயோ

எம் குடும்பத் தலைமையை நீ
ஏற்றமுடன் நடாத்துகையில்
பாதிவழியில் பிரிவாய் என்று நாம்
பகற்கனவும் காணவில்லை.

எங்கள் குடும்பத்தின் தலைமகன் மட்டுமல்ல
எங்கள் குடும்பத்தின் வரலாறும்
கதியிழந்த பாவியராய்
குவழயத்தில் உழல்கின்றோம்

*என்றும் உன் பிரிவாலே துயருறும்,*
*உன் அன்புத் தந்தை, தாய்*
*திரு. திருமதி. இ. துரைசிங்கம்*

## எம் குடும்பத் தீபமாய்

பூவின்றி பொட்டின்றி
பொண்ணுக்கு அணிசேர்க்கும்
மங்கல நாண் இன்றி
ஆசை மருமகனே!
என் மகள் முகத்தை
எங்ஙனம் நான் பார்ப்பேன்

தெய்வம் தந்த திரிவியமாய்
திகழ்ந்த என் மருமகனே
பேரப்பிஞ்சுகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிவிழந்த முகம் பார்க்கப்
பொறுக்குமோ என் நெஞ்சு
கடமை செய்வீர் என்றிருந்தேன்
கலங்க வைத்தீர் என் நெஞ்சை
எம் குடும்பம் சிறக்க
ஏற்ற புகழ் பல செய்தே
மகிழ்வுடன் வாழ்கையில்
காலனவன் சூழ்ச்சியினால்
கதியிழந்தே நிற்கின்றோம்.

*என்றும் உம் நினைவு மறவா.மாமி*
*திருமதி. ஆச்சிமுத்து முருகப்பா.*

## அக்காவின் உள்ளத்திலிருந்து

சிரித்த முகம் மறக்கவில்லை சின்னவனாய் இருந்தபோது
சினந்து நீ கதைக்கவில்லை பெரியவனாய் வாழ்ந்த போது
தாய்மாமன் நீ என்று தலைநிமிர்ந்து வாழ்ந்த எம்மை
ஆறாத கண்ணீருடன் ஆழ்த்தி விட்டு சென்றதேனோ?

நாதியற்றோ நானிருக்கேன், நான் வளர்த்த பொன்னுடலே,
நீதியற்றோ நின்னுடலை நித்திரையாய் விட்டுச் சென்றீர்
பட்டியாக உன்னுடலை கூடி நின்று பார்த்த போது
பக்கத்தில் நிற்பதற்கு பாவி நானும் அங்கில்லை.

உறவுகள் வருவதுண்டு, ஊரவரும் வருவதுண்டு
உண்மை எதுவென்று சொல்ல உத்தமரே நீர் உலகில் இல்லை
உடன் பிறப்பே உன் நினைவு நீங்காமல் - அலை மோதுதே
உன் இழப்பு எங்களை எந்நாளும் வாழ்துதையா.

*திருமதி சிறி நவரட்ணராணி*
*(லண்டன்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னினிய மைத்துனனாய்

இறக்கவில்லை இன்னம் எமதருமை மைத்துனரே
மறக்கவில்லை நாம், உமது மாண்பு மிக பெருமையை
பிறக்கவில்லை பூமிதனில் உம் போல் புனித உடல்
உறங்கவில்லை உம் கனவு உதயமாகும் எம் நினைவில்

உதித்தோர் மறைவது உலகின் நியதியாம்"
துதிப்போம் நாமும் நம் உடன் பிறப்பின் சாந்திக்காக"

*திரு. ஸ்ரீ - (சுவிஸ்)*

## உள்ளக் குமுறல்

தீவண்ணன் சிவனொத்த தம்பி சிவராசன்
நாவண்ணம் எங்கே? நலிந்தோர்க்கு நல்கும்
கார்வண்ண முகில் நிகரும் கொடைக்கரங்கள் எங்கே?
கடியசினம் அறியாத முறுவல் முகம் எங்கே?

இராமலிங்கன் வீதிவந்த திருப்பாதம் எங்கே?
இராப்பகலாய் உறங்காத திருப்பணிகள் எங்கே?
ஊர்புகழும் சிவசக்தி மணிமண்டபத்து மேடை
உலாவந்து பொலிவுதந்த உயர்ந்த உருவெங்கே?

சந்தனத்து மேனியெங்கே சரிநிகராய் யாவரையும்
சொந்தமெனப் போற்றுகின்ற தூயமனம் எங்கே?
வந்தவரை உபசரித்து வருவோரை நோக்கும்
வள்ளுவத்தின் விருந்தோம்பும் பண்புகளும் எங்கே?

திரைகடலுக் கப்பாலே திரவியங்கள் தேடி
உடன்பிறந்தோர் செல்லவுன் உடனிருந்தேன் தம்பி
கரையில்லா அன்புகொண்டு கசிந்துருகி அணைத்தேன்
விரைவாக விண்ணுலகு சென்றதுமேன்? ஐயா?

அத்தானென் றழைக்கின்ற அமுதமொழி எங்கே?
மச்சானை மதிக்கின்ற பணிவுமொழி எங்கே?
முத்தான மருகர்க்கு முறுவலுடன் அளிக்கும்
தித்திக்கும் தின்பண்டப் பொட்டலங்கள் எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்கு உழைக்கின்ற உதவுகரம் எங்கே?
உண்மையன்றி உரைக்காத உன்நாவும் எங்கே?
யாருக்கும் தீங்கெண்ணா நல்மனமும் எங்கே?
யவனத்தில் ஏன்கவர்ந்தாய் யமனென்னும் பாவி

மைத்துனர்
**தங்கராசா குடும்பம்**

ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

## என்னினிய அண்ணனே

பறந்திட்ட விமானத்தை பார்த்திருந்து கையசைத்தீர்
கறந்திட்ட பாலாக களங்கமிலா முகத்துடனே உம்
சிறந்திட்ட பேறான நின் சீர் புகழ் வாழ்க்கையில்
இறந்திட்ட செய்திதனை எப்படி நாம் ஜீரணிப்போம்

*ரவீந்திரா (சுவிஸ்)*

"தம்பியுடையான் படைக்கஞ்சான் என்றிருந்தீர்"
தங்களின் அரவணைப்பில் தலை நிமிர்ந்து வாழ புலம் பெயர்ந்தோம்
இனியவள். என்னவளுடன் ஏங்கி நிற்கும் பெறாமக்கள்
தரணியில் கரம் குவித்து கதறுகிறோம் கலங்குகின்றோம்.

*கருணா (சுவிஸ்)*

சுகம் கலந்த முகத்தோடு குலுங்கிச் சிரித்திடுவாய்
தேன் சிந்தும் பேச்சோடு பழகிடுவாய்
முகங்கோணா மலர்வோடு கேட்டதெல்லாம் செய்திடுவாய்
எக்கணமும் உடன் பிறப்போடு பின்னிப்பிணைந்திடுவாய்
எமக்குற்ற உறவாக்கப் பாத்திருந்த வேளையில்
எமலோகம் கொண்டானோ பாதகனும் ஐயகோ.

உன்னை ஈன்றெடுத்த பெற்றோரைத் தவிக்கவிட்டு
முன்னைப் பயம் கொண்டு சென்றனையோ எம் அண்ணா
தன்னைத் தனியாக விட்டே சென்றதேனோ என
அண்ணி ஏங்கி அழச் தவிக்கின்றோம். நாமிங்கு

*ஆனந்தன் குடும்பம்*
*(லண்டன்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைதடியில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து மங்கல விளக்கேற்றுகிறார்.



கைதடி மேற்குப் பராசக்தி பாலர் இல்லத்தில் 01.10. 1997 இல் இடம்பெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசகர் குடும்பத்தின் ஏக்கங்கள்

இந்த உலகில் எல்லா உயிரினங்களும் தோன்றி மறைந்த வண்ணம் இருந்தாலும் வள்ளுவர் கூற்றுக்கமையத் "தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலர் தோன்றலில் தோன்றாமை நன்று" என்பது போன்று இவருடைய பிறப்பு அமைந்துவிட்டது. இவர் எல்லோரிடமும் என்ன இருக்கின்றது என்று நிறுத்துப்பார்க்கின்ற தன்மையற்றவர். எல்லோரையும் தன்முன்னே நிறுத்திப்பார்க்கின்ற தன்மையுடையவர். இவருடைய இழப்பு எம்போன்ற அன்பைத் தேடுகின்ற ஆத்மாக்களுக்கு ஒரு பெரிய இழப்பாகும். இத்தனை அன்புப் பண்பைக் கொடுத்த ஆண்டவன் அவருடைய ஆயுளையும் கூட்டிக் கொடுத்திருக்கலாமே என்று எண்ணும் எனது ஆத்மா அவருடைய ஆத்மா அமைதியும், சாந்தியும் பெறுவதற்காக, என்றென்றும் அந்த ஆண்டவனை வேண்டி நிற்கும்.....................

**மைத்துனன் மாணிக்கவாசகர்**

பிறந்தநாள் முதல் பிறர்மனம் நோகாகமல் சகோதரர் எல்லாமே சரிசமம் என்று சமத்துவமாய் வாழ்ந்த சான்றோனே. எந்நாளும் ஏங்குகின்றேன். ஏனிந்தச் சாவு வந்ததென்று, விடிவெள்ளியாய் இருந்து எங்களுக்கெல்லாம் விடிவைத்தந்த அண்ணா! நீங்கள் விடிவெள்ளி வரமுதலே எழுந்து எங்கள் குடும்த்திற்காக உழைத்து எமக்கெல்லாம் விடிவைத்தந்து உன்வாழ்வின் விடிவுக்காக உழைக்கச் சென்ற பொழுது உன் விடிவை இருள் மறைத்ததோ அண்ணா? விடுமுறைக்கு வந்திருந்தோம் வீடெல்லாம் குதுகலம். என் பிள்ளைகள் மாமாப்பையா என்று பட்டம் சூட்டிடவே மனங்கோணாது மகிழ்வுடன் அரவணைத்தாய். எழுபிறப்பிலும் தொடர்கின்ற இந்த பந்தத்தில் எப்போது உன்னைச் சந்திப்பேன்? உங்கள் ஆத்மா சாந்திக்காய் நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**சகோதரி கீதா**

சிரித்த முகத்துடனே சிறந்த குணத்துடனே சின்னஞ்சிறார்களை
வரவேற்று விருந்தளித்து வழிசொல்லும் - மாமாப்பையா நீங்கள்
ராஜா மட்டுமல்ல ஒரு புனிதமான கடவுள்
சாமி வந்து அங்கு சாலை ஏன் தந்தார்?
விடுமுறைக்கு நாம் வந்து வீட்டில் தங்கிடவே
விரைவாக எமையெல்லாம் விரும்பிய இடம் கூட்டிச்சென்றீர்
விரைந்து நாம் வருகிறோம் எழுந்து எம்மிடம் வாருங்கள்

**மருமகள் - பிரகலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா வீட்டு முற்றத்தில் நான் சைக்கிள்
ஓடியதை நினைக்கின்றேன்.
மாமா வீட்டு முற்றத்தில் நான் கிரிக்கெற்
விளையாடியதை எண்ணுகின்றேன்.
இது கனவா அல்லது நனவா விடுமுறைக்கு
உங்களிடம் வந்து எங்கெல்லாம் சென்றோம்.

நோயென்றால் மருந்தளித்து பசியென்றால் விருந்தளித்து
பரபரப்புடனே பண்பாய் வளர்த்த மாமாப்பையா
உங்களை நினைத்து அழுகின்றேன் உங்கள்
ஆசை, அவா எல்லாம் எங்கள் புகழ் வரை நாம்
பண்புடனே வளர்ந்து பட்டம்
பெறவேண்டு மென்றே படிக்கின்றோம்
பண்புடனே வளர்கின்றோம்.

மருமகன் வேணுகானன்

மாண்புடனே வாழ்ந்த மாமாப்பையா
மாயமாய் ஏன் மறைந்தீர்கள்?
மாமா ஒரு தடவைமட்டும் பார்த்தோம்
மறுதடவை எப்போது பார்ப்போம்.

மருமகன் ஆதவன்

Uncle who was my dads's brother. was Grate Gentlemen
He was very kind and loved all of our family
He was very good sociable man
when we went to srilanka He came to pick us up and took us all around in SriLanka with lot of care
He took me for rides on his motorbike very carefully.
When ever we phoned him. He will make sure all of our family alright. He took us 2006 beach and temple all around we had Joyful family Journry together
When we heard the news uncle passed away, We felt like the while world turned upside down
We really missed hima lot. I'm sure He will go to Heaven to have a peaceful restful life.

*Kopi and Thusi*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Beloved Uncle

I remember the day noticeably it was April 25 When my uncle had an accident...........

Left us lost, lonely and sad. I remember the pain I felt deep down

Inside my heart finding out the miserable news at school, it was a big shock.

I just closed my eyes and saw uncle's loving face and I died deep down inside at that moment.

Cause the one who made my family happy all the time passed away but now not with us anymore.

You were the joy in our family, when we were sad, our laughter when we cried, and one who cheered up my family when we were down.

I remember the last day I saw you before I left Jaffna, still I cannot for get the love and care you showed me.....

Now I'm sitting here thinking about you and wishing I would have told

You that you're my feverroot uncle thinking why I didn't tell you that!

But never thought you'll be gone, still I can't face the fact that it's

Reality somehow I keep thinking your alive and someday you'll come back

To our family and be with us forever.

I know I'll see you in my dreams or up in heaven to tell you "I love you uncle"

Now that you're gone I don't how I went on from the thought of you gone, I wish you were here with us.

I'll see you one sweet day to hold you and be happy once again till that angels take care of my uncle ....

Thulashija. S
(Daughter in law) - U. K.

# To My dearest uncle .....

The sound of laughter rings in my ears
As I sit and think about you
We never spent much time together,
But your love and care was true....

At your final resting place I knelt
Saddened heart and tearful eyes; I felt
A longing to speak to you.....
Though you're no longer in view.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Other recognized you
As being a wonderful man.
Kind, generous and loving
Always willing to lend a hand…

My eyes fill with tears
As I picture your handsome face
Knowing you are now gone
To the heavenly place….

With Strength I no linger cry
For your spirit remains alive
In the vision of mine,
Now your life has ended
A new one will begin
I say good-bye for now dear uncle
For I know I will see you again

From :
S. Laxshi
(Daughter in law)- U. K.

## My Uncle (MAMMAPAIYA)

Superb Srilankan
Important to everyone
Very helplful for people
Amazing and intelligent
Respectful in everyway
Always caring for others
Justice maker
Active and always on time
Honest and perfect at
Everything, everywhere, anytime

From :- PI RAKALAI
VENUGHANAN
ATHAVAN - U. K.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்புள்ள அண்ணாவிற்கு உன் ஆருயிர் தங்கையின்
## கண்ணீர் மடல்

அண்ணா! நான் உன்னை அன்பாக அழைப்பது கேட்க வில்லையா? அந்த செய்தி ஏன் பொய்யாக இருக்கக் கூடாது? என்னால் நம்ப முடியவில்லை. நான் இங்கு என் உயிருக்காக போராடிய போது கதிகலங்கிப் போன என் அண்ணாவே! ஆண்டவனிடம் அழுது மன்றாடினாயே என் தங்கையின் உயிரைக் காப்பாற்று என்று ஆனால் அந்த இறைவனால் உன் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போனதன் மர்மம் தான் என்ன? இறைவனுக்கு சிறிதும் இரக்கமே இல்லையா? நீ அடிக்கடி எங்களுக்கு சொல்லுவாயே அண்ணா! நான் உங்களுக்காக இறைவனிடம் மன்றாடினால் இறைவன் என்னையும் என் குடும்பத்தையும் நிச்சயம் காப்பாற்றுவார் என்று ஆனால் அந்த நம்பிக்கை இன்று பொய்த்துப் போய்விட்டதே அண்ணா? நீங்கள் சாகவில்லை சாவடிக்கப்பட்டீர்கள். அந்த கொடிய காலன் உங்கள் உயிரைப் பறித்துக் கொண்டானே! யார் சொன்னார்கள் நீங்கள் செத்துப் போனதாக? இல்லவே இல்லை!! என்றும் நீங்கள் எங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். உங்கள் குழந்தைகள் என் குழந்தை. உங்கள் குடும்பம் என் குடும்பம் என்றும் நீங்கள் எங்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள். உங்கள் ஆத்மா சாந்தி அடைய எங்கள் கண்ணீரை இறைவனுக்கு காணிக்கை ஆக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் அன்புத் தங்கை
நிமலா சிவகுமார்
**London.**

## வீதி விதிகள்

பள்ளி செல்லும் பிள்ளையே
பாடம் ஒன்று கற்றுக்கொள்
நல்ல சாலை விதிகளை
நன்கு மனத்துள் வைத்துக்கொள்

நடக்கும் பாதை வழியிலே
நாளும் நீயும் நடக்கனும்
கடக்கும் இடத்தில் கவனமாய்
கடந்து போகத் தெரியணும்

சிரித்துப் பேசி மகிழ்ச்சியாய்
சேர்ந்து நால்வர் சாலையை
மறித்துச் செல்லல் நல்லதோ
மனதில் எண்ணிப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைவில் பிறரை முந்தினால்
வந்து நிற்கும் விபத்துமே
அளவிலாத சோகத்தால்
ஆபத்துண்டு தெரிந்து கொள்

பாதையினில் பந்து பம்பரம்
பட்டம் போன்ற விளையாட்டு
வேதனை தருமே யாருக்கும்
வேண்டாம் இவற்றை தவித்துவிடு

வீதி விதிகள் பேணி நிதம்
விரும்பும் இடமே போய் வரலாம்
ஏதினி வீதியில் விபத்துக்கள்
எல்லாம் தவிர்த்தே மகிழ்வோமே!

## ஊயிர் எழுத்தாய் ஆனாய் நீயே!

அன்பின் வடிவமாய் ஆனாய் நீயே
ஆறுதலின் உறைவிடமாய் ஆனாய் நீயே
இன் முகத்தினை உடையாய் நீயே
ஈகைக்கு தயங்காய் நீயே
உயர்ந்த பணியில் அமர்ந்தாய் நீயே
ஊரினில் பெயர் படைத்தாய் நீயே
எங்கள் குலத்தின் தலை மகனானாய் நீயே
ஏங்கித்தவிக்க வைத்தாய் நீயே
ஐயம் தீர விளக்குவாய் நீயே
ஒன்றையும் மறக்காமல் இருந்தாய் நீயே
ஓங்கி உயர்ந்து புகழ் படைத்தாய் நீயே
ஔடதமாய் ஆறுதல் தருவாய் நீயே
அஃது ஆனாய் இ. து. சிவா நீயே... நீயே...

என்றும் உம்நினைவால் வாடும்
ஆசையம்மா.
ஊடன்பிறவா சகோதரர்கள்.
சுந்தா, சுசிந்திரா, சுகுமார்
சுரேந்திரன், சுரேஸ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுடனே..............!

பெற்றதாய் தந்தையாரைப் பேணாத
பிள்ளைகள் வாழ்காலத்தில்
அற்புதம் போல் வந்துதித்து
அதிசயம் புரிந்தவனே
சிற்றன்னை தந்தையர் நாம்
செயல் மறந்து வாடுகின்றோம்
எக்காலம் வந்திடுவாய்
எமதின்னல் தீர்த்திடுவாய்

**நினைவுடனே..........**
**சின்னம்மா, சின்னையா**
**திரு. திருமதி. தங்கராஜா**
**(ஆவரங்கால்)**

## உடன்பிறவா சகோதரனுக்கு,

என் உடன்பிறவா அன்புச் சகோதரனே!
உன்னைப் பார்த்த ஞாபகம் முடிவதற்குள்
ஏன் பாதி வழியில் விட்டு விட்டுச் சென்றாய்?
என் இளமைக் காலத்தில் இருந்தே
எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து
வழிநடத்தி ஏன் பாதி வழியில்
எங்களை தவிக்க விட்டுச் சென்றாய்?
சிரித்த முகத்துடன் நீங்கள் செய்த உதவிகளை
எங்களால் என்றும் மறக்கமுடியாது?
உங்கள் துயரத்தில் தவிக்கும்!

**சகோதரன் தயானந்தன்**
**ராதிகா குடும்பத்தினர்**
**(லண்டன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீள நினைந்திருப்போம்..............!

ஓரு தாய் வயிற்றில் பிறந்தோர் போல்
ஒன்றாய்க் கூடி வாழ்ந்தோமே
'பெரியண்ணை' என்று நாம் அழைக்க
பேருதவி புரிந்தவனே
வந்த 'பஸ்' உன்னில் ஏறி
பாதியிலே உயிர் பறிக்க - எம்மை
பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ?
காலம் தோறும் இத்துன்பம் - எம்மில்
கலந்திருக்கும் பெரியண்ணா!

என்றும் உம் நினைவுடனே வாழும் .....
**திரு. திருமதி. விஜயஸ்ரீலன் ஜெயந்தினி**
**ஜேர்மனி.**

## அன்பு அண்ணாவிற்கு..........!

அன்பின் அருமைச் சகோதரனே!
இன்னும் உனது உறவுகளுக்கும்
உனது கிராமத்துக்கும்
தொண்டு புரிவதற்காய்
நிறைய இருந்தும்
ஏன்? உனது வாழ்க்கைப் பயணத்தை
பாதி வழியில் முடித்தாய்?

சிறுவயதில் படிப்பின்றித்
திரிந்த என்னை திருத்தி
படிக்க வைத்த உனது உதவியை
என்னால் என்றென்றும் மறக்க முடியவில்லை!

**உனது அடுத்த பிறவி எமது வம்சத்தில் அமைய**
**இறைவனைப் பிரார்த்திக்கும்.**

உன் அன்புத் தம்பி
**திரு. த. ஜெயந்தன்**
**பொறியியலாளர், (சிங்கப்பூர்.)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளாத் துயருடனே.........

இரண்டு திங்களின் முன்
இனியதொரு நல்லுறவை
விபத்தில் பறிகொடுத்த
வேதனையில் நாமிருந்த வேளையிலே
தம்பியின் தொலைபேசிச் செய்தி
எம் இதயத்தை ஒருமுறை அதிரவைத்தது
"சித்தப்பா இறந்துவிட்டார்"
உடன்
இடிமேல் இடி எம்மீது விழுந்த பிரமிப்பு
'ஐயோ' என அழுகையில்
அலறல் வெளிவர மறுத்தது
நேற்றுவரை உங்களுடன் பிணைந்திருந்த
அன்பு,
ஆசி,
அரவனைப்பு,
உபசரிப்பு,
இவையெல்லாம் தகர்ந்து விட
இடிவிழுந்த மரமாய் எங்கள் குடும்பம்

உங்கள்
உயர்ந்த உருவம்,
பரந்த நெற்றி,
சிரித்த முகம்,
திறந்த மனம்,
உதவும் கரங்கள்,
இன்னும் எங்கள் நினைவுத்திரையில்
நிழற்படமாய் ஓடுகையில்
நீங்கள் இல்லை என நினைக்க
எம்மனம் மறுக்கிறது
அன்பொழுகப் பண்பொழுக நீங்கள் செய்த
சமூக சேவை
அவனியில் என்றும் நிலைக்க
கண்ணுதலான் சிவன் கழலிற்கு சென்ற மாயமென்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் பிரியும் வேளையிலும்
உறவுகளை எண்ணியெண்ணி
உம் மொழிகள் உதிர்ந்தனவோ
என் வேலை முடியவில்லை
இன்னும் இருக்கிறது
"என்னைக் காப்பாற்றுங்கள்"
என்றுரைத்தீர் என்றறிந்து
எங்கள்கண்ணில் கண்ணீர் உகுக்கிறது

ஊரெல்லாம் கூடி
ஒப்பாரி வைக்க
நீர் சுமந்த கண்களுடன்
எம் உறவுகள் நிற்பதனைப் பார்க்கையில்
எம் நெஞ்சம் ஒருமுறை துடிக்க மறுக்கிறது.
சிறகொடிந்த பறவைகளாய்
திசை கெட்டுத் தவிக்கின்றோம்.

என்றும் மீளாத் துயருடனே

**உங்கள் நினைவகலா,**
**மைத்துனி, சகோதரன், பெறாமக்கள்.**
**(சி. அ. கிருஷ்ணபிள்ளை குடும்பத்தினர் மட்டுவில்)**

## கனேசானந்தம் குடும்பத்தின் நினைவில்......

என் அருகில் இருந்து அணைத்தெடுத்து வளர்த்தீரே,
என் ஈசன்ரி, அண்ணா, அக்கா, தம்பி படிக்க வேண்டுமென்று
என்னைத்தனியே விட்டுப் பட்டிணமும் சென்றீரே
என்னையும் அக்கா போன்று கல்லூரியில் சேர்ப்பேனென்றீர்களே
எனிமடியில் வைத்து சொக்கிலே கிள்ளி, கிள்ளி
என்னைச் சிரிக்க வைப்பது யார்?
என்பாசமிகு சகோதரர்களுக்கு
என்ன சொல்லி சென்றீர்கள்?
என் அருமைச் சித்தப்பா எப்படி நாம் மறப்பது
என்றும் என்மனதில் நிலைத்து நிற்கும் தெய்வமே......

**பெறாமகள்,**
**ஐந்தூரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என் தம்பி (சகலன்) சிவராசாவுக்கு*

நிமிர்ந்த உன் உருவமும்
கம்பீர நடையும், கள்ளம் கபட மற்ற மனமும்
எம்குல நீதிபதியும்,
என் இனிய தம்பியும்,
எம்குலத்தின் அணையாத விளக்கும் - நீயே
நித்தமுமே என்மனதில் நிழலாடுதடா உன்நினைவு
காலத்தின் கோலத்தினால் ஆண்டவன்
உம்முயிரைப் பாதிவழியில் எம்கண்கள் காணாது
தன்னிடம் அழைத்து விட்டான்,
பிறந்தவன் எப்போதும் இறப்பது இயற்கைதான்
வாழ்ந்தது போதுமென்று, ஆண்டவன் பிரித்துவிட்டான்
உமது உடல் எரிந்தாலும் உம்முயிர் எம்முடன் தான்

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

**மைத்துனர் கனேசானந்தம்**

*என் அருமை மைத்துனரே,*

உள்ளூராட்சி சபைதனிலே ஒன்றாகப் பணிபுரிந்தோம்
உயர்பதவி கிடைத்தபோது உள்ளமதுபூரித்தீர்
உம் சேவையைப் பார்த்து உயரதிகாரிகள்.
உம் கரத்தை பற்றினார்கள்
உம்முடன் இரங்கியோர்க்கு இயன்ற உதவிகள்
ஊக்கமுடன் செய்தீரே
உம் கீழ் பணிபுரிந்தோர் அனைவரையும்
உம்மனதில் உறையவிட்டீர்.
உம் உடன்பிறப்புக்களுக்கும், உம் மைத்துனர்க்கும்
உம்மால் இயன்ற உதவிசெய்தீரே
உம்வாழ்வில் எதையும் அவசரமாய் செய்திடுவீர்
உம் வாழ்க்கையையும் அதேபோல் அரசரமாய் முடித்தீர்.
உம்மைப் பறிப்பதற்கு உம்சிவனார் பேருந்தில் வந்தாரோ
உம்விபத்து அறிந்ததும் ஐயனாரை வேண்டினோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம் சிவனார் அணைக்கையிலே எம்குல தெய்வம் செய்வதென்ன
உம்பிரிவை எண்ணி, எண்ணித் தவிக்காமல் தவிக்கின்றோம்
சிவா! சிவா!! சிவா!!! என்று
தொழுவதே எம்முடிவு

மைத்துனி - க. கனகேஸ்வரி

என்றும் உம்நினைவில் வாடும்

**திரு. ச. கனேசானந்தம் குடும்பத்தினர் (கச்சாய்.)**

## நீங்கா நினைவுடன்........!

ஆர் எவர் வந்தலாலும்
ஏன் எதற்கு என்று கேட்காமல்
உதவுகின்ற மனம் படைத்த
உத்தமனே!

கர்ணனுக்குக் கொடுத்துச்
சிவந்தனவாம் கரங்கள்
உனது மனம் செம்மனம்
உதவி புரிந்து சிவந்த பொன்மனம்
அந்த மனத்தை இழந்து
அன்புச் சகோதரி சூடும்
பூவின் மணத்தை இழந்து
வாடுதையா எம்மனம்
அந்நாளில்
முத்துக் குளிக்க மூழ்குபவர்கள்
தாம் இறங்கும் கயிற்றில்
மேல் நுனியை
மச்சானிடம் கொடுத்து விட்டுத்தான்
ஆழ்கடலில் மூழ்குவார்களாம்
அதனால் தான்
மைத்துனனுக்கு
'மண்டைக்கயிறு' என்ற பேர் வந்ததாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொடிகாமம் பிரதேசப் பொதுச் சந்தைக்கான நன்நீர் விநியோகத்தை பிரதேசச் சபைச் செயலாளர் (அமரர்) இ.து.சிவராசா அங்குரார்ப்பணம் செய்து வைக்கிறார். அருகில் GTZ நிறுவனப் பிரதிநிதியும் காணப்படுகிறார்.




ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத நடராச ராமலிங்க சுவாமி கோவிலில் 1982 இல் இடம்பெற்ற மகாகும்பாபிடேகத்தின்போது ஆலயத் தொண்டர் சபையினர் இணைந்து எடுத்துக் கொண்ட படம். (நன்றி : கும்பாபிடேக மலர் - 1982)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் மண்டைக்கயிற்றை
ஆழ்கடலில் அல்ல
விதியின் கொடுமையால்
வீதியில் தவறவிட்டு
விம்முகின்றோம்.

மரணச் செய்திகளே
மலிவுச் செய்திகளாகி விட்ட
இம்மண்ணில்
மச்சானே - உம்
மரணச் செய்தியும் வந்தெங்கள்
மனத்தை குடையுதையா!

இனித்
தங்கை முகம் பார்க்க
தளிர்கரத்தால் கொள்ளியிட்ட
பிஞ்சு முகங்களைப் பார்க்க
பொறுக்குமா எம் நெஞ்சம்

பொய்யாய், வதந்தியாய்
போனது எனும் படியாக
ஐயோ! நீர் எம்மனங்கள்
ஆறுதல் பெற வாராயோ!

**நீங்கா நினைவுடன்**
**மைத்துனர்கள்**
**சிறீகாந்தா குடும்பம் (கச்சாய்)**
**சிறீமோகன் குடும்பம் (இத்தாலி)**
**பகீரதன் குடும்பம் (பிரான்ஸ்)**

## எங்கள் சித்தப்பாவே

அப்பாவுக்கு அடுத்தவராய்
அருகிலிருந்து அணைத்தவரே - ஐயோ
சித்தப்பா சித்தங்கலங்கிட
சிந்தை நொந்து சிந்திட
எங்கப்பா சென்றீர் எமைவிடுத்து


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்றி பிள்ளைகளுடன் நாம் தவிக்க
எங்கு சென்றீர்கள் எங்கள் சித்தப்பாவே.
எத் தப்புச் செய்தோம்?
எமன் உம்மை பிரிக்க - ஐயோ
நித்திரையில் உம்நினைவு
நித்தமும் அழுகின்றோம்
பற்றுடனே உம் உறவு காண
பளையிலிருந்து வந்தவரே
பாதிவழியில் விதியும் வந்ததுவோ
விழி நிறைய அழுகின்றோம்
விண்ணிலிருந்து வருவீரோ
அழுகின்ற உறவுக்காய் ஆறுதல் கூற

**என்றும் உங்கள் நினைவால் துடிக்கும்**

**பெறாமக்கள்**

**கச்சாய் வடக்கு** **ஜெகபவன், ஜெகப்பிரதாஸ், ஜெகமயூரன்**

## *பிரிவுத் துயரில் ஜெயபாலன் குடும்பத்தினர்*

மனமுவந்து எங்களை மகிழும் வண்ணம்
மண்ணிலே நல்ல வண்ணம் வாழ்ந்தீர் - அண்ணா
சமுக நலனைத் தன்னுயிர் போலக் கருதிய - அண்ணலை
காலவன் இன்று தனக்கென்று ஆக்கி சென்றானே
என்ன செய்வோம் கரம் குவித்துக் தொழுகின்றோம்
காலமெல்லாம்.

**(சகலன்)**

**(சு.ஜெயபாலன்)**

தந்தை இழந்து தவித்த போது
எமக்கெல்லாம் தந்தையாகி
வாழும் வழிகாட்டி வாழவைத்து
எங்கள் குடும்பத்தை காத்தீர்களே - அத்தான்
அனைவருக்கும் நல்லவனாய் வாழ்ந்து காட்டி
விண்ணமரும் தெய்வமென ஆனீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கடமைகளை செய்வதற்கு காத்திருக்க
உங்கள் உயிர் எங்கே சென்று விட்டது.
நாங்கள் இரவு பகல் சிந்துகின்ற கண்ணீரை
அணைகட்டி மறித்தாலும் - அது
குளமல்ல அதுகடலாகுமே
இறைவனிடம் வேண்டுகின்றோம்
இனி வரும் ஜென்மங்களில்
இதே குலவிளக்காக - நீங்கள்
வரவேண்டு மென்று.....

**மைத்துனி**
**(ஜெ. சுதேஸ்வரி)**

அன்புக்கினிய பெரியப்பா
புன்னகை முகத்துடன் மது என்று
கண்ணினால் வரவழைத்து
மடியில் இருக்க வைப்பீர்களே பெரியப்பா
பொக்கற்றுக்குள் பேனை எடுக்கும் போது
சிரித்துக் கொண்ட தருவீர்களே
இனி யாரிடம் எடுப்பேன் பெரியப்பா
சிறகடித்து மகிழும் பருவத்தில்
காலனவன் உங்களை பிரித்து விட்டான்.

**பேராமகன்**
**மதுமினன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராசிரியர் வி. சிவசாமி**
**வடமொழித்துறை**
**யாழ். பல்கலைக்கழகம்.**

# சிவதோத்திரங்கள்

ஆதிகால மனிதன் தன்னைச் சூழ்ந்துள்ள இயற்கை அம்சங்களை அவதானித்து வந்தான். அவன் வாழ்வும் இயற்கையோடு ஒன்றியதாகவே இருந்தது. எனவே, அவற்றை அவதானிப்பதும் அவனுக்கு எளிதாயிற்று. அவற்றுட்சில அவனுக்கு வியப்பை அளித்தன, வேறு சில அச்சத்தை ஏற்படுத்தின, வேறு சில இடையூறாக இருந்தன, இன்னும் சில உதவி செய்வன போன்று காணப்பட்டன. தனக்கும் இயற்கை அமிசங்களுக்கும், இடையிலுள்ள தொடர்புகளையும், இயற்கையிலே தனக்குரிய இடத்தினையும் மனிதன் தனக்கு எட்டியவாறு அறியமுற்பட்டான். செயற்படவும் தொடங்கினான். இத்தகைய ஒரு சூழ்நிலையிலே தான் சமயம். தேன்றியிருக்கலாம். தனக்குப் புறவாழ்வு மட்டுமின்றி அகவாழ்வும் ஒன்று அவசியம் என்பதை மனிதன் உணராலானான். தன்னைச்சூழ்ந்துள்ள இயற்கையைத் தன்வயப்படுத்தத் தொடங்கினான். தான் நேரிலே கண்ட இயற்கை அமிசங்களோடு நின்றுவிடாது, அவற்றுக்கு அப்பாலுள்ள பெரிய சக்தியை ஆற்றலைக் குறித்துச் சிந்திக்கலாயினான். இப் பெரிய சக்தி யாவற்றையும் கடந்ததாக கடவுளாகவும் எல்லாவற்றையும் ஆளும் தலைவராக - இறைவனாகவும், எங்கும் வியாபகமாக நிறைந்துள்ள பொருளாகவும் கொள்ளப்படலாயிற்று.

இப்பேராற்றல் உலகின் பல்வேறு நாடுகளிலே, அவ்வவற்றின் தட்பவெப்பநிலைகள், அவ்விடங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை முறை சிந்தனைகள், அநுபவங்கள் முதலியவற்றின் அடிப்படையிலே பலவாறு போற்றப்பட்டு வந்துள்ளது. இப்பேராற்றலை கடவுளை, இறைவனை அருவமாகவும், உருவமாகவும், அருவுருவமாகவும் இந்து சமய ஞானிகள் கண்டனர் தென் ஆசியாவைப் பொறுத்தமட்டில் "உண்மைப்பொருள் ஒன்று, ஞானிகள் அதனைப் பலவாறு கூறியுள்ளனர்" என்ற கருத்து இருக்கு வேதகாலம் தொட்டு நிலவி வந்துள்ளது. இறைவனை அருவமாக குணம், குறியுள்ளவனாக நோக்கும் போக்கு ஒன்று, அவனை உருவமற்றவனாக குணம், குறியற்றவனாக நோக்கும் போக்கு பிறிதொன்று, அருவமும் உருவமும் சேர்ந்த அருவுருவமாகவும் இறைவனை நோக்குவதும் உண்டு. இம் மூன்று நோக்குகளும் இந்து சமயத்தில் நிலவிவந்துள்ளன. அவரவர் தத்தம் அறிவு, அநுபவம் முதலியவற்கேற்ப மேற்குறிப்பிட்ட நோக்குகளில் எதையும் பின்பற்றுவர்.

இறைவனைக் குறிப்பாக உருவமுள்ளவராக நோக்கும் போது அவரின் மகிமை, அருஞ் செயல்கள், குணாதிசயங்கள் குறிப்பாக உயிர்களிடத்து அவர் கொண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன்பு, இரக்கம், அவரின் புகழ் முதலியவற்றை நேரடியாக ஒருவர் வார்த்தைகளாலே கூறி அவரை வழிபடலாம்.

அதேவேளை இதே கருத்துக்களை உள்ளடக்கியதாக இசைநயமும் இலக்கிய நயமும் கொண்டு பக்திததும்பும் பாடல்களை ஞானிகள் அவ்வப்போது இயற்றியுள்ளனர். இத்தகைய பக்திப் பாடல்கள் பல்வேறு மொழிகளிலும் உள்ளன. சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டிலங்கும் சைவசமயம் பக்திப்பாடல்களைச் சிறப்பாகத் தமிழிலே சைவத் திரு முறைகளிலே காணலாம். இவ்வகையிலே தேவாரம், திருவாசகம், முதலியனமட்டுமன்றி, கீர்த்தனைகள் இசை நாடகங்கள் போன்றவையும் குறிப்பிடற்பாலன. சமஸ்கிருதத்திலும் சிவதோத்திரங்கள் பல உள்ளன. இவைபற்றியே இக் கட்டுரையிலே சுருக்கமாகக் கூறப்படும். தோத்திரம் என்பது "ஸ்தோத்ர" எனும் வடசொல்லின் திரிபாகும். இது "ஸ்து" (புகழ்தல்) எனும் வினையடியிலிருந்து வந்ததாகும். எனவே தோத்திரம் எனில் புகழ்மாலை எனப்பொருள்படும். இங்கு இறைவனின் புகழை எடுத்துரைக்கும் வாடாத மாலைகளாக இவை விளங்குகின்றன. இவை பெரும்பாலும் செய்யுள் வடிவிலே தான் உள்ளன. ஒரு சில வசனவடிவிலும் உண்டு. கலியுகத்திலே அதாவது தற்காலத்திலே இறைவனை வழிபடுதற்குத் தோத்திரமே சிறந்த முறையாகக் கருதப்படுகின்றது. இத் தோத்திரங்களை இவையமைந்துள்ள பாடலின் தொகை, இவை போற்றும் இறைவனின் குறிப்பிட்ட திருவுருவம் முதலியனவற்றின் அடிப்படையிலே வகுத்தும் கூறலாம். இத்தோத்திரங்கள் ஏற்கனவே குறிப்பிட்டவாறு பக்திநயம், இலக்கியநயம் கொண்டவை சமய,தத்துவக்கருத்துக்கள் பொதிந்தவை. இருக்குவேதகாலம்தொட்டு இக்காலம் வரை பல தோத்திரங்கள் தனியாகவும், வேறுபெரிய நூல்களில் சிறுபகுதிகளாகவும் எழுந்துள்ளன.

வரலாற்றுரீதியிலே நோக்கும் போது,வேதஇலக்கியத்திலேயுள்ள உருத்திரன்,சிவன் பற்றிய மந்திரங்கள் முதலிலே குறிப்பிடத்தக்கவை. இவற்றிலே மிகமுக்கியமானதாகக் கொள்ளப்படும்.

"த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனாந் மிருத்யோர் முக்ஷீய மாமிர்தாத்"

என்னும் மிருத்யுஞ்ஜய மந்திரம் குறிப்பிடற்பாலது.இது ஒருவரை எவ்வகையான இடரிலுமிருந்தும் மரணத்திலிருந்தும் காப்பாற்றவல்லதெனக் கூறப்படும்.மேலும், இதிகாசங்கள், புராணங்கள் முதலியனவற்றிலலே அங்குமிங்கும் சில சிவதோத்திரங்கள் உள்ளன ஆனால் பிற்காலத்திலேதான் சிவனைப்பற்றிய தனித்தனியான தோத்திரங்கள் எழுந்தன. பொதுவாகத் தனிரகமாக தோத்திரங்கள் பிற்காலத்திலேதான் எழுந்தன. என்பதும் ஈண்டுக் குறிப்பிடற்பாலது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து பாடல்களைக் கொண்ட தோத்திரங்கள் பஞ்சரத்தினம் எனவும், எட்டினைக் கொண்டுள்ளவை அஷ்டகம் எனவும், நூறு பாடல்களைக்கொண்டவை. சதகம் எனவும், பாடல்களின் எண் அடிப்படையில் அழைக்கப்படும். இங்கு சில அஷ்டகங்களைக் குறிப்பிடலாம். இறைவன் சிவஞானத்தை உபதேசிக்கும் பாங்கில் விளங்கும் வடிவமே தஷ்ணாமூர்த்தி. சனகர் முதலிய நான்கு முதிர்ந்த முனிவர்களுக்கு இளமையான குருவடிவில் சிவபெருமான் மௌன நிலையிலே சின்முத்திரை மூலம் பரஞானத்தை உபதேசித்துள்ளார். இந்த வடிவத்தின் சிறப்பினை "ஸ்ரீதஷிணாமூர்த்தி அஷ்டகம்" எனும் தோத்திரம் கூறுகிறது. இங்கு குருவாகிய சிவபிரான் இளவலாகவும், மாணவர்களாகிய முனிவர்கள் முதியோராகவும் கூறப்படுதல் வயதின் முக்கியத்துவத்துவமன்றி ஞான முதிர்ச்சியையே சுட்டுகின்றது. எனவே ஞானத்தை தம்மிலும் வயது குறைந்தவர்களிடமிருந்தும் ஒருவர் முறைப்படி பெற்றுக் கொள்ளலாம் என்பது புலப்படும்.

லிங்கம் இறைவனுடைய அருவுருவத்திருமேனியாகும், சிவவழிபாட்டின் மிகத் தொன்மை வாய்ந்த சின்னங்களில் இது முக்கியமானது. மேற்காசிய நாகரிகம், சிந்து சமவெளி நாகரிகம் முதலியனவற்றிலும் லிங்க வழிபாடு நிலவி வந்துள்ளது. ஆந்திராவிலுள்ள குடிமல்லம், இலங்கையிலுள்ள திருக்கேதீஸ்வரம், உருத்திரபுரிஸ்வரம், தான்தோன்றீஸ்வரம் தேவநுவர முதலிய இடங்களிலே கண்டு பிடிக்கப்பட்டுள்ள லிங்கங்கள் குறிப்பிடத்தக்கவை. இவை பழைமைவாய்ந்தவை என கருதப்படுகின்றன. சிவனுடைய முக்கியமான 25 திருவடிவங்களில் "லிங்கோற்பவமூர்த்தியும்" ஒன்றாகும். தன்னைச் சரணடைந்த மார்க்கண்டேயரை யமனிடமிருந்து காப்பாற்றுவதற்காக அவர் பூசித்த லிங்கத்திலிருந்தே தோன்றிய சிவபிரான் யமனைத்தண்டித்து மார்க்கண்டேயரைக் காப்பாற்றினார். லிங்கத்தின் சிறப்புக்களைக் கூறும் தோத்திரங்களிலொன்றாக "லிங்காஷ்டகம்" இலங்குகின்றது. அதன் முதலாவது பாடல்.

"பிரஉற்மமுராரி ஸுரார்ச்சித லிங்கம் நிர்மலபாஸித சோபித லிங்கம்

ஜன்மதுக் கவி நாசகலிங்கம் தத்பிரணமாமி சதாசிவ லிங்கம்"

எனவருகின்றது. திருமால், பிரமா, தேவர்கள் ஆகியோரால் அர்ச்சிக்கப்பட்டதும், தூய்மையாக விளங்குகின்றதும், பிறவித் துன்பத்தை முற்றாக அழிப்பதுமாகிய சதாசிவலிங்கத்தை நான் வணங்குகிறேன்" என்பது இதன் பொருள். தான் செய்த பெரிய குற்றத்தின் காரணமாகக் கலைகளை ஒவ்வொன்றாக இழந்து தேய்ந்து கொண்டிருந்த சந்திரன் சிவபெருமானை வணங்கி மீண்டும் தேய்ந்த கலைகளைப் பெற்றான் எனப் புராணங்கள் கூறும். சிவபெருமான தன்னை வந்து சரணடைந்த சந்திரனைத் தமது தலையிலே வைத்து அருள் புரிந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரனும் - இளம்பிறையாக சிவனின் சிரசிலே நிரந்தரமான இடத்தைப் பெற்றான் சிவனும் சந்திசேகரானாக, பிறைசூடியாக விளங்குகிறார். இந்த சந்திரசேகரமூர்த்தி இறைவன் அன்பரின் பிழைகளை மன்னித்து அருள் புரிவர் என்பதை சுட்டிக்காட்டும். இத்திருவுருவத்தினைப் போற்றும் "சந்திரசேகராஷ்டகம்: குறிப்பிடற்பாலது. முதலாவது செய்யுளிலே "மேருமலையினை வில்லாகவும், வாசுகியை நாணாகவும் நாரணனைப் பாணமாகவும் கொண்டு முப்புரங்களிலிருந்த அசுரர்களை அழித்துக் கைலாசமலையிலே வீற்றிருக்கும் சந்திரசேகரனை நான் சரணடைகின்றேன். யமன் எனக்கு என்ன செய்வான்? "என்ற கருத்துப்படவருகின்றது. இவ்வாறே சிவசங்கராஷ்டகம், சதாசிவாஷ்டகம் போன்ற வேறு பல தோத்திரங்களும் உள்ளன.

சிவபிரானுடைய பஞ்சாஷிர (ஐந்தெழுத்து) மந்திரம் (நமச்சிவாய சிவனுக்கு விளக்கம்) மிக முக்கியமானது. இம்மந்திரத்தின் ஐந்தெழுத்துக்களுடைய சிறப்பினைச் "சிவபஞ்சாஷ்ரஸ்தோத்திரம்" குறிப்பிடுகின்றது. இங்கு ஐந்து செய்யுட்கள் உள்ளன.

சிவபெருமானின், தாண்டவம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அவருடைய ஐந்தொழிலையும் சுட்டிக்காட்டும். ஆனந்த தாண்டவம் புகழ் பெற்றதாகும். தாண்டவமூர்த்தியாக, நடராஜனாக அவர் நன்கு போற்றப்படுகிறார். அவருடைய தாண்டவச் சிறப்பினைத் தாண்டவன் தோத்திரம் நன்கு சித்தரிக்கின்றது. இது ஒன்பது செய்யுட்களைக் கொண்டதாகும். இது இராவணனாலே இயற்றப்பட்டதென்ற கருத்து நிலவுகின்றது. இதனைப் படிக்கும் போதோ அல்லது கேட்கும் போதோ தாண்டவம் பற்றிய உணர்வினைச் சொற்களும் ஏற்படுத்துவன. எடுத்துக்காட்டாக.

"ஸதஞ்சிதமுதுதஞ்சித நிகுஞ்சிதபதம் ஜலஜ் ஜலச்சலித மஞ்ஜு கடகம்
பதஞ்ஜலித்ருகஞ்ஜந மநஞ்ஜநம் அசஞ்சலபதம் ஜநநாஞ்ஜநகரம்
கதம்பரு சிமம்பரவநம் பரம மம்புதகநம்பகவிடம்பககலம்
சிதம்புதிமணிம் பதஉறநம்பு ஜரவிம் பரசிதம்பர நடமிஹிருதிபஜே"

எனும் முதலாவது செய்யுளைக் குறிப்பிடலாம். இதனைப் படிக்கும் போது சிதம்பரம் நடராஜரின் தாண்டவம் பற்றிய உணர்வு ஏற்படும். ஓசைநயம், எதுகை, மோனை போன்றவற்றுடன் சமய, தத்துவக் கருத்துக்களும் நயத்துடன் இதிலே காணப்படுகின்றன.

சிவபெருமானை விரும்பிய ஒரு வடிவத்திலே அபிஷேக ஆராதனைகள் செய்தும் வழிபடலாம். அதாவது பல்வேறு கிரியைகள் மூலம் வழிபடலாம். இதனை வெறும் கிரியைசார்பான வழிபாடாகவும் சிலர் கருதுவர். ஆனால் இவற்றைப் புறத்திலே செய்யும் பொது அகசீதியிலும் தூய உணர்வும், சிந்தினையும் ஏற்படவேண்டும். இவற்றை விட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரீதியாக அகப்பூசையாகவும் செய்யலாம். "காயமே கோயிலாகக் கடிமனமடிமையாக" எனத் தொடங்கும் அப்பர் சுவாமிகளின் தேவாரம் அகப்பூசையினைக் குறிப்பிடுகின்றது. இதைப்போலவே சிவபெருமானை மானசிகமாக வழிபடுதற்கான ஆறு செய்யும் களைக் கொண்டுள்ள "சிவமாணஸ்பூஜத" எனும் தோத்திரத்தினைக் குறிப்பிடலாம். இதிலுள்ள முதலாவது செய்யுள் "மாயாபுரி எனும் இதய கமலத்திலே மணிபோல விளங்கும் ஆத்மலிங்கத்தை சிரத்தையெனும் நதியிலுள்ள உறுதியான உள்ளமெனும் நீரினால் அபிஷேகம் செய்து ஸமாதி எனும் மலர்களால் பூசை செய்கிறேன்" எனப் பொருள்படும் வகையில் உள்ளது. நாலாவது செய்யுள் "நீ(சிவபிரான்) என் ஆத்மா: பார்வதி புத்தி: பஞ்சபிராணன்கள் நண்பர்கள்: உடல் வீடு: புலன்வழி இன்பங்கள் உமது பூசை: தூக்கம் ஸமாதி: பாத்ஸஞ்சாரம் பிரதஷிணம், பேச்சு எல்லாம் உமது தோத்திரம். சிவனே நான் செய்யும் சகல காரியமும் தேவரீருக்கான ஆராதனையே" எனும் பொருளில் வந்துள்ளது. ஊயிர் உடல் செயல் அனைத்தும் இறைவனுக்கே அர்ப்பணமாக இங்கு கூறப்பட்டுள்ளது.

மக்கள் தங்களுக்கு ஏற்படும் நோய். வறுமை. பல்வேறு இன்னல்கள் ஆகியவற்றை நீக்குவதற்காகவும் இறைவனை வழிப்படுவர். ஒரு சாரார் ஆன்ம விடுதலைக்காகவும் வழிபடுவர். பொதுவாக தமக்கு ஏற்படும் இன்னல்களைக் களைந்து அருள்புரியும் வண்ணம் ம்கள் இறைவனை வழிபடுதலைக் காணலாம். வறுமை ஒரு பெரிய துன்பமாகும். இதனை நீக்கிச் செல்வம் முதலியன ஏற்படுத்தற்கான தோத்திரங்களிலொன்றாக ஸ்ரீ தாரித்ரிய தகனசிவஸ்தோத்திரம் விளங்குகின்றது. முதல் எட்டு செய்யுள்களிலும் சிவனுக்கு வணக்கம் செலுத்தி வறுமை, முற்றாக நீங்க வேண்டும் எனப்படுகின்றது. ஒன்பதாவது செய்யுளிலே இத்தோத்திரத்தினைப் பாராயணம் செய்பவர் பெறும் நற்பலன்கள் கூறப்பட்டுள்ளன. இறைவன் மக்களுக்கு குறிப்பாக அன்பர்களுக்கு உற்ற சுற்றத்தவராகச் செல்லும் வழியெல்லாம் காப்பாற்றவார். அவர் ஆபத்பாந்தவனாக இருக்கிறார். மார்க்க பந்துவாகவும் விழித்துணையாகவும் விளங்குகிறார் என்பது மார்க்கபந்து ஸ்தோத்திரத்தால் அறியப்படும். மேலும் இறைவன் அன்பரின் எல்லா உறுப்புக்களையும் காப்பாற்றுவார் என்பது "பஞ்சரம்" அல்லது "கவசம்" எனும் வகைத் தோத்திரங்களாலே நன்கு அறியலாம். இவ்வகையிலே ஸ்ரீ தக்ஷிணா மூர்த்திபஞ்சரத்தினைக் குறிப்பிடலாம்.

இறைவனுடைய நாமாவலிகளை (பெயர்வரிசைகளை) தோத்திரங்களாகவும். தனித்தனியாகவும் கூறி வழிபடும் முறை யசுர் வேதகாலம் தொடக்கம் நிலவி வந்துள்ளது. இவ்வகையில் சிவபிரானின் 108 திருநாமங்களைக் கூறும், சிவாஷ்மோத்தர சதநாமாவளி, முந்நூறு திருநாமங்களைக் கூறும் சிவதிரிகதீ, ஆயிரம் திருநாமங்களைக் கூறும் சிவஸறஸ்ர நாமாவளி தோத்திரங்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கவை. இவற்றை விட சிவனின் மகிமையினைக் கூறும் கீர்த்தனைகள், இசை நாடகங்களும் குறிப்பிடற்பாலன.

சம்ஸ்கிருதத்திலுள்ள சிவதோத்திரங்களும் தமிழில் உள்ள தோத்திரங்கள் போல பக்தி ததும்பும். இவற்றை விட சிவனின் மகிமையினைக் கூறும் கீர்த்தனைகள், இசை நாடகங்களும் குறிப்பிடற்பாலன.

சம்ஸ்கிருதத்திலுள்ள சிவதோத்திரங்களும் தமிழில் உள்ள தோத்திரங்கள் போல பக்தி ததும்பும் பாடல்களாக சிவபெருமானுக்குரிய வாடாமலர் மாலைகளாக விளங்குகுகின்றன. அவற்றைப் படித்து அன்பர்கள் பல்வேறு நன்மைகளையும் பெறுவார்களாக. தோத்திரங்கள் எம் மொழியில் இருந்தாலும் அவற்றின் நோக்கத்திலும், அம்சங்களிலும் அதிகவேறுபாடுகள் இல்லை எனலாம். அகரீதியாகவும், புறரீதியாகவும் மக்களை மேம்படுத்துவதே அவற்றின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி J.P*
*தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை.*

# பெரியபுராணம்
## (காப்பியச் சொற்பொழிவு)

கி. பி பதினொன்றாம் , பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிலே தோன்றிய இருபெருங் காவியங்கள் பெரியபுராணமும், இராமாயணமுமாம். ஏறக்குறைய ஐம்பது ஆண்டு இடைவெளி இவ்விரண்டு காவியங்களுக்கு மிடையிலுண்டு. இதனால், இவையிரண்டும் ஒரு முகப்பட்ட பல கருத்துக்களை நமக்கு நல்குகின்றன. முதலிற்றோன்றிய பெரிய புராணத்தை எடுத்துக் கொண்டால் அஃது ஒரு தெய்வ மணங்கமழும் சிறந்த காவியம் என்பது கண்கூடு.

காவியம் என்பது பொருட் தொடர்நிலையாய் வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் என்னும் மூன்ற வகை மங்கலத்துள் ஒன்று முன்வரப் பெற்று, அறம், பொருள், இன்பம், வீடு தழுவி, தன்னேரில்லாத் தலைவனுடையதாய் வருவதாம். இதன் கண் பல வருணனைகளும், நன் மணம் புணர்தல், புலவியிற்புலத்தல்,கலவியற்களித்தல், நட்புத்கோடல், தூதுவிடுதல், குரவரைப் பணிதல் முதலிய ஒழுகலாறுகளும் விரிவி, சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற பாகுபாட்டால் விளக்கமுடையதாய், எட்டு வகைச் சுவையும் பொருந்திவரக் கற்று வல்ல புலவனாற் செய்யப்படும். இந்த அமைவைப் பெரியபுராணத்திற் சிறப்புறக் காணலாம். தமிழின் இனிமையையும் சைவத்தின் பெருமையையும் ஒரு சேர எடுத்துக் காட்டுவது பெரியபுராணம்.

உயிர்கள் தத்தம் நிலைக்கேற்றவாறு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் மார்க்கங்களின் வழியாகப் பாடிப்படியாக உயர்ந்து தந்தலைவராகிய சிவபெருமானின் திருவருளை நாடுகின்றன. இவ்வாறு இறைவனுடைய திருவடி நிழலை எய்திய அடியார்களின் வரலாற்றை ஆங்காகு வைத்து, முதலிலும் இடையிலும் கடையிலுஞ் சுந்தரமூர்த்தி நாயனாருடை வரலாற்றை வைத்துப் பாடப்பட்டுள்ளது. தேய்வீகத் தன்மையிலே தோய்ந்த உள்ளத்தை உடைய சேக்கிழார் உயர்ந்த சில குறக்கோளுடனே இந்நூலைப் பாடினார். நிறைந்த புலமையும் அனுபவமும் வாய்ந்த இவர் முதலமைச்சர் பதவியில் ஈடுபட்டவர். எனவே நல்லவரும் வல்லவரும். ஆகிய ஆசிரியருடைய இந்த நன் முயற்சி ஒப்பற்ற பலனையே அளித்தது. சைவப்பேருலகிற் சிறந்தவொரு காவியத்தை நமக்களித்தபெருமை தெய்வச் சேக்கிழாரையே சார்ந்தது. இவர் செந்தமிழ் நாட்டின் ஒப்பற்ற கவிஞர். இவரை நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், போதகாசிரியராகவும், ஞானாசிரியராகவும் அறிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றுகிறார் அறிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். சேக்கிழார் தமது பெரிய புராணத்தாற் சைவத் தமிழுலகின் வரலாற்றையுமே நமக்குத் தெளிவு படுத்தியுள்ளார்.

பிற்காலச் சோழர்காலம், தமிழகத்திற் சைவம் மிகமிக ஓங்கிய காலமாகும். பன்னிரண்டாம் நூற்றாண்டில் அநபாயனும், அவன் மகன் இராசராசனும் சைவநூற் புலமையும், சிவதொண்டும் மிக்கவர்களாய் வாழ்ந்து, மக்களையும் அவ்வழிப்படுத்தினர். சேக்கிழார் முதலமைச்சராக இருந்ததால் மேலும் சைவத்தொண்டுகள் நாட்டில் மிளிர்ந்தன. அக்காலத்திற் சீவகசிந்தாமணியை நயந்து கொண்டிருந்த மன்னனுக்கு நிலையான ஒரு மெய்யுணர்வை ஊட்டும் நெறியைக் காட்டுவான் வேண்டித் திருத்தொண்டர் பெரியபுராணத்தைச் சேக்கிழார் பாடினார். பல இடங்களையுந் தரிசித்துச் செவிவழிச் செய்தியையுங் கல்வெட்டுச் சான்றுகளையுந் திரட்டிக்கொண்டார். சுந்தரரின் திருத்தொண்டர்த்தொகையும், நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும் மூவர் திருமுறைகளும் காவியப் படைப்பைச் செய்வதற்கு உதவி புரிந்தன. பாடி முடிப்பதற்கு ஏற்ற சௌகரியங்களை அரசன் அளித்தனன். இறைவன் திருவருளைமுன்னாகக்கொண்டு சேக்கிழார் சிதம்பரத்தை அடைந்தார். தில்லையம்பல மூர்த்தியின் திருவருளை வேண்டினார். அச்சமயத்தில் முதலடி எடுத்துக்கொடுக்கப்பட்டது. "உலகெல்லாம்" என்ற தொடர் செவியிற்பட்டதும் பெருமகிழ்ச்சியுடனே எம்பெருமான் வாக்கை அருள் வாக்காகக் கொண்டு பாடத்தொடங்கினார்.

காவியத் தலைவராகக் சுந்தரரை நிறுத்து முகமாக, முதலிலே தடுத்தாட் கொண்ட புராணத்தில் அவர் வரலாற்றைத் தொடக்கிப் பின்பு இடையில் இரண்டு பகுதியைக் கூறிக் கடைசியில் வெள்ளையானைச் சருக்கத்தில் அவர் வரலாற்றை முடிக்கிறார். பெருங்காப்பிய முறைக்கேற்ற நாடு நகர வருணனைகளும் இந்நூலிற் கலந்து மிளிர்கின்றன. இது, தில்லைப்பிரான் திருக்கோயிலிலே அநபாய சோழன் முன்னிலையில் பல்லோர் பாராட்டுத் தெரிவிக்க அரங்கேற்றப்பட்டது. சேக்கிழாரை யானை மேலேற்றித் திருத்தொண்டர் புராணத்துடன் வீதிவலஞ் செய்தனர். "தொண்டர் சீர் பரவுவார் .... " என்ற சிறப்புப் பெயரைச் சோழன் சேக்கிழாருக்கு அளித்தனன். அருண்மொழித்தேவர் என்றும், குன்றை முனி சேக்கிழார் என்றும், மாதேவடிகள் என்றும் பாராட்டி அறிஞர் பெருமக்கள் சிறப்புச் செய்தனர்.

பெரிய புராணம் சிறந்தவொரு வரலாற்றுச் சிறப்புடைய நூலாகும். இன்றுள்ள நாம் வேறு எவ்வகையிலும் அறிய முடியாத அக்காலச் செய்திகள் பலவற்றைப் பெரிய புராணத்தால் அறிகிறோம். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலே, தமிழ் நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறுபவை. அவற்றுக்குப்பிறகு தமிழகத்திற் பெரிய மாறுதல்கள்ஏற்பட்டன. சமணம் பரவியது. ஆறாம் நூற்றாண்டு தொடக்கம் ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலும் சமயப் பிரசாரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டதே தவிர, இலக்கிய வளர்ச்சி தேங்கிக் கிடந்தது. மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் ஒன்பதாம் நூற்றாண்டு வரையுமுள்ள காலத்திலே தமிழ்க் காவியம் எதுவும்எழுதப்படவில்லை. பத்தாம் நூற்றாண்டிற் சீவகசிந்தாமணி என்ற சமண காவியந் தோன்றியது. அடுத்து, பன்னிரண்டாம் நூற்றாண்டுதான் சைவசமயம் வளர்ச்சிக்குப் புத்துயிர் அளிக்கப்பட்ட காலமாகும். இக்காலமே சேக்கிழார் பெரிய புராணம் தோன்றியது. கோச்செங்கணான் முதல், பல்லவர் காலம் வரை தமிழ் நாட்டு அரசியல் முறைகள், போர்கள், அரசர்கள் என்பவற்றை ஓரளவுக்கு விளக்கி நிற்பது பெரிய புராணமே. இதனைத் தொகுப்பதற்கு ஆசிரியர் சேக்கிழார் எடுத்த முயற்சி பெரிதும் பாராட்டுதற் குரியதாகும்.

இனி, பெரிய புராணத்துக்குட் புகுந்து பார்ப்போம். நாடு, நகர வருணனை, காதற் சிறப்பு, உவமை நயம், பக்திச்சிறப்பு, சித்தாந்தக் கருத்துகள் என்பவை ஆங்காங்கு பாடல்களிலே மிளிர்ந்து காவியச் சிறப்பைக் காட்டுகின்றன.

**"பரந்த விளை வயற் செய்ய பங்கயமாம் பொங் கெரியில்**
**வரம்பில் வளர் தேமாவின் கனிகிழிந்த மலை நறுநெய்**
**நிரந்தரமட் நீள் இலைக்கடையால் ஒழுகுதலால் நெடிதவ்வூர்**
**மரங்களும் ஆகுதி வேட்கும் தகைமையென மலவந்துளதால்"**

இங்கே இயற்கையான வொரு மருத நிலக்காட்சியைத் தெய்வீக உள்ளத்தோடு நின்று சேக்கிழார் காட்டுகிறார். காண்பவனுடைய உள்ளப் பாங்கிற்கேற்பக் காட்சி வேறுபடுகிறது. சந்திரனைக் காணுகின்ற கவிஞன் கடல் மீது காணும் வெள்ளி ஒடத்தைக் நினைவு கொள்ளுகின்றான். அதே நேரத்தில் விஞ்ஞானியின் சிந்தை சந்திர மண்டலத்தியல் கண்ட தெளிய முற்படுகிறது. பக்தன் ஒருவன் சந்திரனைக் கண்டவுடன் இறைவனுடைய சாடாமுடியை நினைவு கொள்கிறான். ஆகவே, காட்சி காண்பவருடைய உள்ளத்திற்கேற்ப வேறுபடுகிறது. ஆதெபோல, இங்கே வயல் மரங்கள் கூட வேள்வி செய்கின்ற ஒரு நலைமையைச் சேக்கிழார் காண்கிறார். பங்கயமாகிய ஓம குண்டத்தில் பழச்சாறாகிய நெய்யைச் சொரிந்து வேள்வி நடக்கிறது. இப்படியான ஒரு காட்சியைக் காண்பதற்குக் கவிஞருக்கு எவ்வளவு பக்தியுள்ளம் வேண்டும்! தேய்வீகத்திலே தோய்ந்த உள்ளம் ஒன்று தான் இதனைக் காண முடியும் என்பதிற் சந்தேகமே யில்லை.

திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் மற்றொரு நாட்டுவருணையைக் கவனிப்போம்.

**"கவிஞர் மிடை வயற்குறைத்த கரும்பு குறை பொழிகொழுஞ்சாறு**
**"இடைதொடுத்த தேன்கிழிய இழிந்தொழுகு நீத்தமுடன்**
**புடைபரந்து ஞமிறொலிப்பப் புதுப்புனல் போல் மடையுடைப்ப**
**ஊடைமடையக் கரும்படுகட்டி யினடைப்ப ஊடகள் தொறும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல் நிலத்தைச் செப்பஞ் செய்வதற்காகக் கருப்பந் தடிகளை கடைஞர்கள் வெட்டி விடுகிறார்கள். குறைத்தடிகளிலிருந் கருப்பஞ்சாறு சொரிகிறது. ஆத்தோடு தேனுஞ்சேர்ந்து ஓடி வாய்க்கால் மடைகளை உடைக்கிறது. இதனைத் தடுப்பதற்கு உடைபட்ட மடைகளுக்குக் கருப்பங்கட்டிகளைக் கொண்ட மள்ளர்கள் அடைக்கிறார்கள். அத்தகைய செழிப்புடைய நாடு திருமுனைப்பாடி நாடு என்ற வருணிக்கிறார் சேக்கிழார். இதில் ஒரு பெரிய உண்மையையும் பொதித்து வைத்திருக்கிறார். கருப்பஞ்சாறு போன்று பயன்தரக்கூடிய திருநாவுக்கரசருடைய வாழ்க்கை அவமே சமணத்தோடு கலக்காமல் கருப்பங்கட்டி போன்று பயன் தந்து கொண்டிருக்கின்ற திலகவதியாரால் தடைப்படுத்தப்படுகிறது என்ற உண்மை வருணனைக்குட் பொதிந்து கிடக்கிறது. இப்படியான வருணனைகள் பலவற்றைப்பெரியபுராணத்தில் நிரம்பக் காணலாம்.

அடுத்து, காவியத்தில் அமைந்திருக்கவேண்டிய காதற்சிறப்பைக் குறித்து ஓர் இடத்தைக் காண்போம். காவியத் தலைவனாகிய சுந்தரன் திருவாரூர்ப் பெருமானை வணங்குவதற்கு வந்திருக்கிறான். அவ்வூரில் உருத்திர கணிகையர் குலத்திலே தோன்றிய பரவையார் என்பவளும் தோழிப்பெண்களுடன் அவ்வாலயத்திற்கு வந்திருக்கிறாள். விதி வழி கூட்ட சுந்தரன் பார்வை பரவைமேற் செல்கிறது. அதே நேரத்திலே பரவையாரின் பார்வையும் சுந்தரன் மேற் செல்கிறது. சுந்தரன் அதிசயித்து நிற்கும் நிலையை,

**'கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ**
**பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து**
**விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ**
**அற்புதமோ சிவனருளோ அறியேன் என்றதிசயித்தார்'**

என்பதாலும்,

பரவையின் காதல் நிலையை,

**"முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ பெருகொளியால்**
**தன்னேரில் மாரனோ தாவ மார்பில் விஞ்சையனோ**
**மின்னோர் செஞ்சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ**
**என்னே என்மனந் திரித்த இவன்யாரோ என நினைந்தார்"**

என்பதாலும். கவிஞர் விளங்கவைக்கிறார்.காதலனும் காதலியும் சிவனடியார்கள் அல்லவா? ஏனவே, ஒன்றுபட்ட உள்ளங்கள் இரண்டும் சிவனருளை முன்னிட்டே நிற்கின்றன. அதனால், அற்புதமோ சிவனருளோ, என்றார் சுந்தரர். செஞ்சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ என்கிறார் பரவையார். இன்னும் கற்பகத்தின் பூங்கொம்போ என்ற சுந்தரர் நினைக்கும்போது முருகனோ என்று பரவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறார். எத்துணை ஒன்றுபட்ட உள்ளங்கள்! கம்பன் காட்டுகின்ற காதற் காட்சிக்கும், சேக்கிழார் காட்டுகின்ற காதற் காட்சிக்குமிடையில் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. கம்பன் இலக்கிய நயத்தை மாத்திரம் நல்கி நிற்கிறான். சேக்கிழாரோவெனிற் காவியப் படைப்பின் நோக்கத்தை நிறைவேற்றுவான் பொருட்டு இலக்கிய இன்பத்துக்கூடே தெய்வீக ஒளியொன்றைக் காட்டி வைக்கிறார்.

பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பெரிய புராணம் பாடப்பட்டது. ஆனபடியால்,அதற்குரிய சில இடங்களைக் காண்போம். தில்லைப் பெருமான் திருக்கோயிலுக்குத் திருநாவுக்கரசர் சென்று கொண்டிருக்கிறார். கோயில் வாயிலை அண்மியதும் நாயனாரது நிலை வருமாறு உளது:

**"கையுந் தலைமிசை புனையஞ்சலியன கண்ணும் பொழிமழை ஒழியாதே**
**பெய்யுந்தகையன கரணங்களுமுடன் உருகும்பரிவின பேறெய்தும் நின்றாடும்**
**மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும் மின்தாள் சடையொடு**
**ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவவ ஆர்வம் பெருகுதல் அளவின்றால்"**

தலைமிசைக் கூப்பிய கரங்கள்: கண்களிலே இடையறாது பொழியுங் கண்ணீர்: அந்தக் கரணங்கள் உருகுகின்ற நிலை: உடம்பு விழுதலும் எழுதலும் ஆகிய முயற்சிகள் எனவே, மனம் வாக்கு காயம் மூன்றும் இறைபணியில் ஈடுபடுகிறன. இதனால், உள்ளத்திலே ஒர பேரார்வம் தாண்டவமாடுகிறது. மற்றோரிடத்திற் சுந்தரரையும் இதேநிலையில் அமைத்துக் காட்டுகிறார்.

**'ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும்**
**சிந்தையே யாகக் குண மொரு மூன்றந் திருந்துசாத் வீகமேயாக**
**இந்து வாழ் சடையா னாடு மானந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின்**
**வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்'**

கண்ட கண்களே எம் பெருமானை இடையறாது நோக்குகிறது. இந்த நிலையில் ஏனைய நான்கு இந்திரியங்களின் தொழிற்பாடுகளும் அடங்கிக் கண்களுக்கே சக்தி சென்றுவிட்டது. இதனால், சுந்தரருடைய செவிகள் கேட்கவில்லை; மெய்யுணரவில்லை; வாய் அசையவில்லை. அது மட்டுமா? அந்தக் கரணங்கள் நான்கும் தமது தொழிற்பாட்டைச் சிந்தைக்கு அளித்துவிட்டன. சிந்தை இடையறாது என் பெருமானைத் தியானிக்கிறது. சாத்வீகம் தலையெடுத்து நிற்கிறது. இந்த நிலையிற் சுந்தரருடைய உள்ளம் தில்லைப் பெருமான் திரவடிகளிலே தோய்கிறது என்று காட்டிய சேக்கிழாரின் பக்திச் சுவைக்கு வேறுசான்றும் வேண்டுமா?

இனி, பெரிய புராணங் காட்டும் சித்தாந்தக் கருத்துக்கள் சிலவற்றைக் கவனிப்போம். சேக்கிழார் பன்னிரண்டாம் நூற்றாண்டினர். இவர் காலத்தில் எதுவித சித்தாந்த நூல்களுந் தோன்றிற்றிலது. பதின்மூன்றாம், பதினான்காம் நூற்றாண்டுகளே சித்தாந்த நூல்கள் தோன்றிய காலமாகும். எனினும், சேக்கிழார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானவிளக்கமுடையவரானபடியால் சித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றை ஆங்காங்கே விளக்கிச் செல்கிறார். பதி, பசு, பாசம், மும்மலம், இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம், நான்கு பாதங்கள் என்பவற்றைப் பற்றிய விளக்கங்கள் பெரிய புராணத்திற் பலவிடங்களிற் காணப்படுகின்றன.

**'முன்னை வல்வினையும் நீங்கி முதல்வனை யறியுந்தன்மை**
**துன்னினான் வினைகள் ஒத்துத் துலையென நிற்றலாலே'**

என்ற பாடலில் இருவினை யொப்பு விளக்கப்பட்டிருக்கிறது.

**'திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணாமுன்னே**
**அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கமெய்தத்**
**தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட்டகல நீங்கிப்**
**பொங்கிய ஒளியின் நீழற் பொருவிலன் புருவ மானார்'**

இங்கே நயனதீட்சையைப் பற்றிய குறிப்புத் தொனிக்கிறது.

**'தன்பரிசும் வினையிரண்டும் சாருமலமூன்ற மற**
**அன்பு பழம்பாய்த் திரிவாவ அவவ கருத்தின் அளவினரோ'**

என வரும் பாடலில் ஆன்மாவானது மலமகன்று சிவமாகுந் தன்மை கூறப்பட்டுள்ளது.
மற்றோர் இடத்தில் அவர் காட்டிய உவமையின் சிறப்பு ஒன்றைக் கவனிப்போம்.

"பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்சமாக்கள் தம் வல்வினையும் பரன்
அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவாள்"

பெண்கள் இயல்பாகவே சில எண்ணங்களைத் தம்மனத்துள் அடக்கி வைத்திருக்கும் தன்மையினர். அப்படியாக உண்மைகளை மறைத்து வைத்திருக்கும் அவருள்ளம் போலவும், அழுக்காறுடையோரின் கொடிய வினைபோலவும், திருவைந் தெழுத்தையறியாதோரின் நெஞ்சு போலவும் ஆகாயம் இருண்டிருந்தது என்று காட்டப்படுகிறது.

இப்படியான வருணனை, காதற் சிறப்பு, பக்தி, சித்தாந்தக் கருத்துக்கள், உவமை நயம் ஆகியன பொலிந்து விளங்குவது பெரிய புராணம்.

"கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கிய ."

மெய்யடியார்களின் பெருமையை எத்துணையென்று யாராற்றான் இயம்ப முடியும்? ஏனினும், சேக்கிழார் சைவத் தமிழுலகத்துக்குச் செய்த மகத்தான தொண்டு பாராட்டுதற்குரியது. அவர் நல்கிய பெரிய புராணம் பக்திச் சுவை சொட்டும் சிறந்த காவியம் என்றால் அதில் மிகையொன்றுமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சொற்செல்வர்
திரு.ஆறு. திருமுருகன்.

# இந்தியா சென்று இந்துமதச் சான்றோர் அவையில் புகழ் நிறுவிய ஈழத்தமிழர்

இந்துசமுத்திரப் பிராந்தியத்திலே கோடிக்கணக்கான இந்துக்கள் வாழும் நாடு இந்தியா. இந்தியாவுக்கும் ஈழத்திருநாட்டிற்கும் மிகநீண்ட வரலாற்றுத்தொடர்பு உண்டு. முப்பத்துஇரண்டு கிலோமீற்றர் நீரிணை இரு நாடுகளையும் பிரித்து நிற்கின்றது. இந்தியாவிற்கு உள்ள பழம்பெரும் வரலாறு போல் ஈழத்திருநாட்டிற்கும் மிகத்தொன்மையான வரலாறு உண்டு. சிறிய நாடாகிய ஈழத்திலிருந்து பல ஆத்மீகப் பெரியவர்கள் இந்தியாவிற்குச் சென்று குறிப்பாகத் தென்னிந்தியாவிலே தமது ஆற்றல்களை வெளிப்படுத்திய வரலாறுகள் தொன்மைதொட்டுப் பேசப்படுகின்றன.

ஈழத்திருநாட்டிற்கும் இந்தியாவிற்கும் பண்டமாற்றுப் பொருளாதாரத் தொடர்பு முதல் பாரம்பரிய, சமய, பண்பாட்டு, கலை சார்ந்த தொடர்புகள்வரை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே நிலவியதற்கான பல்வேறு சான்றுகள் இன்றும் காணப்படுகின்றன. சங்க இலக்கிய நூல்களில் இலங்கை பற்றிய பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஈழத்தில் வாழ்ந்த பழங்குடி மக்களாகிய நாகருக்கும் தென்னாட்டில் வாழ்ந்த தமிழருக்கும் உள்ள தொடர்புக்கு சிறுபாணாற்றுப்படை அடி ஆதாரமாக உள்ளது. கடைச்சங்கப் புலவருள் ஒருவராய் இருந்த ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவர் ஈழத்தவரே என்று மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசயர் அவர்கள் பல இடங்களில் எடுத்துரைத்துள்ளார். இப்புலவர் ஈழத்தில் தோன்றி இந்தியாவில் அறிஞர் அவையில் புகழ்க்கொடி நிறுவியவர் என பல அறிஞர்கள் தமது ஆய்வுகளில் கூறியுள்ளனர். சங்கநூல்களில் ஏழு பாடல்கள் இவர் இயற்றியவையாகும். அவற்றுள் நற்றிணையில் ஒரு பாடலும் குறுந்தொகையில் மூன்று பாடல்களும் அகநானூறில் மூன்று பாடல்களும் உள்ளன. இவர் இயற்றிய ஏனைய பாடல்கள் சிதைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. சங்ககாலம் முதல் ஈழத்து அறிஞர்கள் இந்தியா சென்று அறிஞர் அவையில் சாதனை படைத்த வரலாற்றை பலர் ஆராய்ந்து கட்டுரைகளாக வரைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 1951 ஆம் ஆண்டு பரமேஸ்வராக்கல்லூரி வளாகத்தில் பெரும் தமிழ்விழா நடைபெற்றபோது வெளியிடப்பட்ட தமிழ்விழா மலரில் வித்துவான் திரு. க. சி. நடராஜன் (B. O. L) எழுதிய "இந்தியா சென்று புகழ் நிறுவிய ஈழத்தமிழர்" என்ற கட்டுரை பல பெரியவர்களது சிறப்பினை வெளிப்படுத்தியுள்ளது. சைவபரிபாலன சபையினால் வெளியிடப்பட்டுவரும் நூற்றாண்டு கண்ட "இந்துசாதனம்" பத்திரிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குக் காலம் இந்தியாவில் சமயப்பணி ஆற்றிய ஈழத்தமிழர்களை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. ஈழத்திலிருந்து இந்தியா சென்று கலைத்துறையில் புகழ்நாட்டியவர்கள் பலர். வாணிபத்தில் புகழீட்டியவர்கள் பலர். இவர்கள் பற்றிய ஆய்வுகள் எதிர்காலத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். கிறிஸ்துவிற்குப் பின் ஈழத்துப் பூதந்தேவனார் முதல் இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டு காலப்பகுதி வரை இந்தியாவில் அறிஞர் அவையில் இந்துசமயம் சார் கருத்துக்களை முன்வைத்துப் புகழ் பெற்றவர்களை, குறிப்பாக எம் ஆய்வுக்கு எட்டியவர்களை இக்கட்டுரையில் வெளிப்படுத்தலாமென எண்ணுகின்றேன்.

## திருநெல்வேலி ஞானப்பிரகாசர்.

இற்றைக்கு நானூறு வருடங்களுக்கு முன் எம்மண்ணில் வசித்தவர் இவர். யாழ்ப்பாணம் திருநெல்வேலிக் கிராமத்தைச் சேர்ந்த சுவாமிகள் பறங்கியர் ஆட்சி நிலவியபோது பசுவதையை எதிர்த்துப் பாரதம் சென்றவர் என வரலாறு கூறுகின்றது. சிதம்பரத்தில் வாழ்ந்த ஞானப்பிரகாச சுவாமிகள் கௌட தேசம் சென்று ஒரு பிராமண சந்நியாசியிடம் தருக்கம், வியாகரணம் முதலியவற்றை முதலில் கற்றுப் பின் திருவண்ணாமலை வியாக்கியானம் எழுதியுள்ளார். சிதம்பரத்திலும் திருவண்ணாமலையிலும் பலருக்கு சமய தத்துவங்களை எடுத்துரைப்பதில் பேரறிவாளனாக விளங்கியுள்ளார். தமிழில் சிவஞானசித்தி சுபக்கத்திற்கு ஒரு உரை இயற்றியுள்ளார். வடமொழியில் உள்ள பௌட்கராகமத்திற்கு இவர் எழுதிய உரை மிகவும் பிரசித்தமானது. சிதம்பரத்தில் இவர் கட்டிய "ஞானப்பிரகாசம்" திருக்குளம், அதன் அருகே அமைந்துள்ள ஆலயம் என்பன இவர் பெருமைக்கு இன்றும் சான்று பகர்கின்றன.

## நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

ஞானப்பிரகாச சுவாமிகள் மரபில் உதித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் ஈழத்திலும் இந்தியாவிலும் தமது ஆற்றலை வெளிப்படுத்திய மகான் எனலாம். திருவாவடுதுறை ஆதீனம் இவரது நாவன்மையின் மேன்மையை அறிந்து நாவலர் என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கியமையை யாவரும் அறிவர். தென்னாட்டில் நாவலர் காலம் முதல் இன்றுவரை சைவத்தை, தமிழை ஆராய்கின்ற அறிஞர்கள் நாவலரது மேன்மையை எடுத்துரைக்கத் தவறுவதில்லை. உரைநடை இலக்கியத்தின் தந்தை என இலக்கிய ஆய்வாளர்களால் சிறப்பிக்கப்படும் நாவலர் பெருமான் பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டதோடு பல செய்யுள் நூல்களுக்கு வசன வடிவில் வாழ்வழித்தவர். சமயப் பிரசங்க மரபை ஈழத்திலும் இந்தியாவிலும் நிறுவிய வரலாற்று நாயகன் இவர். 1822 ஆம் ஆண்டு தொடக்கம் 1879 ஆம் ஆண்டுவரை வாழ்ந்த நாவலர் பெருமான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவான நடையில் சமயச் சொற்பொழிவுகளை ஆற்றியதோடு சமய, இலக்கிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டவர். இவரது வசனநடை அற்புதமானது. இவரைப் பின்பற்றியே சி. வை. தாமோதரம்பிள்ளை, டாக்டர் உ. வே. சாமிநாதையர், திரு. வி, கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் போன்றோர் அரிய நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டனர். நாவலரை, வசன நூல்களை வெளியிடுவதில் உழைத்தவராகிய சூரியநாராயண சாஸ்திரிகள் "வசனநடை கைவந்த வல்லாளர்" என விளிப்பது குறிப்பிடத்தக்கது. நாவலர் எழுதிய "பெரியபுராண வசனம்" மிகப் பாராட்டுப் பெற்ற நூலாகும். இந்தியாவில் நாவலர் நாட்டிய புகழ்க்கொடிக்கு ஈடாக இன்றுவரை பிறர் இல்லை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

### உடுப்பட்டி சிவசம்புப் புலவர்

நாவலர் பெருமான் காலத்தில் வாழ்ந்த இவர் மிக இளம்பராயத்திலேயே இந்தியாவில் தனது பெருமையை நிலைநாட்டியவர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் மீது நான்மணிமாலை பாடிப் பெரும் பாராட்டுப் பெற்றவர். அறுபது பிரபந்தங்களுக்கு மேல் பாடிய இவர் கந்தபுராணம் பற்றி எடுத்துரைப்பதில் பாண்டித்தியம் மிக்கவராக விளங்கியுள்ளார். கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படலத்திற்கு உரை எழுதி இந்தியாவில் அரங்கேற்றிய பெருமை இவரைச் சாரும். இராமநாதபுரம் இரவிகுல விஜயரகுநாத பாஸ்கர சேதுபதி மீது பல பாடல்களைப் பாடி அவர் முன்னிலையிலேயே தன் திறமையை வெளிப்படுத்தி பட்டமும் பரிசிலும் பெற்றவர். கவிவல்லமையும் நாவல்லமையும் மிக்க புலவர் பற்றிய சிறப்புக்களை தமிழக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### சபாபதி நாவலர்

யாழ்ப்பாணம் கோப்பாய் கிராமத்தில் பிறந்து ஈழத்திலும் இந்தியாவிலும் சிறந்த கல்விமானாகத் திகழ்ந்தவர். உயர்ந்த தமிழ்நடையில் சொற்பொழிவாற்றும் திறமை மிக்கவராக ஈழத்திலும் இந்தியாவிலும் பாராட்டுப் பெற்றவர். நாவலரதும் வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளையினதும் மாணவராக விளங்கிய இவர் திருவாவடுதுறை ஆதீனத்தால் கௌரவிக்கப்பட்டு நாவலர் என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர். வடமொழியிலும் தென்மொழியிலும் பாண்டித்தியம் மிக்க இவர் சிதம்பரத்திலுள்ள நாவலர் வித்தியாசாலைக்கு தலைமை ஆசிரியராக விளங்கி தென்னாட்டில் சமய இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றிதனிப் பெருமை பெற்றவர். சைவசித்தாந்தத் துறையில் சிறப்புப் புலமையும். தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த அறிவுமுள்ள இவர் பல நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய "திராவிடப் பிரகாசிகை" என்னும் நூல் மிகவும் பிரசித்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. வை. தாமோதரம்பிள்ளை**

இவர் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களில் மிகுந்த புலமை உடையவர். தமிழ் நூல்களைப் பதிப்பித்தலில் இவர் செய்த அரும்பணி இன்றும் நன்றியோடு நினைவுகூரத்தக்கவை. வீரசோழியம், தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி, இறையனார் அகப்பொருள், இலக்கண விளக்கம் போன்ற நூல்களைப் பதிப்பித்து தென்னகத்து சான்றோர் அவையில் பெரும் பாராட்டைப் பெற்றவர். இவர் இலக்கண இலக்கியம் சார்ந்த உரைகளை ஆற்றிப் பாராட்டுப் பெற்றவர்.

**கனகசுந்தரம்பிள்ளை**

யாழ்ப்பாணம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறந்த தமிழறிஞர்.சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக விளங்கி தனது நாவன்மையாலும் எழுத்தாற்றலாலும் பெருமதிப்புப் பெற்றவர். தமிழ் நாவலர் சரிதை என்ற நூலை வெளியிட்ட இவர் இல்லான்மை என்னும் உரைநடைநூலை இயற்றிப் புகழ் பெற்றவர். சிறந்த சொல்வன்மையாளராகிய இவர் ஈழத்திலும் இந்தியாவிலும் பாராட்டுப் பெற்றவர்.

**சுன்னாகம் திரு. அ. குமாரசுவாமிப் புலவர்**

சுன்னாகத்தில் பிறந்து ஈழத்திலும் இந்தியாவிலும் பேரறிஞராக மதிக்கப்பட்டவர் இவர். மதுரைத் தமிழ்ச்சங்கம் இவரது பேராற்றலைக் கேள்வியுற்று சிறப்பு அங்கத்தவராக்கிக் கௌரவித்தது.வடமொழி, தென்மொழி இரண்டிலும் பாண்டித்தியம் உடைய இவர் பல பெறுமதியான நூல்களை எழுதி வெளியிட்டவர். தென்னாட்டில் பல சமஸ்தானங்களினாலும் திரவாவடுதுறை ஆதீனம் போன்ற மஹசந்நிதானங்களாலும் பெரிதும் கௌரவிக்கபப்பட்டவர் புலவர் அவர்கள். நானூறு புலவர்களின் சரித்திரங்கள் அடங்கியுள்ள தமிழ்ப்புலவர் சரிதம் என்ற நூலை வெளியிட்ட பெருமை இவருக்குரியது. கவிவல்லமைமிக்க புலவர் பெருந் தமிழ் தொண்டு செய்தவர். தமிழ் இலக்கிய சொல்லகராதியைத் தொகுத்து வெளியிட்டவர். இவரது பேராற்றல் இன்றும் தமிழகத்தில் பேசப்படுகிறது.

**கொக்குவில் சபாரத்தினமுதலியார்**

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சிறந்த சைவசித்தாந்த அறிஞர் சபாரத்தின முதலியார் அவர்கள். இவர் வடமொழியிலும் தென்மொழியிலும் ஆங்கிலத்திலும் மிகுந்த புலமை உடையவர். சிறந்த சொற்பொழிவாளர். தென்னிந்தியாவில் நடைபெற்ற சைவசித்தாந்த மஹாசமாஜத்திற்கு தலைமை தாங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறு பெற்றவர். இவர் "இந்துமதத்தின் பிரதான அம்சங்கள் (The essential of Hinduism in the light of Saiva Siddhanta) எனும் நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டு இந்தியாவில் அரங்கேற்றிப் பாராட்டுப் பெற்றவர். "சித்தாந்ததீபிகை" என்ற ஆங்கில சஞ்சிகைக்கு பல கட்டுரைகள் எழுதியுள்ளார். சைவசித்தாந்தம் பற்றிய இவரது சொற்பொழிவுகள் ஈழத்திலும் இந்தியாவிலும் சிறப்புப் பெற்றன.

**புலோலி திரு. நா. கதிரவேற்பிள்ளை**

இவர் யாழ்ப்பாணத்திலுள்ள புலோலியைச் சோந்தவர். இவரது தமிழ்மொழி ஆற்றலைக் கண்டு இந்தியாவிலுள்ள அறிஞர்கள் வியந்தனர். இவரது பேச்சாற்றலை திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் பெரிதும் பாராட்டி எழுதியுள்ளார். இவர் இந்தியா சென்று சென்னை ராயப்பேட்டையில் "பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை" என்ற சபையையும் வேறு பல சபைகளையும் நிறுவிப் பணி புரிந்தவர். இவரது பேச்சாற்றல் வசீகரமானது. இவர் தொகுத்த தமிழ்ப் பேரகராதி, சைவபூஷண சந்திரிகை, சுப்பிரமணிய பராக்கிரமம் முதலிய நூல்கள் இவரது திறமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவர் ஆரணி நகர சமஸ்தான வித்துவானாக விளங்கி "சைவசித்தாந்த சரபம்" என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றவர். சமய சொற்பொழிவுத் துறையில் இந்தியாவில் புகழ்க்கொடி நாட்டியவர்.

**மட்டுவில் ம. க. வேற்பிள்ளை**

யாழ்ப்பாணம் மட்டுவிலைச் சேர்ந்த திரு. ம. க. வேற்பிள்ளை சிறந்த தமிழறிஞர். செய்யுள் இயற்றுவதில் பெரும் புலமை படைத்தவர்.புராண பிரசங்கங்கள் செய்வதில் ஈழத்திலும் இந்தியாவிலும் மிகச்சிறந்த பாராட்டுக்களைப் பெற்றவர். சிதம்பரம் நாவலர் வித்தியாசாலையில் பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்து தமிழ் அறிஞர்களை உருவாக்கியவர். ஆறுமுகநாவலரின் மாணவராகிய இவர் பல நூல்களை எடுதியுள்ளார். திருவாதவூரர் புராணத்திற்கு இவர் எழுதிய உரை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது இவர் எழுதிய செய்யுள் நூல்களுள் "ஈழமண்டல சதகம்" சிறப்பு வாய்ந்தது.

**புலோலி திரு. வ. கணபதிப்பிள்ளை**

யாழ்ப்பாணம் புலோலியைச் சேர்ந்த திரு. வ. கணபதிப்பிள்ளை தமிழிலும் வடமொழியிலும் மிகுந்த புலமை உள்ளவர். நெடுங்காலம் காஞ்சிபுரத்திலே பச்சையப்ப வித்தியாசாலையில் தமிழ்ப்பண்டிதராகப் பணி செய்தவர். பலநூல்களை எழுதி வெளியிட்ட இவர் சொற்பொழிவுகளை ஆற்றுவதிலும் கவி பாடுவதிலும் திறமை உடையவர். இவர் எழுதிய "ரகுவம்ச சுருக்கம்" மிகவும் பிரசித்தமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆறுமுகத்தம்பிரான்**

யாழ்பாணத்தில் பிறந்து திருவண்ணாமலை ஆதீனத்தில் வசித்த சைவசித்தாந்த அறிஞர் இவர். பெரியபுராண நூலிற்கு சிறந்த உரையை எழுதிய பெருமை இவரைச் சாரும்.

**யாழ்ப்பாணம், குப்பிளான், செந்திநாதஜயர்**

யாழ்ப்பாணம். ஏழாலை, குப்பிளான் காசிவாசி செந்திநாதஜயர் அவர்கள் பெரும் புலமையாளர். தமிழ்,வடமொழி, ஆங்கிலம் மூன்றையும் சிறப்பாகக் கற்றுணர்ந்த பெருமை பெற்றவர்.இவர் காசியில் சிலகாலம் வசித்தவராதலின் காசிவாசி செந்திநாதஜயர் என அறியப்பட்டார். நூல்களை இயற்றுவதிலும் சமயச் சொற்பொழிவு ஆற்றுவதிலும் மிகப் புலமை உடையவராகப் போற்றப்பட்டார். திருப்பரங்குன்றத்தில் நெடுங்காலம் வசித்து இந்தியாவின் பல பாகங்களிலும் தன் புலமையை வெளிப்படுத்தினார். இவரது "நீலகண்ட பாஷ்யம்" மொழிபெயர்ப்பு நூல் பிரசித்தமானது. சிவஞானபோத வசனலங்கார தீபம். தேவாரம் வேதசாரம் போன்ற இவரால் இயற்றப்பட்ட நூல்கள் பலராலும் பாராட்டப் பெற்றவை.

**வடகோவை வேலுப்பிள்ளை உபாத்தியாயர்**

யாழ்ப்பாணம் கோப்பாயைப்பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமிழ்மொழியிலும் ஆங்கிலத்திலும் வடமொழியிலும் மிகுந்த புலமை உடையவராக விளங்கியுள்ளார். திண்ணைப்பள்ளி அமைத்து பல தமிழ் அறிஞர்களை உருவாக்கிய இவர் சைவசித்தாந்தம், புராண இதிகாசங்களில் சொற்பொழிவாற்றுவதில் வல்லவராக விளங்கியுள்ளார். திருவாவடுதுறை ஆதீனத்தில் சிலகாலம் வாழ்ந்து சைவசித்தாந்த ஆசிரியராகவும் சமயப் பிரசாரகராகவும் விளங்கியுள்ளார். சைவப்பிரகாசிகை, முப்பாநூல் சுருக்கம் என்ற இவரால் இயற்றப்பட்ட நூல்கள் இந்தியாவில் மிகுந்த பாராட்டுப் பெற்றன. திருக்குறளுக்கு சிறந்த உரை எழுதிய பெரியவர்களுள் இவரும் ஒருவராவார்.

**சுவாமிநாத பண்டிதர்**

யாழ்ப்பாணத்து நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளையின் மாணக்கராவர். சமயச் சொற்பொழிவு ஆற்றுவதில் மிகுந்த திறமை உடைய இவர் ஈழத்திலும் இந்தியாவிலும் சிறந்த பாராட்டுப் பெற்றவர். இவர் இந்தியாவில் திருச்செந்தூரில் ஒரு வித்தியாசாலையை ஸ்தாபித்து வழிநடத்தியவர். திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டப்பெற்ற இவர் பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இலக்கண சுவாமி என்ற பெயரினால் பெரிதும் அறியப்பட்ட ர். மிக இளம்பராயத்திலேயே தென்னிந்தியா சென்று தன் திறமையை வெளிப்படுத்தியவர். சந்நியாச வாழ்வு வாழ்ந்த இவர் சிவஞான மாபாடியத்தை ஆராய்ந்து முதன்முதலாக முழுநூலாக வெளியிட்டவர். சமய தத்துவங்களை மக்களுக்கு எடுத்துரைப்பதில் பெரும வல்லவராக விளங்கினார்.

**அம்பலவாண நாவலர்**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் நாவலர் மாணாக்கர் பரம்பரையைச் சேர்ந்தவர். கிறிஸ்தவ மிஷனரிக்கு எதிராக சைவசமயத்தைக் காப்பாற்றுவதில் பெரிதும் உழைத்தவர். வட்டுக்கோட்டையில் மிஷனரிப்பாடசாலைக்கு எதிராக வட்டு இந்துக்கல்லூரியை ஸ்தாபித்தவர் இவர். இந்தியாவில் சைவசமய உண்மைகளை எடுத்துரைப்பதில் பெரிதும் உழைத்தவர். சைவசித்தாந்த நூல்களைப் பதிப்பிப்பதில் முன்னின்று உழைத்தவர்.

**கனகசபைப்பிள்ளை (1855)**

இவர் யாழ்ப்பாணம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணத்திலிருந்து மிக இளம் வயதில் B.A பட்டம் பெற்றவர். ஈழத்து வரலாற்றில் முதல் B.A பட்டம் பெற்றவர் சுதுமலையைச் சேர்ந்த கரல் விஸ்வநாதபிள்ளை, அவருக்கு பின் B.A பட்டம் பெற்றவர். இவர் "பட்டதாரிப்பையன்" (Boy Graduate) என்ற சிறப்பு அடைமொழியால் அன்று அழைக்கப்பட்டவர். சேர். பொன். இராமநாதனுடன் சட்டப் பரீட்சையிலும் சித்தி பெற்றவர். இந்தியாவில் பல ஆராய்ச்சி உரைகளை ஆற்றிய இவர் உ. வே. சுவாமிநாதஜயர் அவர்களுடன் சேர்ந்து பல பணிகளை ஆற்றினார். "ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முந்திய தமிழர்" (The Tamils Eighteen hundred Years Ags) என்ற இவரது ஆங்கில நூல் இந்தியாவில் பெரிதும் பாராட்டப்பட்டது.

**திரு. தா. பொன்னம்பலபிள்ளை**

இவர் யாழ்ப்பாணத்தில் பிறந்து தென்னிந்தியாவிலுள்ள திருவனந்தபுரத்தில் உயர் உத்தியோகம் பார்த்தவர். பல வரலாற்று ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு பெருமை பெற்றவர். சிறந்த சொற்பொழிவாளர். இவர் எழுதிய "வஞ்சி மாநகர்" என்னும் வரலாற்றுநூல் இந்தியாவில் பிரபலம் பெற்றது. இவர் எழுதிய பல கட்டுரைகள் "தமிழரின் பழமை" (Tamilian Antiquary) சஞ்சிகையில் பரசுரக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய சைவசித்தாந்த மன்றத்தில் பலதடவை சமயச் சொற்பொழிவாற்றிய இவர் சமாஜ மகாநாட்டில் தலைமை தாங்கிப் பெருமை பெற்றவர். தனித்தமிழ் இயக்கத்தை ஆரம்பிப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டவர்.

**இணுவில். புராணவித்தகர் அம்பிகைபாகர்**

இந்திய கலைச்சொல் அகராதிகளில் 'அ' வரிசையில் முதலில் எடுத்துரைக்கப்படும் ஈழத்து அறிஞர் அம்பிகைபாகர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சிறந்த வித்துவத்திறமை உடையவராக விளங்கியவர். நாவலர் மரபில் சைவப்பிரகாச பாடசாலையை இணுவிலில் வழிநடத்தி சமய விரிவுரைகளை ஈழத்திலும் இந்தியாவிலும் ஆற்றிய பெரும்புலவர். திருவாவடுதுறை ஆதீனத்தோடு நெருங்கிய தொடர்புடைய இவர் ஆதீன விருதுகளைப் பெற்றவர். திருத்தணிகை புராணத்திற்கு உரை எழுதி தென்னாட்டில பெருமை பெற்றவர்.

**திரு. T. செல்லப்பாபிள்ளை**

யாழ்ப்பாணத்தில் பிறந்து திருவனந்தபுரத்தில் பிரதம நீதிபதியாக (The Chief Justice of Travancore) கடமையாற்றியவர். யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையை நிறுவியவர்களில் ஒருவராகிய இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார். ஆங்கில இந்துசாதனம் (Hindu Organ) பத்திரிகையின் முதல் ஆசிரியராக இருந்தார்.

**சிதம்பரசுவாமிகள்**

ஈழத்திலும் பிறந்து சிதம்பரத்தில் ஆன்மீகப்பணியாற்றி பலரது பாராட்டைப் பெற்றவர். சிவப்பிரகாச நூலுக்கு சிறந்த உரை எழுதி பாராட்டப் பெற்றவர். "தொல்காப்பியச் சண்முகவிருத்தி" என்ற நூலை எழுதியவர். சிறந்த பிரசாரகராக தென்னாட்டில் புகழ் பெற்றவர்.

**சேர். பொன்னம்பலம். இராமநாதன்**

ஈழத்தின் தலைசிறந்த கல்விமானாகிய இவர் இந்தியாவிலுள்ள சைவசமய நிறுவனங்களில் உரைகளாற்றி பெருமை பெற்றவர். அரசியல், சட்டம், இலக்கியம் எனப் பல துறைகளிலும் புலமை மிக்க இவர் சமஸ்தானங்களிலும் இந்தியப் பல்கலைக்கழகங்களிலும் உரையாற்றி பெருமை பெற்றவர். இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இந்துத் தத்துவங்களை எடுத்துரைத்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுவாமி விபுலானந்தர்

இவர் மட்டக்களப்பு காரைதீவில் பிறந்து தமிழிற்குப் பெருமை சேர்த்தவர். தமிழ், ஆங்கிலம், வடமொழி போன்றவற்றில் மிகு ந பாண்டித்தியம் உடையவர். ஈழத்தின் முதல் தமிழ் பேராசிரியர் என்ற சிறப்பு இவரையே சாரும். இந்திய இராமகிருஷ்ண சபையுடன் இணைந்து துறவியாக வாழ்ந்த இவர் தமிழிற்கும் சைவத்திற்கும் அளப்பரிய தொண்டு செய்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் பல்வேறு ஆன்மீக உரைகளையும், ஆராய்ச்சி உரைகளையும் இந்தியாவில் ஆற்றி ஈழத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

### கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி

உலகப் பேரறிஞராகிய கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி ஈழத்தில் பிறந்து உலகறியப் பெரும் மேதாவியாகத் திகழ்ந்தவர். ஈழத்தின் கலை கலாசாரப் பண்பாட்டையும், இந்தியாவின் கலை கலாச்சாரப் பண்பாட்டையும் உலக அரங்கிற்குக் கொண்டு சென்ற பெருமை இவரையே சாரும். பழந்தமிழ் நூல்களை பதிப்பிப்பதிலும் மொழிபெயர்ப்பு நூல்களை எழுதுவதிலும் உரைஎழுதும் முறையினை வளர்ப்பதிலும் பேச்சுக்கலையை மேம்படுத்துவதிலும் கலைப் பொக்கிஷங்களைக் காப்பாற்றுவதிலும இவர் ஆற்றிய பணி மகத்தானது. இவரது நடராஜ நடனம் (The Dance of Siva) என்ற நூல் உலக அரங்கில் இந்துக்களுக்குப் பெருமை சேர்த்தது எனலாம். சிறந்த வரலாற்றுச் சொற்பொழிவுகளை இந்தியாவில் ஆற்றி ஈழத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

### ஸ்ரீ சங்கரசுப்பையர்

ஈழத்து அறிஞராகிய இவர் சமய, இதிகாச, புராண, கதாப்பிரசங்கங்களை ஆற்றுவதில் மிகவும் வல்லவர். இந்தியாவில் சில திருத்தலங்களின் விழாக்களில் கந்தபுராண விரிவுரைகளை ஆற்றி மிகவும் பாராட்டப் பெற்றவர்.

### வழக்கறிஞர் நாகலிங்கம்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இவர் சைவபரிபாலன சபையினூடாக சமயப்பணி ஆற்றியவர். நாவன்மை மிக்க இவர் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றும் திறமை படைத்தவர். சைவபரிபாலன சபையின் சார்பில் இந்தியாவில் சில விழாக்களில் உரையாற்றிப் பலரது பாராட்டைப் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

**(மணி பாகவதர்)**

ஈழத்தில் சைவசமய ஆதீனத்தை முதன்முதலில் தோற்றுவித்த பெருமைக்குரியவர் இவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம், இசை, நடனம், ஓவியம் போன்ற துறைகளில் மிகுந்த பாண்டித்தியம் உடையவர். புராண இதிகாசங்களை கதாப்பிரசங்கமாக எடுத்துரைப்பதில் மிகவும் புகழ் பெற்றவர். ஈழத்திலும் இந்தியாவிலும் சைவத் திருக்கோவில்களில் தொடர்விரிவுரைகள் ஆற்றி பெரும் பாராட்டைப் பெற்றவர். மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் இவரது ஆற்றலைப் பாராட்டியதோடு ஈழத்தில் ஆதீனம் ஆரம்பிப்பதற்கு பேராதரவு வழங்கியது. திருச்செந்தூர் முருகன் சந்நிதானத்தில் கந்தசஷ்டி உற்சவகாலத்தில் இவர் ஆற்றும் உரையைக் கேட்பதற்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலய வீதியில் காத்திருப்பர். இவர் மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு பலதடவை சென்று உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

### அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி

இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய ஒப்பற்ற சமய இலக்கியப் பேச்சாளர் இவர். 1950 முதல் ஈழத்திலும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து போன்ற நாடுகளிலும தன் சொல்வன்மையால் பெரும்புகழ் ஈட்டியவர். இந்தியாவில் நடைபெற்ற சைவசித்தாந்த சமாஜ மகாநாடுகளில் சிறப்புரை ஆற்றியதோடு ஆரணியத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த மகளீர் மகாநாட்டிற்கு ஈழத்திலிருந்து சென்று தலைமை தாங்கிப் பெரும் புகழ்பெற்றவர். திருமுறைகள், புராண இதிகாசங்கள், சித்தாந்த தத்துவங்கள் பற்றிய தெளிந்த ஞான அறிவுடைய இவர் இந்தியாவிலுள்ள ஆதீனங்களினாலும் கௌரவிக்கப்பட்டவர். இந்தியசைவசித்தாந்த சமாஸத்திற்கும் இவருக்கும் இடையில் இருந்த தொடர்பு காரணமாக சமாஜத்தின் பவளவிழாவை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடாத்திப் பெருமை பெற்றவர்.

### திரு. ச. அம்பிகைபாகர்

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபராக விளங்கிய இவர் சைவத்தமிழ் அறிஞராக மதிக்கப்பட்டவர். இவர் சைவபரிபாலன சபையின் சார்பாக இந்தியாவில் சைவசித்தாந்தம் பற்றி உரையாற்றிப் பாராட்டுப் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆத்மஜோதி. நா. முத்தையா**

யாழ்ப்பாணம் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மலையகத்தில் ஆசிரியப் பணியாற்றி ஆத்மஜோதி என்ற ஆன்மீக மலரை பதிப்பித்து வெளியிட்டவர். சமயச் சொற்பொழிவுகள் ஆற்றும் திறன் கொண்ட இவர் இந்தியா சென்று சில ஆன்மீக நிறுவனங்களில் உரையாற்றிப் பாராட்டுப் பெற்றவர்.

**கம்பவாரிதி. இ. ஜெயராஜ்**

80களின பின் ஈழத்திலும் இந்தியாவிலும் நன்கு அறியப்பட்ட ஆன்மீக இலக்கிய சொற்பொழிவாளராக விளங்குகின்றார். யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மிக இளம் வயதில் சொற்பொழிவுத் துறையினூடாகப் பிரபல்யம் பெற்றுள்ளார். அகில இலங்கைக் கம்பன் கழகம் என்ற இலக்கிய ஸ்தாபனத்தை ஸ்தாபித்து நல்லூரிலும் கொழும்பிலும கம்பன் கோட்டங்களை நிறுவி இளைய தலைமுறையிடையே பேச்சாற்றலை வளர்த்து வருபவர் இவர். இந்தியாவில் ஆண்டுதோறும் நடைபெறும் சேக்கிழார் விழாவில் கலந்துகொண்டு திருமுறைகள் பற்றியும் புராண இதிகாசங்கள் பற்றியும் சிறப்புரைகள் ஆற்றி வருபவர். இந்தியாவில் நடைபெறுகின்ற கம்பன் விழாக்களில் "இலங்கை ஜெயராஜ்" என்ற சிறப்புப் பெயரில் இவர் ஆற்றிய உரைகள் இந்திய ஊடகங்களில் முதன்மை கொடுத்துச் சிறப்பிக்கப்படுகின்றன. லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, மலேஷியா, சுவிஸ்லாந்து, சீசெல்த் போன்ற நாடுகளுக்குச் சென்று ஆன்மீக இலக்கிய சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

சமீபகாலத்தில் ஈழத்திலிருந்து இந்தியா சென்று ஆன்மீக இலக்கிய சொற்பொழிவாற்றி வருபவர்களில் தமிழருவி. த. சிவகுமாரன், செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன், கலாநிதி, ந. சுப்ரமணிய ஐயர், திரு. வ. ஸ்ரீபிரசாந்தன், (கம்பன் கழகம்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்தியாவில் நடைபெற்ற சேக்கிழார் விழாக்களில் திரு.வ. ஸ்ரீபிரசாந்தன், (கம்பன்கழகம்) ஆண்டுதோறும் பங்குபற்றிப் பாராட்டுப் பெற்று வருகின்றார். தமிழருவி த. சிவகுமாரன் சேக்கிழார் விழாக்களில் பங்குபற்றி ஆற்றிய உரைகள் பலரையும் கவர்ந்தது. செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சேலம் மார்கழிப் பெருவிழாவில் சிறப்பு அதிதியாக அழைக்கப்பட்டு சமயச்சொற்பொழிவாற்றியுள்ளார். திருப்பூர் ஆன்மீக விழாவிலும் பேரூர் ஆதீன சுவாமிகளின் விழாவிலும் செஞ்சொற்செல்வரின் சிறப்புரைகள் இடம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை :-**

மேற்குறித்த கட்டுரையில் சமய ரீதியான அரங்குகளை சிறப்பித்த ஈழத்து அறிஞர்கள் பற்றிய விபரங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இலக்கிய ரீதியாக ஈழத்திலிருந்து பல பேராசிரியர்கள் காலத்திற்குக் காலம் இந்தியா சென்று மாநாடுகளில் ஆய்வரங்குகளில் தம் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளனர். அத்தகைய பெரியார்கள் பற்றி பிறிதொரு கட்டுரையில் ஆராய்வதே பொருத்தமான தெனக்கருதி அவர்கள் பற்றி இக்கட்டுரையில் குறிப்பிடவில்லை. சைவசமய உரை அரங்குகளில் இந்தியாவில் புகழை நிலைநாட்டிய அறிஞர்கள் சிலரது விபரங்களை இக்கட்டுரையில் விபரித்துள்ளேன். இக்கட்டுரையில் யாராவது பெரியவர்களை யான் தவற விட்டிருப்பின் அவர்கள் பற்றிய விபரங்களை சிறியேனுக்குத் தெரியப்படுத்துவார்களாயின் திருத்திய பூரணமான பிறிதொரு கட்டுரையை வெளியிடலாமென கருதுகிறேன். எனவே இக்கட்டுரை பூரணமானதெனக் குறிப்பிடவில்லை.

**உசாத்துணை நூல்கள் :-**


1. இலங்கைத் தமிழ் விழா மலர். 1951
2. இந்து சாதனம் பத்திரிகை சைவபரிபாலனசபை வெளியீடு.
3. சைவசித்தாந்த சமாஜ வெளியீட்டு மலர்.
4. சிவத்தமிழ் செல்வி மணிவிழா வெளியீட்டு மலர்.
5. மஹாவித்துவான் கணேசையர் நினைவுமலர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவான் வை. சுபாபதி, பி. ஓ. எல்., எம். ஏ,
தத்துவத்துறை விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

# வீர சைவம்

**முன்னுரை:**

சிவன் எனும் பெயரைத் தனக்கேயுடைய செம்மேனி எம்மானை முழுமுதற் பொருளாகக் கொண்டு அவனை வழிபட்டு உய்வதற்கேற்ற வழி வகைகளை வரையறுத்துக் கூறும் நெறியைச் சைவம் என்பது மரபு. சிவனே முழுமுதற் கடவுள் என்பதை ஒப்புக் கொண்டாலும் அவனை அறியும் நெறி, அணையும்நெறி, அணைந்த காலத்து நிலை ஆகியவற்றில் எழுந்த வேறுபாடுகள் காரணமாகச் சைவ சமயத்திலும் பற்பல பிரிவுகள் உளவாயின. அவ்வாறுள்ள பிரிவுகளுள் ஒன்றே வீர சைவம்.

**வரலாறு:**

சதாசிவப் பரசிவத்தின் சத்யோஜாத முதலான ஐம்முகங்களிலிருந்தும் வெளிப்பட்ட தேவணாத்ரியர், மருளாராத்ரியர், பண்டிதராத்தியர், ஏகோராத்திரியர், விஸ்வராத்ரியர் என்ற ஐவகை ஆசாரியர்களால் கிருதயுகத்தில் தோற்றுவிக்கப் பெற்றதே வீர சைவம் என்பது சுப்ரபோதாகமம் முதலிய நூல்களால் தெரிய வருகிறது. இவர்கள் யுகந்தோறும் அவதாரம் செய்து வீரசைவ சமய உண்மைகளை நிலைநாட்டியும் பரப்பியும் வந்தார்கள் எனவும், இவர்கள் முறையே மைசூர் மாநிலத்துக் கடூர் மாவட்டத்தில் உள்ள ரம்பாபுரி, உஜ்ஜயினி, ஸ்ரீசைலம், பதரி கேதாரம், காசி என்ற ஐந்து இடங்களிலும் வீர சைவப் பீடங்கள் அமைத்தார்கள் எனவும் வீர சைவ மரபு வழிச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் மேலே குறிப்பிடப் பெற்ற ஊர்களில் இவ்வைந்து ஆசாரியர்களின் பெயரால் அமைந்த திருமடங்கள் இன்றும் சிறப்புடன் விளங்கி வருகின்றன. இவ்வைவரின் வழி முறையினர் முறையே பிருங்கி, வீர, விருஷப, ஸ்கந்த, ஹந்தி கோத்திரத்தினர் எனக் கூறி. அவ்வவற்றிற் கேற்ற நெறிமுறைகளை மேற்கொண்டு ஒழுகி வருகின்றார்கள்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வரலாற்றுச் சிறப்புடைய அருளாளராகவும், மைசூர் மாநிலத்தை அப்போது ஆட்சி புரிந்த விச்சலமன்னனின் முதல் மந்திரியாகவும் வாழ்ந்த பசவேசர் என்பார் "அல்லமாப் பிரபு தேவர்" என்பவரை ஞான குருவாகக் கொண்டு சமய உண்மைகளை நிலைநாட்டியும் பரப்பியும் தொண்டு செய்தார். தக்க வரலாற்றுச் சான்றுகள் இல்லாமையால் பஞ்சாசாரியர்களே வீர சைவ சமயத்தைத் தோற்றுவித்தவராகக் கொண்டனர். இவ்விருவகைக் கருத்துக்களால் வீர சைவத்தில் பஞ்சாசாரியம், பசவாசாரம் என இரு பிரிவுகள் தோன்றலாயின.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அல்லமாப் பிரபுதேவர், பசவேசர் ஆகியோர் வரலாறுகளைக் கூறும் பிரபுலிங்கலீலை, வசவபுராணம் ஆகிய தமிழ் நூல்களை இன்றும் காணலாம். நூல்களேயன்றிக் கல்வெட்டுச் சான்றுகளாலும், பசவேசர் அல்மாப் பிரபு தேவரின் துணை கொண்டு, தத்துவ வல்லுநர்களைப் பல நாடுகளிலிருந்தும் அழைப்பித்து வீர சைவ தத்துவ உண்மைகளை வரையறை செய்தார் என்பதை உறுதியாகக் கொள்ளலாம். பசவேசர் காலத்திற்கு முன்னுள்ள வீர சைவ சமய உண்மைகளைப் பசவேசர் வரையறை செய்து நிலைநாட்டினார் என்று கொள்ளுவது வரலாற்றுக்கு ஒத்ததே. பிரபுலிங்கலீலையைத் தமிழில் அருளிய கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் வீர சைவ சமய உண்மைகளை விளக்கும் சித்தாந்தசிகாமணி என்ற நூலைத் தமிழில் மொழி பெயர்ப்பு நூலாக அமைத்துத் தந்துள்ளார்கள்.

மைசூர் மாநிலத்தில் தோன்றி, பசவர் காலத்திற்குப் பின்பே வீரசைவம் தெலுங்கு, தமிழ் மாநிலங்களில் பரவியது என்று கூறுவோர் உள்ளனர். பசவேசர் வீர சைவத் தத்துவ உறுதிப்பாடு செய்வதற்குப் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் தத்துவ வல்லுநர்களைத் தருவித்து மாநாடு நடத்தினார் என்பதிலிருந்தே பசவர் காலத்திற்கு முன்னமேயே பல்வேறு மாநிலங்களிலும் வீர சைவ சமயம் வாழ்ந்திருந்தது என்பது உண்மை. கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலேயே கும்பகோணத்தில் இன்றுள்ள சாரங்கதேவர் திருமடம் "பெரிய மடம்" என்று குறிப்பிடும் அளவுக்குச் சீரும் சிறப்பும் பெற்ற சமயமாக இருந்து வந்துள்ளது. கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒட்டக் கூத்தர் தாம் பாடிய தக்கயாகப் பரணியில்,

"குடந்தையும் பதிதனில் கோதிலாப் பெரிய
மடந்தனில் வாழ்வீர மாகேஸ்வரி வாழியே!"

என்று கூறுவது இவ்வுண்மையை விளக்கும். முருகனுக்கே திருப்புகழ் பாடும் அருணகிரிநாதர் இப் பெரிய மடத்தைப் பற்றி ஒரு திருப்புகழ் பாடியிருக்கின்றார். அங்கே உள்ள ஞானாசாரியரிடம் அருணகிரிநாதர் உபதேசம் பெற்ற குறிப்புக் காணப்படுகிறது.

திருமூலர் காலத்திலேயே தமிழகத்தில் வீர சைவம் விளக்கமுற்றிருந்தது என்பதைக் காலஞ் சென்ற டாக்டர் மா. இராசமாணிக்கனார் தெளிவுறுத்தியுள்ளார். திருமூலர் பிரிவுபடுத்திக் கூறும் நால்வகைச் சைவத்தில் கடுஞ்சுத்த சைவம் வீர சைவமாக இருந்திருக்க வேண்டும். கி. பி 12 ஆம் நூற்றாண்டில் பெரிய மடமாக விளங்கிய கும்பகோணம் சாரங்கதேவர் திருமடத்தின கிளை மடங்களாகப் பல வீர சைவ மடங்கள் தமிழகத்தில் விளங்கியிருந்தன. வீர சைவத்திற்குத் தாயகம் தமிழகமே என்பதைத் தொல்காப்பியம் போன்ற நூல்களைக் கொண்டு நிறுவமுடியும். ஆயினும் அது பல்கி விரியும். கும்பகோணம் பெரிய மடமேயன்றி, மயிலம் சிவஞான பாலையசுவாமிகள் திருமடம், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் திருமடம், சிதம்பரம் அம்பலத்தடிகள் திருமடம், மௌனசுவாமிகள் திருமடம், கோவை பேரூர், சாந்தலிங்க சுவாமிகள் திருமடம், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் திருமடம், விருத்தாசலம் குமாரதேவர் திருமடம் முதலியவை சிறப்பு மிக்க வீரசைவத் திருமடங்களாக இன்றும் விளங்கி வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரசைவம் - பெயர்க்காரணம் :**

புலால் உண்ணாதவர்கள் சைவர்கள் என்ற கருத்தே பரவி வரும் இக்காலத்தில் சமரசம் என்ற போர்வையில் சமய உண்மைகள் பரவவேண்டும் என எண்ணும் இக்காலத்தில் வீர சைவம் என்ற சொல்லே கேட்பவர்களுக்கு ஓர் வெறுப்பைத் தருகிறது. தத்துவ அமைப்புக்கிணங்க, வீர சைவத்துக்குச் சக்தி விசிஷ்டாத்வைதம், விரேஷாத்வைதம் போன்ற பல பெயர்கள் இருக்குமேனும் வீரம் என்ற அடைமொழியைச் சைவம் என்ற சொல்லோடு இணைத்து வழங்குவதே பெரும்பான்மை. இலிங்கத்தைக் கழுத்தில் தரித்திருப்பதால் வீர சைவர்களுக்கு "இலிங்காயுதர்கள்" என்ற பெயரும் உண்டு. தமிழகத்திற் சில இடங்களிற் பண்டாரங்கள் என்றும், மலையாளப் பகுதிகளில் தேவர் என்றும் வீர சைவர்கள் அழைக்கப்படுகின்றார்கள். ஐயர் என்ற சொல்லைத் தம்பெயரோடு இணைத்துக் கொள்வது வீர சைவர்களுக்கு உண்டு. சைவத்தோடு வீரம் இணைவானேன்?

1. உலகொடுபட்ட வீரம், உலகிறந்த வீரம் என வீரம் இருவகை. போர் முதலியவற்றிற் காட்டும் வீரம் உலகொடுபட்ட வீரம். பரம்பொருள் ஒன்று உண்டு என்று கொண்டு அப்பரம்பொருளைத் தவிர வேறு எதற்கும் ஆளாகாத வீரம் உலகிறந்தவீரம். இது ஒருவகை கற்புநெறி. கணவனைத் தவிர மற்றெவரையும் ஏறெடுத்துப் பாராத மனத்தாண்மையே வீரம். உலகனைத்தும் தோன்றவதற்கும் தோன்றியவாறே ஒடுங்குவதற்கும் மூலமாக உள்ள இலிங்கமெனும் பரம்பொருளைத் தவிர அவ்விலிங்கத்தின் பேதங்களாகவரும் சோமாஸ்கந்தர், அர்த்தநாரீஸ்வரர் போன்ற மூர்த்தங்களைக் கூட வணங்காத கற்புத்தன்மை. குரு, இலிங்க, சங்கமத்தைத் தவிர வேறு யாரையும் ஏறெடுத்துப்பார்க்காத வீரம். முருக வணக்கம் செய்யும் வீர சைவர்கள் முருகனைச் சங்கமர்களில் ஒருவராகத் கொண்டே வழிபடுவர். இத்தகைய வீரத்தை மேற் கொண்டதால் வீர சைவம் எனப் பெற்றது.

2. இறைவழிபாட்டில் வணிக முறையை எதிர்த்த வீரம் உடையவராதலின் வீரசைவர் எனப்பட்டனர் என்பது இரண்டாவது கருத்து. பயன் விரும்பிச் செய்கிற எத்தகைய வழிபாட்டையும் வீரசைவர் ஏற்பதில்லை. கூடும் அன்பிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலினராய் விளங்கும் அவர் உடலில் வந்துற்ற நோய் நீக்கத்துக்காகவோ, வறுமை முதலியன போக வேண்டும் என்பதற்காகவோ திருக்குளத்தில் மூழ்குதல், சிவனுக்கு அபிஷேகம் செய்தல் போன்ற வழிபாடுகளை அவர்கள் செய்வதில்லை. பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன், நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும்தா என்பது போன்ற வாக்கியத்தை அறவே வெறுக்கும் வீரநெறியமைந்தவர்கள். இறைவழிபாடு என்பது செய்ந்நன்றிக் கடன் என்று கொள்ளுபவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மூன்றாவதாக வேறு ஒரு காரணம் காட்டப் பெறுகிறது. சதாசிவத்தில் கிழக்கு நோக்கிய ஈசானமுகம் தம்மை வழிபடுபவர்களுக்கு இவ்வுலகப் பயன்களைத் தரவல்லது. வீரசைவர்கள் ஈசானமுக வழிபாட்டை மறுத்தார்கள். இலிங்கத்தோடு ஐக்கியமாகும். ஞானம் ஒன்றையே பொருளாகக் கொண்டு, மேற்கு நோக்கிய சத்யோஜாதநாதமுக வழிபாட்டையே மேற்கொள்வர். இலிங்கத்தோடு ஐக்யமாகும் ஞானம் ஒன்றைத் தவிர வேறு எல்லாவற்றையும் வெறுத்த வீரராதலின் வீரசைவர் எனப்பட்டனர். திருவானைக்கா. மயிலைக்காபாலி, புள்ளிருக்கு வேளூர் போன்ற திருத்தலங்களில் அமைந்த இலிங்கங்கள் வீரசைவர்கள் வழிபாட்டுக்குரியவை என்பது பொதுக் கருத்து.

மேலே குறிப்பிடப் பெற்ற மூன்றனுள் சமயநெறியில் வணிகமுறையை வெறுத்து ஒதுக்கிய வழிபாட்டு நெறியானது இறந்தவீரநெறியே. இறைவனுக்குத் தேங்காய் உடைத்து நிவேதனம் செய்தே எல்லாவற்றையும் பெற்றுவிடலாம் என்ற வணிக முறையானது சமயவளர்ச்சிக்குத் தடையாகும் என நினைத்து எதிர்த்தவர்கள் வீரசைவர்கள் என்பதை எண்ணும்போது இறைவழிபாட்டில் அவர்களுக்கு இருந்த வீரவுணர்ச்சியை யாரும் போற்றாமலிருக்க முடியாது. சோமவார விரதம் போன்ற விரதங்களும் பயன் கருதியவைகளே யாதலின் அவைகளையும் வீரசைவர்கள் ஏற்பது இல்லை.

**வீரசைவத் தத்துவ அமைப்பு:**

வீரசைவம் ஆகமச் சைவமே. கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்கண்ட தேவநாயனார் சைவசித்தாந்த தத்துவங்களை வரையறை செய்தருளியமை போன்றே வீரசைவ தத்துவ வரையறைகளும் கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் பசவேசரால் மைசூர் நாட்டில் செய்யப் பெற்றது. தமிழகத்து வீரசைவ நெறிக்கும் மைசூர் வீரசைவ நெறிக்கும் சிற்சில வேறு பாடுகள் உள்ள போதிலும் சில அடிப்படை உண்மைகளை மட்டும் இங்கே காணலாம்.

அறுவகைநெறி என வீரசைவம் தன்தத்துவத்தை வரையறை செய்கிறது. ஷட்ஸ்தலம், ஷடுத்தலம் என்ற வடமொழிச் சொற்கள் பயன்படுத்தப் பெறுகின்றன.

நெருப்பிற் சூடுபோலப் பிரிப்பற நின்ற சக்தியோடு கூடிய சிவமே பரம்பொருள். இப்பரம்பொருளை நிரஞ்சன சூனிய நிஷ்களலிங்கம் என வரையறை செய்கிறது வீரசைவம். எல்லாப் பிரபஞ்சங்களும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் இடமாக இருப்பதால் அதனைப் பரசிவத்தலம் என்று கூறும். தலம் - இடம். சொல்லும் இடம் அன்று சொல்லப்புகும் இடம் என்ற திருவுந்தியார்த் தொடரையும் இங்கே இணைத்துக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாய் நின்ற இப்பரசிவத்தலம் தன்னொடு பிரிப்பற நின்ற சக்தியின் ஆற்றலால் இரண்டாகப் பிரிவு கொள்கிறது. இரண்டாகப் பிரிந்து நின்ற பரசிவத்தலத்தின் ஒரு கூறு அங்கம் என்றும்பெயர் பெறுகிறது. இலிங்கம் இறை; அங்கமே உயிர். இலிங்கமாம் பிரிப்பற நின்ற சக்தி என்பதே பெயர். அங்கமாம் பிரிப்பில் பிரிப்பற நின்ற சக்திக்குப் பக்தி என்பது பெயர். இலிங்க சக்தி உலகத்தோற்ற ஒழுக்க முறைகளுக்குக் காரணமாக இருந்து இலிங்கத்தை அங்கத்தோடு (இறையை உயிரோடு) இணைக்கப் பாடுபடுகிறது. அங்கத்தில் அமைந்த பக்தி சக்தியும் அங்கத்தை இலிங்கத்தோடு இணைக்கப் பாடுபடுகிறது. இலிங்க சக்தி இறங்குமுக சக்தியாகவும், அங்கசக்தியாக பக்தி ஆறுமுகசக்தியாகவும் தொழிற்படுகின்றன.

இலிங்கமும் இலிங்க சக்தியும் ஆறுவகையாகப் பிரிந்து நிற்கின்றன. ஆறுவகையாகப் பிரிந்து நின்ற இலிங்கத்தோடு அங்கமும் ஆறுவகைப் படிநெறிகளில் உயர்ந்து ஐக்கியம் கொள்ளுகின்றது. பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமோ? என்பது தான் ஐக்கிய நிலை. அதற்கும் மேல் உள்ள அனுபவநிலையும் ஒன்றுண்டு. இறைவன் வேறு உயிர்கள் வேறு என்னும் சைவசித்தாந்தத்தோடு மாறுபடும். வீரசைவம் பிரமமும் ஆன்மாவும் ஒன்றெனக்கொள்ளும். ஏகான்ம வாதத்தோடும் மாறுபடுகிறது.

பேதம், பேதாபேதம் என்ற மூவகை நிலைகளில் சைவசித்தாந்தத்தைப் போன்றே பேதாபேதத்தை மேற் கொள்ளும வீரசைவம் அப்பேதாபேத அனுபவத்தை வேறு வகையாக விளக்கம் செய்கிறது. அங்கமும் இலிங்கமும் இணைந்து நின்ற நிலை அங்க இலிங்க ஐக்யம் அதற்கு மேல் நிலையில் உயிர்கள் பெறும் அனுபவநிலையை "இலிங்காங்க சாமரஸ்யம்" என்று வீரசைவம் விளங்கக் கூறுகிறது.

உயிர்கள் பல என்பதை வீரசைவம் ஒப்புகிறது. சார்ந்துள்ள மலத்தின் அடிப்படையில் விஞ்ஞானகலர், பிரளயகலர், சகலர் என உயிர்களை மூவகைப் படுத்துகிறது. சைவசித்தாந்தம் ஆன்மாக்களின் வளர்ச்சிக்கேற்ப உயிர்கள் உயிர், ஆன்மா, அங்கம் என்ற மூவகையாக நிற்கின்றன என்று வீரசைவம் கூறுகிறது. இம்மூவகை நிலைகளுக்காக வீரசைவம் மூவகையான உலகப் படைப்பு முறையைத்தருக்க முறைப்படி அமைத்தக் காட்டுகிறது.

**அடையும் நெறி சாதனம்**

வீரசைவத் தத்துவ அமைப்பை உணர்வதால் வரும் ஞானம் ஷட்ஸ்தலஞானம் எனப்பெறும். ஷட்ஸ்தலத்தத்துவ அடிப்படையில் சாதனம் அடையும் நெறி வகுக்கப் பெறுகிறது. அடையும் நெறி இருவகைப்படும். சமயக்காப்பு நெறி, சமுதாயக் காப்பு நெறி என இவ்விரு நெறிகளையுங்கொள்ளலாம். அன்றி தனிமனிதன் தன்னைக் காக்கும் அகநெறி என்றும் அவனே சமுதாயத்தோடு இணைத்துத் தன்னைக் காத்துக் கொள்ளும் புறநெறி என்றும் அவ்விருவகை நெறிகளையும் அமைத்துக்கொள்ளலாம் அவ்விருவகை நெறிகளையும் முறையே அட்டாவரணம், பஞ்சாசாரம் என வீரசைவம் கூறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. அட்டாவரணம்.

வீரசைவம் உயிர்களுக்குரிய அகக் காவலாக்க கூறுகிறது. அது குரு, இலிங்கம், சங்கமம், வீபூதி, அங்கமணி, மந்திரம், பாதோதகம், பிரசாதம் என்பன. இவ்வெட்டுக் கோட்டைகளையும் பழுதுறாமற் காத்து, அவற்றோடு இணைந்து வாழ்ந்தால் தான் ஷட்ஸ்தல ஞானம் பெறும் உரிமையும் தகுதியும் அவனுக்கு உண்டாகும். இங்கே கூறுப்படும் எட்டும் சைவசமயத்தின் ஏனைப் பிரிவுகளுக்கும் உடன்பாடேயாயினும் வீரசைவம் சிற்சில மாறுபாடுகளோடு விளக்கங் கூறுகிறது.

**1. குரு:** அறியாமையை அழிக்கும் ஆற்றல் உள்ளவனே குரு. இறைவனே குருவாக வந்து உயிர்களை ஈடேற்றுவான் என்பது வீரசைவத்துக்கும் சைவசித்தாந்தத்துக்கும் ஒத்த கொள்கையே. தீட்சாகுரு, இட்சாகுரு, ஞானகுரு என மூன்றாகப் பிரிந்து நின்று உயிர்களை ஞானநெறியில் ஷட்ஸ்தலப் பிரமஞான நெறியில் ஈடுபடுத்தும் குருவை "ஞானத்தாய்" என்று வீரசைவம் இயம்புகிறது. தீட்சை முறையிலும் வீரசைவம் ஏனைய சைவசமயப் பிரிவுகளோடு வேறுபடுகின்றது.

**2. இலிங்கம்:** இலிங்கவழிபாடு வீரசைவம் கொண்ட சிறப்பு நெறி. மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகரப் புதைபொருளாராய்ச்சியால் வெளிப்படும் மிக முற்பட்டகால நாகரிகம் முதலாக, புராணம் மற்றும் கோயிலமைப்பு ஈறாக உள்ள தொன்மைச் சமய வழிபாட்டு முறையை நோக்குவோமாயின் இலிங்க வழிபாடே சிறந்திருந்தமை தெளியலாம். இவ்வாராய்ச்சியை விரிவஞ்சி விடுக்க வேண்டியதாகிறது. உலகம் என்பது நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பெரும் பருப்பொருள்களின் கூட்டமைப்பே. இவற்றோடு உயிரும் இணைந்தால் தான் உலகம். இவ்வறுவகைப் பொருளிலும் ஒளிவடிவாய் எழுந்தருளியிருக்கும் இறையம்சமே இலிங்கம். தண்ணீரில் ஒளிவடிவாய் எழுந்தருளியிருக்கும இறையம்சத்தை உணர்த்துவதே திருவானைக்கா. இங்கே உள்ள இலிங்கத்தை அப்புலிங்கம் என்பர். இவ்வாறே மக்களுடம்பிலும் ஆறு இடங்களில் இலிங்கம் ஒளிவடிவாய் இறையம்சம் அமைந்துள்ளது. உயிரில் அதன் இயல்பாகிய சீவகலையும், இறையம்சம் எனப்பெறும் சிவகலையும் இணைந்துள்ளன. குருவானவர் தன் சீடனுடைய உயிரில் விளங்கும் சீவகலைக்கும் சிவகலைக்கும் உள்ள இணைப்பை எடுத்துக் காட்டி, அவற்றைத் தம் சக்தியால் வெளிப்பட்டு வருமாறு செய்து, அச்சீவசிவகலைகளை, அச்சீடனின் உடம்பில் ஆறு இடங்களில் விளங்கும் இலிங்கங்களோடு ஒளிவடிவாய் இறையம்சங்களோடு முறையாகப் பொருந்தச் செய்து, பின் அச் சீவசிவகலைகளை இஷ்டலிங்கமாக அமைத்து அச்சீடன் கரங்களில் கொடுக்கிறார். குருவால் அளிக்கப்பெற்று, நாளும் பூசனைக்குரியதாய், மார்பில் தரித்துக் கொள்ளப் பெறுவதாய் அமைந்த அந்த இலிங்கம் வேறொன்று மன்று, ஏற்றுக்கொண்ட சீடனுடைய உயிர்கலையும் அதனோடு இணைந்து நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகலையுமே. இஷ்டி - பார்க்கப்பெறுவது. உயிரையுங் காணாது, உயிரின் உள்ளே அமைந்திருக்கும் சீவகலைகளின் இணைப்பையும் அறியாது விளங்கும் சீடனுக்கு அவனுடைய உயிரிற் கலந்துள்ள சீவ சிவகலைகளையே எடுத்துக் கொண்டு வந்து கையிலளித்து அவனால் பார்க்கப்படுவதாகக் குருவானவர் அமைத்துக்கொடுக்க, அவனால் பார்க்கப்பெறும் இலிங்கமாதலின் இஷ்டலிங்கம் எனப் பெயர் பெற்றது. அதுவே இஷ்டலிங்கம்; இனி, இஷ்டலிங்கம் என்பது சீடன் விரும்பி ஏற்றுக் கொள்ளும் அறிவு வரப்பெறாத காலத்திலேயே இறையானது உயிர்களின் மேற் கருணை கொண்டு வந்து அமர்ந்த இலிங்கம் என்ற பொருளையும் தரும். தானே இஷ்டப்பட்டு விரும்பி வந்து கையகத்தமர்ந்த இலிங்கம் இஷ்டலிங்கம்.

*"தானே உவந்து என் கரதலத்து மேவா அமர்ந்த மாமணி"*

என விளக்கிக்காட்டினார்கள் சிவப்பிரகாசசுவாமிகள். இங்கே தான் வீரசைவம் சைவசித்தாந்தம் முதலியவற்றோடு பெரிதும் மாறுபடுகின்றது. பரம்பொருளின் அருவுருவ வழிபாட்டுக்கு உரிய மூர்த்தமான இலிங்கத்தைக் கொள்வது சைவசித்தாந்தம். வீரசைவம் உருவ வழிபாட்டை ஒத்துக் கொள்வதில்லை. வீரசைவன் தன் உயிரில் அமைந்துள்ள சிவசீவகலைகளையே பார்க்கிறான். கோயில்களில் உள்ள மூர்த்திகளுக்கு அஷ்டபந்தன மருந்து அமைக்கப்பெறுவது போல இஷ்டலிங்கத்திற்கும் உண்ட. பக்தி என்னும் அஞ்சனமே - மருந்தே அஷ்டபந்தனம். பக்தியால் சிவசீவகலைகளின் இணைப்பு அமைந்திக்கிறது என்பதை உணர்த்துவதே இஷ்டலிங்கம். நாள் தோறும் வீரசைவன் இஷ்டலிங்கத்தின் சத்யோஜாத முகத்தில், அகங்காரம் ஆசை முதலியவைகளை அபிஷேகப் பொருளாக ஆக்கி அபிஷேகம் செய்து,பக்தி என்னும் கண்கொண்டு இஷ்டலிங்கத்தையே பார்த்துப் பாவனை செய்வான். கர்மாக்களைக் குறைவறச் செய்தால் வீடுபேறு சித்திக்கும் என்று கூறும் சமயங்களும் உண்டு; ஞானமே மோஷ சாதனம் எனக் கூறும் சமயங்களும் உண்டு. ஞானமும் மோஷகர்மமும் ஆகிய இரண்டுமே தேவை எனக் கொள்வனவும் உள. ஆனால் ஞானம், கர்மம்,பாவனை என்ற மூன்றன் இணைப்பினாலேயே வீடுபேறு எய்தப் பெறும் என்று வலியுறுத்துவது வீரசைவம்.

கர்ப்ப லிங்கதாரணம், அங்கலிங்கதாரணம் என இலிங்கந்தரிக்கும் முறை இரண்டு. குழந்தையானது தாயின் வயிற்றில் இருக்கும் போதே அக்குழந்தைக்கெனத் தாயின் கழுத்தில் ஒரு இலிங்கத்தைத் தரிப்பது கர்ப்பலிங்கதாரணம். குழந்தை பிறந்தவுடனேயே தாயின் கழுத்தில் உள்ள இலிங்கத்தை எடுத்துத் தரிசித்துவிடுவார்கள். குழந்தை வளர்ந்து சில ஆண்டுகள் கழிந்த பின் தீட்சை முறைப்படி இலிங்கதாரணம் செய்வது அங்கலிங்கதாரணம். இஷ்டலிங்கம்தவறுதல் கூடாது. பின்னப்பட்ட காலத்து வேறு இலிங்கத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலும் கூடாது. ஏனெனில் சீடனுடைய உயிரே அதுவாக இருத்தலின். சைவசித்தாந்தத்தில் சமய தீட்சை முதலிய தீட்சை முறைகளும் சிவபூசையும் பெண்களுக்கு உரியனவாகக் கூறப்பெறவில்லை. வீரசைவத்தில் பெண்களுக்கும் இலிங்கதாரணம் உண்டு. வீரசைவம் தத்துவமுறையிலும் சமயநெறியிலும் ஆடவர்களுக்கு வழங்கிய அத்துணை உரிமைகளையும் பெண்மைக்கும் வழங்கியிருக்கிறது,

**3. சங்கமம் :** சங்கமம் - கலப்பு. உயிரில் சிவம் வந்து கலந்த தன்மையை உலகினர்க்கு உணர்த்துபவர்களே சங்கமர்கள். இவர்களைச் சீவன் முத்தர்கள் எனலாம். பல்வகை அற்புதங்களைச் செய்து காட்டி உயிரில் இறைவன் கலந்து விளங்குவதைக் காட்சியளவையால் விளக்கிக் கொண்டிருப்பவர்களே இவர்கள்.

வீரசைவ முறைப்படி ஒரு சீடன் குரு, இலிங்க, சங்கமம் ஆகிய மூன்றையும் ஒரு பரசிவத் தலத்தின் மூன்று நிலைகள் எனக் கொண்டு போற்றுதல் வேண்டும். குரு, இலிங்க, சங்கமங்களின் கூட்டுறவால் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மல ஒழிப்பை முறையுறச் செய்ய வேண்டும்.

**4. திருநீறு**
**5. அக்கமணி**
**6. மந்திரம் - திருவைந்தெழுத்து.**

இம்மூன்றும் சைவமாம் சமயம் சார்ந்தோர் அனைவர்க்கும் பொது. ஆனால் வீரசைவம் தனி விளக்கம் காண்கிறது. பூதவுடம்பை ஞானவுடம்பாக மாற்றி ஞானவுடம்பை அருளுடம்பாக மாற்றும் பணியை முறையே இம்மூன்றும் செய்கின்றன எனக் கொள்ளுவதே வீரசைவம். பிற்காலத்தே சாகாக்கலை எனச் சுட்டி, புன்புலால் யாக்கையைப் பொன்னென மின்னும் ஒளியுடம்பாக அழியாவுடம்பாக மாற்றிக் காட்டிய இராமலிங்கப் பெருந்தகைக்கு மூலமாக நின்றது வீரசைவ நெறியே. திருநீற்றை வெறும் சமயச் சின்னம் எனக் கருதாது பூத அணுக்களை ஒளியணுக்களாக மாற்றுவதற்குரிய சாதனமே திருநீறு எனக் கண்ட, அதற்கு விஞ்ஞான வழியில் விளக்கம் கண்டது வீரசைவம் அதனாலேயே,

"சாதனத்துள் எல்லாம் முந்தும் திருநீறு"

எனக் கூறினார் சிவப்பிரகாச அடிகளார். திருவைந்தெழுத்து ஓதுதலிலும் நம, சிவ, ஆய என மூன்றாகப் பிரித்துத் தத்வமசிப் பொருளை விளக்கியது வீரசைவம்.

**7. பாதோதகம் :** பாத உதகம் - திருவடி நன்னீர். குரு, சங்கமம் ஆகியோர்களின் திருவடிகளுக்கு அபிஷகம் செய்த நீரையும் பிரசாதமாகக் கொள்ளுதல். இது பத்து வகைப்படும்.இந்த நன்னீரைக் கொண்டே சமையல் முதலியன செய்ய வேண்டும் என்பது விதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.ச.லலீசன்
ஆசிரியர்,
ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்

# சைவத் திருமுறைகளும் நம்மவர் செல்நெறியும்

## அறிமுகம்

தமிழ் வேதம் எனப் போற்றப்பெறும் திருமுறைகள் இறை புகழை எடுத்தியம்புகின்றன. இவற்றின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும். திருமுறை என்பதற்குத் தெய்வத் தன்மையுடைய நூல் எனப் பொருளுரைப்பர்.(முறை - நூல்). பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழும் தேவாரம் என்னும் பெயரை உடையவை. தெய்வத்திற்கு மாலை போன்றது என்பது இதன் பொருள் (தே - தெய்வத் தன்மை, ஆரம் - மாலை) தெய்வத்தின் பால் கொண்ட அன்பினால் பாடப்பெற்ற பாடல்கள் எனப் பொருளுரைப்பாருமுளர் (வாரம் - அன்பு). சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் பாடிய பாடல்களே தேவாரப் பாடல்களாக அமைகின்றன.

மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாகவும் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையாகவும் திருமூலர் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும் ஆலவாய் இறைவன் திருமுகப் பாசுரம் முதல் காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள் உள்ளிட்டோர் பாடிய பாடல்களின் தொகை பதினொரம் திருமுறையாகவும் சேக்கிழாரின் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் அமைந்துள்ளன.

## திருமுறைத் தொகுப்பு

முதலாம் இராசராச சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியார் திருமுறைகளை பதினொன்றாக வகுத்தார் எனத் திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது. சோழர் காலத்தில் பாடப்பெற்ற பெரிய புராணம் பின்னாள்களில் பன்னிரண்டாந் திருமுறையாகக் கொள்ளப்பெறும் வழக்கு உருவானது.

## வடமொழி மந்திரங்களுக்கு ஈடானவை.

திருமுறைகள் வடமொழி மந்திரங்களுக்கு ஈடான சக்தி படைத்தவை. இதனாலேயே தேவாரம் - வேதசாரம், திருவாசகம் - உபநிடதசாரம், திருமந்திரம் - ஆகமசாரம் எனக் கொள்கின்றனர்.

திருமறைக்காட்டில் வேதங்களால் பூட்டப்பெற்ற கதவை தேவாரம் பாடித் திறப்பித்தமை தேவாரங்கள் வேதமந்திரங்களுக்கு ஈடானவை என்பதற்கான சான்றாகும். மேலும் காசிவாசி செந்திநாத ஐயர் 'தேவாரம் வேதசாரம்' எனப் பல்வேறு சான்றுகளைக் காட்டி நிறுவியுமுள்ளார். திருமுறைப் பாடல்கள், பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளன. இவை இவற்றின் தெய்வத் தன்மையை மெய்ப்பித்து நிற்கின்றன.

## இறைவனுக்குப் பிடித்தவை.

திருமுறைப் பாடல்களில் இறைவன் கொண்ட விருப்பு நம் அருளாளர்களின் பாடல்களுடாகப் புரியவைக்கப்படுகிறது.

"............... நமக்கும் அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொல் தமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்."

(பெரியபுராணம் - 216)

எனச் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டபோது இறைவன் பேசியதாகச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். மேலும் சுந்தரருக்குப் "பித்தா" எனவும் சேக்கிழாருக்கு "உலகெலாம்" எனவும் இறைவன் அடியெடுத்துக் கொடுத்துள்ளார். திருவாசகப் பாடல்களை இறைவன் தன் கைப்பட எழுதியுமுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறைகள் – இன்றைய நிலை

இக்கட்டுரையின் முக்கிய நோக்கம் திருமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். எம் சமூகத்தவரிடையே திருமுறைகளுக்கு எந்தளவு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது என்பதைச் சற்று நோக்குவோம்.

இறைத் தன்மை பெற்ற திருமுறைகள் நம்மவரின் அறியாமையாலும் அலட்சியப் போக்கினாலும் முக்கியத்துவப்படுத்தப்படாநிலை உணரப்படுகிறது.

### 1) பாடும் போது விடப்படும் தவறுகள்

இன்று பாடசாலைகளிலோ ஆலயங்களிலோ பொது நிகழ்வுகளிலோ திருமுறை ஓதுபவர்களுள் சிலர், தாம் ஓதுகின்ற பாடல்களில் பிழைகளை ஏற்படுத்திப் பாடுகின்றமையைக் காணமுடிகின்றது. பிழையான வார்த்தைப் பிரயோகங்கள் திருமுறைகளின் பெருமைக்குப் பங்கம் ஏற்படுத்துவதோடு தீய பலன்கள் உருவாகவும் காரணமாகிவிடும். அத்தகு சந்தர்ப்பங்கள் சிலவற்றை நோக்குவோம்.

❖ அங்கமும் வேதமும் என்ற பாடல் பாடசாலை மாணவரிடையே மிகப் பிரபலமானது. இங்கு 'ஓதும் நாவர்' எனப் பாடுவதற்குப் பதிலாக 'ஓதும் நால்வர்' எனப் பாடும் நிலை காணப்படுகின்றது.

❖ திருஞானசம்பந்தர் பாடிய மங்கயர்க்கரசி என்ற பாடலை மங்கயற்கரசி எனப் பாடி விடுகின்றனர்.

❖ இடரினும் தளரினும் என்ற தேவாரத்தின் இறுதியில் "இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல் அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே" எனப் பாடுவதங்குப் பதிலாக "இதுபோல் ... அதுபோல் ..." எனப் பாடிவிடுகின்றனர்.

❖ முத்திநெறி அறியாத.. என்ற மிகப் பிரபலமான திருவாசகப் பாடலில் "சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி..." எனப் பாடுவதற்குப் பதிலாகச் சித்த மலம் "அறிவித்து ..." எனப் படுகின்றனர்.

❖ சிவபுராணத்தில் "கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க" என்றஅடியில் "குருமனிதன்தாள் வாழ்க" எனப் பாடுகின்றனர்.

❖ பாலுக்குப் பாலகன் எனத் தொடங்கும் திருப்பல்லாண்டுப் பாடலில் "ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாக" என்ற அடியைப் பாடுகின்ற போது "ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலமே இடமாக" எனப் பாடி 'தில்லை' என்ற சொல்லையும் புகுத்தி விடுகின்றனர்.

❖ கடையவனேனைக் கருணையினால்... எனத் தொடங்கும் திருவாசப் பாடலில் "கடையவனே" என இறைவனை விளித்து "எனைக் கருணையினால்" எனத் தொடர்பவர்களும் உள்ளனர்.

### 2) பிழைகள் ஏற்படக் காரணமானவர் யாவர்?

இப்பிழைகளுக்கான பொறுப்பு யாரிடமுள்ளது என்பதில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. ஆயினும் 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்ற அடிப்படையில் சிறுவயதுகளில் இப்பாடலைக் கேட்கும் முறைமையில் ஏற்பட்ட தவறே பிழைவிட்டுப் பாடப்படுவதற்கான காரணமாகலாமென எண்ணத் தோன்றுகின்றது. நம்மில் பலர் கேள்விச் செவியர்களாக இருந்துவிட்டே பாடல்களைப் பாடுகின்றனர். இதனால் பற்றித் தொடரும் பிழைகளாக இத்தகு பிழைகள் தொடர்கின்றன.

பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுகின்ற போது இத்தகைய தவறுகள் ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை. நூல்களின் உதவி கொண்டு இப்பாடல்களைப் பாராயணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வந்தால் இத்தகு பிழைகள் ஏற்படுவதைக் கணிசமான அளவு குறைக்கலாம். இது விடயத்தில் சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களின் கவனம் அதிக ஈர்ப்புக்குரியது.

### 3) கிரியைகளில் திருமுறைகள்

பஞ்சபுராணம் என்ற வகையில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் ஆகிய பாடல்கள் பாடப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் போதிலும் பல ஆலயங்களில் தேவாரம், புராணம் என இரு பாடல்களுடன் 'திராவிடகான பாராயணம்' நிறைவுக்கு வருவதைப் பரிதாபத்துடன் நோக்கமுடிகிறது.நேரம் போதாமையே இதற்குரிய காரணமெனப் பலராலும் அமைதி காணப்படுகிறது ஆயினும் இது ஏற்புடையதல்ல. திருமுறைப் பாடல்களை அலட்சியப் படுத்தும் மனோபாவமே இதற்குக் காரணமாகும்.

பெரும்பாலான ஆலயங்களில், பூசையின்போது வேதபாராயணம் , ஆசீர்வாதம் அதனைத் தொடர்ந்து இறுதியாகத் திருமுறை பாராயணம் மேற்கொள்ளப்படுவது வழமை. ஆயினும் வேத மந்திரங்களுக்கு ஈடான 'திராவிட கானங்கள்' - பாராயணம் என்ற அடிப்படையில் வேதபாராயணத்தை அடுத்து இடம்பெறுவதே பொருத்தமானது.

மேலும் திருமுறைகள் பாடப்படும் வேளையில் அவற்றிற்கு உரிய மதிப்பை வழங்காது அதனை ஓர் 'ஓய்வு நேரமாகக் கருதும்' மனோபாவம் பலரிடம் அவதானிக்கப்படுகிறது.

பெரிய புராணம் பாடவேண்டிய வேளைகளில் அதற்குப் பிரதியீடாக வேறு புராணப் பாடல்களைப் பாடும் நிலையையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இவ்வாறு பாடப்படும் சில பாடல்கள் வருமாறு

பரமனை மதித்திடாப் பங்கயாசனன் ............... (கந்தபுராணம்)
வான் முகில் வழாது பெய்க... (கந்த புராண வாழ்த்து)
ஆறிரு தடந்தோள் வாழ்க... (கந்த புராணம்)
அருவமும் உருவமாகி.... (கந்த புராணம்)
திருவாக்கும் செய்கருமம் ...(11 ஆம் திருமுறை)

எமது ஆலய மூர்த்தத்திற்குரிய பூசைகள் சிவாம்சமாகக் கருதி மேற்கொள்ளப்படுவதால் எம்மூல மூர்த்திக்கும் பெரிய புராணப் பாடல் பாடப்படுவதே பொருத்தமானது. அத்துடன் அடியார் பெருமை வலியுறுத்தப்படும் பாங்கு பெரிய புராணத்தில் இடம்பெறுவதால் பஞ்சபுராண பாராயணம் பெரிய புராணத்துடன் நிறைவு காண்பது சிறப்புக்குரியது.

திருமுறைகளைப் பண்ணுடன் (இராகத்துடன்) பாடுவோர் தொகை அருகிவருகின்றமையும் திருமுறைப் பாடல்களுக்கு உரிய ஜனரஞ்சகம் ஏற்படாமைக்குரிய காரணமாகலாம். சில ஆலயங்களில் ஓதுவாராகச் செயற்படும் வயோதிப அடியவர்கள், தாமே வாணாள் ஓதுவார் எனக் கருதி இளையோருக்கான சந்தர்ப்பங்களை மறுத்து வருகின்ற நிலை அல்லது ஊக்குவிக்கா நிலை வேதனையுடன் நோக்கப்படவேண்டியது.

ஆலயங்களில் இடம்பெறும் மிகப்பெரிய விழா குடமுழுக்குப் பெருவிழா ஆகும். இதன்போது திருமறைக்காட்டில் திருக்கதவம் திறப்பதற்காக அப்பர் பெருமான் பாடிய பதினொரு பாடல்களையும் பாடும் வழக்கம் காணப்படுகிறது. ஆயினும் இன்றைய நிலையில்,பல சந்தர்ப்பங்களில் முதலாவது பாடலுடனேயே திருக்கதவைத் திறந்துவிடும் அவசரக்காரர்களைச் சந்திக்க நேர்வது துர்லபமானது.

### 4) பொது நிகழ்வுகளில் திருமுறைகள்

மரணச் சடங்குகளில் திருமுறைகள் படும் பாடு பற்றிச் சொல்லவேண்டியதில்லை. போதையேறிய புனிதமில்லா வாய்கள் திருமுறைப் பாடல்ளைப் பாடும் பரிதாப நிலை எம் சமூகத்தில் நாளும் அரங்கேறுகிறது.

மேலும் சாமானியரின் மனோ நிலையில் திருமுறைப் பாடல்களைப் பாடத் தெரிந்தமையைப் பெருமையாகக் கருதும் பண்பு காணப்படுவதில்லை. இன்றைய இளையோர்கள் தமக்கு வேட்டி கட்டத் தெரியாது, தேவாரம் பாடத் தெரியாது எனக் கூறுவதைப் பெருமையாகக் கருதும் மாயையுள் உள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமுறைகளின் எண்ணிக்கை தொடரப்படவேண்டுமா?**

திருமுறைகளின் எண்ணிக்கை பன்னிரண்டுடன் நிறுத்தப்படவேண்டுமா? , தொடரப்படவேண்டுமா? என்பதில் அறிஞர்களிடையே வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. தெல்லிப்பளைத் துர்க்காதேவி தேவஸ்தானம் போன்ற நிர்வாக முன்மாதிரியைக் கொண்ட ஆலயங்களில், முக்கிய வேளைகளில் தேவாரம், பெரியபுராணம், அபிராமி அந்தாதி ஆகிய மூன்று பாடல்களைப் பாடும் வழமையே காணப்படுகின்றது.

முதலாம் இராசராசன் காலத்தில் பதினொன்றாகத் தொகுக்கப்பெற்ற திருமுறைகள் பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் பன்னிரண்டாக வளர்ச்சி பெற்றன. ஆயினும் இருபத்தோராம் நூற்றாண்டு மலர்ந்த நிலையிலும் இன்று வரை வளர்ச்சி காணாத நிலையில் காணப்படுகின்றன. இவ்விடயத்தில் சிவஞான போதச் சூத்திரங்களை திருமுறைகளின் எண்ணிக்கைப் பொருத்தத்தோடு ஒப்பிட்டு அமைதிகாண விழைவது நகைப்புக்கிடமானது.

பஞ்சபுராணம் ஓதப்புகுபவர்கள் மேலதிகமாகத் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, அபிராமி அந்தாதி முதலிய பாடல்களையும் பாடுகின்றனர். இத்தகைய பாடல்கள் புதிய தொகுப்புக்களுள் அடக்கப்படத்தக்கன. ஆயினும் இவ்விடயங்கள் விரித்து ஆராயப்படவேண்டியன.

**நிறைவுரை**

தமிழ் வேதங்களாகப் போற்றப்படும் திருமுறைகள், எமக்கு வழிகாட்டும் அருளாளர்கள் எமக்களித்த மிகப் பெரும் செல்வங்களாகும். கருவறை வரை செல்லத்தக்க தகைமையுடைய திருமுறைகளை ஏற்றுவதும் போற்றுவதும் நம்மவர் கடனாகும்.

**உசாவியவை**


சங்கத் தமிழ்ப் பேரகராதி
ஜகந்நாதன் கி.வா. - திருமுறை மலர்கள் - தொகுதி 1
மகாலிங்கம் - சிவ. - திருமுறைச் செல்வம்
சிவானந்த சர்மா . ப - இது தான் இந்து மதம்
ஜெயராஜ்.இ கம்பவாரிதி - திருமுறைகள் தொடரட்டும் (சில தத்துவ மலர்)
ஆறுமுகநாவலர். ஸ்ரீலஸ்ரீ - திருத்தொண்டர் பெரியபுராண வசனம்
ஞானசம்பந்தன் அ.ச. (பதிப்பாசிரியர்) - திருத்தொண்டர் புராணம்


(நன்றி ஞானச்சுடர் மலர்: 100, 101)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி. ப. புஸ்பரட்ணம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# சாவகச்சேரி பிராந்தியம் கூறி நிற்கும் பண்டைய யாழ். அரசின் மகிமை!

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டுவரை நல்லூரைத் தலைநகராக கொண்டு தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் ஒன்றாக சாவகச்சேரி விளங்கியது. 15ம் நூற்றாண்டுக்குரிய கோகில சந்தேசய என்ற சிங்கள இலக்கியத்தில் சாவக்கோட்டையெனவும் 15ஆம் 16ஆம் நூற்றாண்டுக்குரிய திரிஸிங்ஹளே கடயிம்ஸஹ விதி என்ற நூலில் சவகிரி எனவும் யாழ்ப்பாண அரசோடு தொடர்புபடுத்தி இப்பிராந்தியம் கூறப்பட்டுள்ளது. ஆனால் இச் சாவகச்சேரிக்கு யாழ்ப்பாண அரசு தோன்ற முன்னரே தொன்மையான பாரம்பரிய வரலாறு இருந்ததென்பதை அண்மையில் அப்பிராந்தியத்திலும் அதற்கு அருகிலுள்ள கச்சாய். கெற்பலி, கிளாலி ஆகிய இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட ஆதிக் குடியிருப்புகளுக்குரிய மட்பாண்டங்கள், செங்கட்டிகளால் கட்டப்பட்டிருந்த கட்டட அழிபாடுகள். ஆதிகால, மத்திய கால நாணயங்கள் ஆகியன உறுதிப்படுத்துகின்றன. இக்கருத்தை அண்மையில் கிடைத்த இந்துவிக்கிரகங்கள் மேலும் உறுதி செய்கின்றன.

சாவகச்சேரியின் புராதன வரலாற்றுச் சின்னங்கள் கவனிப்பாரற்ற நிலையில் சீரழிந்து போவதை பல தடவைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சுட்டிக்காட்டிய ஆசிரியர் திரு சுப்பிரமணிய சர்மா அண்மையில் அங்கு அத்திவாரம் வெட்டும்போது கண்டெடுக்கப்பட்ட விக்கிரகம் ஒன்றைப் பார்வையிடுமாறு இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திரு. ப. கணேசலிங்கம் மூலம் வேண்டினார். இவ் விக்கிரகத்தைப் பார்வையிடச் சென்ற போது அவ்விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட சுற்றாடலிலிருந்து கிடைத்த மேலும் மூன்று விக்கிரகங்களை ஆராயச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தநான்கு விக்கிரகங்களும் பிற தேவைகளுக்காக நிலம் வெட்டப்பட்ட போது எதிர்பாராமல் கிடைத்தவையாகும். முதலில் நிலத்தை வெட்டியவர்கள் இவ்விக்கிரகங்களைக் கண்டபோது வெறும் கற்கள் எனக்கருதி சாதாரணஅகழ்வு மூலம் வெளியே எடுத்ததனால் அவ்விக்கிரகங்களில் பல உடைவுகளும் வெடிப்புக்களும் காணப்படுகின்றன. தற்போது இந்நான்கு விக்கிரகங்களும் பிற்காலத்தில் கட்டப்பட்ட வாரிவனநாதர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்தாலும் அவ்விக்கிரகங்களில் உள்ள உடைவு காரணமாக

அவை கர்ப்பக்கிருகத்தில் வைத்து வழிபடப்படாது அலய முன்மண்டபதிலும்இவற்றிற்கென புதிதாக கட்டப்பட்ட சிறிய மண்டபங்களிலும் வைக்கப்பட்டுள்ளன். இவ்விக்கிரகங்களில் சிலவற்றை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை நூதனசாலையில் வைப்பதற்கு தற்போதைய ஆலய நிர்வாகசபை முன்வந்துள்ளது.

இந்நான்கு விக்கிரகங்களில் ஒன்று மனோன்மணி அம்மனுக்குரியதாகும். இது சாவகச்சேரி சந்தைக்குத் தெற்கே பிரதான வீதிக்கு கிழக்காக உள்ள இராசமாளிகை என்ற பெயருடைய வளவில் மலசலகூடம் அமைப்பதற்கு நிலத்தை வெட்டிய போது ஆறு அடி ஆழத்தில் கண்டெடுக்கப்பட்டதாகும். கருங்கல்லில் நிற்கின்ற சமபங்கு நிலையில் செதுக்கப்பட்டுள்ள இவ்விக்கிரகம் 2 3/4 அடி உயரத்தை உடையது. மிக ஒடுங்கிய இதன் இடை ஐந்து அங்குல அகலத்தையும் இடுப்புக்கு கீழேயுள்ள தொடைப்பகுதி ஒரு அடி அகலத்தையும் கொண்டுள்ளது. இதன் நான்கு திருக்கரங்களில் முழங்கையுடன் இணைந்த இடது வலது மேல் கரங்கள் பாசமும், தாமரையும், தாங்கி நிற்க. வலது இடது கீழ்க்கரங்கள் முறையே அபயகஸ்தத்தையும் குறித்து வரதகஸ்தத்தையும் குறித்து நிற்கின்றன. ஒன்பது அங்குல உயரமுடைய இதன் திருமுடியின் மேற்பாகத்தில் உரசிக் கொண்டையும். நெற்றிப்பட்டத்திற்கு மேல் இரத்தினமும், மகுடத்தின் முற்பக்கத்தில் குறுக்காகவும் நிலைக்குத்தாகவும் உள்ள மூன்று குறியீடுகளும் காணப்படுகின்றன. இதன் காதில் மும்மூன்று மகரகுண்டலமும் கழுத்தில் திரண்ட தாலி அமைப்பும் அதன் மேல் அகன்ற பதக்கமும் அணியப்பட்டுள்ளது. விக்கிரகங்களுக்கு பொதுவாக உள்ள முப்புரிநூல் இவ்விக்கிரகத்தில் மிகத் தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக ஒடுங்கிய இடையும், திரண்டமார்பகமும் உயர்ந்தமகுடமும், கழுத்திலுள்ள அலங்காரத்தன்மை கொண்ட ஆபரணங்களும் பழமையான தெய்வ விக்கிரகம் என்பதைச் சான்று பகர்கின்றன. இவ்விக்கிரகத்தின் வலது இடது மேல் கரங்கள் நிலத்திற்குள் இருந்து வெளியே எடுத்த போது உடைந்து விட்டதனால் தற்போது அவ்விக்கிரகம் வாரிவனநாதர் ஆலயத்திற்கு மேற்கே இதற்கெனக் கட்டப்பட்ட மிகச் சிறிய மண்டபத்தினுள் வைக்கப்பட்டுள்ளது.

விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட காணியில் நாம் மிக அண்மையில் தொல்லியல் மேலாய்வில் ஈடுபட்டிருந்த வேளையில் அக்காணியில் புதிதாகப் பயிர் செய்கையில் ஈடுபட்டோர் மண்ணுக்குள் மூடுண்டிருந்த செம்பினால் வார்க்கப்பட்ட நாகவிக்கிரகம் ஒன்றைக் கண்டெடுத்து தந்தனர் இது தற்கால ஆலயங்களில் வைத்து வழிபடப்படும் விக்கிரகங்களில் இருந்து பலவகையில் வேறுபடுகிறது. பத்து அங்குல உயரத்தில் படமெடுத்த நிலையிலுள்ள இவ்விக்கிரகத்தின் உடற்பகுதி ஆறு வளையங்களாக சுருண்ட நிலையில் வார்க்கப்பட்டுள்ளது. அகண்ட இதன் தலைப்பகுதியின் மேல் தாமரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டொன்றும். அதன் மேல் ஆறு இதழ்கள் கொண்ட தாமரையும். அதற்கு மேல் தெய்வ உருவம் நிற்பதற்குரிய வட்ட வடிவிலான பீடமும் அமைந்துள்ளது. மிகுந்த அழகும். பழபழப்புத் தன்மையும் கொண்ட இவ்விக்கிரகம் பிற்கால விக்கிரகங்களைப் போல உடலில் உட்பக்கம் வெறும் கோதாக இல்லாது உடல் உறுப்புக்கள் முழுவதும் தனிச் செம்பினால் வார்க்கப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் முன்பு ஓர் ஆலயம் ஒன்று இருந்திருக்கலாம் எனக் கருதக்கூடிய செங்கட்டிகளும் கட்டட சிதைவுகளும் காணப்படுகின்றன. இவ்விடம் இராசமாளிகை வளவு எனவும் இதற்கு அருகில் உள்ள காணி இராச வளவு எனவும் அருகதமிலுள்ள வீதி இராசவீதி எனவும் அழைக்கப்படுவது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கன.

*உயரம் கூடிய அம்மன் விக்கிரகம்.*

ஏனைய விக்கிரகங்களில் அம்மனும், சூரியனும் தற்போதைய சாவகச்சேரி நவீன சந்தைக்கு கிழக்காகவுள்ள பழைய சந்தைப் பகுதியில் அத்திவாரம் வெட்டும் போது கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவற்றுள் அம்மன் விக்கிரகம் மிகுந்த கலையுணர்வும் தென்னிந்தியத் திராவிடக் கலைமரபுடன் கூடிய தொழில் நுட்பமும் கொண்டதாகும். தற்போது இலங்கையில் வழிபடப்பட்டு வரும் உயரம் கூடிய அம்மன் விக்கிரகங்களில் ஒன்றாக இதைக் கருத இடமுண்டு. கருங்கல்லில் முப்பரிமாண நிலையில் செதுக்கப்பட்டுள்ள இவ்விக்கிரகம் பீடமற்ற நிலையில் நான்கடி உயரத்தையும் பீடத்துடன் 5 1/4 அடி உயரத்தையும் கொண்டுள்ளது. ஒரு அடி உயரமுடைய கேச மகுடம் மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது. மேல் பகுதியில் உச்சிக் கொண்டையும், நெற்றிப்பட்டத்திற்கு மேல் இரத்தினமும், மகுடத்தின் முற்பக்கத்தில் நிலைக்குத்தாகவும் குறுக்காகவும் மூன்று குறிகளும் உள்ளன.

நான்கு கரங்களைக் கொண்ட இவ்விக்கிரகத்தின் வலது மேல் கரத்தில் வெண்டையமும். இடது மேல் கரத்தில் தாமரையும் காணப்படுகிறது. மற்றைய இரு கரங்களில் வலது கரம் அபயகஸ்தத்தையும் இடது கரம் வரதகஸ்தத்தையும் குறித்து நிற்கின்றன. இதன் காதில் மகரகுண்டலமும் கழுத்தில் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டுள்ள பதக்கமும் காணப்படுகின்றன. இதன் இடுப்பு ஆறு அங்குல அகலத்தையும் அதன் கீழ் உள்ள தொடைப்பகுதி ஒன்பது அங்குல அகலத்தையும் கொண்டுள்ளது. -

இடுப்பிலுள்ள சிங்கமுகப்புடைய மேகலை இடுப்பைச் சுற்றி தொங்கு சங்கிலியால் இணைக்கப்பட்டிருப்பதையும். இதனுடன் இணைந்த நிலையிலுள்ள பீதாம்பரம் இரு கால்களுக்கிடையே கணுக்காலிலுள்ள கால்சலங்கை வரை நீண்டிருப்பதையும் தெளிவாகக் காணமுடிகிறது. வலது கீழ்க்கரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்கையுடன் வெளிப்படுத்தப்பட்ட முடிக் குஞ்சரமானது முற்பக்கத்தில் தெரியுமாறு இருப்பதும், இடது பக்க தோளின் மேலால் செல்லும் முப்புரிநூல் தெளிவாகச் செதுக்கப் பட்டிருப்பதும் இவ்விக்கிரகத்தில்காணக் கூடிய சிறப்பம்சங்களாகும்.

இவ்விக்கிரகத்துடன் சந்தைப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மற்றைய விக்கிரகமான சூரியன் 2 1/2 அடி உயரமுடையது. நிற்கின்ற சமபங்க நிலையில் செதுக்கப்பட்டுள்ள இவ்விக்கிரகத்தின் அகண்ட மகுடம் ஆறு அங்குல உயரமுடையது. இம்மகுடத்தின் பின்னாலுள்ள ஒளிவட்டம் நீள்வட்ட வடிவில் அமைந்துள்ளது. ஒன்பது அங்குல உயரத்தில் உள்ள சதுர வடிவிலான படத்தில் ஒழுங்கற்ற பகுதி மீண்டும் வட்டவடிவிலான தாமரை ஆசனத்தின் மீது இவ்விக்கிரகம் அமைந்துள்ளது. அதன் இரு கரங்களிலும் தாமரை மலர் காணப்படுகிறது. ஏனைய உடல் உறுப்புகளும் ஆடை ஆபரணங்களும் சிதைவடைந்திருப்பதினால் அவை பற்றி பூரணமாகக் கூறமுடியாது இருக்கிறது.

இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள விக்கிரகங்களுள் ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் சிறப்பாக நோக்கத்தக்கது. இவ்விக்கிரகம் சந்தைக்கம் இராசமாளிகை வளவிற்கும் இடையிலுள்ள தற்போதைய நீதிமன்றவளவில் பழைய கிணறு மீண்டும் வெட்டப்பட்ட போது கண்டெடுக்கப்பட்டதாகும். இச்சிவலிங்கம் மாதோட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட பல்லவர்காலச் சிவலிங்கத்தைப் போல மிகப் பெரியதாகும். எட்டு அடி உயரமான இவ் லிங்கத்தின் 6 3/4 அடி உயரமான பாகம் மண்ணினுள் மறைக்கப்பட்டு 1 ¼ அடி உயரமான பாகம் மட்டும் வெளியே தெரியுமாறு வைக்கப்பட்டுள்ளது. கிணற்றிலிருந்து வெளியே எடுத்த போது ஏற்பட்ட உடைவு காரணமாக சிவலிங்கத்தின் மேற்பாகம் தற்போது ஒழுங்கற்றுக் காணப்படுகின்றது. கருங்கல்லில் வட்டவடிவில் செய்யப்பட்டுள்ள இதன் ஆவுடை 1 3|4 அடி உயரத்தையும் பத்தடி சுற்றளவையும் கொண்டுள்ளது. இவ்வாவுடையின் அழகுத் தன்மையும் தோற்றமும் பிற்கால ஆவடையின் அமைப்பிலிருந்து வேறுபட்டதாக காணப்படுகிறது. மேற்குறிப்பிட்ட நான்கு விக்கிரகங்களும் குறிப்பிட்ட மிகச் சிறிய வட்டத்திற்குள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது நோக்கற்பாலது.

***போர்த்துக்கேயரின் கலையழிவுக் கொள்கை?***

யாழ்ப்பாண அரச காலத்தில் இந்துமதம் அரச ஆதரவு பெற்ற ஒரு மதமாக விளங்கியது. ஆயினும் இவ்வரசு காலத்திற்குரிதெனக் கருதக்கூடிய ஒரு ஆலயம் தானும் இதுவரை முழுமையாகப் பாதுகாக்கப்படவில்லை. இதற்குப் போர்த்துக்கேயரும். பின்வந்த ஒல்லாந்தரும் கடைப்பிடித்த இந்து மதத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரான கலையழிவுக் கொள்கை ஓர் முக்கிய காரணியாகும். போர்த்துக்கேய ஆசிரியரான குலைறோஸ் பாதிரியார் தமது மத நடவடிக்கையின் போது யாழ்ப்பாணத்தில் இருந்த சிறிதும் பெரிதுமான 500 இந்து ஆலயங்களை இடித்து அழித்ததாகத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களில் இருந்து பெறப்பட்ட கற்களைக் கொண்டே இந்து ஆலயங்கட்கு அருகே புதிய கிறிஸ்தவ ஆலயங்கள் கட்டப்பட்டதாக தெரிகிறது. பிற்காலத்தில் பிற தேவைகட்காக நிலங்கள் வெட்டப்பட்ட போது போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட ஆலயத்தின் சிதைவுகளும், விக்கிரகங்களும் கண்டு பிடிக்கப்பட்டமை பொதுவான வரலாற்று உண்மையாகும். இதற்கு போர்த்துக்கேயரது கலையழிவுக் கொள்கையில் இருந்து இந்து விக்கிரகங்களைப் பாதுகாக்க மதப்பற்றுடைய மக்கள் கிணறுகளிலோ மறைவான இடங்களிலோ அவ் விக்கிரகங்களைப் புதைத்து வைத்திருந்தமை ஒரு பொதுக் காரணமாகும். இவ்வாறான ஒரு கருத்து யாழ்ப்பான அரசு தொடர்பாக எழுந்த யாழ் வைபவ மாலையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. சாவகச்சேரியில் கிடைத்த நான்கு விக்கிரகங்களையும் நோக்கும் போது அவை தற்செயலாகவோ அல்லது பிறஇடங்களில் இருந்தோ கொண்டு வந்து புதைக்கப்பட்டன என்று கூறமுடியாது. இந்த நான்கு விக்கிரகங்களும் ஏறத்தாள 100 சதுர யார் பரப்பளவினுள் கண்டெடுக்கப்பட்டவையாகும். கண்டெடுக்கப்பட்ட இடங்களிலுள்ள கட்டடத்தின் சிதைவுகளையும் பிற தொல்பொருட் சான்றுகளையும் நோக்கும்போது இவ்விடத்தில் முன்பு பெரியதோர் ஆலயம் இருந்ததென நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

தற்போதைய சாவகச்சேரிச் சந்தைப்பகுதியில் அண்மையில் பிற தேவைக்கட்காக நிலம் வெட்டப்பட்ட போது ஓர் கட்டடத்திற்குரிய அத்திவாரமும் கட்டடத்தின் சிதைவுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்று கூட செங்கட்டியால் கட்டப்பட்ட இவ் அத்திவாரங்களை மிகத் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக உள்ளது. இவ் அத்திவாரங்களுக்குத் தெற்கே தற்போதைய பஸ்தரிப்பு நிலையத்தில் ஒரு சிறிய கிணறு ஒன்று காணப்படுகின்றது இக்கிணறு முன்பிருந்த ஆலயத்தின் திருமஞ்சனக்கிணறு எனக் கூறப்படுகிறது. இக்கிணறுக்குத் தெற்காக நீதிமன்ற வளவில் 3 அகலம் உள்ள செங்கட்டியால் அமைக்கப்பட்ட கட்டடத்தின் சுவர்பகுதி காணப்படுகிறது. இச் சுவருடன் இணைந்த கட்டடத் தொகுதி ஒன்று பிரித்தானியர் ஆட்சியில் வரலாற்று நினைவுச்சின்னமாக சட்ட ரீதியாகப் பாதுகாக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. மேலும் தற்போதைய நீதிமன்ற வளவில் பழைய கட்டடம் ஒன்று இருந்ததற்கான அத்தி வாரங்களும் ஓர் ஆலயத்திற்குரியதென நிச்சயப்படுத்திக் கூறக்கூடிய மிக நீண்ட முருகைக் கற்களும் காணப்படுகின்ற இவ்விடத்தில் நாம் ஆய்வினை மேற்கொண்ட போது நாகதம்பிரானுக்குரிய விக்கிரகம் ஒன்றும் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த சந்தனக்கல் ஒன்றையும் அவதானிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1942ம் ஆண்டு (2ம் உலக மகாயுத்த காலத்தில்) நீதிமன்றத்திற்கு அருகே பதுங்கு குழி வெட்டியபோது ஆலயத்திற்குரிய மணியும் நந்தாவிளக்கும் கண்டெடுக்கப்பட்டதாக அவற்றை நேரில் மாத்தையா என்ற வயோதிபர் கூறினர். தற்போதைய நீதிமன்றத்தின் நடு அறையில் மூடப்பட்டிருக்கும் கிணற்றிற்குள் நீதிமன்றத்திற்கான அத்திவாரம் வெட்டும் போது கண்டெடுக்கப்பட்ட ஆலயத்திற்குரிய 4 கோமுகிகள் போடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இத்தகைய இடங்களில் இருந்தே மேற்கூறப்பட்ட நான்கு விக்கிரகங்களும் கண்டு எடுக்கப்பட்டுள்ளதால் அவ்விக்கிரகங்களை இங்கிருந்த ஆலயத்திற்குரியதென கருத இடமுண்டு.

*வாரிவாணேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள்*

தற்போது இவ்விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ள ஆலயம் வாரிவாணேஸ்வரநாதர் ஆலயம் என அழைக்கப்படுவதற்கு காரணம் இவ்வாலயத்திற்கு முன்னோடியாக வாரிவாணேஸ்வரர் என்ற ஆலயம் இப்பிராந்தியத்தில் இருந்த காரணமாகும். இதனால் சாவகச்சேரி வாரிவாணேஸ்வரர் எனவும் அழைக்கப்பட்டது. குமுதமுனி கூறிய ஐதீகத்தில் இவ்வாரிவாணேஸ்வரர் ஆலயம் சோழ நாட்டில் இருந்து வந்த விதுபாக்கர் என்பவரால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. தட்சணகைலாய புராணத்தில் 'வாரிவணலிங்கமகிமை உரைத்த படலம்' என்ற அத்தியாயத்தில் சிவபெருமான் சுயம்புலிங்கமாக விதுபாக்கர் என்ற வைஷ்ணிகருக்கு காட்சி கொடுத்த நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் இதே இடத்தில் அமைக்கப்பட்ட ஆலயம் தான் வாரிவாணேஸ்வரர் ஆலயம் என குறிப்பிடப்பட்டுள்ளது. முதலியார் இராஜநாயகம் போர்த்துக்கேயரின் மத நடவடிக்கையின் போது அவர்களால் அழிக்கப்பட்ட ஆலயங்களில் ஒன்றாக இதைக் குறிப்பிட்டுள்ளார். அந்த ஆலயம் இருந்த இடத்தில் இருந்தே மேற்குறிப்பிட்ட விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதனால் அவற்றை வாரிவாணேஸ்வர ஆலயத்திற்குரியதெனக் கூறுவது பொருத்தமானதாகும்.

மேற்கே கத்தோலிக்க தேவாலயம் ஒன்று கட்டப்பட்டதாக குவைறோஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். வாரிவாணேஸ்வரர் ஆலயத்தை இடித்த கற்களைக் கொண்டே கத்தோலிக்க ஆலயம் இடிக்கப்பட்ட புதிய கிறிஸ்தவ ஆலயம் கட்டப்பட்டதாக அவ்வூர் மக்கள் கூறுகின்றனர். மேற்கூறப்பட்ட ஆதாரங்களை வைத்து நோக்கும் போது தற்போதைய சாவகச்சேரி சந்தைப்பகுதியில் இருந்து நீதிமன்றம் வரை நீண்டிருந்த புராதன வாரிவாணேஸ்வரர் ஆலயம் போர்த்கேயரால் இடித்தழிக்கப்பட்டு அதன் கற்கள் புத்தே வைகட்காகப் பயன்படுத்தபட்டபோது அவ் ஆலயத்தில் இருந்த விக்கிரகங்கள் கவனிப்பாரற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையில், மண்ணுள் புதையுண்டன எனக் கூறலாம். அவ்வாறு புதையுண்டிருந்த விக்கிரகங்கள் பிற்காலத்தில் பிற தேவைகட்காக நிலம் வெட்டப்படும் போது வெளிவந்ததுள்ளன.

*தோற்ற காலம்*

மேற்கூறப்பட்ட விக்கிரகங்களை வைத்து வாரிவாணேஸ்வர ஆலயத்தின் தோற்ற காலத்தை நிச்சயப்படுத்துவது கஷ்டமாகவே தோன்றுகிறது. ஆனால் விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்ட சுற்றாடலின் அமைவிடத்தை நோக்கும் போது இங்கிருந்த ஆலயத்திற்கு தொன்மையான வரலாறு ஒன்றுண்டு எனக்கருத இடமுண்டு. ஆலயத்திற்கு கிழக்கு எல்லையாக கடற்கரைப்பகுதி அமைந்துள்ளது. இக்கடற்கரைக்கு ஒரு மைல் தெற்கே வரலாற்றுப் பழமை வாய்ந்த கச்சாய்த்துறைமுகமும் தென்கிழக்கே நாகதேவன்துறையும் (பூநகரி) மட்டுவில் நாடு (பூநகரி) முதலான பழையதுறைமுகப்பகுதிகளும் அமைந்துள்ளன. இத்துறைமுகங்களோடு சாவகச்சேரிக்கு நெருங்கிய கடல்வழித் தொடர்பு இருந்ததென்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் இவ் ஆலயத்தின் கிழக்கெல்லையில் கிடைத்துள்ளன.

இந்த இடங்களில் ஆதிக் குடியிருப்பிற்குரிய சான்றுகள் மட்டுமன்றி ஏழாம் எட்டாம் நூற்றாண்டில் அரேபிய, சீன தொடர்புகளும் 10ஆம் 11ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய நாட்டுடனான தொடர்புகளும் இருந்ததற்குச் சான்றுகளும் உள்ளன. இப்பிராந்தியத்திற்கு அயலிலுள்ள கச்சாய், கெற்பலி, கிளாலி, கேரதீவு, பூநகரி முதலான இடப்பெயர்கள் சேர, சோழ தொடர்பு இங்கிருந்ததற்குச் சான்றாகும். 12ம் நூற்றாண்டிற்குரிய திருவாலங்காட்டுசாசனம் சோழர் வட இலங்கையில் வெற்றி கொண்ட இடங்களில் ஒன்றாக மட்டுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம் மட்டுவிலைச் சிலர் சாவகச்சேரி மட்டுவில் எனவும் வேறு சிலர் பூநகரி மட்டுவில் எனவும் அடையாளம் கண்டுள்ளனர். அவ்விடம் எதுவானலும் அது சாவகச்சேரிக்கு மிக அருகிலுள்ள இடங்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சோழர் காலத் தஞ்சாவூர் இலக்கியங்கள் என்ற நூலில் ஈழ நாட்டு பூநகரியிலிருந்து தமிழ்நாட்டு ஆலயங்கட்கு பூக்கள் இறக்குமதி செய்யப்பட்டு உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. அதேபோல் சாவகச்சேரி வாரிவாணேஸ்வரர் ஆலயத்திற்கும் பூநகரியிலிருந்து "பூ" கொண்டு வரப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இத்தகைய ஆதாரங்கள் சாவகச்சேரி வாரிவாணேஸ்வரர் ஆலயம் அமைந்த பிரதேசத்திற்கு தொன்மையான வரலாறு உண்டு என்பதை கோடிட்டு காட்டுகின்றன.

11ஆம் 12ஆம் நூற்றாண்டு காலப்பகுதி ஆலயங்கள் கடற்கரையை அண்டிய பகுதிகளில் கடல் சார்ந்த வர்த்தகத்தை பின்னணியாகக் கொண்டு கட்டப்பட்டதற்கு போதிய ஆதாரங்கள் உண்டு வாரிவாணேஸ்வரர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்த கிழக்குப் பிராந்தியம் கடல் சார்ந்த வர்த்தகத்துடன் தொடர்புடையது என்பதை அங்கு பரவலாகக் கிடைத்த 11 ஆம் 12ஆம் நூற்றாண்டிற்குரிய நாணயங்களும் பிற தொல்பொருட் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாலயம் வாரிவாணேஸ்வரம் என்ற பெயரால் அழைக்கப்படுவதை நோக்கும் போது சோழர் ஆட்சியில் இலங்கையில் கட்டப்பட்ட ராஜராஜ ஈஸ்வரம். திருவிராமீஸ்வரம் (மாதோட்டம்). உத்தமசோழ ஈஸ்வரம் (அதகட), பண்டித சோழ ஈஸ்வரம் (மண்டலகிரி). வாணவன் மாதேவீஸ்வரம் (பொலநறுவை), ரவிகுலமாணிக்க ஈஸ்வரம் (பதவியா), பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய ஆலயங்களின் பெயர்கள் நினைவுக்கு வருகிறது. இலங்கையில் சோழராட்சியிலிருந்து கோயிலுக்கு சேவை செய்யும் அந்தணர், தேவர் அடியார் முதலியோருக்கு நிலங்கள் மானியமாக அளிக்கப்பட்டு அந்நிலங்கள் அவர்களின் பெயரால் அழைக்கப்படும் வழக்கம் தோன்றியதாக தெரிகிறது. இதைப் பொலநறுவைச் சிவாலயத்திலுள்ள அதிராஜேந்திர சோழனுடைய கல்வெட்டும் பாலமோட்டைச் சாசனமும் உறுதிப்படுத்துகின்றன. இதேபோல் சாவகச்சேரி வாரிவாணேஸ்வரர் ஆலயத்திற்கு சேவை செய்தோருக்கு ஆதியில் மானியமாக வழங்கப்பட்ட காணிகள் இன்று கோயில் குடியிருப்பு, தேவரடியார் தோட்டம் எனஅழைக்கப்படுவது சிறப்பாக நோக்கத்தக்கன. இதனால் இத்தகைய ஒரு காலப் பின்னணியோடு இவ்வாலயத்தின் தோற்ற காலத்தை ஆராய இடமுண்டு.

*விக்கிரகங்களின் தோற்ற காலம்*

இங்கு கிடைத்த விக்கிரகங்கள் மிகப் பழமையானவை என கூறுவது கடினமாகும். அம்மன் மனோன்மணி அம்மன் ஆகிய விக்கிரகங்களின் திருமுடியும் இடுப்பில் உள்ள சிங்கமுக கச்சாணமும் பாதம் வரை நீண்டுள்ள பீதாம்பரத்தின் ஆடையமைப்பும் 14ஆம் நூற்றாண்டிற்குரிய முற்பட்ட விஜயநாயக்கர் காலமரபை அப்படியே பிரதிபலிக்கின்றன. ஆனால் ஒடுங்கிய இடையும், திரண்ட மார்பகங்களும், தடித்த கழுத்தாபரணங்களும், மகரகுண்டலமும், முழங்கையுடன் இணைந்த மேல்கரங்களும் சோழக்கலைமரபை நினைவுபடுத்துகின்றன. மிக உயர்ந்த சிவலிங்கமும் மிகுந்த கலை வேலைப்பாடுடைய வட்ட வடிவில் அமைந்த ஆவுடையும் பாண்டியக் கலைமரபுடன் தொடர்புடையன. இதனால் காலத்தை நிச்சயித்துக் கூறக்கூடிய கல்வெட்டுப் போன்ற ஆதாரங்கள் கிடைக்கப் பெறாத நிலையில் இவற்றின் காலத்தை திட்டவட்டமாகக் கூறுவது கடினமாகும். ஆனால் இங்கு கிடைத்த அனைத்து விக்கிரகங்களும் 15 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் யாழ்ப்பாண அரசு காலத்தில் வழிபடப்பட்டவை எனக் கருதுவது பெருமளவு பொருத்தமாகத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Projessor. M.Nadaraja Sundaram**
**முகாமைத்துவத்துறை**
**யாழ் பல்கலைக்கழகம்**

# இலாப நோக்கமற்ற முகாமைத்துவத்தில் ஒழுக்கவியல் வேறுபாடுகள்

# ETHICAL DIFFERENCES IN NON-PROFIL MANAGEMENT

## முகவுரை (Introduction)

முகாமைத்துவம் என்ற எண்ணக்கரு பயன்படுத்தப்படும் பொழுது நீண்ட காலமாக தனியார் துறையில் (Private Sector) எவ்வாறு இலாபத்தை உச்சப்படுத்தலாம். என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வந்தது. இதனைத்தொடர்ந்து பகிரங்கத்துறையிலும் (Public - Service) பயன்படுத்தக்கூடிய வகையில், சிக்கனம் (Economy) செயல்திறன் (Efficiency) பயனுறுதியுடமை (Effectiveness) என்ற எண்ணக்கருக்களை வலியுறுத்தி செயல்படத் தொடங்கின. மூன்றாவது நிலையில் இலாபங்களை முக்கிய நோக்கமாகக் கொள்ளாத நிறுவனங்களின் (Non profit organization) பண்புகள் எந்தளவுக்கு ஒழுக்கவியல்களை விரித்துரைக்கும் எல்லை வடிவங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பது பற்றிய கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவை பெருமளவுக்கு விவாதத்திற்காக கையாளப்படும் அடிப்படை விடயமாக கொள்ளப்படுகின்றது. எந்தவகையான அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட பெரிய அய்வுகளும் மேற்கொள்ளப்படாத இடத்து ஒரு வகையான பயன்படும் நன்நடத்தை விதிகளை (Moral rules -in - use) முகாமையாளர்கள் நடைமுறைப்படுத்தி, வேலை செய்யும் இடங்களில் தொழிலாளர் செயற்பாடுகளை மேலோங்கச் செய்கின்றனர்.

**ஒழுக்கவியல் வேறுபாடுகளை நாம் பின்வரும் மூன்று நிலைகளில் ஆராய்வதற்கு முடியும்**

### 1. விழுமியங்களை மேம்படுத்தல் *(Promoting Values)*

Alexis de Tocqueville's என்பவருடைய கருத்துப்படி இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் ஒழுக்க நெறிகளைக் கொண்டதும், புத்திக் கூர்மையுடையவர்களை உள்ளடக்கியதாகவும் காணப்படும். பெரும்பாலான நிறுவனங்கள் நேரடியாக விழுமியங்கள் (Values) நன் நடத்தை விதிகள் (Morale) ஒழுக்கவியல் (Ethics) என்பனவற்றுடன் தொடர்புடையதாக இருக்கின்றன. ஏதோ ஒரு வகையில் அப்பிரதேசத்தின் வளர்ச்சியுடன் தொடர்பு கொள்ளும் நிறுவனமாக அமையும். இதனை சார்ந்த நிறுவனங்களின் முக்கிய செயற்பாடுகளின் வளர்ச்சிக்கும், பிரதேசத்தில் காணப்படும் விழுமியங்களின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உதவுகின்றன. அரசாங்க ரீதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டவோ அல்லது பொதுச்சேவையினை செய்யவோ (General Welfare) முயலுவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவம் (Leadership) என்ற முக்கியமான முகாமைத்துவ எண்ணக்கரு இத்தகைய விழுமியங்கள் செறிந்த நிறுவனங்களின் (Value Intensive Organization) தலைவர்களிடமிருந்து (Larder) சில முக்கிய தேவைகளை எதிர்பார்க்கின்றது. இந்த நிறுவனங்களின் அங்கத்தவர்கள், தலைவர்களின் நடத்தைகள் நிறுவனம் எத்தகைய விழுமியங்களை விரும்புகின்றதோ அதற்கு ஏற்ற வகையில் அங்கத்தவர்களின் செயற்பாடுகள் இணைந்து இருத்தல் வேண்டும். உதாரணமாக சமய குருமார்கள், நிதி மோசடி, காமம் என்பவற்றில் ஈடுபடுதல் மூலம் தமது தலைமைத்துவத்திற்கு கேடு விளைவிக்க முடியும். உயர் அதிகாரிகள் ஏனைய தமது சக அங்கதர்தவர்களின் வெளிப்பாடுகளை களவாடல் (Pilagirainged) மனித உரிமை நிறுவனங்களின் முகாமையாளர்கள் சிறுபான்மை மக்கள் பற்றி குறைவாக இனங்காணல், பெண்களுடன் பகிடிவதை செய்தல் என்பன ஏற்கக் கூடியவை அல்ல. தலைமைத்துவம் என்பது முக்கியமாக நிறுவனத்தினது நோக்கத்திலும் அதன் பண்புகளிலும் பெருமளவுக்கு உருவாக்கப்படுகின்றது. இந்த வகையில் இந்த நிறுவனங்களின் முக்கியத்துவம் புறக்கணிக்கப்படுமிடத்து அவர்கள் தரமற்ற செயற்திறனற்ற (Ineffective Leaders) தலைவர்களாக மாறுவார்கள். இந்த நிலை ஆக உச்சக்கட்டத்திற்கு செல்லும் பொழுது குறிக்கப்பட்ட நிறுவனம் தலைமைத்துவத்தை இழப்பதுடன் நிறுவனம் தரிசிக்க கூடியது அதன் விழுமியங்களுக்கும் தலைமைத்துவத்திற்கும் இடையில் ஒரு பிரிவினை அல்லது தொடரின்மையை காணக்கூடியதாக இருக்கும். கடமைப்பாடுகள் இத்துடன் நின்று விடுவதில்லை. விழுமியங்களைக் கொண்ட நிறுவனங்களில் மேற்கூறப்பட்ட கருத்துக்களுடன் மட்டும் நின்று விடாது பிரத்தியோக முறையில் விழுமியங்களை உருவாக்கி, ஒழுங்கு படுத்தி, நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஓர் புதிய வாசகத்தை எடுத்து வாசித்து விளக்குவதில் எந்தப்பயனும் கிடைக்கப்போவதில்லை. அதனை தற்போதைய நிலைக்கு ஏற்ப சிறப்பாக விளக்கி புத்துயிர் அழித்து புதிய விளக்கங்கள் கொடுத்து, இப்போதைய சமூக ஒழுக்க விதிகளுக்கும், நிலைமைகளுக்கும் ஏற்ப புதிய பரிமாணங்களை கொண்டு வருதல் வேண்டும். அதே போல ஒவ்வொரு சேவை நிறுவனங்களும் சமூக சேவை நிறுவனம், மனித உரிமை நிறுவனம், என்பன தமது நிறுவனங்களின் அடிப்படை விழுமியங்களை (Basic Values) தொடர்ச்சியாக மாற்றி வரையறை செய்து, புதிய மாற்றங்களை நடைமுறைப்படுத்த விட்டால் அங்கு தலைமைத்துவம் வலுவிழந்ததாக காணப்படும்.

A Value - "Intensive organization demands Leadership that is clearly consistent with and strongly permitted by the values of the organization"

## II. *ஊழியர்கள், சபைகள், தொண்டர்கள் ஆகியோருடனான முகாமைத்துவ தொடர்பு*

## *Managing relations with staff, Boards and Volunteers*

ஒழுக்கவியல் கோட்பாட்டின் மையம் முக்கிய மூன்று கேள்விகளான நீதி (Justice) நேர்மை (Honesty) நியாயம் (Fairness) என்பவற்றுள் தங்கியுள்ளது. அண்மைக்கால ஆய்வுகளின்படி நன்நடத்தை விதிகளின் நியமங்களில் பொதுவாக இரு அம்சங்களில் தொடர்பாடலில் நேர்மையும் (Fairness' in Communication) நேர்மையாக நடத்துதல் (Fairness in treatment) முக்கியமானவையாக கருதப்படுகின்றன. (Bird and waters 1994 p2) இவர்களுடைய கருத்துப்படி இந்த நிறுவனங்களில் தனிப்பட்டவராயினும், தலைமைத்துவத்தை ஏற்று நடப்பவராயினும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஏனைய அங்கத்தவர்களுடன் நடைமுறைச் செயற்பாட்டுக்களை மேற்கொள்ளும் பொழுது நீதி, நேர்மை, நியாயம் என்பவற்றை கடைப்பிடிக்க வேண்டும். இந்த நிறுவனங்களில் காணப்படும் ஆளுமை வேறுபாடுகளால் பொதுவாக பொறுப்புக்கள் ஒரு தனித்துவத்தைக் (Unique) கொண்டிருக்கும் உதாரணமாக ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளில் முன்னிலை உத்தியோகத்தர்களால் வாண்மை சேவைகள் (professional services) வழங்கப்படும் பொழுது (மருத்துவ சேவை நிலையம், பல்கலைக்கழகங்கள் ஆய்வு நிறுவனங்கள்) மிகவும் சர்வதிகாரபோக்கில் முகாமைத்துவ வடிவம் அமைந்திருக்குமாயின் அத்துடன் பெரும் அளவில் எடுக்கப்படும் தீர்மானங்களின் மேலாதிக்கம் (overrule) செலுத்துவதும், ஒரு ஒழுக்க ரீதியற்ற செயலாக மாறுவதுடன் அந்த நிறுவனத்தின் நீண்ட கால சேவைகளையும்), தரத்தையும் பாதிப்பதாக அமையலாம். முகாமையாளர், அல்லது தலைவர் தனது சுயவிருப்பத்தின் பேரில் கொடுக்கப்பட்ட விளம்பர தந்திரோபாயம் ஒன்றினை மாற்றி அமைக்க முடியும். ஆனால் ஒரு ஆய்வு நிலையத்தில் நடைபெற்ற ஒரு ஆய்வின் வெளிப்பாடுகளை அங்கு உள்ள ஒரு வாடிக்கையாளருக்காக மாற்றி அமைப்பதாயின் அது ஒழுக்க ரீதியற்ற செயலாக மாற்றமடையும் வான்மையாளர்களான மருத்துவர்கள், ஆசிரியர்கள், பொறியியலாளர்கள், ஆலோசகர்களுடைய தீர்மானங்களில் மாற்றங்களை செய்ய முயலுதல் அதில் தலையிட்டு முரணான கருத்துக்களை வெளியிடல் என்பன பல வகையான ஒழுங்கின்மை நடவடிக்கைகளை உருவாக்கும். இதனால் இந்த நிறுவனங்களின் முகாமைத்துவ உயர் மட்டங்களுக்கு செல்லும் பொழுது பலவகையான சிக்கலான பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும்.

இலாபநோக்கமற்ற நிறுவனங்களில் வேலை செய்யும் உழைப்பாளிகள் பெரும்பாலும் (Skills) பயிற்றப்பட்ட உழைப்பாளர், தொண்டர்கள், ஊதியம் பெறாத உழைப்பாளிகள், காணப்படுவார்கள். ஊதியத்தை இவர்கள் ஏனைய நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் போல பெறவிரும்புவதில்லை. பல அளவில் தொண்டர்கள் சேவையில் ஈடுபடும் பொழுது முகாமைத்துவ பணி சிக்கல் நிறைந்ததாக காணப்படும். குறிப்பாக நிதி சேகரித்தல், பிரச்சாரம் செய்தல், பகிரங்க கூட்டம் வைத்தல், ஆலோசனை வழங்குதல் ஒரு சிலவாகும். இலாபம் உழைக்கும் துறைகளில் இத்தகைய செயற்பாடுகள் வேறு விதமானதாக அமையும்.

இலாப நோக்கமில்லாத முகாமையாளர்கள் அல்லது தலைவர்களுக்கும், அங்கு வேலை செய்யும் இலாப நோக்கமில்லாத தொண்டர்களுக்குமிடையில் எத்தகைய தொடர்புகள் (relationship) இருக்க வேண்டும் என்பது முக்கியமானதாகும். இங்கு தொண்டர்களால் வழங்கப்படும் சேவைகளுக்கும், கிடைக்கும் கொடுப்பனவுகளுக்கும் இடையில் ஒரு நேரடியான தொடர்பு அல்லது சமநிலை இருக்கமாட்டாது உழைப்பின் செயற்பாடுகள் யாவும் நன்கொடையாகவே காணப்படுகின்றன. அத்துடன் இந்த சேவைகளால் குறிக்கப்பட்ட நிறுவனம் அவர்களுக்கு கடைப்பாடுடையதாக இருந்து வருகின்றது.

நிறுவனங்களின் இயக்குநர் சபையில் அங்கத்தவர்கள் தொண்டர்களுக்குள் ஒரு பிரத்தியேக பிரிவாக காணப்படுவார்கள். நிறுவனத்தின் சட்டரீதியான, நிதி சம்பந்தமான அதன் சமூகப் பொறுப்பு யாவற்றையும் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டியிருக்கின்றது. Drunker (1990) Heimoves (1991) போன்றோர் இந்த சபைகளின் முக்கியத்துவத்தை சிறப்பாக எடுத்து விளக்கியுள்ளனர். ஒரு இடத்தில் இயங்கும் அந்த நிறுவனம் பூரணமான தகவல்களை பெறாத இடத்து அதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் அந்த பிரதேசத்துக்கு ஏற்றதாக அமையாது ஆகவே நிறுவனம் அப்பிரதேசத்தில் சிறப்பாக இயங்க வேண்டுமாயின் சபைக்கும் தொண்டர்களுக்கும், முகாமையாளர்கள், தலைவருக்குமிடையில் தகவல் பரிவர்த்தனை உட்பட சகல தொடர்புகளும் செவ்வனே இருத்தல் வேண்டும். பொதுவாக நன்நடத்தை சம்பந்தமான தொடர்புகள் அங்கு காணப்படும்.

Nonprofit management may often be ethically more complete than management in many other organizations.

### III. வாடிக்கையாளருடனும் பரந்த சமூகத்துடனுமான முகாமை தொடர்பு
### *Managing relations with clients and the Broader Society*

நிறுவனங்கள் ஒவ்வொன்றும் தம்முடைய அகச் சூழல் (Internal Environment) புறச்சூழல் (External Environment) தாக்கங்களுக்கு உட்பட்டு செயல்பட்டு வருகின்றன. வர்த்த ரீதியாக நோக்கும் பொழுது வெளிச் சூழலில் பொருட் பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, விளம்பரம் செய்தல், அரசாங்க சட்டங்களை மதித்தல் என்பன இடம் பெறுகின்றன. ஆனால் இலாப நோக்கற்ற நிறுவனங்களை நோக்கும் பொழுது இரு முக்கிய பண்புகள் வெளிச் சூழலில் காணப்படுகின்றன. வாடிக்கையாளர்களுடைய குமுறும் தன்மைகளும், பிழைகாணும் தன்மையும் (Vulnerability) அதிகளவு உயர்ந்த சமூகப் பொறுப்பும் முக்கியவையாகும்.

பாடசாலைகள், ஆலயங்கள், கழகங்கள் (Clubs) மருத்துவ நிலையங்கள் போன்ற ஒரு சில சமூகத்தில் உயர் மட்டத்தில் இருக்கின்றவர்களுக்கு மாத்திரம் சேவை செய்து வருகின்றன. அதே நேரத்தில் இதே போன்ற நிறுவனங்கள் சமூகத்தில் கீழ் மட்டத்தில் இருக்கின்ற மெலிவு, நலிவு அடைந்திருக்கும் சமூக மக்களை உயர் நிலைக்கு வருவதற்கு வசதி செய்து கொடுக்கும் நிறுவனங்களாகக் காணப்படுகின்றன. இந்த நிறுவனங்களாக காணப்படுகின்றன. இந்த நிறுவனங்களே முக்கியமானதும் போற்றக்கூடியதுமாகும். இவர்கள் வாடிக்கையாளருடன் மிக நெருங்கிய தொடர்பை வைத்திருப்பார்கள். செயற்பாடுகளும் ஏதொ ஒரு வகையில் உதவி புரிந்ததாக அமையும். நிர்வாக ஒழுக்கவியல் சம்பந்தமாக அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. இந்த நிறுவனங்களின் சேவை உட்கிடை (Implicit) வெளிக்கிடை (Explicit) ஒழுக்கவியல் அம்சங்களால் அதிகளவுக்கு கட்டுப்படுத்தப்படுகின்றன. இதன் விளைவாக குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில் சட்டரீதியாக அரசியல் திட்டத்தில் இருப்பதனால் இதில் சேவையாற்றுபவர்களின் பொறுப்பு மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. எது எவ்வாறு அமைந்திருப்பினும் கடப்பாடும் சமூகப் பொறுப்பும் மிகமுக்கியமான பண்புகளாக விளங்குகின்றன. என்பதில் எந்த விதமான எதிர் வாதங்களும் காணப்படுவதில்லை.

References:

Drunker P. F. managing the non Profit organization Practices and principals, New You, Harper Calling 1990

Tocqueville A. de Democracy in America, New year harper Collins 1966

Walters J. A And Bird F. the moral Dimension of organizational Culture" Journal of Business Ethics 1987, 6 (1) 15-22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**N. MYLVAKANAM**
**INTERNAL AUDIT UNIT**
**UNIVERSITY OF JAFFNA**

# தலைமைத்துவம்
# LEADERSHIP

தலைமைத்துவம் என்ற பதமானது இலகுவில் வரையறுக்க முடியாத சிக்கல் தன்மைகள் நிறைந்ததாகும். வெற்றிகரமான தலைமைத்துவம் என்பது குழுச் செயற்பாடுகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படலாம்.

தலைமைத்துவம் என்ற பதத்திற்குப் பலர் பல வகையான வரைவிலக்கணத்தை முன் வைத்துள்ளனர். CHESTER BARNARD என்பவர் பின்வருமாறு வரையறுத்துள்ளார்.

"தலைமைத்துவம் என்பது முகாமையாளர் ஒருவர் தனது ஊழியர்களைக் குறிப்பிட்ட வழியில் செயற்படத் தூண்டுவதனையும், அவர்களது நடத்தையில் செல்வாக்குச் செலுத்துவதனையும் கருதுகின்றது" இவ் வரைவிலக்கணம் தலைமைத்துவம் என்பது ஓர் குறிப்பிட்ட சூழ்நிலையில் சில நோக்கங்களை அடைவதற்காகத் தனிநபரது அல்லது குழுவினது நடத்தை அல்லது செயற்பாடுகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற செய்முறை என்பதைக் கருதுகின்றது.

### *தலைமைத்துவத்தின் அவசியமும் குறிக்கோளும்*
### *AIM AND IMPORTANCE OF LEADERSHIP*

தலைமைத்தவத்தின் குறிக்கோள் என்பது நிறுவனத்தில் இருக்கும் தலைவரைத் தவிர்ந்த ஏனையோர் எக்கருமத்தை ஆற்ற வேண்டும் என விதந்துரைப்பதும் அதன் வழியே நிறுவனநோக்கை இலகுவாக அடைய வைப்பதுமேயாகும்.

இத்தலைமைத்துவம் சீராக இயங்கவேண்டுமாயின் தலைவர் தூயவனாகவும், சாதுரியம் மிக்கவராயும் சிக்கனமானவராகவும் இருத்தல் வேண்டும்.

இத்தகைய ஓர் தலைவனே ஊழியர்மீது நேர்க்கணியச் செல்வாக்கைச் செலுத்தக் கூடியவராக இருப்பார். இங்கு நேர்க்கணியச் செல்வாக்கு என்பது உதவியாளர்கள் தலைவரது பணிப்புரையை மறுப்பின்றி ஏற்றுக் கொள்ள முன்வருவதாகும். அவ்வாறே உதவியாளரது கூற்றுக்களை தலைவன் ஏற்றுக்கொள்வதனை எதிர்க்கணியச் செல்வாக்காகும். இது போன்ற இரு நிலைமைகளும் ஓர் நிறுவன தலைமைத்துவத்திற்கு அவசியமானதாகும். தலைமைத்துவச் செயற்பாடுகள் பற்றி நாங்கள் அறிந்து கொள்வதற்கு தலைவருக்குரிய இயல்புகளும், பொறுப்புக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறந்த தலைவருக்கான பண்புகள்

1. தீர்மானம் மேற்கொள்வதில் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. பாரபட்சமற்றவராக இருத்தல் வேண்டும்.
3. உறுதித் தன்மையுடைவராக இருத்தல் வேண்டும்.
4. ஆபத்துக்கான ஏற்கத்தக்கவராக இருத்தல் வேண்டும்.
5. பிறர் தன்னை உதாரணம் காட்டி நடக்கக் கூடியவாறு நடந்து கொள்ளல் வேண்டும்.
6. நிறுவனத்தை தூர நோக்கில் பார்த்தல் வேண்டும்.
7. மனித நடத்தையை சரியாக விளங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
8. பேச்சுவல்லமையினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
9. நியாயமான முறையில் செய்தித் தொடர்பினை மேற் கொள்பவராக இருத்தல் வேண்டும். நல்ல அம்சங்களை மிகைப்படுத்திக் கூறுபவராகவும் பாதகமான அம்சங்களை குறைத்துக் கூறுபவராகவும் காணப்படக் கூடாது.
10. தொழிற்நுட்பத்திறன் கொண்டிருத்தல் வேண்டும்.
11. விடயங்களை முன்னெடுத்துச் செல்லும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.
12. விமர்சனங்களையும், பொறுப்புக்களையும் ஏற்கத்தக்கவராக இருத்தல் வேண்டும்.

### தலைமைத்துவத்தின் இயல்புகளும் வகைகளும்

தலைமைத்துவ இயல்பு என்பது ஒரு நிறுவனத்தில் காணப்படும் தலைவனுக்கும் உதவியாளர்களுக்கும் இடையில் எவ்வகையான உறவு பேணப்படுகிறதோ அதனையே தலைமை வகித்தல் இயல்பு என்பர். தலைமைத்துவத்திற்கு எவ்வகையான இயல்புகள் காணப்பட வேண்டும் என LEWIN, என்பவரது கருத்துப்படி தலைமைத்துவங்களாக

1. அதிகார மயத்தலைமைத்துவம் - Autocratic Leadership
2. ஜனநாயகத் தலைமைத்துவம் - Democratic Leadership
3. கட்டுப்பாடற்ற தலைமைத்துவம் - Laissez - Faire Leadership

இங்கு அதிகாரமயத்தலைமைத்துவமானது தலைவன் மிகக் கூடுதலான அதிகாரங்களை வைத்துக் கொண்டு உதவியாளர்களுக்கு மிகக் குறைந்த சுதந்திரத்தை வழங்க முன்வரும் ஒரு முறையாகும். அதாவது எத்தகைய ஆலொசனைகளையும் உதவியாளர்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளாது எல்லாம் தலைவனிடமிருந்து நேரடியாகப் பிறப்பிக்கப்படும் இத்தலைமைத்துவத்தினை HECKMAN என்பவர் இருபிரிவுகளாகப் பிரித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையாகும். இத் தொழிற்பாடுகள் குழுக்களின் தன்மைகளை வெவ்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் ஆராயப்படுகின்றது. ஆகவேதான் ஒரு குறிப்பிட்ட தலைவரானவர் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களுக் கேற்ப தமது தன்மையை மாற்றிக கொள்ளக் கூடியவராக இருப்பார். இவ்வடிப்படையில் தலைவரின் நிலைகளும் மாறுபட்ட வையாகும். ஆகவே தான் KRECH என்பவா தலைவரின் LEADER ROLES பற்றிக் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

1. திட்டமிடுவோனாகத் தலைவன் (The Leader as Planner)
2. நிபுணராகத் தலைவர் (The Leader as Expert)
3. முன் மாதிரியாகத் தலைவர் (The Leader as Exampler)
4. வெளியகக் குழுப்பிரதிநியாகத் தலைவர். (The Leader as External Group Represent tins)
5. கருத்தியல் கொள்கையாளராகத் தலைவர். (The Leader as Ideologist)
6. உள்ளக உறவுக் கட்டுப்பாட்டாளராகத் தலைவர் (The Leader as Controller of Internal Relations)
7. தனிப்பட்ட பொறுப்புகளின் பிரதிநிதியாகத் தலைவர் (The Leader as Substitute for Individual Responsibility)
8. குழுவின் எடுத்துக் காட்டாகத் தலைவர் ( The Leader as Symbol of the group)
9. நிறை வேற்றுவோனாக தலைவர். ( The Leader as Executive)
10. இடையீட்டாளராகவும் நடுவராகவும் தலைவர் (The Leader as Arbitrator and mediater)
11. கொள்கைகளை வகுப்பவராகத் தலைவர் ( The Leader as policy Maker)
12. பழிச் சொல் ஏற்போராகத் தலைவர் ( The Leader as Scapegoat)
13. வெகுமானங்களையும் தண்டனைகளையும் வழங்குபவராகத்த தலைவர். (The Leader as Purveyor of Rewards and Punishment)
14. மேலாண்மையுடையவராகத் தலைவர் ( The Leader as Father Figure)

***தலைமைத்துவத்தின் பண்புகள்***

ஒவ்வோர் நிறுவனத்திலும் காணப்படும் தலைவனானவன் தமது கடமைகளைச் சிறப்பாகச் செய்வதற்கு சில பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அவையாவன.

1. மற்றையோர் நிலைக்குள்ளாதல் - (empathy)
2. தன்னை தானே உயர்த்தல் - (Self Awareness)
3. நோக்க உணர்வுடையவனாதல் - (Objectivity)

ஆனாலும் ஓர் தலைவர் தனது கருமத்தை சிறப்புற ஆற்றுவதற்கு சில விசேட பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A) சர்வதிகாரத் தலைமைத்துவம் (Dictatorial Leadership)

B) ஏதேச்சதிகார தலைமைத்துவம் (Autocratic Leadership)

இங்கு சர்வாதிகார தலைமைத்துவமானது கடுமையான கட்டுப்பாட்டைக் கொண்ட தலைமையாகும். ஏதேச்சதிகார தலைமைத்துவமானது உதவியாளர்களுக்கு மிகக் குறைந்தளவு அதிகாரத்தை வழங்குவது மட்டுமன்றி அவர்களிடமிருந்து எதுவிதமான ஆலோசனைகளும் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

அடுத்து ஜனநாயகரீதியான தலைமைத்துவமானது தலைவர் அதிகாரங்களை வைத்துக் கொண்டு உதவியாளர்களுக்கு சுதந்திரம் வழங்குவதாகும். அத்தோடு கடுமையான கட்டுப்பாடுகள் இங்கு இல்லை. உதவியாளகர்களிடம் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதோடு இருவழித் தொடர்பு காணப்படும்.

கட்டுப்பாடற்ற தலைமைத்துவம் என்பது மிகக் குறைந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு உதவியாளருக்கு பெருமளவு சுதந்திரததை வழங்க முன்வருவதாகும். இதன் காரணமாக தலைவர் உதவியாளர் மீது கட்டுப்பாட்டை விதிக்காது ஓர் பார்வையாளராக தொழிற்படுவதாகும்.

தலைமைத்தவம் பற்றி RENSIS LIKERT என்பவரது கருத்துப்படி

1. சுரண்டல் தலைமைத்துவம்
2. இரங்கல் தலைமைத்துவம்
3. கலந்துரையாடல் தலைமைத்துவம்
4. பங்கு பற்றும் தலைமைத்துவம் (Participative Leadership)

இங்கு சுரண்டல் தலைமைத்துவம் என்பது கடுமையான கட்டுப்பாட்டை உடையதாகும். இதில் தலைவனது நோக்கம் எல்லாம் நிறுவனத்தின் இலக்கை அடைவதனை மையமாகக் கொண்டது. ஆனால் உதவியாளர் நலனில் எவ்வித அக்கறையும் அற்றதாகும்.

இரங்கல் தலைமைத்துவமானது தலைவன் பெருமளவு அதிகாரத்தை தொடர்ந்தும் வைத்துக் கொள்வதாகும். ஊதவியாளர்களுக்கு தேவையான தீர்மானம் எடுத்து நடைமுறைப்படுத்துமாறு உத்தரவிடுவதோடு எடுக்கப்பட்ட தீர்மானத்தில் மாற்றமும் ஏற்படாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடல் தலைமைத்துவத்தில் தலைவன் உதவியாளர்களுக்கு பெருமளவு சுதந்திரத்தை வழங்கி தான் குறைந்த அதிகாரத்தை வைத்துக் கொள்வதாகும். இங்கு உதவியாளரின் ஆலோசனை பெறப்பட்டே தீர்மானம் தலைவனால் எடுக்கப்படும்.

பங்குபற்றும்தலைமைத்துவம் என்பது தலைவர் பெருமளவு அதிகாரத்தை உதவியாளர்களுக்கு வழங்கி தான் பார்வையாளராக இருப்பதேயாகும். இதன் காரணமாக குழக்கள் உருவாக்கப்பட்டு தீர்மானம் எடுத்து நடைமுறைப்படுத்தவதும் தலைவரால் அங்கீகரிக்கப்படுவதுமாகும்.

"DOUGLAS MACGREGOR" என்பவர் தலைமைத்துவம் தொடர்பாக ஓர் புதிய கோட்பாட்டை அறிமுகப்படுத்தினார்.

ஏனையவர்கள் தலைமைத்துவத்தின் பண்புகள் தலைமை வகித்தலின் இயல்பிற்கு அடிப்படையாக அமையுமென கூறியபோதும் DOUGLAS ஆனவர் தலைவனது பண்புகள் ஆனது ஊழியரது பண்பிலேயே தங்கியிருக்கின்றது எனும் ஓர் புதிய கருத்தை வெளியிட்டிருந்தார்.

இவரது கருத்தற்பிரகாரம் ஊழியர்கள் ஒரு தலைவனுக்கு எந்தளவான ஒத்துழைப்பினை வழங்குவதற்குத்தயாராக இருக்கின்றனரோ அதனைப் பொறுத்து தலைமையின் இயல்பு இருவகையாக அமையும்.

A) X கொள்கை. (X Theory)

B) Y கொள்கை (Y Theory)

இங்கு X கொள்கையானது கடுமையான போக்காகவும் Y கொள்கையானது மென்மையான போக்கினையும் கடைப்பிடிப்பதாகவும் இதன்காரணமாக தலைமை வகித்தலின் இயல்பு அதிகாரத்தை விரும்பியவனாகவும், ஜனநாயகத்தை விரும்பியவனாகவும் தலைவனை உருவாக்க முடியும்.

கொள்கை X ஆனது ஊழியர்கள் சார்பாக 5 வகையான அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளது.

1. எதிர்பார்த்த விளைவை அடைவதற்கு ஊழியர்களுக்கு தண்டனையும் அபராதமும் விதிக்க வேண்டியிருக்கும்.
2. ஊழியர்கள் வேலை செய்வதற்கு விரும்பமாட்டார்கள்.
3. ஊழியர்களிடமிருந்து வேலையைப் பெற்றுக் கொள்வதற்கு கடுமையான மேற்பார்வையை அமுல்படுத்த வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஊழியர்களுக்கு நிறுவனத்தின் இலக்கினை அடைவதில் எந்தவிதமான அக்கறையும் இருக்காது.
5. ஊழியர்களிடம் கொடுக்கப்படும் பொறுப்புக்களைத் தட்டிக் கழிப்பதாக இருக்கும்.

இக் கொள்கையின் பிரகாரம் தலைவனே தீர்மானம் எடுத்து உதவியாளர்களுக்கு அறிவிக்கும் ஒரு வழியான தொடர்புமட்டுமேயிருக்கும். இக் கொள்கையில் அதிகாரமயப்படுத்தப்பட்ட தலைமைத்துவம் நிறைந்திருக்கும்.

அடுத்து Y கொள்கையானது ஊழியர்கள் தொடர்பாக நல்லெண்ணத்தைக் கொண்டதாக இருக்கும். இங்கு தலைவன் குறைந்தளவு அதிகாரத்தை தான் வைத்துக் கொண்டு ஊழியர்களுக்கு அதிகளவு சுதந்திரத்தை வழங்கிவிடுகின்றான். இதற்கான காரணம் உதவியாளர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் பண்புகள் இருப்பதாகக் கருதுவதனாலாகும்.

1. ஊழியர்கள் வேலை செய்வதனூடாகத் திருப்தியைப் பெற முற்படுவது இயல்பாகும்.
2. கடுமையான மேற்பார்வையானது ஊழியர்கள்களுக்குத் தேவையாக இருக்காது.
3. ஊழியர்கள் நிறுவனத்தின் இலக்கினை அடைவதற்கு அக்கறையுடையவர்களாக இருப்பார்கள்.
4. மேலதிக விளைவினைப் பெறமுற்படும் போது மட்டும் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு அறிமுகப்படுத்த வேண்டியிருக்கும்.
5. வேலைசெய்வதில் ஊழியர்கள் என்றும் அக்கறையுடையவர்களாக இருப்பார்கள்.

மேலும் இங்கிலாந்திலுள்ள பெரிய சிறிய கைத்தொழில் நிறுவனத்தினால் "ASHRIDGESTUDIES" என்பது அறிமுகப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. வெவ்வேறு கைத்தொழில் நிறவனங்களில் தலைமைத்துவம் வகித்தலை தொகுத்துக் கூறின் பின்வரும் இயல்புகள் இருப்பதாக கூறப்படுகிறது.

A - அறிவிக்கும் இயல்பு (Tell style)
B - கலந்தாலோசிக்கும் இயல்பு (Consultative Style)
C - இணைக்கும் இயல்பு ( Joins style)
D - திணிக்கும் இயல்பு ( Sells style)

இங்கு அறிவிக்கும் இயல்பு எனும் போது தலைவர் ஊழியர்களிடம் எதுவித ஆலோசனைகளையும் பெறாது தானே தீர்மானம் எடுத்து நடைமுறைப்படுத்துமாறு ஊழியர்களை பணிப்பதாகும். இங்கு ஊழியர்கள் கேள்வி கேட்கும் அதிகாரம் இருக்காது. சொல்லியதைச் செய்தல் வேண்டும். ஒரு வழித் தொடர்புமட்டும் இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்தாலேசிக்கும் இயல்பு என்பது தலைவன் ஓர் கணிசமான அளவு சுதந்திரத்தை ஊழியர்களுக்கு வழங்க வரும் நிலையாகும். தலைவர் தீர்மானம் எடுப்பதற்கு முன் ஊழியர்களுடன் கலந்தாலோசித்து அவர்களது ஆலோசனைகளையும் பெறப்பட்டு தீர்மானம் எடுப்பார்.

இனைக்கும் இயல்பானது தலைவன் உதவியாளர்களுக்கு பூரண சுதந்திரத்தினை வழங்கும் நிலையாகும். இதன்பிரகாரம் தலைவன் ஓர்பார்வையாளனாக இருப்பார். குழுக்கள் தன்னியக்கமாகச் செயற்படும் நிலையினைக் குறிக்கும்.

இங்கு திணிக்கும் இயல்பானது தலைவனே பெருமளவு அதிகாரத்தினை வைத்திருக்கும் நிலையாகும். இதன்பிரகாரம் ஊழயர்களிடம் எதுவித ஆலோசனையும் பெற்றுக் கொள்ளாது தானே தீர்மானம் எடுத்து உதவியாளர்களுக்கு அறிவித்துவிடுவான். எனினும் இங்கு கேள்வி கேட்கப்படும். தலைவனின் தீர்மானத்தில் எதுவிதமாற்றமும் ஏற்படமாட்டாது.

இதேபோல் மிக்சிகான் பல்கலைக்கழக ஆய்வு ASHIDGE ஆய்வு OHIOSTATE UNIVERSITY ஆய்வு போன்றவற்றைக் கூறலாம். மேலும் "TANNENBAUM" என்பவர் தொடர்ச்சியான தலைமைத்துவ இயல்பு எனும் கருத்தினை முன்வைத்துள்ளார்.

இவரது கருத்தின்பிரகாரம் உதவியாளர்களுக்கும் தலைவனுக்குமிடையே இருக்கின்ற அதிகாரத்தினையும் சுதந்திரத்தனையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இங்கு இவர் ஏழு படிகளில் விபரிக்கின்றார். மேலும் முதல் நான்கு படிகளில் தலைவனுக்கு அதிகளவு அதிகாரத்தை கொண்டுள்ளதனையும், எஞ்சிய மூன்று படிகளில் தலைவனானவர் ஜனநாயக முறையில் நடந்து கொள்வதனையும் உதவியாளர்களுக்கு சுதந்திரம் பெருமளவில் வழங்கப்பட்டுள்ளதனையும் கூறுகின்றது.

1. தலைவன் ஆனவன் தானே தீர்மானத்தினை எடுத்துவிட்டு உதவியாளருக்கு அதனை அறிவித்தல்.
2. தலைவனால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை விற்பனை செய்தல்.
3. தலைவனால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை முன்வைத்து கேள்விகளை எதிர்பார்த்தல்.
4. தலைவனது தற்காலிகமான தீர்மானம்.
5. தலைவன் பிரச்சினைகளை உதவியாளர்களிடம் முன்வைத்து அவர்களது ஆலோசனைகளைப் பெற்று தீர்மானத்தினை மேற்கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தலைவன் ஓர் எல்லையை நிர்ணயித்து குழுக்களைத் தீர்மானம் எடுக்குமாறு வேண்டுதல்.

7. தலைவன் குழுவின் விருப்பப்பத்தின் பிரகாரம் தீர்மானத்தினை எடுத்து அக்குழுவினையே செயற்படுத்துமாறு செய்தல்.

இவ்வாறு தலைமைத்துவம் தொடர்பான கருத்துக்கள் நாளிற்கு நாள் புதிய புதியவர்களினால் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

பிறரை வழிநடத்தும் எவருக்கும் தலைமைத்துவம் மிகவும் இன்றியமையாததாகும். அவ்வகையில் முகாமையாளருக்கு தலைமைத்துவம் அவசியமாகின்றது. ஒருவரது தலைமைத்துவமானது தலைவர் முயற்சியின்தன்மை, நிலைமை, பணியாளர்கள் எனும் மாறிகளுக்கு ஏற்ப மாற்றமடையும். ஓர் நிறுவனத்தின் வெற்றியானது சிறப்பான தலைமைத்துவத்திலேயே தங்கியிருக்கின்றது.

உசாத்துணை


1. Management Theory and practice by G. A. Cole
2. Diploma in Management Program me Level -3, Supplementary Materials, - Open University of Sri Lanka.
3. Newton John W and Davis Keith Organizational Behavior, Human Behavior at work. 10 th Edition The Maigre Hill Pub 1989.
4. Human Recourse Management David A. Daikons.
5. Organizational management systems process Earth F. Lungen




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.க.த. கிருஸ்ணராசா J.P.
ஓய்வுபெற்ற கிராம அலுவலர்.

# எங்கள் ஊர்

*அறிமுகம்*

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கணிகன் பூங்குன்றனார் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னரே சொல்லியிருக்கிறார். இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் புத்திஜீவிகள், மகான்கள், பெரியோர்கள் பலரும் தங்கள் தங்கள் ஊர், நாடு என்றெல்லாம் காலத்துக்குக் காலம் வெளிப்படுத்திக் கொண்டே வருகிறார்கள். பழந்தமிழ் கவிஞர் சொன்னது சான்றோர்க்குப் பொருத்தமாக இருக்கலாம். எங்களைப் போன்ற பெரும்பான்மை வர்க்கத்திற்கு சாத்தியமாகுமா? என்னுடைய ஊர் என்று நான் கருதும் ஊர் என் ஆதிக்கத்திற்கு உட்பட்டதன்று.

"எங்கள் ஊர்" என்று சொல்வதற்கு அப்படிப்பட்ட ஊர் இருந்தாலல்லவா அதைப்பற்றி எழுதலாம்? அப்படியில்லாமல் யாரும் இருப்பார்களா என்று கேட்கலாம். இருக்கக் கூடும் என்பதற்கு நானே அத்தாட்சி.

எவருக்கும் தங்கள் சொந்த ஊர் என்றால் மனதில் இன்பக்கிளர்ச்சி வருவது இயல்பு. அவ்வூரில் சிலகாலமே வாழ்ந்தாலும் இளமைப்பருவ நினைவுகள் கருக்கொள்ள தொட்டிலாகவும், அரங்கமாகவும் அமைவதால் அதன் காட்சிகள் பசுமையாக உள்ளத்தில் பதிந்திருக்கும். இதனால் உண்டாகும் அநுபவங்கள் எல்லோர்க்கும் பொதுவானது தான்.

"பார்க்கப்போனால் நம்முடைய பிறப்பு என்பது ஒரு தூக்கத்தின் ஆரம்பம். இந்தத் தூக்கத்திலே எங்கேயிருந்து வந்தோமென்பதை மறந்து விடுகிறோம். இந்த உலகத்து வாழ்க்கையை நாம் தொடங்கும் போது, நம்மோடு இங்கே உதயமாகிறதே, ஆத்மா என்கின்ற நட்சத்திரம், அது எங்கேயோ வெகுதொலைவில் உள்ள தேசமொன்றில் அஸ்தமித்த பிறகுதான் இங்கு உதயமாகிறது. நம்முடைய வீடும் அங்கே தான். அதன் பெயர் "கடவுள்" என்று ஆங்கிலக்கவிஞரான "வர்ட்ஸ்வொர்த்" கூறியிருக்கிறார். ஆனால் அத்தகைய ஊரைப்பற்றியோ வீட்டைப்பற்றியோ நம்மால் பேசமுடியாதே. தூக்கம் என்று கவிஞர்குறிப்பிடும் இந்த வாழ்க்கைதான் நமக்குத் தெரிந்தது. அதுவும் பரிபூரணமாகத் தெரிவதில்லை. விழித்துக் கொண்டு நமது ஊருக்குப் போய்ச் சேரும்வரை வாழ்க்கை நாடகத்தின் அரங்கமாகவும், கொழுகொம்பாகவும் இந்த உலகத்தில் அமைந்திருக்கும் ஒருமூலையை நமது ஊர் என்று சொல்வதில் என்ன தட்டு?

பிறவிப்பெருங்கடலில் இருந்து தப்பித்துக் கொள்ள வழிபிறக்காது "ஆவரங்கால்" என்னும் பழம்பெரும் பதியில்என் அன்னை என்னை ஈன்று புறந்தந்தாள். சின்னஞ்சிறிசாக மண்ணளைந்து சிறுகுடில் கட்டி விளையாடி புழுதியளைந்து திரிந்தது இந்த ஊரில் தான். கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டதும் இந்த ஊரில் இருந்துதான் மாணவபருவத்தில் கிராமசபை உறுப்பினராக என்னை தெரிவு செய்த கிராமமும் இதுதான். பொதுச்சேவையில், அரசியலில் இன்னவன் இனியான் என்று அறியா என்னை அறிமுகம் செய்த கிராமமும் இதுதான். இவ்வாறு ஒரு கால்நூற்றாண்டு, தந்தையும் தாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்து குலாவி இருந்ததும், முத்தையர் ஆயிரம் ஆயிரம் ஆண்டு வாழ்ந்து முடிந்ததும், அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும் ஆகிய எங்கள் ஊர் வாழ்க்கையை சுவைத்து மகிழ்ந்து, குலவிக் கொண்டாடியது மகிழ்ந்திருந்தது மனதில் பசுமையாக இருக்கிறது.

1963ன் ஆரம்பத்தில் அரச சேவையில் உள்ளடக்கப்பட்டதோடு இதுவரை பல்வேறு கிராமங்களில் சேவையில் இருந்தபோது அக்கிராமங்களையே நிரந்தரவதிவிடமாகக் கொண்டிருந்தேன். எனினும் அடிக்கடி "எங்கள் ஊர்" அழைத்தபோதெல்லாம் மண்ணின் மைந்தனாக உலாவருவதில் மகிழ்ச்சி எல்லையறக்குலவி விளையாடும்.

தம்பி சிவராசாவின் திடீர் மறைவு குறித்த நினைவு மலருக்கு ஆக்கம் ஒன்று தரவேண்டுமென்று வலியுறுத்திக்கேட்டுக்கொண்டார்கள். அதுவும் ஆவணமாகப் பேணக்கூடிய ஊரைப்பற்றிய வரலாற்று அம்சங்கள் கொண்டதாக அமைந்தால் இன்றைய, எதிர்கால சந்ததியினருக்கு பயனுள்ள பணியாக இருக்குமென்று தெரிவித்தார்கள். எமது ஊருக்கு ஓர் ஊருணியாக அமைந்திலங்கும் சிவசக்தி அறங்காவல் குழுவின் தலைவரின் நினைவுமலர் என்பதால் மிகுந்த தயக்கம் குடிகொண்டிருந்த போதும் ஏற்றுக் கொண்டேன்.

***ஊர்ப்பெயர்***

தமிழர் தம் நிலப்பரப்பை ஐந்திணையாக வகுத்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை என்பதாக அது இருக்கிறது. ஆரம்பத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாக வகுக்கப்பட்ட நான்கு நானிலம் என்ற பெயர் பூமிக்கு அமைவதாயிற்று. ஆயினும் பிற்காலத்தில் பாலையும் ஒரு தனிநிலமாகக் கொள்ளப்பட்டது.

முல்லை:–

பண்டைக்காலத்தில் மரம் செறிந்த காட்டுப்பிரதேசங்கள் அடர்ந்திருந்தன. காடு கொன்று நாடாக்கப்பட்டது. அந்நாளிலிருந்து அழிபட்ட காடுகளின் தன்மையை ஊர்ப்பெயரால் உணரலாம். மரஞ்செடிகள் அடர்த்தியாக வளரும் இடம் தோப்பு என்றழைக்கப்படும் தோப்பின் அடிப்படையில் பிறந்த ஊர்களும் உண்டு.

மருதம்:–

நிலவளமும், நீர்வளமும் உடைய நாட்டில் பயிர்த்தொழில் பாங்குடன் நடந்து வருகின்றது. ஆற்று நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்தி பயிர்செய்து மருதநிலமாக்கினார்.

குறிஞ்சி:–

மலையும் மலைசார்ந்த இடத்தையும் குறிஞ்சி என்று வகுத்தனர்.

நெய்தல்:–

கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல் என்று பெயர்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலை:–

பழங்காலத்தில் பாலை ஒருநிலமாகக் கருதப்படவில்லை. "கடுவேனிற் காலத்தில் குறிஞ்சியும் வறண்டு கருகிப் பாலை என்னும் படிவம் கொள்ளும்" என்று சிலப்பதிகாரம் பேசுவதால் காலகதியில் பாலையும் ஒரு தனிநிலமாகக் கொள்ளப்பட்டது.

ஆற்றுநீரை நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தினார்கள். பண்டைக் காலத்தில் அணைக்கட்டுகளால் தடுத்து கால்வாய் வழியாக ஏரிகள் குளங்கள் நிரப்பப்பட்டன. இப்படியான அணைகளின் அணித்தாகச் சில ஊர்கள் தோன்றின. இவ்வாறே கால்வாய்களின் அருகேயும் தோன்றிய ஊர்கள் உண்டு. இயற்கையான நீரோட்டத்திற்கு ஓடை என்பது பெயர். கால்வாய்களிலும் குளங்களிலும் கட்டப்பட்ட மதகுகள் மடை என்று அழைக்கப்படும்.

ஏரிக்கு அடுத்தபடியாக பயிர்செய்கைக்கு உதவுவது குளம். குளம் என்னும் முடிவுடைய ஊர்ப்பெயர்களும் அனேகமுண்டு.

திராவிட தேயத்துப் பழம்பெயர் பெற்றிருந்த தானங்கள், சாவகப்பெயர் கொண்ட தானங்கள், சிங்களப்பெயருள்ள தானங்கள் புதுப்பெயர் பெற்ற தானங்கள் என வகுத்து வடமாகாணத்திலுள்ள இடப்பெயர்களின் வரலாற்றினைப் கல்லடி வேலுப்பிள்ளை எழுதி வெளியிட்டுள்ளார்.

வண. ஞானப்பிரகாச அடிகளார், திரு. எஸ். டபிள்யூ. குமாரசாமி ஆகியோர் இடப்பெயர்களுக்கு "சிங்கள்மூல" மாகக் கூறியவற்றை யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் இணைத்து அவற்றுக்கு நிலைபேறு தந்தவர் கல்லடி வேலுப்பிள்ளை ஆவார். என்று யாழ்ப்பாண மாவட்ட இடப்பெயர்வு ஆய்வு என்னும் நூலில், தமது வெளியீட்டுரையில், கலாநிதி இ. பாலசுந்தரம் குறிப்பிட்டுள்ளார். நீர்நிலைப் பெயர்கள், நிலைப்பெயர்கள், குடியிருப்புப் பெயர்கள் ஊராட்சிப் பெயர்கள் தாவரப் பெயர்கள், சுட்டிய இடங்கள், சிறப்பு நிலைப்பெயர்கள் என கலாநிதி இ.பாலசுந்தரம் இடப்பெயர் வரலாற்றினை பகுப்பாய்வு செய்துள்ளார்.

திரு. கதிர். தணிகாசலம் எழுதிவெளியிட்ட "தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும்" என்ற நூலில் "பொதுவாக இடப்பெயர்கள் பொதுவகை, சிறப்புவகை என இரண்டு வகையில் அமையும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

*ஆவரங்கால்*

"இஃது ஆவரை கால் என்னும் இரு சொற்களான் ஆகிய தொடர் என்பது வெளிப்படை ஈண்டுக்கால் என்பது தோட்டக்கால் என்ற தொடரிற்போல நிலத்தினை உணர்த்துவதாம். கால் என்னும் கிழவி இடம், வனம், வழி, வாய்க்கால் என்ற இப்பல இடப்பொருளிலே இலக்கியங்களிற் பிரயோகிக்கப்பட்டிருத்தல் காண்க" இவ்வாறு ஆசுகவி கல்லடி க.வேலுப்பிள்ளை இடப்பெயர் வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கதிர. தணிகாசலம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

"கால் : தங்குமிடம்; ஆய+ வாரம் + கல் (ஆயக்காசு, மீயக்காசு என்று வரிகள் அக்காலத்தில் வசூலிக்கப்பட்டன). ஆ+உரோஞ்சு+கால் = ஆவுரோஞ்சுக்கால், ஆவரங்கால் என மருவிற்று"

***வாழ்வியலில் ஆவரங்கால்***

ஆவரங்காலில் குடியிருப்புகள் அடர்ந்த மேற்குப்பகுதி நவற்கிரிவரை நீண்டுபரந்திருக்கிறது. பருத்தித்துறை - யாழ்ப்பாணம் நெடுஞ்சாலைக்குக் கிழக்கேயுள்ள பகுதி கப்புதுவரை பரந்துள்ள புன்செய் நிலப்பரப்பாகும். கப்புதுவை கிழக்கெல்லையாகக் கொண்ட பெருநிலப்பரப்பு புன்செய் நிலங்களோடு, கடலேரி, சிறுகுளங்கள், பாரிய மேய்ச்சல் தரவையைக் கொண்ட வளமான பகுதியாக இருந்தது. ஆவரங்காலின் பிரதான இந்து மயானமான "கரதடி" இங்கே தான் அமைந்துள்ளது. காரைக்கூடல் வயிரவசுவாமி கோயில்வரை தெற்கே புத்தூரையும் வடக்கே அச்சுவேலியையும் எல்லைகளாக கொண்டிருந்தது. பயிர் செய்கையே மக்களின் பிரதான தொழில். கால்நடை வளர்ப்பு தமது உணவுத்தேவையின் ஒருபகுதியையும் பயிர்ச்செய்கைக்கான ஊட்டத்தையும் தன்னிறைவு கொண்டிருந்தது. வீட்டுக்கு வீடு மாடு வளர்ப்பும் மாட்டுப்பண்ணைகளும் இருந்திருக்கிறது. தொண்டமானாறு - ஆனையிறவு கடலேரி திட்டத்தினால் ஐயாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு நன்னீர் வளம் கிடைக்க வாய்ப்பாக ஆரம்பிக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட அணைக்கட்டுகளினால், திட்டம் கைவிடப்பட்டதால், முற்றிலும் பாதிப்புக்குள்ளானது. நெல் விளைந்த பூமி கட்டான் தரையாக மாறியுள்ளது. இந்நிலைமைக்கு முன்னருள்ள நிலைப்பாட்டில் இக்கிழக்கு பெருநிலப்பரப்பு மீன்பிடி, உப்பு உற்பத்தி, நெற்சாகுபடி, கால்நடை வளர்ப்பு சிறுதாணியச் செய்கை, தென்மராட்சி, வடமராட்சி பண்டமாற்று போன்ற ஜீவாதார வளங்களை அள்ளிக்கொடுத்து இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது ஏற்பட்ட உணவுப்பற்றாக்குறையைக்கூட கண்டு கொள்ளாமல் தன்னிறைவு கொண்டிருந்தது. கூட்டுக்குடும்ப வாழ்க்கை பரவலாக செறிந்திருந்தது. இதனாலோ என்னவோ ஆவரங்கால் - கப்புது பேரொழுங்கையை மாட்டொழுங்கை என அழைப்பது இப்போதும் வழமையில் உள்ளது. மாடு என்பது செல்வம் எனப் பொருள்படும். ஆநிரை அணியணியாக சென்று மீளும் பாதையெனவும் கொள்ளலாம்.

பண்டைக்காலத்து வாழ்க்கைக்கு வேண்டிய வாழ்வாதார முறைமையும் புவியியல் அமைப்பையும் நோக்குமிடத்து ஆ + அரங்கு + கால் எனக் கொண்டு ஆவரங்கால் எனப்பெயர் வழமைக்கு வந்ததெனக் கொள்ளல் காலப்பொருத்தமானதோ என்பதை ஆய்வாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

"ஊர்ப்பெயர் உட்பொருள் விளக்கம்" என்ற நூல் 1923ல் மல்லை இ. நமச்சிவாயபிள்ளையினால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டது. அந்நூலில் ஆவரங்கால் இடம்பெறும் கவிதையை கீழ்க்காண்க:-

"மட்டுவிலானை மடக்கிப்பரன் றொண்டை யாற்றின்மதக்
கட்டுடையார் துணைவேண்டா நந்தாவிலைக் கண்டிடலாம்
வட்டுலுவார் பண்ணைதோய்வாரிற் றாழ்த்திடின் வல்லைபறை
கொட்டடி கேட்டுமுன் னாவரங்காலர் கைக்கொள்ளுவரே"

பெண்ணாசையை வெறுத்துச் சிவதொண்டு செய்துவரின் மார்க்கவிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழுவவேண்டியதில்லை, மோட்சமடையலாம் அன்றிச் சிற்றின்பங்களில் அமிழ்ந்திச் சிவதொண்டை பின்போட்டால் சடுதியில் மரணம்வரும் என்பது இக்கவிதையின் உட்பொருள் மட்டுவில், தொண்டமானாறு, கட்டுடை, நந்தாவில், வட்டுக்கோட்டை, பண்ணை, வல்லை, கொட்டடி, ஆவரங்கால் இவ்வூர்ப் பெயர்கள் மறைந்து நிற்றல் காண்க.

***யாழ்ப்பாணத்து பெரியார் வரிசையில்............!***

யாழ்ப்பாணத்துப் பெரியமனிதர் வரிசையில் இலைமறைகாய்போல் ஆவரங்காலைச் சேர்ந்த சிலரும் வரலாற்று ரீதியாகப் பேசப்பட்டிருக்கிறார்கள். 18ம், 19ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தும் பிற்காலத்தில் வாழ்ந்தும் இருந்த, ஆவரங்காலுக்குப் பெருமைசேர்த்த பெரியவர்கள் சிலரைப் பற்றிக் கிடைக்கக்கூடிய செய்திகளைத் திரட்டித்தருவதென்பது கடினமானதொன்றாகும். வரலாற்று அடிப்படையில் அவரவர் முழுவிபரங்களையும் தரவல்ல அத்தகைய ஆவணங்கள் எதுவும் கிடைத்திலது. இருப்பினும் கிடைக்கப்பெற்ற விபரங்களின் அடிப்படையில் எம்பின்னவர் நலன்கருதி அறிமுகவுரை போலவேனும் வெளிக்கொணர்தல் பயனுள்ள பணியாக அமையலாமெனக்கருதி எமது ஊருக்குப் பெருமை சேர்த்த பெரியார்களுடன், மணிமகுடமாக அணிசெய்த ஆலயங்கள், கல்விச்சாலைகள், பொதுநிறுவனங்கள் போன்ற முக்கியமான அமைப்புக்கள் சம்பந்தமாக மேலோட்டமாகவேனும் வெளிக்கொணர்ந்து ஆவணப்படுத்தல் காலத்தின் கட்டாயதேவை எனக்கருதப்படுகிறது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரால் 1892ல் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆவணமாகக் கருதப்படும் ஆலயப்பதி ஆவேட்டில் பிரசித்திபெற்ற ஆலயங்களை அமைத்தோர் முகாமையாளர் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

**இராமர்**

ஆவரங்கால் சிவன் கோயிலை 1808ம் ஆண்டில் அமைத்து அதன் முகாமையாளராக இருந்தவர் இராமர் என்பவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆறுமுகத்தார் பூதத்தம்பி**

ஆவரங்கால் வைரவகோயிலை 1855ம் ஆண்டு அமைத்து அதன் முகாமையாளராக இருந்தவர் ஆறுமுகத்தார் பூதத்தம்பி என்று அதில் கண்டிருக்கிறது.

**பரமசாமிஐயர் இலட்சுமியம்மா**

கண்ணகை அம்மன் கோயிலை 1874ம் ஆண்டில் அமைத்து அதன் முகாமையாளராக இருந்தவர் பரமசாமிஐயர் இலட்சுமியம்மா என பதிவு செய்யப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமநாதமுதலியார்

யாழ்ப்பாண வைபவகௌமுகி என்னும் யாழ்ப்பாண வரலாற்று நூலினை ஆசுகவி கல்லடி க.வேலுப்பிள்ளை 1918ல் வெளியிட்டார். அந்நூலில் யாழ்ப்பாணத்து பெரியமனுஷர் வரிசையில் இராமநாதமுதலியலியார் என்பவரைப் பற்றி எழுதியிருக்கிறார். "இவர் ஆவரங்காலில் உள்ளவர். இவர் மகன் வினாசித்தம்பி உடையார். இவர் மகனே (Peterson) சுப்பிரமணியம். இவர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைச் சாஸ்திர வித்தியாசாலையிலே கற்று அரங்கேறியவர். ஆங்கில பாஷையில் மாத்திரமல்லத் தமிழ்ப்பாஷையிலும் மிக்க ஸ்திரம் படைத்தவர். அனேக அலங்காரமான தனிப்பாக்களை இயற்றினவர். இவர் புத்திரர்

01. அம்பலவாணபிள்ளை உபாத்தியாயர்
02. நமச்சிவாயம் (நல்லதம்பி)
03. செல்லையா

இவரில் பிற்கூறப்பட்டார் இருவரும் பரகதியடைந்தனர்" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆவரங்கால் நமச்சிவாயப்புலவர்

ஆசுகவி மேலும் தொடர்ந்து எழுதுகிறார் பரகதியடைந்த இருவருள் ஒருவரான நமச்சிவாயம் என்பவர் இலக்கண இலக்கியங்களிலும், சங்கீத சாஸ்திரத்திலும் யாழ்ப்பாணம், இலங்கை, இந்தியா ஆதியாமிடங்களிலுள்ள பலராலும் வியந்து பாராட்டப்பட்டவர்" இவரே ஆவரங்கால் சு. நமச்சிவாயப்புலவர் ஆவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் "ஆவரங்கால் தம்பி" என்று அன்புடன் அழைக்கப்பட்டவர். நாவலர் சிவபதமடைந்த நாளன்று ஆயிரக்கணக்கில் அறிஞர் பெருமக்கள் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டனர். இவர்களில் நமச்சிவாயப்புலவரும் ஒருவர். தமது அஞ்சலியை 18 செய்யுட்களில் யாத்து அக்கணத்தே வெளிப்படுத்தி சகலரையும் வியப்பில் ஆழ்த்தினார் என்று சொல்லப்படுகிறது. முறுகியல் இன்பம் பயக்கும் அக்கவிதைகளில் ஒன்று:-

"தேறுமுது சர்வகலை தேர்ந்த ஸ்ரீலஸ்ரீ
யானுமுக சாமியே யப்பனே - கூறுமுதற்
சற்குருவே சீனியே சர்க்கரையே கற்கண்டே
யிக்குவல யம்விடுத்த தேன்"

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை நமச்சிவாயப்புலவரின் மாணாக்கர். உதயதாரகை பத்திராதிபரும் யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் ஆசிரியருமாகிய அ.சதாசிவம்பிள்ளையால் 1886ம் ஆண்டு வெளியிடப்பட்ட பாவலர் சரித்திர தீபகம் என்ற நூலில், "நமச்சிவாயப்புலவர் கஹம்சதாப்த காலத்திருந்தவர். உலகம்மை அந்தாதி, திருவரங்க சந்நிதி என்னும் இரண்டினுக்கும் இவர் ஆக்கியோர். மதாசாரத்தால் இவர் சைவராயினும் சிறிரங்கப் பதியாகிய நாபாபிமானி ஆதலிற் பிந்தினதை இயற்றினார்" என்ற குறிப்பு காணப்படுகிறது.

## தம்பிசிவகுரு

ஆவரங்கால் கணபதிப்பிள்ளை சிவகுரு இலங்கைக் கூட்டுறவுத்துறையில் பிரபல்யம்பெற்ற கூட்டுறவாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். யாழ்ப்பாண


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலையாள புகையிலைச் சங்கத்தின் ஆரம்பத்திற்கும் வளர்ச்சிக்கும் உழைத்தவர். அதன் முக்கிய நிருவாகிகளில் ஒருவராக பலகாலம் தன்னலமற்ற சேவையாற்றியவர். வலிகிழக்கு கூட்டுறவுப் பண்டகசாலைகள் சமாசத்தின் தலைவராகவிருந்து கூட்டுறவுத் துறையைக் கொடிகட்டிப் பறக்க வைத்தவர்.

ஆவரங்கால் வங்கி ஒழுங்கையில் அமைந்துள்ள பாரிய களஞ்சியக் கட்டடங்களைக் கொண்ட விஸ்தீரணமான காணியும் தற்போது அச்சுவேலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியையும் நன்கொடையாக வழங்கிய பெரியவர். ஆவரங்கால் சிவன்கோயில் மூலவர் அவரது குலதெய்வம், நித்திய வழிபாட்டாளரில் முதன்மையானவர். ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளிலும் நன்கு கற்றவர்.

**வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை**

இடதுசாரிக்கொள்கைகளை கடைப்பிடித்த வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை இலங்கை நிர்வாகசேவையில் அதியுயர் பதவிகளை வகித்தவர். மேல்நாட்டு மோகம் தலைவிரித்தாடிய காலமாகவும் தேசிய உடை அணிவது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்த வேளையிலும் தமது செயலகத்திற்கு தன்னந்தனியனாக தேசிய உடையில் கடமைக்குச் சென்று தமது தனித்துவத்தை துணிச்சலுடன் நிலைநாட்டியவர். அவருக்கு இருந்த ஆங்கில தமிழ் சிங்கள மொழித்திறமை பலமேடைகளை அலங்கரிக்க வைத்தது. புத்தூர் நிலாவரை நீர்ப்பாசனத்திட்டத்தினை ஆரம்பித்து வைக்க அப்போதய பிரதமர் டட்லி செனநாயக்க வருகை தந்திருந்தார். பிரமாண்டமாக நடைபெற்ற அந்த விழாவில் ஆங்கிலத்தில் கச்சிதமாக வரவேற்புரை நிகழ்த்தி சகலரது பாராட்டுக்களையும் பெற்றவர். இலங்கை நிர்வாக சேவையில் அதியுயர் பதவி வகித்த ஆவரங்கால் வாசிகளில் இவர் முதலாவது மனிதர்.

**மயில்வாகனம் அருணாசலம்**

ஆவரங்கால் சிவன் கோயில் முகாமையாளராக சுமார் அரை நூற்றாண்டுக்குமேல் அரும்பணியாற்றியவர். கோயிலின் சொத்துக்களை நன்முறையில் பராமரித்து கோவிலின் நித்திய நைமித்திய பூசைகள் திருவிழாக்களை ஒழுங்குபடுத்தி திறம்பட நிர்வகித்தவர். பாரிய பரப்பளவுள்ள 104 காணிகளின் சொந்தக்காரராக இருந்த பெரும்நிலக்கிழார். நூற்றுக்கணக்கான ஏழைமக்கள் அன்றாட வாழ்வுக்கு வாரிவள்ளலாகத் திகழ்ந்தவர். குடுகுடு கிழவனாக இரவுத்திருவிழா முடிவுற்று இரவு வீடு செல்லும் போது சிலர் தீப்பந்தங்கள் சூழ அவரை வீட்டுக்கழைத்துச் செல்லும் காட்சி அவரது தயாளகுணத்திற்கும் ஆளுமைக்கும் உரைகல்லாகும். அவர் மரணமானபின்புதான் கோயில் வழக்குகளும் தர்மகர்த்தா சபையும் தலைகாட்டின.

புராணபடனங்கள் வருடம் பூராவும் ஒழுங்காக நடைபெறும். இக்காலங்களில் புராணபடணம் வாசிக்கவும் உரை சொல்லவும் தூரஇடங்களில் இருந்தெல்லாம் விற்பன்னர்கள் வருவார்கள். கோயிலிலே தங்கியிருப்பார்கள். இவர்களுக்கு அனுசரனை வழங்க பலவீடுகளில் முகாமையாளர் அருணாசலம் ஒழுங்கு செய்திருப்பார். ஒவ்வொரு படனமுடிவிலும் ஒன்றுகூடல் ஒன்று முகாமையாளரால் ஏற்படுத்தப்பட்டு நிறைவான மதியபோசனவிருந்து இடம் பெற்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அருணாசலம் சின்னத்துரை

ஆவரங்கால் செட்டியகுறிச்சியைச் சேர்ந்த ஒரு கனவான் மலாயன் பென்சனியர். ஆங்கில மொழியிலும்கணக்கியலிலும் பாண்டித்தியம் உள்ளவர். கதர் உடை தரித்து உள்ளும்புறமும் காந்திய நெறி நின்றவர். இரண்டாவது மகாயுத்தத்தைத் தொடர்ந்து உணவுப்பங்கிட்டுமுறை தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. ஊருக்கொரு சங்கக்கடை தொடக்கப்பட்டது. ஆவரங்கால் சங்கக்கடை நிருவாகத்தில் பொருளாளராக கூட்டுறவுக்குள் கொண்டு வரப்பட்ட அன்னார் வலி கிழக்கு ஐக்கியபண்டகசாலை சங்கங்களின் சமாசத்தின் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டு அரும்பணியாற்றியவர். கோடிக்கணக்கான நிதியை கையாண்டபோதும் ஒரு சததத்தையேனும் கையாடல் செய்யாதவர். பொருளாளரே அப்போதைய காசாளர் சமாசத்திற்கும் வங்கிகளுக்கும் பஸ்மூலமே பெருந்தொகை பணத்துடன் பிரயாணஞ் செய்வார். தினமும் இது நடைபெறும். சிலசமயங்களில் பாரஊர்தியைப் பயன்படுத்துவார். பிரயாணப்படியைக்கூட பெற்றுக் கொள்ளமாட்டார். எங்கள்சங்கக்கடை சிலசமயம் இரவு 10 மணிவரை திறந்து வியாபாரம், பங்கீடு நடைபெறும். இக்கணம்வரை பொறுத்திருந்து கணக்கை செவ்வனே பார்த்து பணத்தை எடுத்துச் செல்வார். தமிழ்மொழி, தமிழர் சுயாட்சி சார்ந்த கருமங்களில் அதீத பற்றுக் கொண்டவர்.

### திண்ணைப்பள்ளி ஆசிரியர்கள்

பிள்ளை உபாத்தியாயர் என்ற பெயரில் அழைக்கப்பட்ட ஒருவரும், கனகசபை உபாத்தியாயர், கந்தையா உபாத்தியாயர் ஆகியோரும் திண்ணைப்பள்ளிக்கூடங்கள் அமைத்து கல்வி புகட்டியிருக்கிறார்கள். இதில் கனகசபை உபாத்தியாயர் தமிழ் ஆங்கில மொழிகளில் தேர்ச்சியுள்ளவராக இருந்து ஆவரங்கால் சைவப்பாடசாலை என ஒன்றை நடாத்தியிருக்கிறார். கந்தையா உபாத்தியாயர் தமிழ் இலக்கிய இலக்கண வித்தகராக இருந்து பல உயர்நிலை மாணவர்கள் கல்விக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்.

### பண்டிதர் சுப்பிரமணியம்

பண்டிதர் சரவணமுத்து சுப்பிரமணியம் பயிற்றப்பட்ட தமிழாசிரியர். வடமொழியிலும் தமிழ்மொழியிலும் பாண்டித்தியம் பெற்றவர். வடமொழியிலிருந்து பல நூல்களை கவிதைவடிவிலேயே தமிழில் யாத்தவர். பல இந்து ஆலயங்களுக்கு அந்தாதிகள், திருவூஞ்சல் பாடல்களும் இயற்றிவழங்கியவர். சைவப்புலவர் புத்தூர் ஸ்ரீகோமாஸ்கந்தக்கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். 03. 01. 1924ல் பிறந்தவர். மறைவு 24. 07. 2005

**சித்த ஆயுள்வேத வைத்தியம்**

சுமார் ஒரு நூற்றாண்டுக்காலமாக சித்த ஆயுர்வேத வைத்திய சிகிச்சை ஆவரங்காலில் நிலைகொண்டு கிளைபரப்பி நின்ற வரலாற்றுச் சிறப்புடையது. உள்ளூரில் ஆங்கில வைத்திய சிகிச்சை வசதிகள் அருகியிருந்த வேளையில் பாரிய காயங்களுக்கு தையல் போடுவது முதல் தேவையேற்படும் போது சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொள்ளுமளவுக்கு இந்த வைத்தியத்துறை வளர்ச்சிபெற்றிருந்தது. கைநாடி பிடித்து உடல் உளநலம் சார்ந்த சகல சங்கதிகளையும் தற்போது கணனி செய்யும் வேலைகளைக்கூட துல்லியமாக தெரிவித்த நிபுணத்துவமிக்க வைத்தியர்களையும், பொதுமருத்துவ நிபுணர்களையும் குறிப்பாக வாதரோதவைத்திய சிகிச்சை நிபுணர்களையும் கொண்ட வைத்திய பரம்பரையொன்று ஆரவங்காலில் கோலுன்றியிருந்தது. விடுதி வசதிகள் கொண்ட வைத்திய நிலையமாக அது வளர்ச்சி பெற்றிருந்தது. வாதரோக வைத்தியத்திற்காக இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் நோயாளிகள் வந்து தங்கி சிகிச்சை பெற்று குணமடைந்து சென்ற வரலாறுகள் நிறைய உண்டு.

வைத்தியர்களுக்கு உதவியாக பல தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டனர். இவர்களில் சிலர் அயலூர் வாசிகள். பிற்காலத்தில் இவர்களிற் சிலர் வாதரோக வைத்தியர்களாக பிற ஊர்களில் சிகிச்சை நிலையங்களை அமைத்து நடத்தியவர்களும் உண்டு. ஆனால் தமது விளம்பரப்பலகையில் ஆவரங்கால் வைத்தியசாலை என எழுதத் தவறவில்லை. இத்தகைய ஒரு விளம்பரப்பலகை அயற்கிராமமான இணுவிலில் இருப்பதை இப்பொழுதும் பார்க்கலாம்.

சித்த ஆயுர்வேத மருத்துவ நிபுணர் தாமோதரம்பிள்ளை மகோன்னதமாகப் பேணிக்காத்து வந்த பாரம்பரிய வைத்தியசேவை அவர் மைந்தர்கள் செல்லதுரை, நடராசா ஆகியோராலும், அவர் நெருங்கிய உறவினர் கண்மணியினாலும் சிறப்புற்று விளங்கிற்று. இதைத் தொடர்ந்துசெல்லத்துரையின் ஒரே மகன் கணபதிப்பிள்ளையும் சிறந்த பரம்பரை வைத்தியராகவே திகழ்ந்தார். இதன் பின் சித்த ஆயுள்வேதக் கல்லூரியில் தேர்ச்சிபெற்றவர்களாக சிலர் வெளியேறி தொழில் செய்தாலும் ஆங்கில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகிச்சைக்கலவையால் சித்த ஆயுர்வேதம் மவுசு குறைந்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். பாலகிருஷ்ணனும் தமது தந்தை வழி மருத்துவம் செய்தவர். சித்த ஆயுர்வேத வைத்தியர் செல்லத்துரையின் சேவைக்காலம் ஒரு பொற்காலம்

**வட அல்வை முருகேசு**

கந்தப்பு முருகேசு ஆசிரியர் அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம் 1957ல் உருவானது. அதன் முதல் அதிபராக இவரே பதவி ஏற்றார். இதைத் தொடர்ந்து இவர் இவ்வூரையே நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டிருந்தார். 1930ம் ஆண்டு தெல்லிப்பளை ஆசிரியகலாசாலையில் சேர்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியராக 1932 ல் வெளியேறினார். சமய சமூகப்பணிகளிலும் உள்ளூர் அரசியலிலும் மிகுந்த ஈடுபாடு காட்டி செயற்பட்டவர். கலையார்வமும் அழகியல் உணர்வும் நிரம்பப்பெற்றவர். நாடகப் பிரதியாக்கம். நெறியாள்கை, ஒப்பனை அவருக்கு கைவந்தகலை. 02. 01. 2005 ம் தேதி தமது 95ம் வயதில் இயற்கை எய்தினார்.

**சிவகாமி அம்மையார்**

அமரர் அண்ணாவி கந்தப்பிள்ளையின் மனைவியும் ஆர்மோனிய வித்துவான் சிவஞானத்தினது தாயுமான சிவகாமி அம்மையார் ஆவரங்கால் கிராம அபிவிருத்திச்சங்கம், மத்திய சனசமூக நிலையம் ஆகியன அமைந்துள்ள காணியை நன்கொடையாக வழங்கியவர். நிலவுடைமை உள்ள பலர் இருந்தும் முன்வராநிலையில் தன் குடியிருப்பு நிலத்தில் ஒருபகுதியை வழங்கி நிலையான பெருமையைத் தேடிக்கொண்டவர்.

**ஈழத்து நாட்டுக்கூத்து மரபு**

ஈழத்திலே தமிழர் வாழ்கின்ற பிரதேசங்களில் எல்லாம் கூத்துக்கள் ஆடப்பட்டு வந்துள்ளன. கூத்தே அன்றைய தமிழரது நாடகமாக இருந்தது. ஆடலும் பாடலும் இதன் அடிநாதமாகும். கூத்தே நமது நாடக மரபு என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். முப்பக்கமும் அடைக்கப்பட்ட மேடையமைப்பு இருந்தது. இம்மேடை கொட்டகை என அழைக்கப்பட்டது. இக்கொட்டகையில் கர்னாடக இசையிலமைந்த இசைநாடகங்கள் நடத்தப்பட்டன. கொட்டகையில் நாடகம் நடத்தப்பட்டமையால் இதனைச் கொட்டகைக்கூத்து என அழைத்தனர். எமது ஊரிலும் அரிச்சந்திரமயானகாண்டம், ஏழுபிள்ளை நல்லதங்காள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீவள்ளி, அபிமன்யு போன்ற நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. அச்சுவேலி எஸ். எஸ். இரத்தினம்பிள்ளை, இணுவில் நாகலிங்கம். பபூன் செல்லையா, எம். வி. கிருஷ்ணாழ்வார், ஆவரங்கால் அண்ணாவியார் கந்தப்பிள்ளை, வயிரவிப்பிள்ளை முதலியோர் இம்மரபு வழிநாடகங்களிலே துறைபோகிய கலைஞர்களாக கணிக்கப்பட்டனர்.

சித்த ஆயுர்வேத வைத்திய நிபுணர் தாமோதரம்பிள்ளையின் பழைய வாசஸ்தலத்திற்கு தெற்கே அமைந்த "செம்பகஸ்ட்டி" என்ற காணியும் சந்தை ஒழுங்கையில் நிலச்சுவாந்தார் சுப்பிரமணியம் மாணிக்கவாசகருக்குச் சொந்தமான "கணுக்கை" என்ற காணியும் பாரிய விஸ்தீரணமான இடப்பரப்பைக் கொண்டவை. இந்த இரண்டு இடங்களிலும் மேடைக் கொட்டகைகள் அமைக்கப்படும். மழைகாலம், அறுவடை, வருடப்பிறப்பு முடிவடைந்த கையோடு சனிக்கிழமைதோறும் கூத்துநாடகம் களைகட்டும். சிவன்கோயில் வருடாந்த திருவிழா, ஆடிஉழவு, ஆவணி விதைப்பு, மழைகாலம் கூத்துக்கள் தவிர்க்கப்படும். ஒன்றுவிட்ட சனிக்கிழமைகளில் இரு கூத்துக்கொட்டகைகளிலும் மாறி மாறி நிகழ்வுகள் இடம்பெறும். (Stage Manager) மேடை முகாமையாளர் ஒருவர் இருப்பார். சிலவேளைகளில் இரு கூத்துக்கொட்டகைகாரருக்குள்ளும் பொரும்போட்டி ஏற்பட்டால் புதிய கூத்தாடிகள் இரண்டு பவுன்கள் என்றும் நட்சத்திர கலைஞர்கள் என்றும் மேலதிக மெருகு ஏற்றிவிடுவார்கள். ஊரே பாய்படுக்கையுடன் திரண்டு இருக்கும். அயல் கிராமத்தவர்களும் படையெடுத்து வருவதுமுண்டு. இரவு 7 மணி தொடக்கம் மறுநாள் காலை 7மணிவரை கூத்து நடைபெறும். சிலவேளைகளில் ஆரம்பம் இரவு 10 மணிக்கு மேல் என்றால் ஆரவாரமும் விசில் அடிப்பும் கலவரமூட்டத்தை ஏற்படுத்தும். மேடைக்குப்பின்புறத்தில் கலைஞர்கள் ஒப்பனையை கண்டுகளிக்க ஒரு இளந்தலைமுறை முண்டியடிக்கும். அப்போது தான் மேடை முகாமையாளரும் அவரது அடிதடிகளும் உஷாராவார்கள். இதுவே ஒரு கூத்தாக ஏனையவர் கண்டுகளிப்பர். கூத்து ஆரம்பிக்கும்வரை இரசிகர் கூட்டத்தைக் கட்டுப்படுத்த பபூன்கள் பக்கவாத்திய சகிதம் கர்நாடக இசை, நகைச்சுவைக்கதைகள். அங்கசேஷ்டைகள் தங்கள் இடுப்பில் இருந்து எடுத்துவிடுவர். இதனோடு தூக்கத்தில் இருந்தவர்களும் உஷாராகி எழுந்திப்பார்கள். கூத்து விடியவிடிய நடைபெறும். அபிமான கலைஞர்களும் ரசிகர்களும்கூட இருப்பார்கள். இடையிடையே அப்பளாஸ் வாங்கிக் கொள்வார்கள்.

இந்நிகழ்ச்சிகளுக்கான செலவுகளை குறிப்பிட்ட சிலரிடம் ஒப்படைப்பார்கள்; விரும்பியும் ஏற்றுக்கொள்வார்கள். தலைப்பாகை கட்டிவிடுவதில் சகலதும் அடக்கம். இரு கோஷ்டிகளுக்கிடையே போட்டியை வளர்த்து களைகட்ட வைப்பதும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாபுறமும் தென்னங்குற்றிகள் நாட்டி அவற்றில் பனந்தீராந்திகள் பரப்பி அதற்கு மேல் பலகைகள் போட்டு 40 அடி அகல நீளத்தில் கூத்துமேடை அமைக்கப்படும். மேடையின் முப்பகுதியும் தென்னோலையால் மறைப்புச் செய்யப்படும். சீலைகளை முற்பக்கத்தில் சீன்களாக உபயோகித்தகாலம் ஒன்று இருந்தது. இதன்பின் காட்சிகளுக்கேற்ற சீன்கள் என்னும் திரைச்சேலை படங்குகள் அறிமுகமாகின. மேடையைச்சுற்றி வாழைக்குற்றி நாட்டப்பட்டு, தேங்காய்ப்பாதியை அதன்மேல் வைத்துத் தேங்காய் எண்ணெயில் நனைத்த சீலைத்திரணையை தேங்காய்ப்பாதியினுள் வைத்து விடிய விடிய எரிய வைப்பர். இந்தநிலைமை மாறி அச்சுவேலி இராசையாவின் காஸ் விளக்குப் பாவனையும் பெற்றோமாக்ஸ் விளக்கும் பாவனைக்கு வந்தன.

**அண்ணாவிமார்**

கொட்கைக்கூத்து மரபு இருபதாம் நூற்றாண்டின்ஆரம்பத்தில் ஈழத்தில் ஏற்பட்ட புதுமரபாகும். நாடக இசையே இந்நாடகத்தின் சிறப்பம்சமாகும். பாடலே பிரதானமாயிற்று. இது வடபகுதியில் ஓங்கி வளர்ந்தது. இந்நாடகத்தை நடத்துவோர் அண்ணாவிமார் என அழைக்கப்பட்டனர். இந்தவகையில் கந்தப்பிள்ளை, சின்னதம்பி, வயிரவிப்பிள்ளை ஆகியோ எங்கள் பிரபல அண்ணாவிமார் ஆவர். இவர்கள் இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்று தம் திறமையை வெளிக்காட்டி ஊருக்குப் பெருமை சேர்த்தவர்கள்.

ஒலியமைப்பு இல்லாத அக்காலத்தில் திறந்த வெளியில் 10 கட்டைச் சுருதியில் பாடி அரங்கினையும் கடந்து சென்று செவிப்பறையை செவிடாக்குமளவுக்கு ஒலித்தது என்று சொல்லுவார்கள். இந்தவகையில் அண்ணாவியார் கந்தப்பிள்ளையும் அவர் உறவினர் வயிரவிப்பிள்ளையும் பலராலும் புகழ்ந்து பேசப்படுபவர்கள்.

அண்ணாவியார் சின்னத்தம்பி வதிரியைப்பிறப்பிடமாகக் கொண்டவர். புக்கிடமாக ஆவரங்காலைக் கொண்டு வாழ்ந்தவர். நாடகம், நாட்டுக்கூத்து, ஆட்டக்காவடி கலைகளில் சிறந்து விளங்கியவர்.இவரே ஆட்டக்காவடியை வருடாவருடம் நேர்த்திக்கடனாக தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில், நல்லூர் கந்தசாமிகோயில் போன்றஆலயங்களுக்கு எடுத்துச் செல்ல மூலகாரணமாக இருந்தவர்.

ஆவரங்கால் சாந்ததோட்டத்தில் அமைந்துள்ள வயிரவசுவாமி ஆலய முன்றலிலே ஆட்டக்காவடிக்கான ஆட்கள் தேர்வு நடைபெறும். ஆட்களைத் தெரிதல் (சட்டம் கொடுத்தல்) சதங்கை அணிதல், அடுக்குப் பார்த்தல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்றம் என அரங்கேற்றும்வரை ஒருபடிமுறை நடைமுறையுண்டு. இவற்றுள் சதங்கை அணிதலும் அரங்கேற்றலும் பெரும் சடங்காகவே நடைபெறும். சதங்கை அணிதல் பகலிலேயே நடைபெறும். ஆட்டக்காவடிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான தொடர்ச்சியான பயிற்சி பல நாட்கள் நடைபெறும். இந்த காவடி அணியைச் சேர்ந்தவர்கள் ஆரம்பத்தில் தம்கால்களுக்கு சீலையும் ஓலையும் காலில் கட்டியிருப்பர். சீலைக்காலை முன்னுக்கு வை, ஓலைக்காலை பின்னுக்கு வை என்ற அண்ணாவியாரின் ஆரம்பச் சட்டாம்பிள்ளை அதிர்வு ஒலியும் தாளஒலியும் சேர்ந்து அணியினரை ஆட்டிவைக்கும். "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே" என்பதை அரங்கேற்றம் மெய்பித்துவிடும். இந்த ஆட்டக்காவடி அணியை வருடாவருடம் தயார்செய்து பலவருடங்களாகத் தொடர்ச்சியாக நடாத்தியவர்கள் அண்ணாவியார் சின்னத்தம்பியின் புதல்வர்களான வேலர், கிட்டிணர் ஆகிய அண்ணாவிமார்கள் ஆவர்.ஆவரங்கால் ஆட்டக்காவடியை கண்டுகளிப்பதற்கு பல்வேறு இடங்களிலிருந்தும் பொதுமக்களோடு இசைக் கலைஞர்கள் பலரும் திரண்டிருப்பர்.

**இசைக்கலைஞர்கள்**

அக்காலத்தில் பெரும்பாலான பிரபல்யமான இந்து ஆலயங்களில் தேவஸ்தான இசைக்கலைஞர்களாக நாதஸ்வர,தவில் வாத்தியக்காரர்கள் குழுவாக இருந்து சேவைசெய்திருக்கிறார்கள். இந்தவகையில் தென்னிந்தியாவிலிருந்து பெரிய சாமி என்கின்ற நாதஸ்வரக்காரர் கோஷ்டியாகவந்து பல ஆண்டுகள் ஆரவரங்காலில் நிரந்தரமாகக் குடியமர்ந்திருந்தனர். இவர் கூட்டுறவாளர் தம்பி சிவகுருவின் வீட்டுக்கு நேர் எதிரே தெற்குப்பக்கமாகவுள்ள காணியில் மண்வீடமைத்து வாழ்ந்து வந்தனர். இக்காணியும் தம்பி சிவகுருவினதே.

நித்திய வாத்தியக் கோஷ்டியைத்தவிர விசேட தவில் நாதஸ்வர வித்துவான்களை அழைத்து வந்து கோயில்,மற்றும் விசேட வைபவங்களில் கச்சேரி செய்வதற்கான ஏற்பாட்டையும் பெரியசாமி செய்து நடத்தி வந்தார். இவர்கள் பெரும்சம்பள அடிப்படையில் ஒப்பந்தமாகி வரவழைக்கப்பட்டவர். தவில் வித்துவான்களில் கும்பகோணம் கே. ஏ. தங்கவேலு, மதுரை நடேசன் போன்றவர்கள் இந்தியாவிலேயே முன்னணிக் கலைஞர்கள். திருவாவடுதுறை இராசரத்தினம்பிள்ளை திருவாவடுதுறை ஆதீன வித்துவான். தலைசிறந்த நாதஸ்வர வித்துவான். இவரது பிரதம சிஷ்யன் காரைகுறிச்சி அருணாசலம். குருவின் காலத்திலேயே குருவே பாராட்டிக் கௌரவித்த பெரும் நாதஸ்வரமேதை. இந்த மேதை ஆவரங்காலில் சிறுவயதில், பெரியசாமியால் கொண்டு வரப்பட்ட கோஷ்டியொன்றில் தாளவாத்தியக்காரனாக இருந்தவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பலருக்கு தெரியாமல் இருக்கலாம். சிவன்கோயில் குளத்தில் தினமும் காலையில் நீராடி மகிழ்வதில் பெரியசாமிக்கு மகாதிருப்தி.

பெரியசாமி முதுமைக்காரணமாக நாடு திரும்பினார். அவர் ஏற்பாட்டில் பின்னரும் பலகாலம் தேவஸ்தான நாதஸ்வர தவில் கோஷ்டியிருந்து வந்தது. இந்த இடைவெளியில் தென்னிந்தியாவிலிருந்து நாதஸ்வர தவில் வித்துவான்களையும், தேவதாசிகள் என்ற பெயரில் நடனமாதுகளையும் வரவழைத்து கோயில்களிலும் ஏனைய விசேட வைபங்களிலும இசைமழையும், நடனநாட்டியங்களும் வழங்கப்பட்டது. இதில் சரவணமுத்து செல்லத்துரை, செல்லத்துரை கணபதிப்பிள்ளை ஆகியோர் கூட்டாகவும் தனியாகவும் ஈடுபட்டிருந்தனர். சில நடனமாதுக்கள் இங்கேயே விவாகமாகி இலங்கைக் குடியுரிமை பெற்றுக் கொண்டார்கள்.

### தவில்மேதை சின்னத்தம்பி

இசை வேளாளர் மரபில் வந்தவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலர் நாதஸ்வர தவில் வித்துவான்களாக உலகளாவிய ரீதியில் பிரபல்யமானவர்கள் பலர் இருந்தார்கள். இருக்கிறார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆவரங்கால் கிழக்கு வாசியான சின்னத்தம்பி என்பவர் இந்தியா சென்று தவில்கலை பயின்ற, கதர் அணிந்து, ஆசாரசீலராக தவில் வாசித்ததோடு தவில் கோஷ்டியொன்றையும் உருவாக்கி வலம் வந்தமை. அக்காலகட்டத்தில் வியப்பையும் ஏற்படுத்தியது. சிறுபான்மைத்தமிழரான இவர் கர்நாடக சங்கீதத்தில் கொடிகட்டிப்பறக்கும் பத்மலிங்கத்தின் தந்தை என்பது பலருக்கும் தெரியாமலிருக்கலாம்.

### மிருதங்க ஆர்மோனிய கலைஞர்கள்

ஆவரங்கால் தெற்கைச் சேர்ந்த முத்ததம்பி என்பவர் மிருதங்கத்தில் திறமைசாலியாக இருந்ததோடு பல்வேறுபட்ட கூத்துக்கள். காவடிகள், இசைநிகழ்ச்சிகளில் மிருதங்க வாத்தியக்கலைஞராக இருந்து புகழ் பெற்றவர். சாஸ்திர சங்கீதம் பயின்றவர்.

தந்தையாரான அண்ணாவியார் கந்தப்பிள்ளை காலத்திலேயே ஆர்மோனியம்,வீணை வாத்தியங்களை இசைப்பதில் நல்லதேர்ச்சி பெற்றிருந்த சிவஞானம் என்பவர் கூத்துக்கள், நாடகங்கள், நடனங்கள் இசைக்கச்சேரிகள் என்று இலங்கைபூராகவும் தனிமுத்திரை பதித்து ஆர்மோனிய, வீணை வாத்தியங்கள் இசைப்பதில் பிரபல்யம் பெற்றிருந்தார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தோற்றுவிக்கப்பட்ட எல்லாவற்றிற்கும் வரலாறும் வளர்ச்சியும் உண்டு. ஆனால் தமிழ் மக்களுடன் தொடர்பான விடயங்கள் பதிவு செய்யப்பட்டு வருங்காலச் சந்ததிக்காக பேணப்படாதநிலை பெரும்குறைபாடாகும். கல்விச்சாலைகளைப் பொறுத்தவரையிலும் அவற்றின் வரலாறும் வளர்ச்சியும் ஆவணப்படுத்தி பாதுகாக்கப்படவேண்டும்.

யா| ஆரவங்கால் மகாஜனாவித்தியாலயம், யா| ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம், யா| புத்தர்கலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம் ஆகிய மூன்றும் ஆவரங்கால் கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலைகளாகும்.

அரசாங்கம் பாடசாலைகளை 1962ம் ஆண்டு மாசி மாதம் 20ம் தேதியில் பொறுப்பேற்றுக் கொண்டது. இக்காலத்திற்கு முன்னர் உள்ள காலப்பகுதியின் வளர்ச்சிநிலையை அவதானிக்கும் போது வெவ்வேறுபட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளில் பல்வேறு அமைப்புக்களாலும் முகாமையாளர்களினாலும் ஆரம்பிக்கப்பட்டு இன்றைய வளர்ச்சி நிலைக்கு வந்திருப்பதை கண்டுகொள்ளலாம்.

*யா| ஆவரங்கால் மகாஜனாவித்தியாலயம்.*

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் ஆவரங்காலில் இப்பாடசாலை அமைந்துள்ளது. இப்பாடசாலையில் தற்போதைய பெயரே யா| ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம். சைவத்தமிழ் பற்றினாலும் கல்வி வளர்ச்சியில் கொண்ட விருப்பத்தினாலும் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (1875ம் ஆண்டவில்) தமது சொந்தக் காணியில் சைவத்தமிழ் வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலையை அமைத்து அதன் தலைமை ஆசிரியராகவும் முகாமையாளராகவும் பணிபுரிந்தவர். பரோபகாரி ஆவரங்கால் சுப்பிரமணியம் அருணாசலம் கனகசபை ஆவார். புத்தூர் கோயிற் பற்றில் அமைக்கப்பட்ட முதலாவது சைவத்தமிழ் வித்தியாலயம் இதுவேயாகும்.

இதனால் பாடசாலை அமைக்கப்பட்ட காலப்பகுதியில் அயற்கிராமங்களில் பொருத்தமான சைவத்தமிழ் கல்விக்கூடங்கள் இல்லாமையால் அயற்கிராமங்களான அச்சுவேலி, சிறுப்பிட்டி, புத்தூர், வயாவிளான், கரவெட்டி, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் இருந்து மாணவர்கள் வந்து பெருமளவில் கல்வி பயின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் தலைமையாசிரியருடன் ஐந்து அல்லது ஆறு ஆசிரியர்கள் கற்பித்தனர். தற்காலிக ஓலைக்கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைக்கு பின்னர் சுண்ணாம்புக்கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. தற்போது இக்கட்டடம் நல்ல நிலைமையிலுள்ளது.

திண்ணைப்பள்ளிக்கூடக் கல்வியமைப்பை அடிப்படையாகக் கொண்ட எண், எழுத்து, வாக்குண்டாம், நன்னெறி, நிகண்டு வகுப்புக்களெனவும், உயர்தரத்திற்கு காவிய வகுப்பொன்றும் இடம்பெற்றிருந்தன. ஆசுகவி கல்லடி க. வேலுப்பிள்ளை இப்பாடசாலையில் ஆவரங்கால் நமச்சிவாயப்புலவரிடம் கல்வி பயின்றவர் எனத் தெரிகிறது.

குறிப்பிட்ட முகாமையாளர் தமது சொத்துகளை விற்றே, பாடசாலை ஆசிரியர்களின் சம்பளம் மாணவர் மதியபோசனம், நிருவாகச் செலவு ஆகியவற்றை ஈடுசெய்து வந்தார். பாடசாலையை நிர்வகிப்பதில் நிதித்தளம்பல் ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் இதனை மூடிவிட விரும்பாத முகாமையாளர் மெதடிஸ்கமிஷன் விரும்பி வேண்டிக் கொண்டதன் பேரில் எதுவித எதிர்பார்புமின்றி பாடசாலையை மிஷனுக்கு கையளித்தார். இதன்பின் இப்பாடசாலை ஆவரங்கால் மெதடிஸ்த தமிழ்க்கலவன் பாடசாலை என பெயர் மாற்றம் பெற்றது. இது 1905ம் ஆண்டளவில் ஏற்பட்ட மாற்றமாகும். பாடசாலையை அரசு சுவீகரித்த பின்பும் இப்பெயரிலேயே இப்பாடசாலை இயங்கி வந்தது. 1974 - 1976 காலப்பகுதியில் விஞ்ஞானகூடம், வகுப்பறைகள் விஸ்தரிப்பு ஆகியன இடம் பெற்றன. இக்காலத்திலேயே இப்பாடசாலை யா| மகாஜனா வித்தியாலயம் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

### *யா | ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்*

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் ஆவரங்கால் சிவன் கோயிலுக்கு மேற்கே அமைந்துள்ள கொய்வளை வீதியில் யா| ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாசாலை அமைந்துள்ளது. இப்பாடசாலை சைவவித்தியா விருத்திச் சபையினால் 1952ம் ஆண்டு ஐப்பசித்திங்கள் முதலாம்நாள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலையை அமைப்பதற்கான முயற்சிகள் 1935ம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பாடசாலை அமைந்திருந்த "தாக்கணாயன்கலட்டி" என்னும் காணி கரணவாய் வடக்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை சிவகுருநாதரும் பெண் சௌந்தரிப்பிள்ளையும் மயில்வாகனம்பிள்ளை மகள் சரஸ்வதிப்பிள்ளையும் ஆகியவர்கள் ஆரம்பத்தில் ஒரு பகுதிக்காணியை சைவவித்தியாவிருத்திச்சபைக்கு நன்கொடையாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியிருந்தனர். மிகுதி ஆதனத்தை இதே நன்கொடையாளர் 26. 05. 1935ல் பிரசித்த நொத்தாரிசு கே. தாமோதரம்பிள்ளை முகாவில் நிறைவேறிய நன்கொடை உறுதிமூலம் ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாசாலை சார்பில் இரு நன்கொடைகளையும் பத்தமேனி மாப்பாணபிள்ளை சுப்பிரமணியம் பெற்றுக்கொண்டுள்ளார். குறிப்பிட்ட சுப்பிரமணியம் சைவவித்தியா விருத்திச்சங்கத்தின் முகாமையாளர் தரத்தில் உள்ளவரெனத் தெரிய வருகின்றது. இவர் ஓர் வழக்கறிஞர்.

இப்பாடசாலை ஆரம்பக்கட்டடம் கூரைவேலை ஆரம்பிக்கப்படாத நிலையிலே சுமார் 15 ஆண்டுகள் இழுபறிப்பட்டு பொன்னையா செட்டியாரின் மேற்பார்வையில் நிர்மாணவேலை பூர்த்தியாக்கப்பட்டு பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. 15. 09. 1962ல் பாடசாலையை அரசாங்கம் சுவீகரித்துக்கொண்டது. புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி. ஆவரங்கால் மகாஜனக்கல்லூரி ஆகியவற்றிலிருந்து கணிசமான மாணவர்கள் இப்பாடசாலைக்கு மாற்றப்பட்டனர். புத்தூர் கொத்தணி அமைப்பில் இரண்டாவது பெரிய பாடசாலையாகத் திகழ்கிறது. அண்மையில இப்பாடசாலைக்கு கிழக்கெல்லையாக அமைந்த காணி கொள்வனவு செய்யப்பட்டு விளையாட்டு மைதானமாக பொலிகிறது.

### *யா| புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்*

ஆவரங்கால் கிழக்குப் பகுதியில் புத்தகலட்டியில் யா| புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம் அமைந்துள்ளது. சைவவித்தியா விருத்திச்சங்கத்தின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1957 ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் திருக்கார்த்திகை திருநாளில் வித்தியாரம்பம் செய்யப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிலப்பிரபுத்துவ மேலாண்மை, தீண்டாமை இவற்றால் பாதிப்புக்குள்ளான மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் நோக்கில் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் கோப்பாய் கோமான் கு. வன்னியசிங்கத்தின் முயற்சியினால் பதிவு செய்யப்பட்டது. ஆவரங்கால் மகாஜனவித்தியாலயம், ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து கணிசமான மாணவர்கள் இப்பாடசாலைக்கு மாற்றப்பட்டனர். கோப்பாய்த்தொகுதி கனிஷ்ட இடைநிலைப் பாடசாலைகளில் முன்னணி வகித்தது. இப்பாடசாலை அமைந்துள்ள காணி பல பெரியார்களின் நன்கொடையாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### சிவசக்தி மணி மண்டபம்

ஓங்கி வளர்ந்து பரந்ததோர் மண்டபம். அந்த மணிமண்டபத்திற்குள்ளே இருப்பதோ மானிடம் சிறந்து நின்ற சிந்தையோடு அறந்தவிர்க்கிலாது நிற்கும் அன்னையை ஒத்த எழில்நயம் கொண்ட செயற்திட்டங்கள் யாரும் வகுத்தற்கரிய பிராயத்தனலாய் பாரில் எந்நாளும் ஓர் கன்னிகை என்னப் பயின்றிடும் தோற்றப்பொலிவு என்றும் மார்க்கண்டேயனாக மிளிர்ந்து இலங்டகிடவே செய்வாள். தில்லை வெளியிலே கலந்துவிட்ட அன்னையும் பிதாவுமான தெய்வானை, வேலுப்பிள்ளை திருப்பெயரில் அழகான சிவசக்தி மணிமண்டபத்தையும் அறக்கட்டளை ஒன்றினையும் ஏற்படுத்தி பார்வதி பரமேஸ்வரன் சூழலில் அரும்பணியை நிறைவேற்றியவர் பொன்மனஞ் செம்மல் திரு. வே. சிவசுந்தரம் என்பது மனங்கொள்ளத்தக்கது.

மணிமண்டபம் 12.07.2003ல் திறந்து வைக்கப்பெற்றது. அறக்கட்டளையும் ஆரம்பித்து வைக்கப்பபெற்றது. கருவிலே திருவுடைய ஞானசம்பந்தன் போலவே வயதுக்க மிஞ்சிய முதிர்ச்சியும் திட்டமிட்ட சேவைகளும் ஊருக்கு மாத்திரமல்ல உயர்கல்விமாணவர் கல்விக்கான ஊக்கத்தொகை வலிகாமம் கிழக்கு முழுமையையும் உள்ளடக்கிய இறைவன் தொண்டாக நடைபெறுகிறது.

இந்த மணிமண்டபம் யாழ்ப்பாணத்திற்கே பெருமைசேர்க்கும் தன்மையது. எல்லா வசதிகளையும் உள்ளடக்கியது. பிரமாண்டமானது. இந்த மண்டப வருமானம் அத்தனையும் மண்டபப் பராமரிப்புக்கும் அறக்கட்டளைசார்ந்த பணிகளுக்குமே பயன்படுத்தப்படுகிறது. இதனால் இது ஊரின் வளர்ச்சி மையமாக ஊருணியாக திகழ்ந்து பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறது. இதன் தோற்றம். வளர்ச்சி, தொண்டு ஆகிய அனைத்தும் ஒரு தனிக்கட்டுரை எழுதினாலேயே அடக்கமுடியும். இது ஒரு சிறு அறிமுகமே.

### பூங்காவனம்

ஆவரங்கால் சிவன்கோயில் பூங்காவனம் வருடா வருடம் ஆடி மாதத்தில் நடைபெறும். ஆனிமாதத்தில் இராமலிங்கேசுரர் கொடியேற்றத்துடன் தொடங்கி தீர்த்தத்திருவிழாவுடன் பத்து நாட்கள் நடைபெறும். ஆடிமாதத்தில் பருவவர்த்தனி அம்மை திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்தாம்நாள் தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் பூங்காவனப் பெருவிழாவும் நடைபெறும். பருவதவர்த்தினி இராமலிங்கேஸ்வரன் பூங்காவனம் மாணிக்கப் பொன்முத்து வைரங்கள் ஒளிர்ந்திட பன்னீர்வாசமும் விண்மீன்கள் கோலமும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும். பூங்கொல்லைக்காணிக்குள் இயற்கை அழகு சொட்டும் மணப்பந்தல் ஓலைகள். குழைகள், பூக்கள், காய்கறிவகைகள். தானியவகைகள் என்பனவற்றால் அலங்கரிக்கப்பட்டு அழகிய வனமாக மிளிரும். வனமுகட்பில் இருமருங்கும் கட்டப்பட்டிருக்கும் மரத்தோடு சேர்ந்த வாழைக்குலை இரண்டும் வருடாவருடம் சொல்லிவைத்தாற் போல் சுமார் ஐந்தடி உயரமானதாக இருப்பதையே கண்டு சிலதுளிநேரம் மனங்குளிர இரசிப்பார்கள். உஞ்சலில் அம்மை அப்பன் இருவரும் எழுந்தருளி இருக்க ஊஞ்சல் அசைந்தும் இசைந்தும் ஆடும் இனியகாட்சி குழந்தைகள் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும். பாலாதி தேவர்கள் மணங்காண வருகை தந்திருப்பது போலவும் பாவாணர்கள், முனிவர்கள் இசைவழங்கி வாழ்த்தி நிற்பதாகவும் அமைக்கப்பட்ட காட்சி தத்ருபமாக இருக்கும். பூங்காவன பந்தல் குறிப்பிட்ட வனத்துடன் இணைந்து கிழக்கு வீதியையும் சேர்த்து தெற்குவீதிவரை நீண்டிருக்கும். தென்னோலையால் வேயப்பட்டிருக்கும் கோயில்வாசலுக்கு முன்புறமாக பெரிய பந்தலை இணைத்து ஒரு பந்தல் கிழக்குநோக்கி தீர்த்தக்குளத்திற்கு அணித்தாக அமைக்கப்பட்டிருக்கும். நூற்றுக்கணக்கான பந்தல்கால் ஒவ்வொன்றிலும் மரத்தோடு சேர்ந்த வாழைக்குலை அலங்கரிக்கும். தாழங்காய், இளநீர் போன்றவை நிரைக்கு பந்தலில் கட்டப்பட்டிருக்கும். எந்தவித கடதாசி வேலைகளும்கிடையாது முழுக்கமுழுக்க இயற்கையான பொருட்களாலேயே அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

இலங்கையிலுள்ள தவில் நாதஸ்வர வித்துவான்கள் நாட்டியமாதுகள் அத்தனைபோரும் அன்று தவறாமல் இசை வழங்குவார்கள். பந்தலில் இரண்டு மூன்று இடங்களில் ஒரே நேரத்தில் பலநிகழ்ச்சிகள் நடைபெறும். எல்லா கலைஞர் கோஷ்டிக்கும் சந்தர்ப்பம்வழங்கப்படும். கொடுப்பனவுகள் வாங்கமாட்டார்கள். நல்ல சாப்பாடு இரவு இரவாக வழங்கப்படும். கலைஞர்கள் பூரண திருப்தியுடன் செல்வார்கள்.

இதேநாளில் புத்தூர் சிவன் கோயிலிலும் பூங்காவனம் நடைபெறும் போட்டியாக நடைபெறுவதாக எண்ணிக்கொண்டு யாழ்ப்பாணம் முழுவதிலிருந்தும் மக்கள் திரண்டிருப்பார்கள். வாகனங்கள் அருகிய காலம் நடைதான். யாழ்ப்பாணம் பருத்தித்துறை நெடுஞ்சாலை ஆரவங்கால் - புத்தூருக்கிடைப்பட்ட பகுதி மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழியும். தற்காலிக வியாபாரக்கடைகள் கோயிலின் மேற்கு வீதிக்கப்பாலுள்ள பெருநிலப்பரப்பில் அமைந்து ஆவரங்கால் அன்று நகராக காட்சியளிக்கும். மின்சாரம் இல்லாமையால் பெற்றோமாக்ஸ் கைவிளக்குகள் கைகொடுத்தன.

இந்த பூங்காவனம் தமிழ்கூறும் நல்லுலகம் முழுமையும் பிரசித்தமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாட்டுவண்டிச்சவாரி*

மாட்டுவண்டிச்சவாரியை அரசாங்கமே ஊக்குவித்து பாராட்டுபத்திரங்களும் பரிசில்களும் வழங்கிய காலமொன்றுண்டு. இதற்கேற்றவகையிலேயே சில தார்வீதிகளில் குறிப்பிட்ட ஒருதூரம்வரை தார் போடாது மாட்டுவண்டிச் சவாரிக்கு உகந்தவகையில் அக்குறிப்பிட்ட தூரம் தார்போடாது பதனிடப்பட்டு பாதுகாத்து வந்த நிலை இப்போது இல்லை. இத்தகைய ஒரு இடம் யாழ்ப்பாணத்திலேயே சுன்னாகம் - புத்தூர் வீதியில் அச்செழுதேவாலயத்திலிருந்து புன்னாலைக்கட்டுவன் வரையான பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வருடாவருடம் பராமரிக்கப்பட்டு வந்தது. சித்திரை வருடப்பிறப்பு சுதந்திரதினம் மாட்டுவண்டிச் சவாரி விழாவாக களைகட்டி நிற்கும். மிருகவதைக்கு எதிரான கிளர்ச்சியினால் இதனை அரசாங்கம் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நிலைமையை ஈடுசெய்ய சவாரிப்பிரியர்கள் தரவைகள் சார்ந்த திடல் நிலப்பரப்பில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகளை நடாத்தினர். இப்போட்டிகளில் நடைபெறும் திடல்களில் ஒன்று ஆவரங்கால் காங்கேயன் கரதடி மயானத்திற்கு கிழக்கே அமைந்துள்ள பெருநிலப்பரப்பாகும். இதில் இப்போதும் வருடாவருடம் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நடைபெறுவதோடு வெற்றி பெற்றவர்களுக்கு கனதியாண பரிசில்களும் வழங்கப்படுவது வழக்கமாகிவிட்டது. இதில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த போட்டியாளர்கள் கலந்து கொள்வதோடு மாவட்டத்தின் பலபகுதியிலிருந்தும் ரசிகர்கள் திரண்டிருப்பர். சில சமயம் அசம்பாவிதங்களும் விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன.

*உப்பன்புளியடி*

தற்போது முன்பள்ளி நடைபெறும் காணிக்குத்தெற்குப் பக்கமாக இருபுளியமரங்கள் கிளைபரப்பி நிழல்தந்து நின்றன. அப்புளியமரங்கள் அமைந்த இடத்தின் நிழல் பிரதேசத்தலேயே கிளித்தட்டு, சடுபுடு, நாயும் புலியும், போன்ற பல்வேறு அடக்கமான விஸ்திரணத்தில் நடைபெறும் விளையாட்டுக்கள் இடம்பெற்றன. இக்காணிக்கு கிழக்குப் பக்கமாக நீண்டவெளிக்காணிகள் இருந்தன. கன்னைகட்டி இரு கோஷ்டிகள் கிட்டிஅடியில் ஈடுபடும் வயது வித்தியாசமின்றி இளைஞரும் முதியோரும் கலந்து விளையாட்டை விறுவிறுப்பாக்குவர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இக்காணிகளுக்கு தெற்கே சிறுகொட்டகையில் அமைந்திருந்தது உப்பன்புளியடி வைரவர் ஆலயம். வருடப்பிறப்பன்று களைகட்டி நிற்கும் ஆயிரக்கணக்கில் போர்த்தேங்காய்கள் கொண்டு வருவார்கள். வியாபார ரீதியில் தென்னிலங்கை செல்பவர்கள் இருந்தார்கள். இவர்கள் மூலமே காலியிலிருந்து தேங்காய்கள் வரவழைப்பட்டிருக்கும் மட்டுவில் காய்களும் வந்திருக்கும். விடுகாய், எறிகாய் என பகுப்புச் செய்தும் வைத்திருப்பார்கள். தேங்காய் எவர் எவரோ கொண்டு வந்திருப்பார்கள். இவர்களில் பலர் பார்வையாளராக இருப்பார்கள். தேங்காய் அடிப்பதில் அனுபவசாலிகள் திறமைசாலிகள் போர்த்தேங்காய் அடி அணிகளில் தலைமை தாங்குவார்கள். இவர்களைப் போன்றதகைமை வாய்ந்த வயதான பெரியவர்கள் நடுவர்களாக களம் இறங்கி வழிநடுத்துவார்கள். வயிரவர் பொங்கல் மடையுடன் முதல் சிதறு தேங்காய் சுவாமியின் பேரில் அடிப்பதுடன் போர் தொடங்கும் சுமார் நான்கு மணித்தியாலங்கள் மாலைவேளையில் நடைபெறும்.

அக்காலத்தில் வாசிகசாலைகளோ சனசமூக நிலயங்களோ இல்லாத நிலையில் பொழுது போக்குக்காக உப்பன்புளியடியை நாடிவருபவர்கள் விளையாட்டு இரசிகர்களாக மாறி கயிறு இழுத்தல் போட்டி போன்றவற்றில் அணியை உஷார்ப்படுத்துவது சவாரிமாட்டை விரட்டுவது போன்ற களைகட்டி நிற்கும் இவர்கள் வருகை உப்பன்புளியடியைக் கலகலப்பாக்கும். இத்தகையவர்கள் ஒன்றுதிரண்டு தங்குமடம் போன்ற அமைப்பில் ஒரு கொட்டில் ஓலையால் வேய்ந்து நிர்மாணித்தனர். மறுநாளே புதினப்பத்திரிகை ஒன்று வந்து சேர்ந்தது. இது தொடர்ச்சியாக இடம்பெற்றது. அக்காலத்தில் பத்திரிகை முகவராக சிதம்பரநாதர் கணபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டிருந்தார். வீரகேசரி,தினகரன். டெயிலிநியூஸ், டைம்ஸ் ஒவ்சியோன், சுதந்திரன் போன்ற பத்திரிகைகளுக்கு இப்பகுதியின் முகவர் அவர்தான். இவைகள் கொழும்பிலிருந்துவரும் பத்திரிகைகள் புகையிரத மூலம் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டு யாழ்ப்பாணப்பகுதி முகவர்களுக்கு காலையிலே தான் கையளிக்கப்படும். வீட்டுக்கு வீடு விநியோகமுறை இருந்தது. ஈருளவண்டிதான் விநியோகத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. முதல்நாள் வீரகேசரி மறுநாள் காலையிலேயே உப்பன்புளியடி வாசிகசாலைக்கு வந்து சேர்ந்துவிடும். சில நாட்களில் டெயிலிநியூஸ் பத்திரிகையும் வந்து சேர்ந்தது. இதற்கெனவே தனிக்கூட்டம் பத்திரிகைக்கான கட்டணத்தை பெரியவர்கள் சிலர் பங்கிட்டுச் செலுத்துவார்கள். ஒருவர் உரத்த குரலில் வாசிப்பர். பலர் செவிமடுத்திருப்பார்கள். இதன் பின் விமர்சனங்கள் தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவரங்கால் சந்தைகள்

ஆவரங்காலில் காய்கறிச்சந்தை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நெடுஞ்சாலையை முகப்பாகக் கொண்டு மேற்குப்பக்கமாகவும் மாட்டொழுங்கையின் இரண்டாவது காணியில் மீன்சந்தை ஒன்றும் கல்லால் கட்டி ஒடுபோட்ட விஸ்தீரணமான கட்டடங்களில் அமைந்திருந்தன. இவைகள் மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகி இரவு 10 மணிவரை சனநெருக்கடிமிகுந்த சூழ்நிலையில் வியாபாரம் சூடுபிடித்து நடைபெறும்.

காய்கறிகளும் மீனும் உடனுக்குடன் அறுவடையானவைதான், அச்சுவேலி, தோப்பு, நவற்கிரி புத்தர்கலட்டி, நாவற்காடு பகுதிகளிலிருந்தும் ஆவரங்காலிலிருந்தும் இவைகள் விற்பனைக்காக எடுத்து வரப்படும். நூற்றுக்கு தொண்ணூறு வீதமான வியாபாரிகள் இச்சந்தைகளிலும பெண்களாகவே இருப்பர். நூற்றுக்கு தொண்ணூறு வீதமான நுகர்வோர் ஆண்களாகவே இருப்பர். தொண்டமானாறு - ஆனையிறவு கடலேரி அமைந்த கடற்பிரதேசத்தில் கண்டிகட்டல்மூலம் பிடித்த பல்லின மீன்கள் உயிருடனேயே பார்த்து வாங்கலாம். வலி - கிழக்கில் இதுவே ஒரு இரவுச்சந்தையாகும். தூர இடங்ககளைச் சேர்ந்தவர்களும் அயற்கிராம மக்களும் கொள்வனவுக்கு வருவார்கள். கைவிளக்கு, அரிக்கன் லாம்பு என்பனவே வெளிச்சமூட்டின அத்துடன் குத்தகைக்காரர் பெற்றோல்மாக்ஸ் விளக்கு வேப்பமரத்தின் கிளையில் கட்டி தொங்கவிடப்பட்டிருக்கும். குத்தகைக்காரர் அன்றன்றே வரியை அறவிடுவார். அப்போது புத்தூர் சந்தை இருக்கவில்லை.

## ஆலயங்கள்

ஆலயங்கள் சம்பந்தமாக யாழ்ப்பாணம் கச்சேரியிலுள்ள ஆலயங்கள் பதிவுப் புத்தகத்தில் கண்டிருக்கும் விபரங்கள் அடிப்படையில் தரவுகள் தரப்பட்டுள்ளன. இவ்பதிவுப்புத்தகம் 1892ல் தயாரிக்கப்பட்டது.

1. ஆவரங்கால் சிவன் கோயில்:-
   ( ஆவரங்கால் நடராஜஇராமலிங்க சுவாமிகள் கோயில்)
   மூலவர் சிவபெருமான். ஸ்தாபகரும் முகாமையாளரும் இராமர். 1808ல் ஆரம்பிக்கப்பட்டது. கல்லினால் கட்டப்பட்டது.

2. வயிரவகோயில் :-
   மூலவர் வைரவசுவாமி 1855 ல் ஸ்தாபிக்கபட்டது. ஸ்தாபகரும் முகாமையாளரும் ஆறுமுகம் பூதத்தம்பி கல்லினால் கட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கண்ணகை அம்மன்கோயில் :-

மூலவர் அம்மன். 1874ல் பரமசாமி பெண் இலட்சுமியம்மாள் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டு அவரே முகாமையாளராகவும் இருந்தார்.கல்லினால் கட்டப்பட்டது.

இவற்றைவிட உள்ளிவயிரவகோயில், பச்சந்தை வயிரவகோயில், புத்தர்கலட்டி அண்ணமார் கோயில், உப்பன்புளியடி வைரவர்கோயில் ஆகியனவும் வேறு சிறியன சிலவும் உண்டு.

## ஆவரங்காலில் உள்ள பொது அமைப்புக்கள்.

ஆவரங்காலில் உள்ள பொது அமைப்புக்களின் பட்டியலொன்று மேலே தரப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்கள் சம்பந்தமான விரிவான விபரங்கள் இக்கட்டுரையில் விரிவஞ்சி விடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. சரஸ்வதி சனசமூகநிலையம் | 18. 10. 1952 |
| 2. மத்திய சனசமூகநிலையம் | 14. 04. 1954 |
| 3. சர்வோதய சனசமூகநிலையம் | 14. 04. 1958 |
| 4. இந்து மன்றம் | 14. 01. 1981 |
| 5. கிராம அபிவிருத்திச்சங்கம் | 14. 04. 1954 |
| 6. மத்திய விளையாட்டுக்கழகம் | 01. 06. 1982 |
| 7. ஆவரங்கால் விளையாட்டு அபிவிருத்திக்கழகம் | 14. 08. 2005 |
| 8. விவசாயிகள் சம்மேளனம் | 12. 11. 1997 |
| 9. சிவசக்தி மணிமண்டபம் | 12. 11. 2003 |
| 10. விவேகானந்தா சனசமூக நிலையம் | |

## நிறைவுரை

இக்கட்டுரையில் பல்வேறு வரலாற்றுக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இவைகள் எங்கள் ஊரான ஆவரங்கால் கிராமம் தொடர்பானவை. எங்கள் கிராமம் பற்றி விரிவான ஆய்வுகள் இதுவரை இடம்பெற்றிருக்கவில்லை. ஆவணரீதியாக கிடைக்கப் பெற்றவையும் செவிவழிச்செய்தியாகப் பெற்றுக் கொண்டவையும் சுயமான நினைவுப்பதிவுகள் மூலமும் எழுதியவையுமென ஆவரங்கால் கிராமம் பற்றிய சிறிய அறிமுகமே இந்தக்கட்டுரை.

மேலே குறிப்பிட்ட சில விடயங்களுடன் நேரடியாகத் தொடர்புடைய வரலாற்றுத்தரவாகக் கொள்ளக்கூடிய பலர் இதில் விடுபட்டிருக்கலாம். உயிருடன் இருக்கும் எவர்குறித்தும் எழுதுவதை அநேகமாகத் தவிர்த்துள்ளேன். இக்கட்டுரையின் நோக்கம் எமது ஊரைப்பற்றிய விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சிறந்த ஆவணமாக நூல் ஒன்று வெளிவர வேண்டுமென்பதுடன், யாருக்காவது அத்தகைய ஊக்கத்தை இக்கட்டுரை ஏற்படுத்த வேண்டுமென்பதே எனது பெருவிருப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் மேம்பட.......

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை ***(Ego)*** விடுங்கள்
- அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை விடுங்கள் ***(Loose Talks)***
- எந்த விஷயத்தையும், பிரச்சனையையும் நாசூக்காகக் கையாளுங்கள் ***(Diplomacy)*** விட்டுக் கொடுங்கள் ***(Compromise)***
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள் ***(Tolerance)***
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று கடைசிவரை வாதாடாதீர்கள் ***(Adament Arguemebt)*** குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள் ***(Narrow Mindedness)***
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் விடுங்கள் ***(Carrying Tales)***
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்துக் கர்வப்படாதீர்கள் ***(Speriority Complex)***
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள் ***(Over Expectation)***
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகின்ற எல்லாவிசயங்களையும் நம்பி விடாதீர்கள்
- அற்பவிசயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் ***(Flexibility)***
- மற்றவர் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள் ***(Mis understanding)***
- மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் ***(Courtesy)***
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்
- பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
- பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன் வாருங்கள்.

*அருட்தந்தை வேதாந்திரி மஹரிஷி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் துரைசிங்கம் சிவராசா J.P.

(செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை)



புண்ணியங்கள் பல புரிந்தோன்
புவி நிறைந்த புகழுடையோன்
பலரும்போற்றும் கண்ணியவான்
சிவராசன்
பள்ளியிலே என்சேவை
பல்காலும் வளர்ந்திடவே
நண்ணித் துணைநின்ற பேராளன்
எண்ணியெண்ணி வாடுகின்றோம்
எங்கு நாம் காண்போம் இனி

அன்பின் கடல்
அமுத மொழியரசு
எங்கள் சிவராசன் எம்நண்பன்
துங்கமா சேவையின் தூயபேராளன்
எந்தன் ஊர்ச்சேவை
ஏற்றமுற உழைத்த மகன்
மண்ணோடு சென்றாலும்
மறக்கவொண்ணா மாமகனை
யாண்டு நாம் காண்போம் இனி

அன்னாரின் பிரிவால் துயருறும் இதயங்களுடன் நாமும் இணைந்து கொள்வதுடன்
அன்னாரின் ஆன்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
27.04.2006

சு.முத்துக்குமாரசுவாமி
(முன்னாள் அதிபர், நடராஜ இராமலிங்க வித்தியாலயம்)

இ.கணேசலிங்கம்
(கிராம சேவகர், ஆவரங்கால் மேற்கு)

பாவாக்கம் : ச.லலீசன்

ஷாம்பவி பதிப்பகம் 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P. 077 6184425.

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் துரைசிங்கம் சிவராசா J.P.

(செயலாளர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை
தலைவர் ஆவரங்கால் சிவசக்தி மண்டபம்)

திடம் படைத்த
கல்நெஞ்சும் திடுக்கிட்டு
நடுநடுங்கிச் சிதறிப்
போக
நடம் பயிலும் நடராஜ
இராமலிங்கன்
பதம் சேர்ந்த
சிவராசன்
உடம்பனைத்தும் வாயாக
அழுதாலும்
உறுதுயரம் ஒழிந்தி
டாதால்
இடம் படைத்த
மனமுருகி அழுகின்றோம்
எங்கொழிந்தாய்
இந்நாள் ஐயா



ஆவரங்கால்,
புத்தூர்

சிவசக்தி மணிமண்டபம்

(பாவாக்கம் : ச.லலீசன்)

ஷாம்பவி பதிப்பகம் 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P. 077 6184425.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 24 | | 25 |
| 10 | | 04 |
| 1957 | | 2006 |

செயலாளர் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை தலைவர் சிவசக்தி மணிமண்டபம்
அறக் கொடை நிதியம்

## அமரர் இ. து. சிவராசா J.P.

(ஆவரங்கால்)

நம்பமுடியாத பேரிடியொன்று அண்ணல் சிவராசா மரணம்
நமனுக்குத்தான் காயென்றும் கனியென்றும்
இனங்காணும் இயல்பில்லையே .... என் செய்வோம்!
அரச நிர்வாகத்திலும் ஆவரங்கால்
நிறுவனங்கள் நிர்வாகத்திலும் நிகரில்லாச் செயலாற்றி
தனக்கென ஓர் தனி முத்திரை பதித்த அண்ணலே
எதை எண்ணிக்கலங்குவோம்!

"நெடிதுயர்ந்த கம்பீரம் நிகரில்லா சந்தன நிறம்
எவரையும் ஈர்ந்திடும் இயல்பான புன்னகை
இனிக்க வைக்கும் இன்சொல்" ........ இவற்றையா

பாதிப்பருவத்தில் பூவிழந்த உம் பத்தினியும்
பூவும் பிஞ்சுமாய் புலம்பும் உன் வாரிசுகளும்
ஆலின் விழுதாய் தாங்குவாய் என இருந்த பெற்றாரும்
சோகம் தாங்கும் சுமை தாங்கியாய் நீ சுமந்தசுற்றமும்
சோகக் கடலில் வீழ்ந்து அரற்றும் காட்சியையா

உம் பிரிவால் களை இழந்த இராமலிங்கன் நடராஜன் வீதியையா
சிவசக்தி மண்டபத்தின் நிகழ்வுகளில் தலைமைப் பொறுப்பேற்று
குறையின்றி நிறைவுசெய்த – உம்
பொதுத் தொண்டுப் பண்பினையா

எதை எண்ணி...... எதை எண்ணி கலங்கி அழுவதற்கு கண்ணீரும் இனிஇல்லை
நிலையாமை எண்ணி தேறுதற்கும் முடியவில்லை........

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சரவணாஸ் ஒலியமைப்புச் சேவை
ஆவரங்கால்.

கல்வை பிறிண்டேர்ஸ் 781 கே.கே.எஸ் றோட் சிவலிங்கப்புளியடி, யாழ் T.P: 0777162554

# கண்ணீர்ப்பூத்தூவல்கள் !!!



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 24 | | 25 |
| – | | – |
| 10 | | 04 |
| – | | – |
| 1957 | | 2006 |

பனை பிரதேச சபை செயலாளரும், ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டப அறக்கட்டளைப் பகுதியின் தலைவரும், ஆவரங்கால் சிவன் தேவஸ்தான திருப்பணிச்சபை அங்கத்தவர்களுள் ஒருவரும், எமது வித்தியாலயத்தின் பழையமனவர் சங்கத் தலைவரும்

## அமரர் துரைசிங்கம் சிவராசா அவர்கள்

கடமையே கண்ணென வாழும்வரை வாழ்ந்து வந்த
இடரறிந்து தனைக் கொடுக்கும் இங்கிதானம் சிவராசா!
உடைமையதாய் உனை அமலன் தன்பாதம் சேர்தானோ–நம்
உடனடித் தேவைகளின் இடர்களைக் களைந்து வைக்க
தடையேதும் சொல்லாது தாங்கிடுவீா உடன்கடமை–இன்று
விடைகாண முடியாது விக்கித்து நாம் நிற்க
இடையினில் உன் கணக்கை இயமனவன் முடித்து நிற்க
இடமது கொண்டோனின் இருப்பிடம் கூடினையோ!!!

அன்னாரின் பிரிவினால் துயருறும் அவர்தம் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

ஓம் சாந்தி!! சாந்தி!!! சாந்தி!!!

27.04.2006
யா/ ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர், ஊழியர்கள்,
பா.அ.சங்கம்,பழைய மாணவர் சங்கம்

தேனுகன் பிறிண்டர்ஸ், அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை!!!



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24 | 25 |
| – | – |
| 10 | 04 |
| – | – |
| 1957 | 2006 |

*எமது அன்பு நண்பன் சி.சிந்துஜன் அவர்களின்*

*பாசமிகு தந்தை*

## அமரர் துரைசிங்கம் சிவராசா

பாசத்துடன் எமை அரவணைத்த தந்தையே!

பாகமாய் வந்து வழிகாட்டிய உத்தமரே

காலனது திடீரழைப்பு எம்மை அதிரவைக்க

மாயமாக நீர் மறைந்ததேன்!

உங்கள் அரவணைப்புக்காய் ஏங்கித் தவிக்கும்.

அன்னாரின் பிரிவினால் துயருறும் அவர்தம் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உம் பிரிவால் துயருறும்

ஆவரங்கால்
27.04.2006

***தரம் 8 மாணவர்கள்.***

நர்சா தமிழ்ப் பதிப்பகம், அச்சுவேலி.

---

# ஈர விழிகளுடன் தேடுகின்றோம்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 24 | 25 |
| 10 | 04 |
| 1957 | 2006 |

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை செயலாளரும்,
விசேட ஆணையாளரும் சமாதான நீதவானும், ஆவரங்கால் சிவசக்தி
மணிமண்டப தலைவருமான

## அமரர். துரைசிங்கம் சிவராசா

(சிவன் வீதி ஆவரங்கால் புத்தூர்)

வேகுதையா உள்ளம் வெந்துருகிச் சாகுதையா
வானகமே போற்ற வையகமே வாழ்த்த ஊர்போற்ற வாழ்ந்து
எம் நெஞ்சையே வேகவைத்த எமதருமைச் செயலாளரே
கள்ளமில்லா மனத்தாலே எம் மனதைக் கவர்ந்தவரே
பச்சிலைப்பள்ளி பிரதேச சபையை பரிதவிக்கவிட்டு பாதிவழி சென்றதேனோ
பசுமை நிறைந்த பிரதேசசபைச் செயலாளரே
உங்கள் பார்வைபட்டு பளைப்பிரதேசம் பொலிவுற்றது
பளைப்பிரதேசசபைக்கென மாடிக்கட்டடம் அமைத்து
பளைப்பிரதேசத்தை வளமாக்கிய உத்தமரே பொறுக்கமுடியாத காலனவன்
கடுகவந்து உயிரைப்பறித்தானோ
பரிவோடும் பாசத்தோடும் உரிமையோடும் உறவாடி
உலாவந்த உத்தமரே உந்தன் பிரிவால் நொந்துபோனோம்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை

தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதம எழுதுநர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை
பளை

சிவகஜன் பதிப்பகம் கொடிகாமம். T.P No: 0777 273607.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 24 - 10 - 1957

விண்ணில் 25 - 04 - 2006

(செயலாளர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபைJ.P)

## அமரர் துரைசிங்கம் சிவராசா

நேற்றுவரை எம்மோடு நியாயமாய் இருந்தவரே
காற்றோடு வந்த செய்தி கலங்க வைத்ததய்யா
பண்போடு பாரினிலே பாங்கோடு இருந்தவரே
கண்கெட்ட காலனவன் கருணையின்றி எடுத்தனனோ?
அன்பான மனைவிதனை அழகான பிள்ளைகளை
அவனியிலே தவிக்கவிட்டு அவதியாய் போனதேனோ?

உம் பிரிவுத்துயரால் வாடி நின்று உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!! சாந்தி!!! சாந்தி!!!

உம் பிரிவால் துயருறும்

27.04.2006 பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், உத்தியோகத்தர்களும், கிளிநொச்சி.



# கண்ணீர் அஞ்சலி

## அமரர் துரைசிங்கம் சிவராசா J.P.

(செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை)

எமது ஆவரங்கால் விளையாட்டு அபிவிருத்திக் கழகத்தின் வளர்ச்சிக்காக அருஞ்சேவையாற்றிய கழகத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் அமரர் இ.து.சிவராசா அவர்களின் பிரிவால் துயருறும் உள்ளங்களுடன் நாமும் இணைகிறோம்
அன்னாரின் ஆன்மா சாந்தியடைய நடராஜ இராமலிங்க சுவாமியின் திருப்பாதங்களை வழுத்துகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ஆவரங்கால் விளையாட்டு அபிவிருத்திக் கழகம்**

பதிப்பகம் 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P. 077 6184425.
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கைகள்

இனிதிருக்க வந்தது:
24
–
10
–
1957



இறையடிக்குச் சென்றது:
25
–
04
–
2006

பளை பிரதேச சபை செயலாளரும், ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப அறக்கட்டளைப் பகுதியின் தலைவரும், ஆவரங்கால் சிவன் தேவஸ்தான திருப்பணிச்சபை அங்கத்தவர்களுள் ஒருவருமாகிய

## அமரர் துரைசிங்கம் சிவராசா
அவர்கள்

இருக்கும் வரை இனிமையாக இருப்போருடன் பழகிவந்து
உருக்கும் நிலைக்கு உற்றோரை உருவாக்கி வைத்து நிற்க
இரக்கமில்லா இயமனவன் இடையில் உன்னைப் பறித்தானோ! அல்ல
திருந்த நிறை மனதோடு சிவதொண்டாய்ப் பலதொண்டை
பொருத்தமாகச் செய்ததினால் பரமனவன் அழைத்தானோ?
வருத்தங் கொண்டு நும்பிரிவால் வருந்துகின்ற உறவுகளின்
நெருக்கமான பிணைப்போடு நாமும் உனைத்தேடுகின்றோம்
விருப்பத்தோடு உமையனைத்த விமலனவன் விடுவானோ!!!

*அன்னாரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு*
*அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்*

ஆவரங்கால் மேற்கு
புத்தூர்
26.04.2006

ஆவரங்கால் சிவன் தேவஸ்தான
தர்மகர்த்தா சபையினர்
திருப்பணிச்சபை

ஷாம்பவி பதிப்பகம் 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P. 077 6184425.

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
24
10
1957



விண்ணில்
25
04
2006

சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னைநாள் செயலாளரும்,
தற்போதைய பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலாளருமாகிய

## உயர்திரு. இ.து. சிவராசா

அவர்களின் கண்ணீர் அஞ்சலி.

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்தீரே
சிரித்த முகமும் அமைதியான தோற்றமும்
உற்சாகமான கடமையுணர்வும் கொண்டவரே,
என்றும் இன்முகத்துடன் பலசேவைகள் செய்தீரே,
நேற்று வரை நிஜமாக இருந்தீரே
கடமைக்குச் சென்று நீர்
கடமை முடித்து வீடு திரும்புவீர்
என வீட்டில் எதிர்பார்க்க
காற்றோடு வந்த செய்தி
கேட்டு நாமே கதிகலங்க
என்ன சொல்லித் தேற்றிடுவோம்
உங்கள் உறவுகளை,
தொடர்ந்தும் உம்சேவையை
இனி யாரையா கடுசெய்வார்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் திடீர் மறைவினால் துயருறும் அவர் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப் போமாக!

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.

செயலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

சிவகஜன் பதிப்பகம் கொடிகாமம். T.P No: 0777 273407.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24 . 10 . 1957 | 25 . 04 . 2006 |



முன்னாள் கொடிகாமம் பிரதேச சபை செயலாளரும் கைதடி பிரதேச சபை உப பணிமனை பொறுப்பதிகாரியாகிய தற்போது பளை பிரதேச சபை செயலாளருமாகிய

அமரர்

## திரு துரைசிங்கம்–சிவராசா

குடும்பத்தின் குலவிளக்காய்
வழி நடத்தி சென்றவரே
இனிதான கதை கேட்டு
இன்புற்ற நாம் எல்லோம் – இன்று
இயல்பிழந்து நிற்கின்றோம் – உம்
பிரிவான நிலை கண்டு!

அன்னாரது மறைவு குறித்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

கைதடி மத்தி குமரநகர்
கைதடி 27.04.2006

கைதடி பொது அமைப்புக்கள் சார்பாக
நண்பன்
திரு. K. சிவபாதம்

காண்டீபன் கிராபிக்ஸ் கைதடிச் சந்தி

# ஆறாத்துயருடன் அஞ்சலிகள் செய்கின்றோம் நாமும்

**மண்ணில்** **24.10.1957**



**விண்ணில்** **25.04.2006**

## இ.து.சிவராசா அவர்கள்

(செயலாளர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை)

செயலின் செல்வனே செயற்கரிய செயலாளரே! சிவராசாவே!
2000 ஆம் ஆண்டின் அழிவினை அகற்றி பச்சிலைப்பள்ளியை
வளம்படுத்திய நாயகனே
கடமையதில் கண்ணாயிருந்த நேரமதில் காலனவன்
என்னவெண்ணி உனையழைத்தானோ
உன் சகபாடிகள் கண் முன்னே கரிய சக்கர வடிவில் வந்தானோ காலனவன்
காலங்காலமாய் கல்லாகவிருந்த வீதிகளுக்கெல்லாம்
வேள்பூட்டில் வீதி போட்டவனே உனை மறவோம் நாமெல்லாம்
விந்தையான நகரமாக்குவேன் என வீறுகொண்டு விரைந்த எம் சேவகனை
ஏன் அழைத்தாய் எமதூதா
கற்றோரும் உற்றோரும் மற்றோரும் கண்கலங்க
எமையெல்லாம் பரிதவிக்க விட்டுச் சென்றனையோ
இனியவனே செயலாளரே சிவராசாவே
உங்கள் ஆத்மா சாந்திக்காக தினம் வேண்டுகின்றோம் ஆண்டவனிடம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதேச செயலகம்
பச்சிலைப்பள்ளி

உதவிப்பிரதேசசெயலரும்
உத்தியோகத்தர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கின்றது.
எது நடக்க இருக்கின்றதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையாதாகின்றது.
மற்றொரு நாள் அது
வேறொருவருடையதாகும்
இந்த மாற்றம் உலக நியதியாகும்.



- பகவான் ஸ்ரீ கிருஷணர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவர்

# அமரர் இ.து.சிவராசா

அவர்கள் 25-04-2006. அன்று பளையில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையின் போது இடம் பெற்ற விபத்திற் சிக்கிய வேளை ஆவன செய்த பளை, கிளிநொச்சி மருத்துவமனைகளைச் சார்ந்த வைத்தியர்கள், பணியாளர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை சார்ந்த உத்தியோகத்தர்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக்கிளை சார்ந்த உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவையினர் யாவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் பூதவுடல் தாங்கிய பேழையை அசாதாரண சூழ்நிலையின் போதும் ஆவரங்காலுக்கு எடுத்துவர உதவியோருக்கும் இரவு பகலாக எம்மோடு உடனிருந்து கருமங்களாற்றிய சிவசக்தி மணிமண்டபத்தினர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

அமரரின் இறுதிக் கிரியையின் போது நேரில் கலந்து, அஞ்சலி செலுத்தியோர், அஞ்சலியுரை நல்கியோர், தொலைபேசி, தந்தி, பத்திரிகை, பிரசுரம் முதலியவற்றின் வாயிலாக அனுதாபங்களைத் தெரிவித்த உள்ளங்கள் யாவருக்கும் எமது நன்றிகள்.

அந்தியேட்டி, சபிண்டீகரணம் மற்றும் கிரியைகள் யாவற்றையும் நிறைவேற்றிய குருமாருக்கு எமது நன்றி. இந்நிகழ்வுகள் யாவற்றிலும் பங்கேற்று ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த இதயங்களுக்கு எமது நன்றி.

மேலும் அமரரின் ஞாபகார்த்த வெளியீடாக எம்மால் வெளியிடப்பெறும் ''**சிவமலர்**'' என்ற நூலை அழகு மலராக வெளியிட ஆலோசனைகள் நல்கிய செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், அட்டைப்படம், மற்றும் படங்களை கணனியில் வடிவமைத்தும் மலர்வெளியீட்டில் எம்முடன் இணைந்தும் செயற்பட்ட ஆசிரியர் ச. லலீசன் மற்றும் அழகுறப் பதித்த யாழ் ஷாம்பவி பதிப்பக உரிமையாளர் சீ. புவீந்திரன் மற்றும் பணியாளர்கள் யாவருக்கும் எமது நன்றிகள்.

இம்மலருக்கு அழகு சேர்க்கும் கட்டுரைகள், அஞ்சலிச் செய்திகள் முதலியவற்றை வரைந்து உதவிய பெரியோர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வாக 11-06-2006இல் சிவசக்தி மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்விற் பங்கு கொண்ட யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு'

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.
10-06-2006.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் இ.து. சிவராசா அவர்கள்



தோற்றம் :
24.10.1957

மறைவு :
25.04.2006

## திதி நிர்ணயம்

தூய வியவில் துங்கமலி மேசத்தில்
தேயவருந் திரயோதசித் திதியாம் - மேயபுகழ்
அம்புவியில் வாழ்ந்த அறிஞன் சிவராசா
நம்பனடிக் காளான நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



விண்ணிடை அடைந்தாய்
என்ற வெய்யசொல்
புண்ணிடை அயில்எனச்
செவியில் எரித்ததையா

வண்மிகு மனத்தினோய்
சொல்வலி திறத்தினோய்
தண்முக மதியினோய்
என்னிது விதியையா?

மாசில் ஒளிமுகத்தை
மீண்டொருக்கால் காட்டி
எங்கள் பாசமனங்களுக்கு
ஆறுதல் தாருமையா

முடிவுறா நினைவுகளின்
முகவரியாம் சிவமலரை
முத்தான பாதங்களில்
அர்ப்பணித்தோம் ஏற்றிடையா

-குடும்பத்தினர்
சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Cover Designed By :(L) Graphics

ஷாம்பவி பதிப்பகம்,

276,கஸ்தூரியார் வீதி,கன்னாதிட்டி,

யாழ்ப்பாணம்

தொ.பே : 077 6184425

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org